வ்-யா. (உங) இப்படி ஸ்வரூபயாதாத்ம்ய ஜ்ஞாநதசையில்,தோற்றுகிறபாரதந்த்ர்யாதிகள், ஸ்வரூபஜ்ஞாநதசையில் தோற்றுகிறசேஷத்வாதிகளை, திரஸ்க்ருதமாக்கும்படி சொல்லுகிறது. (முளைத்தெழுந்த) இத்யாதி, அதாவது :— (க) "முளைத்தெழுந்ததிங்கள்தானாய்" என்றும், "யதா ஸூர்ய ஸ்ததா ஜ்ஞாநம்" "யதாஸூர்யஸ்ததாஜ்ஞாநம்" என்றும், சொல்லப்பட்ட,ஸ்வரூபஸாக்ஷாத்கார ஜ்ஞாநத்தினுடைய,யாதாத்ம்யாவஸ்தையானசரமமென்று ஸ்வரூபயாதாத்ம்யவேஷமாகப்பின்புசொன்னபாரதந்த்ர்யபோக்யதைகளைச்சொல்லுகிறது. ஸ்வரூபஸாக்ஷாத்காரஜ்ஞாநத்துக்குசந்த்ரனைத்ருஷ்டாந்தமாக வாழ்வாரருளிச்செய்தது, தமக்கு பகவத்ப்ரஸாதலப்தமாகையாலே,அயத்நஸித்தமாகையாலும், அந்தஜ்ஞாநந்தாநாஹ்லாதகரமாயிருக்கையாலுமிறே, இங்குமுணர்வைப்பெறவுரமிகவுணர்வுமுண்டாமென்று, இந்தஸ்வரூபயாதாத்ம்யஜ்ஞாநம், பகவத்ப்ரஸாதலப்தமாகவிறேசொல்லிற்று. "யதா ஸூர்ய:" "யாதாஸூர்ய:" என்கிறவிதிலே, ஸ்வயத்நத்தால்வக்தக்லிஷ்டதை தோற்றித்தாகிலும், இவ்விடத்திலது, அவிவக்ஷிதம். ஜ்ஞாநத்தினுடையப்ரகாசாதிசயம். சொல்லுகிறமாத்திரமேஅபேக்ஷிதம். ஏவம்பூதமாயிருந்துள்ள ஸாக்ஷாத்கார ஜ்ஞாநத்தினுடைய யாதாத்ம்யாவஸ்த்தையில் ப்ரகாசிக்கிற பாரதந்த்ர்யபோக்யதைகளாகிறசரமங்கள்ஸ்வரூபத்தை, உணர்ந்துணர்ந்துணர்வும், என்று கீழ்ச்சொன்னந்யாயத்திலே (உ) "விதியில் காண்பார்" என்கிறபடியே, சாஸ்த்ரவிதிப்ரகாரேணச்ரவணமநநாதிகளாலே, தர்சிக்கப்படுகிறப்ரதமதசையான சேஷத்வத்தையும், மத்யமதசையானபோக்த்ருத்வத்தையும், பகல்விளக்கும் மின்மினியும்போலே, அப்

(க) திருநெடுந்தாண்டகம்-க. (உ) திருக்குறுந்தாண்டகம்-கஅ.

மூ—(உச) நாலிலொன்று ப்ரவர்தக மொன்று நிவர்தகம்.

அ) ஶேஷத்வ போக்த்ருத்வ பாரதந்த்ர்ய போக்யதைக ளாகிற நாலிலும் போக்த்ருத்வமானதொன்று உபாயாநுஷ்டாநத்திலே ப்ரவ்ர்த்திப்பிக்கும் போக்யதையாகிறதொன்று உபாயாநுஷ்டாநத்தில்நின்றும்நிவ்ருத்திப்பிக்கும்.

ரயோஜநமாகவும், அல்பப்ரகாஶமாகவும்பண்ணுமென்கை. ப்ரணவோதிதமான ஸ்வரூபத்தினுடைய யாதாத்ம்யத்வேன மத்யமசரமபதங்களிலேபின்புதிக்குமவையாகையாலே, பாரதந்த்ர்யபோக்யதைகளை, சரமங்களென்கிறது. ப்ரதமாக்ஷரத்தில், சதுர்த்தியிலேப்ரதமமேவஶேஷத்வமுதிக்கையாலும், அநந்தரம், ததாஶ்ரயவாசியானசரமாக்ஷரத்தில், உத்தரபதத்வயத்தில் பாரதந்த்ர்யபோக்யதோதையத்துக்குமுன்னே நடுவே ஜ்ஞாத்ருத்வ பலாயாதபோக்த்ருத்வமுதிக்கையாலும், ஶேஷத்வ போக்த்ருத்வங்களை ப்ரதமமத்யமதஶைகளென்கிறது. ஆக, விவ்வாக்யத்தால் ஸ்வயத்நஸ்வப்ரயோஜநகந்தாஸகங்களாய், ஸ்வஶேஷிபோகாத்யந்தாநுகூலங்களாய்க்கொண்டு, ஸ்வரூபத்தைநிறம்பெறுத்துமிப்பாரதந்தர்ய போக்யதைகள், இவ்வாகாரங்களில்லாத ஶேஷத்வ போக்த்ருத்வங்களை திரஸ்க்ருதமாக்கி தானேமேலாயிருக்குமென்றதாயிற்று. *

வ்-யா.(உச) இப்படியிருந்துள்ள ஸ்வரூப ஜ்ஞாநத்தையும், ஸ்வரூபயாதாத்ம்யஜ்ஞாநத்தையுமுடையராய் (சாஸ்த்ரிகள்) இத்யாதிவாக்யத்தில்ப்ரவ்ர்த்தி பரராகவும் நிவ்ருத்திபரராகவும் சொல்லப்பட்ட வதிகாரிகளுக்கு, ப்ரவர்த்தக நிவர்த்தகங்களின்னதென்கிறதுமேல், (நாலிலித்யாதி) ஆதாவது :— ஶேஷத்வ போக்த்ருத்வங்களும், பாரதந்த்ர்யபோக்யதைகளுமாகிறநாலிலும்வைத்துக்கொண்டு, ஶேஷத்வபோக்த்ருத்வங்களை, ஆத்மாவுக்கு ஸ்வரூபமென்று தரிசித்தசாஸ்த்ரிகளை, போக்த்ருத்வமானது, போக்தாவானவன் போக்யஸித்திக்கு, எத்நம்பண்ணவேண்டாவோ வென்றும் நினைவாலே, போக்யபூதபகவத்விஷயலாபார்த்தமானஉபாயப்ர வ்ருத்தியிலேமூளுவிக்கும். பாரதந்த்ர்யபோக்யதைகளையே, ஸ்வரூபயாதாத்மயவேஷமென்று, தர்சித்தஸாரஜ்ஞ்யரை, போக்யதையானது, போக்தாவான வீச்வரனன்றோஸ்வபோக்யமான விவ்வஸ்துவைப்பெறுகைக்குயத்நம்பண்ணுவான், தத்போக்யமானவிவ்வஸ்துவுக்கு, தல்லாபத்துக்குயத்னிக்க ப்ராப்தியில்லையென்றும் நினைவாலே உபாயப்ரவ்ருத்தியில் நின்றும் மீளுவிக்குமென்கை. *

மூ—(உரு) முர்ப்பாடர்க்கு க்ரியாங்கமானவையிரண்டும் செயல் தீர்ந்தார் வ்ருத்தியில் ஸ்வநிர்பந்த மறுக்கும்.

(அ) ப்ரதமபரிகணிதரான உபாஸகர்க்கு கர்மாங்கமானசேஷத்வ போக்த்ருத்வங்களிரண்டும் ஸ்வயத்நநிவ்ர்த்திபரரானப்ரபந்நருடைய கைங்கர்யரூப ப்ரவ்ருத்தியில் ஸ்வப்ரயோஜநரூபநிர்பந்தத்தை நசிப்பிக்கும்.

வ்-யா.(உரு) ஆனால்? சேஷத்வ போக்த்ருத்வங்கள்தானிவர்களுக்குமுண்டே, அவைசெய்வதென்னென்னச்சொல்லுகிறது, (முர்ப்பாடற்கு) இத்யாதி ; அதாவது :— சாஸ்திரிகளென்று ப்ரதமத்திலேசொல்லப்பட்ட உபாஸகர்க்கு, போக்த்ருத்வமானது போக்யஸித்திக்குடலானயத்நத்திலேமூட்டுகையாலும், அதுதாநாத்மஜ்ஞாநபூர்வகமாகயத்னிக்கவேண்டுகையாலே, சேஷத்வமுமதுக்குறுப்பாகையாலும் உபாஸநப்ரதமபாவியானகர்மத்துக்கு, உத்பத்தியிலே ஸககரித்துக்கொண்டு, ததங்கங்களாயிருக்கிற அவையிரண்டும் (க) "செயல்தீரச்சிந்தித்துவாழ்வார்" என்கிறபடியே, இவ்வாத்மாசெய்யக்கடவதொன்றுமில்லை. எம்பெருமானே நிர்வாஹகனென்று அநுஸந்தித்து, உபாயரூப ப்ரவ்ருத்தியில் நிவ்ருத்தரான ப்ரபந்நருடையகைங்கர்யரூப ப்ரவ்ருத்தியில், அவனுகப்பைப்பின்செல்லுமதொழிய, தங்கள்நிர்ப்பந்தத்தைத்தவிர்க்குமென்கை (உ) "పరగతాతిశయాధానేచ్ఛయోపాదేయత్వమేవయస్య స్వరూపం స శేషః" "பரகதாதிசயாதாநேச்சயோபாதேயத்வமேவயஸ்யஸ்வரூபம் ஸசேஷ:" என்கிறபடியே, பராதிசயகரத்வ ரூபமானசேஷத்வம், ஸ்வாதிசயேச்சயாவரும், ஸ்வநிர்பந்தத்தைதவிர்க்குமிறே. இனிபோக்த்ருத்வம், ஸ்வநிர்பந்தத்தைத்தவிர்கையாவது, பாரதந்த்ர்யபோக்யதாஜ்ஞாநம் பிறந்தவனுடைய போக்த்ர்த்வமாகையாலே, ஸ்வரஸத்துக்குடலன்றிக்கே, சேஷிரஸத்துக்குடலாயிருக்கை. "ஆநந்தமவன் ப்ரீதியைதுளிரெழுப்ப" என்கிறபடியே, இவனுடையபோக்த்ருத்வம், சேஷியான அவன் ப்ரீதிக்கு வர்த்தகமாயிறேயிருப்பது. ஆகையிறே (ரு) "అహమన్నమ్" "அஹமந்நம்" என்று, ஸ்வபோக்யதையைமுன்னிட்டு சேஷியையுகப்பிக்க இழிந்தவன், (ச) "అహమన్నాదః" "அஹமந்நாத:" என்று, ஸ்வபோக்த்ருத்வத்தையும் புரஸ்கரிக்கிறது. இப்படியல்லாதபோது, ஒரு சேதநனோடே அநுபவித்ததாயிராதிறே. இவைத்தையெல்லாத்தையுமுள்கொண்டாய்த்து ; வ்ருத்தியில்ஸ்வநிர்பந்தமறுக்குமென்றருளிசெய்தது. *

(க) நான்முகன் - அ. அஅ. (உ) ஸ்ரீபாஷ்யம். (ரு) தை - உ. ப்ரு-வி - க0. ௫. (ச) ஷை.

மூ—(உசு) கர்ம கைங்கர்யங்கள் ஸத்யாஸத்ய நித்யா நித்ய வர்ண தாஸ்யா நுகுணங்கள்.

மூ—(உஎ) இவைத்துக்கு விதி ராகங்கள் ப்ரேரகங்கள்.

மூ—(உஅ) மண்டினாரும் மற்றையாரு மாஶ்ரயம்.

(அ) க்ரியாகைங்கர்யங்கள் அஸத்யமாய நித்யமானவர்ணத்துக்கும் ஸத்யமாய் நித்யமான தாஸ்யத்துக்கும் அநுரூபங்கள்.

(அ) இக்கர்ம கைங்கர்யங்களுக்கு ஶாஸ்த்ரவிதியும் பகவதநுபவ ஜநிதப்ரீதியும் சோதகங்கள்.

(அ) திவ்யதேஶங்களிலபிநிவிஷ்டராயிருப்பாரும் இதரரான உபாஸகரும் ஸ்த்தாநம்.

வ்யா. (உசு) இந்தக்ரியாவ்ருத்தி ஶப்தங்களால் சொன்னகர்மகைங்கர்யங்கள், இவர்களுக்கெதுக்கநுகுணமாயிருக்குமென்னச்சொல்லுகிறது. (கர்மேத்யாதி) அதாவது :— கர்மம், அஸத்தியமுமாய நித்யமுமான வர்ணத்துக் கநுகுணமாயிருக்கும். கைங்கர்யம்,ஸத்யமுமாய் நித்யமுமான தாஸ்யத்துக் கநுகுணமாயிருக்குமென்கை. வர்ணத்தைஅஸத்யமநித்யமென்கிறது, ஆத்மாவுக்குள்ளவேஷமல்லாமையாலே ; ஸததைகரூபமன்றிக்கே, ஔபாதிகமாய்நஶ்வரமான தேஹாவதியாய்ப்போகையாலே,தாஸ்யத்தை, ஸத்யம் நித்யமென்கிறது. ஆத்மாவுக்குள்ளவேஷமாகையாலே, ஸததை கரூபமாய்யாவதாத்மாநுவர்த்தியாகையாலே,வர்ணாநுகுணமென்னது, வர்ணத்துக்குச்சேர்ந்ததென்னபடி. தாஸ்யாநுகுணமென்னதுமப்படியே. *

வ்யா. (உஎ) இவையிரண்டுக்கும்ப்ரேரகங்களேவையென்னச்சொல்லுகிறது, (இவைத்துக்கித்யாதி) அதாவது:—“யஜேத” (க) “யஜேத” (உ) “ஜுஹுயாத்” “ஜுஹுயாத்” இத்யாதியானஶாஸ்த்ரவிதி, கர்மத்துக்குப்ரேரகம். அஶேஷஶேஷதைகரதியாகிறராகம், கைங்கரியத்துக்குப்ரேரகமென்கை. பகவதநுபவஜநித ப்ரீதிகாரிதமிறே கைங்கர்யம் “உகந்துபணிசெய்து” என்னக்கடவதிறே.

வ்யா. (உஅ) இவைத்துக் காஶ்ரயமாரென்னச்சொல்லுகிறது. (மண்டினாருமித்யாதி) அதாவது :—(ந) “கண்டியூரரங்கம் மெய்யம்கச்சிபேர் மல்லையென்று மண்டினார்” என்றுகந்தருளினநிலங்களிலே, அத்யபிநிவிஷ்டராயிருக்கிறப்ரபன்னர்,கைங்கர்யத்துக்காஶ்ரயம், (ச) “விளக்கினைவிதியில் காண்பார்” என்று, கீழ்ப்பாட்டில் சொன்ன, மற்றையாரான உபாஸகர், கர்மத்துக்காஶ்ரயமென்கை. இத்தால், கர்மகர்த்தாக்களையும் கைங்கர்யகர்த்தாக்களையும் சொல்லித்தாய்த்து. *

(க) யஜுர்வே - கா. உ. ு. ு. ந. (உ) கர்மமீமாம்ஸை - கூ. ந.

(ந) திருக்குறுந்தாண்டகம் - கக. (ச) ஷி - கஅ.

மூ.—(௨௯) அருள்முடியநிறுத்தி யடைய நின்றதும் நல்லதோரருள் தன்னுலே நன்று மெளியனுகிறதும் விஷயம்.

மூ—(௩௦) இவைத்தாலே ஸாதாரண மஸாதாரண மென்றும்.

மூ—(௩௧) ஜாத்யாஶ்ரம தீக்ஷகளில் பேதிக்கும் தர்மங்கள்போலே

(அ) தன்ப்ரஸாதத்தாலேபலஸித்தியாம்படிதன்தநுபூதரானதேவதைகளை நிறுத்தி சேதநராஶ்ரயிக்கும்படிநின்றப்ரகாரமும் அத்விதீயமானநிர்ஹேதுகக்ருபையாலே நன்ருக ஸுலபமாயிருக்குமர்சாவதாரமும் லக்ஷ்யம்.

(அ) தேவதாந்தர்யாம்யர்சாவதாரங்களை விஷயமாகவுடையவிவ்வாகாரங்களாலே ஸாதாரணமாகவும் அஸாதாரணமாகவும்சொல்லும்.

(அ) ப்ராம்ஹணுதி ஜாதிகளிலும் ப்ருஹ்மசர்யாத்யாஶ்ரமங்களிலும் ஜ்யோதிஷ்டோமாதி தீக்ஷகளிலும் பேதியாநின்று

வ்யா. (௨௯) இவைத்துக்குவிஷயமேதென்னச்சொல்லுகிறது, (அருள்முடியேத்யாதி) அதாவது :— (௧) "எத்தவம்செய்தார்க்குமருள் முடிவதாழியான்பால்" என்கிறபடியே, ஆஶ்ரயணபலஸித்தி, தன்னுடையப்ரஸாதத்தாலேயாம்படி, (௨) "தன்மூர்த்திநிறுத்திஞன் தெய்வங்களாக" என்கிறபடியே, தனக்கு தநுபூதரானதேவதைகளைநிறுத்தி (௩) "அவரவர்விதிவழியடையநின்றனர்" என்கிறபடியே, ஆஶ்ரயிக்கிறசேதனர், வித்யுக்தப்ரகாரேண ஆஶ்ரயித்துபலம்பெறும்படி, தேவதாந்தர்யாமியாய்நின்றிடம்கர்மத்துக்குவிஷயம். (௪) "நல்லதோரருள்தன்னுலேகாட்டினுன்திருவரங்கம்" என்றும், (௫) "கருத்துக்குநன்றுமெளியனுய்" என்றும், சொல்லுகிறபடியே, கேவலஸ்வக்ருபையாலே, அத்யந்தஸுலபனுய்க்கொண்டு, அர்சாவதாரமாய் நிர்க்கிறவிடமே கைங்கர்யத்துக்கு விஷயமென்கை. *

வ்யா. (௩௦) இவ்வோநிலேகளைவிஷயமாகவுடைத்தாகையாலே, கர்மகைங்கர்யங்களிப்படிச்சொல்லப்பட்டன வென்கிருர், (இவைத்தாலேத்யாதி) அதாவது:—இப்படி, தேவதாந்தர்யாமியையும், அர்ச்சாவதாரத்தையும் விஷயமாகவுடைய விவ்வாகாரங்களாலே, ஸாதாரணவிக்ரஹவிசிஷ்டனேவிஷயமாகவுடையகர்மத்தைஸாதாரணமென்றும், அஸாதாரணவிக்ரஹவிசிஷ்டனேவிஷயமாயுடையகைங்கர்யத்தை அஸாதாரணமென்றும்சொல்லுமென்கை. *

வ்யா. (௩௧) இவ்வஸாதாரண ஸேவையிலே அதிகரித்தார்க்கு, ஸாதாரணமானவதிலங்வயம்தன்னடையேகழியும்படியை ஸத்ருஷ்டாந்தமாகவருளிச்செய்கிருர் (ஜாத்யாஶ்ரமேத்யாதி) அதாவது:—ஸ்வகர்மப்ராம்

(௧) நான்முகன் - அ. ௨: (௨) தி - வா. ௫. ௨. அ. (௩) ஷெ. ௧. ௧. ௫. (௪) திருமாலை - ௧௦. (௫) தி-வா. ௩. ௬. ௧௧.

௫. அத்தாணிச் சேவகத்தில் பொதுவானது நழுவும்.

(அ) ள்ள அநுரூப தர்மங்களைப்போலே அந்தரங்கஸேவையில் ஸாதாரண ரூபகர்மமானது விட்டுப்போம்.

ஹணஸ்ய, அத்யயநாத்யாபநம், யஜநயாஜநம், தாநப்ரதிக்ரஹணம், தாயாத்யம்வீலோஞ்செளஞ்ச்சாபரிக்ருஹீதம், ஏதாந்யேவ க்ஷத்ரியஸ்ய, அத்யாபந யாஜந ப்ரதிக்ரஹண நீதிபரிஹார்யம், தண்டயுத்தாதிகாநி; க்ஷத்ரியவத்வைஶ்யஸ்ய, தண்டயுத்தவர்ஜநம், க்ருஷிகோரக்ஷணவாணிஜ்யாதிகம், என்கையாலே, அத்யயநாத்யாபநயஜநயாஜநதாநப்ரதிக்ரஹரூபஷட்கர்மமும்ப்ராம்ஹணனுக்குகர்தவ்யமாய், க்ஷத்ரியவைஶ்யர்களுக்கும், அத்யாபநாதித்ரயமொழிய, அத்யயநாதித்ரயமேகர்தவ்யமாய், அவர்கள் தங்களுக்கும்தண்ட யுத்தங்கள்க்ஷத்ரியனுக்கேஅஸாதாரணமாய்க்ருஷிகோரக்ஷணவாணிஜ்யங்கள், வைஶ்யனுக்கஸாதாரணமாய் (க) "𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌾 𑌶𑍂𑌦𑍍𑌰𑌸𑍍𑌯𑍇𑌤𑌰𑍇𑌷𑌾𑌂 𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑌾𑌮𑍍" "ஶுஶ்ரூஷாஶூத்ரஸ்யேதரேஷாம்வர்ணாநாம்" என்கையாலே, ஶூத்ரனுக்குத்ரைவர்ணிக ஶுஶ்ரூஷையே தர்மமாய், இப்படி தத்தஜ்ஜாத்யநுகுணமாக ஒருவனுக்குபாதேயமானதொருவனுக்கு த்யாஜ்யமாய்க்கொண்டுதர்மங்கள் பேதித்திருக்குமிறே. ப்ரம்ஹசாரியானதசையிலுபாதேயமானபிக்ஷாசரண ஸமிதாதாநாதிகள், க்ருஹஸ்தனன தசையில்த்யாஜ்யங்களாய் அக்நிஹோத்ராதிஸத்காராதிகளுபாதேயமாகையாலும், வநஸ்தனனதஶையில் (உ) "𑌸𑌂𑌤𑍍𑌯𑌜𑍍𑌯 𑌗𑍍𑌰𑌾𑌮𑍍𑌯𑌮𑌾𑌹𑌾𑌰𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌚𑍈𑌵 𑌪𑌰𑌿𑌚𑍍𑌛𑌦𑌮𑍍" "ஸந்த்யஜ்யக்ராம்யமாஹாரம்ஸர்வம்சைவ பரிச்சதம்" என்கையாலே, பூர்வாஶ்ரமத்திலுபாதேயமானக்ராம்யாஹாரபரிச்சதாதிகள்த்யாஜ்யமாய் (ங) "𑌵𑌸𑍀𑌤 𑌚𑌰𑍍𑌮 𑌚𑍀𑌰𑌂 𑌵𑌾" "வஸீதசர்மசீரம் வா" என்று துடங்கிச்சொல்லப்பட்ட, சர்மசீர வஸநத்வ ஜடிலத்வ ஶ்மஶ்ருலோம நகதாரணவந்யாஹாரங்களுபாதேயமாகையாலும்ஸந்யாஸியான தஶையில், பூர்வாஶ்ரமோபாதேயமான வக்நிஹோத்ராதிஸத்காராதிகளும், ஜடிலத்வாதிகளும், த்யாஜ்யமாய் (ச) "𑌅𑌨𑌗𑍍𑌨𑌿𑌰𑌨𑌿𑌕𑍇𑌤𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍" "அநக்நிரநிகேதஸ்யாத்" இத்யாதிப்படியே, அநக்நித்வாநிகேதத்வாதிகளுபாதேயமாகையாலும், ப்ரத்யாஶ்ரமம்தர்மம்பேதியாநின்றதிறே. ஜ்யோதிஷ்டோமாதிகளிலே தீக்ஷித்தவனுக்கு, வர்ணத்ரயாஶ்ரமசது ஷ்டயஸாதாரணமாய், அகரணேப்ரத்யவாயதயா, அவஶ்யகர்தவ்யமாய்ப்போரும், நித்யகர்மமநுஷ்டேயமாய், ஜ்யோதிஷ்டோமாதிதர்மமே அநுஷ்டேயமாகையாலே, தீக்ஷையிலே, தர்மம்பேதித்திருக்குமிறே. ஆகவிப்படி, ப்ராம்ஹணாதி ஜாதிகளிலும், ப்ரம்ஹசர்யாத்யாஶ்ரமங்களிலும், ஜ்யோதிஷ்டோமாதிதர்மாந்தர தீக்ஷைகளிலும், பேதிக்கும் தர்மங்கள்போலே, அஸாதாரணவிக்ரஹஸஹிதேஶ்வரவிஷயமாகையாலே, அஸாதாரணமாய், அதயேவ, அத்தாணிச்சேவகமென்று அந்தரங்கஸேவையாயிருக்கிறகைங்கர்யத்திலே, அதிகரித்தவர்களுக்கு, தேவதாந்தர்யாமிவி

(க) ஆ - ம். . க. கூ. (உ) மனுஸ்மிருதி. (ங) (ச) ஷை.

மூ—(கஉ) ஸாதந ஸாத்யங்களில் முதலும் முடிவும் வர்ணதர்மிகள் தாஸவ்ருத்திக ளென்று துறை வேறிடுவித்தது.

(அ) ஸாதநத்திலும் ஸாத்யத்திலும் ப்ராதமிகமானகர்மமும் சரமமான கைங்கர்யமும் வர்ணோசிததர்மங்களையுடைத்தானவர்கள் தாஸோசிதவ்ருத்திவிசேஷங்களையுடைத்தானவர்கள் இப்படியாகச்சொல்லி துறையை ப்ரத்யேகமாகப்பண்ணுவித்தது.

ஷயமாய், தச்சரீரபூததேவதாத்வாராததாராதநமாகையாலே, ஸாதாரணமாயிருந்துள்ள கர்மம், உறங்குவான்கைப்பண்டம்போலே, தன்னடையே நழுவுமென்கை. இத்தால்வர்ணாச்ரமாதிநிஷ்டர்க்கு, தத்ததிகாராநுரூபதர்மமொழிய அநநுகுணமானது த்யாஜ்யதயாகழிக்கப்படுமாப்போலே, ஸ்வரூபயாதாத்ம்ய தர்சிகளானவர்களுக்கும், ததநுரூப தர்மமொழிய அநநு ரூபமானது த்யாஜ்யமாய், தன்னடையேவிட்டுக்கழியு மென்றதாய்த்து. இப்படியிருக்கச்செய்தே, சிஷ்டர்களநுஷ்டித்துப் போருகிறது, ஸ்வாநுஷ்டாநத்தைப் பின்சென்று, லோகம்நசிக்கவொண்ணாதென்றுமாநுருசம்ஸ்பத்தாலேயிறே (க) "యదివ్యహంనవర్తేయం జాతుకర్మణ్యతంద్రితః । మమవర్త్మానువర్తంతే మనుష్యాః పార్థ సర్వశః । ఉత్సీదేయురిమేలోకా నకుర్యాంకర్మచేదహమ్ । సంకరస్యచకర్తాస్యా ముపహన్యామిమాః ప్రజాః॥" "யதிஹ்யஹம் நவர்தேயம் ஜாதுகர்மண்யதந்த்ரிதஃ। மமவர்த்மாநுவர்தந்தேமநுஷ்யாஃ பார்த்தஸர்வசஃ॥ உத்ஸீதேயுரிமேலோகாநகுர்யாம் கர்மசேதஹம்। ஸங்கரஸ்ய சகர்தாஸ்யாமு பஹந்யாமிமாஃ ப்ரஜாஃ"॥ என்கிறபடியே, பரார்த்தமாக விறேயிவர்களநுஷ்டிப்பது. *

வ்-யா. (கஉ) இந்தகைங்கர்யநிஷ்டர்க்கு, கர்மநிஷ்டரோடு சேற்றியில்லாமையைச் சொல்லுகிறது. (ஸாதநேத்யாதி) அதாவது:—ஸாதநத்தில் முதலடியானகர்மமும், ஸாத்யத்தில் முடிந்தநிலமான கைங்கர்யமும், இந்தநெடிவாசி யறிந்தவர்களை, நீங்கள் வர்ணதர்மிகள், நாங்கள் தாஸவ்ருத்திகள், என்றுறவறுத்து, துறைவேறிட்டுப் போகப்பண்ணித்தென்கை. அதாவது :— திருவயிந்திரபுரத்திலே, வில்லிபுத்தூர் பகவர், என்பாரொருவர், எல்லாருமொரு துறையிலே அநுஷ்டாநம்பண்ண, தநியேயொருதுறையிலே அநுஷ்டாநம்பண்ணுவாராய், ஒருநாளநுஷ்டாநம்பண்ணிமீளாநிற்கச்செய்தே, இருந்தப்ராம்ஹணர், ஜிய்யரே! எங்கள்துறையிலே அநுஷ்டாநம்பண்ண வாராதொழிகிறதென்னென்ன ? (உ) "విష్ణుదాసావయం యూయం బ్రాహ్మణావర్ణధర్మిణః। అస్మాకం దాసవృత్తీనాం యుష్మాకం నాస్తిసంగతిః॥" "விஷ்ணுதாஸாவயம் யூயம் ப்ராம்ஹணாவர்ணதர்மிணஃ। அஸ்மாகம்தாஸவ்ருத்தீநாம் யுஷ்மாகம் நாஸ்திஸங்கதிஃ" என்று, துறைவேறிட்டுப் போனாராய்த்து. *

(க) ஸ்ரீபகவத்கீதை - ௩. உ௩. (உ) வில்லிபுத்தூர் பகவர்வார்த்தை.

ஸூ—(௩௩) வேதவித்துக்களும் மிக்கவேதியரும் சந்தஸாம மாதாவாலு மதுக்கும் தாயாய் தாயினுமாயின செய்யுமத்தாலும் பிறப்பிக்குமது இருவர்க்கும் ஶ்ரேஷ்ட ஜந்மம்.

(அ) வேதபூர்வபாகப்ரதிபாதிதகர்மநிஷ்டரும் வேததாத்பர்யபூத கைங்கர்யநிஷ்டரும் 'வேதங்களுக்கு ஜநநியானகாயத்ரியாலும் அந்தகாயத்ரிக்கும்மாத்ருபூதையாய் தாயைக்காட்டிலுமுபகாரிணியானதிருவஷ்டாக்ஷரியாலும் ஜநிப்பிக்குமது கர்மகைங்கர்யநிஷ்டர்களிருவர்க்கும் உத்தமஜந்மம்.

வ்யா. (௩௩) கீழ், (ஜாத்யாதிகளிலே பேதிக்கும் த்ர்யங்ஙள்போலே) என்றவித்தாலே, ஸூசிதமானவதிகாரி பேதத்திற்கும், துறை வேறிட்டுப்போம்படியான லெடுவாசிக்கும், ப்ரகாசகமானகர்ம கைங்கர்ய நிஷ்டரிருவர்க்கு முண்டான ஜந்மாதிவிஶேஷத்தை, தர்ஶிப்பிப்பதாகக்கொண்டு, ப்ரதமம், ஜந்மவிஶேஷத்தைச்சொல்லுகிறது. (வேதவித்துக்களித்யாதி) அதாவது:— (க) "యే చ వేదవిదో విప్రాః" "யே ச வேதவிதோ விப்ராః" என்கிற, வேதவித்துக்களான பூர்வபாகநிஷ்டர், (உ) "గాయత్రీ ఛన్దసాంమా తా" "காயத்ரீ சந்தஸாம் மாதா" என்கிறபடியே, சந்தஸ்ஸுக்களுக்குமாதாவாயிருக்கிற, காயத்ர்யுபதேசத்தாலே பிறப்பிக்குமது, கர்மநிஷ்டர்க்கு ஶ்ரேஷ்டஜந்மம், (௩) "యే చాధ్యాత్మవిదో జనాః" யேசாத்யாத்மவிதோ ஜநாः" என்கிற, மிக்கவேதியரானவேததாத்பர்யவித்துக்கள், (ச) "ఋచో యజూంషి సామాని తథైవాథర్వణాని చ। సర్వమష్టాక్షరాన్తస్థం యచ్చాన్యదపి వాఙ్మయమ్॥" "ருசோ யஜூம்ஷிஸாமாநி ததைவாதர்வணாநிச। ஸர்வமஷ்டாக்ஷராந்தஸ்தம் யச்சாந்யதபி வாங்மயம்"॥ என்று, ஸகலவேத ஸங்க்ரஹமாகையாலே, அந்தகாயத்ரிக்கும் மாத்ருபூதமாய், (௫) "பெற்றதாயினுமாயினசெய்யும்" என்கிறபடியே, ஶரீரோத்பாதிகையான மாதாமாத்ரமன்றிக்கே, உஜ்ஜீவநத்துக்குறுப்பானஜ்ஞாநத்தையுண்டாக்கும் திருமந்த்ரோபதேஶத்தாலே, பிறப்பிக்குமது கைங்கர்ய நிஷ்டர்க்கு ஶ்ரேஷ்ட ஜந்மமென்கை. (௬) "స హి విద్యాతస్తం జనయతి" (எ) "తచ్ఛ్రేష్ఠం జన్మ" "ஸ ஹி வித்யாதஸ்தம் ஜநயதி தச்ச்ரேஷ்டம் ஜந்ம" என்கையாலே, கேவலப்ஜந்மமென்னாதே ஶ்ரேஷ்டஜந்மமென்கிறது. அது வர்ணாநுகுணமானவிதிநிஷேதங்களுக்கும், தததநுரூபாநுஷ்டாநத்திற்கும், தததநுகுணபலப்ராப்திக்கும், உறுப்பாகையாலே, அவர்களுக்குஶ்ரேஷ்டஜந்மம். இது, ஸ்வரூபாநுரூபமான விதிநிஷேதங்களுக்கும் தததநுரூபாநுஷ்டாநத்திற்கும் தததநுரூபபலப்ராப்திக்கும் உறுப்பாகையாலே இவர்களுக்கு ஶ்ரேஷ்ட ஜந்மம். ❋

(க) ஸ்ரீபாரதம். ஆர-ம்-அஅ. உகூ. (உ) ஆரணம்-சச. (௩) ஸ்ரீபார-ம் ஆர-ம். அஅ. உகூ. (ச) ஸ்ரீபாஞ்சராத்ரம். (௫) பெ-மொ-க. க. க. (௬) ஆப-ம். ஸூ-௬. (எ) ஷை ஸூ. எ.

மூ—(௩௪) அந்தணர் மறையோரென்றும் அடியார் தொண்டரென்று மிவர்களுக்கு நிரூபகம்.

மூ—(௩௫) ஒருதலையில் க்ராம குலாதி வ்யபதேஶம் குலந்தருமென்றும் மாசிற்குடி ப்பழியென்றும் பதியாகக்கோயில் வாழும் என்பர்கள்.

(அ) ப்ராம்ஹணர் வைதிகர் இப்படியாகவும் ஶேஷத்வரஸைகநிஷ்டரானவடியார் கைங்கர்யரஸைகநிஷ்டரானதொண்டர் இப்படியரகவும் இந்தகர்மகைங்கர்யநிஷ்டர்களுக்கு லக்ஷணம்.

(அ) கர்மநிஷ்டரென்றுசொல்லப்பட்ட ஒருஸமுதாயத்தில் ஜந்மக்ராமம் வம்சம்முதலானவைகளாலுள்ள நிர்தேஶமானது திருமந்த்ரஸித்தபகவத்ஸம்பந்தப்ரயுக்தமாகவந்ததாய் அஹங்காரமாகிற தோஷமற்றிருக்கும் விலக்ஷணவம்ஶத்திற்கு அவத்யமென்னும்நினைவாலே திருவேங்கடம்ஸ்த்தாநமாகவும் திருவரங்கத்திலும் ஸுகியாநின்றார் என்று சொல்லுவர்கள்.

வ்யா (௩௪) இப்படி, ஶ்ரேஷ்டஜந்மரானவிருவருக்கும் நிரூபகங்களின்னதென்கிறது. (அந்தணரித்யாதி)அதாவது:—(௧)"சாதியந்தணர்" (௨) "துணைநூல்மார்விலந்தணர்" (௩) "தீயோம்புகைமறையோர்" (௪) "நந்தாவண்கைமறையோர்" என்று, விஶேஷணபூதஶரீரத்வாராவந்தவர்ணமும், தத்ப்ரயுக்தமானவைதிகத்வமும், அவர்களுக்குநிரூபகம். (௫) "திருமாலடியார்"(௬) "அணியரங்கன்திருமுற்றத்துஅடியார்" (௭) "திருமாலுக்குரியதொண்டர்" (௮) "திருநாரணன்தொண்டர்" என்று, ஆத்மவஸ்துவுக்குஜ்ஞாநாநந்தங்களிலும் காட்டிலந்தரங்கநிரூபகமான ஶேஷத்வமும், தத்ப்ரயுக்தகிஞ்சித்காரத்வமும், இவர்களுக்கு நிரூபகமென்கை. *

வ்யா. (௩௫) கேவலமவையோநிருபகம், க்ராமகுலாதிவ்யபதேஶங்களில்லையோவென்னச்சொல்லுகிறது. (ஒருதலையிலித்யாதி) அதாவது:— கர்மநிஷ்டரென்றுசொல்லப்பட்ட ஒருதலையில் ஶரீராநுபந்திகளான க்ராமகுலாதிகளையிட்டு வ்யபதேசிக்குமந்தவ்யபதேஶத்தை கைங்கர்யநிஷ்டரான மற்றத்தலையிலுள்ளவர்கள், (௯)"குலந்தரும்" என்கிறபடியே,திருமந்த்ரஸித்தபகவத்ஸம்பந்தஜ்ஞாநப்ரயுக்தமாய் (௰) "மாசில்குடி" என்று, ஶேஷத்வவிரோதியான வஹங்காராதிகளில்லாமையாலே நிர்தோஷமாயிருக்கிறவிக்குலத்திற்கு, அவத்யகரமென்று கருதி

---

(௧) திருமாலை - ௪௩. (௨) பெ-மொ. ௧. ௫. ௯. (௩) பெ-மொ. ௭. ௯. ௭. (௪) பெ-மொ. ௬. ௭. ௮. (௫) தி-வா. ௫. ௬. ௧௧. (௬) பெரு-தி. ௧. ௰. (௭) தி-வா. ௬. ௯. ௧௧. (௮) தி-வா. ௩. ௭. ௪. (௯) தி-மொ. ௧. ௧. ௯. (௰) தி-அ. ௩. ௰.

·மூ— (நசு) விப்ரர்க்கு கோத்ர ஸூத்ர சரண கூடஸ்த்தர் 'பராசர பாராசர்ய போதாயநாதிகள் ப்ரபந்நஜநகூடஸ்த்தர் பராங்குச பரகால யதிவராதிகள்.

(அ) கர்மநிஷ்டரானப்ராம்ஹணர்க்கு வம்சத்திற்கும் கல்பஸூத்ரங்களுக்கும் தாடகாதிசாகைகளுக்கும் மூலபுருஷர்கள் பராசர வ்யாஸ போதாயநர்கள்முதலானோர் ப்ரபந்நர்க்கு மூலபுருஷர்கள் நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் எம்பெருமானார்முதலானோர்.

(க)"வேங்கடத்தைப்பதியாகவாழ்விர்காள்" (உ) 'கோயிலிலவாழும்வைட்டணவர்'' என்று பகவதந்வயமுள்ள தேசஸம்பந்தத்தையிட்டு வ்யவகரிப்பர்களென்கை. இதுபகவத்ஸம்பந்தத்தையிட்டும்,பசவதீயஸம்பந்தத்தையிட்டும் வ்யபதேசிக்குமதுக்குமுபலக்ஷணம். (ந) 'ఏకాన్తీ వ్యపదేష్టవ్యో నైవ గ్రామకులాదిభిః। విష్ణునా వ్యపదేష్టవ్య స్తస్య సర్వం సఏవహి॥" "யேகாந்தீ வ்யபதேஷ்டவ்யோ நைவக்ராமகுலாதிபி꞉। விஷ்ணுநா வ்யபதேஷ்டவ்யஸ்தஸ்ய ஸர்வம் ஸயேவஹி'' ॥ என்னக்கடவதிறே. *

வ்யா. (நசு) இனி, உபயருடையவும் கூடஸ்த்தரைச்சொல்லுகிறது. (விப்ரர்க்கித்யாதி) அதாவது:— "அந்தணர்மறையோர்" என்கிறப்ராம்ஹணர்க்கு, கோத்ரகூடஸ்த்தர் பராசராதிகள். கோத்ரமாவது? அபத்யஸந்ததி. (ச) "సన్తతి ర్గోత్రజనన కులా న్యభిజనాన్వయౌ" "ஸந்ததிர்கோத்ரஜநந குலாந்யபிஜநாந்வயள" என்னக்கடவதிறே. அந்தகோத்ரம்தாநேகமாய்த்தத்கூடஸ்த்தரானவஸிஷ்ட காஸ்யபபாரத்வாஜ வத்ஸப்ரப்ருதிகள் பலருமுண்டாகையாலே, பராஸராதிகளென்கிறது. சரணகூடஸ்த்தர் பாராஸர்யாதிகள். சரணங்களாவன:— வேதஸாகைகள். தத்தத்யாயிகளையும் கௌணமாக சரணஸப்தத்தாலே சொல்லக்கடவது. (ரு) "చరణశ్శబ్దః శాఖా ... " "சரணஸப்த꞉ காடககாலாபாதிஸாகாவிஸேஷேஷு—முக்ய꞉। தத்த்யாயிஷு—புருஷேஷு—கௌண꞉'' என்கையாலே, இவ்விடத்தில், ஸாகைகளைச்சொல்லுகிறது. ஸர்வஸாகைகளுக்குப்ரதாநப்ரவர்தகன், பாராஸர்யனுயிருக்கச்செய்தேயும், பின்புதத்தச்சாகைகளுக்கு, தனித்தனிப்ரவர்தகரான கடககலாப கண்வாதிகளுமுண்டாகையாலே, பாராஸர்யாதிகளென்கிறது. ஸூத்ரகூடஸ்த்தர், போதாயநாதிகள். ஸூத்ரமாவது? காமாநுஷ்டாநப்ரதிபாதகமானகல்பம். (சு) "శీక్షాం వర్ణస్వరః" "சிக்ஷாயம்வர்ணசிக்ஷா" என்றுதுடங்கிச்சொல்லிவருகிறவளவிலே, (எ) "కల్పేనుష్ఠానముక్తం" "கல்பேநுஷ்டாநமுக்தம்'' என்னதிறே. அதுதானும்பலவாய், தத்தத்கர்

(க) நாச்சி-மொ. அ. க. (உ) பெரியாழ்-தி. ரு. க. ந. (ந) பரமைகாந்திதர்மே. (ச) அமரம் - கா-உ-ப்ரும்ஹவர்கம், நகக. (ரு) ஸ்ரீர-ம் - உ. கஅ. (சு) ஷி.

மூ—(௩௭) அத்யயந ஜ்ஞாநா நுஷ்டாநங்களாலே ப்ராம்ஹண்யமா யிருப்போலே சந்தங்களாயிரமும் அறியக்கற்று வல்லராஞல் வைஷ்ணவத்வஸித்தி.

(அ) வேதாத்யயநத்தாலும் ததர்த்தாவபோதத்தாலும் தத்ஜ்ஞாநாநுரூபாசாரத்தாலும் ப்ராம்ஹணத்வஸித்தியுண்டாமாப்போலே ஸஹஸ்ரஸாகையான திருவாய்மொழி முழுதும உபதேஸத்தாலேஅர்த்தங்களோடப்யஸித்து அர்த்த ப்ரகாரமநுஷ்டிக்கஸமர்த்தராமன்ருய்ற்று வைஷ்ணவத்வ ஸித்தியுண்டாவது.

தாக்களான ஆபஸ்தம்பாஸ்வலாயநாதிகளுமுண்டாகையாலேபோதாயநாதிகளென்கிறது. ஆகவிவர்கள், விப்ரர்க்குகூடஸ்த்தபுருஷர்கள். அடியார்தொண்டரென்கிற ப்ரபந்நஜநங்களுக்குகூடஸ்த்தர், (க) "𑌪𑌤𑍍𑌯𑍁𑌃 𑌶𑍍𑌰𑌿𑌯𑌃 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑍇𑌨 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌸𑌾𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌸𑌂𑌪𑌦𑌮𑍍 । 𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌜𑌨𑌕𑍂𑌟𑌸𑍍𑌥𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 𑌶𑍍𑌰𑍀𑌪𑌰𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑌮𑍍" "பத்யுஸ்ஸ்ரியஃப்ரஸாதேநப்ராப்தஸார்வஜ்ஞஸம்பதம்| ப்ரபந்நஜநகூடஸ்த்தம்ப்ரபத்யே ஸ்ரீபராங்குஸம்" || என்கிற, நம்மாழ்வார் திருமங்கையாழ்வார் துடக்கமானவாழ்வார்களும், எம்பெருமானுர் முதலானவாசார்யர்களுமென்கை. கூடஸ்த்தராகிருர்:—மூலபூதரிறே. உபதேஸாநுஷ்டாநங்களாலே, ப்ரபத்திமார்க்கத்தை தலைப்பெறத்திவளர்த்தவர்களாகையாலேஇவர்களை, ப்ரபந்நஜநகூடஸ்த்தரென்கிறது. ✳

வ்யா. (௩௭) இனிஇரண்டுதலைக்கும், ப்ராம்ஹண்ய வைஷ்ணவத்வஸித்திஹேது நியமங்களை தர்சிப்பிக்கிருர். (அத்யயநேத்யாதியால்) அதாவது:— (உ) "𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑍋𑌽𑌧𑍍𑌯𑍇𑌤𑌵𑍍𑌯𑌃" "ஸ்வாத்யாயோத்யேதவ்யஃ" என்கிறபடியே, ப்ரதமம், வேதத்தையாசார்யோச்சாரணாநுச்சாரணமுகேந அக்ஷர ஸ்க்ரஹணம்பண்ணுகையாகிறவத்யயநத்தைப்பண்ணி மீமாம்ஸாஸ்ரவணாதிகளாலே தத்ர்த்தஜ்ஞாநம்பிறந்து, தததுரூபமான வநுஷ்டாநமுண்டாஞல் ப்ராம்ஹண்யம் ஸித்திக்குமாப்போலே, (௩) "சந்தங்களாயிரம்" என்கிறபடியே, சந்தோரூபமாய், ஸஹஸ்ரஸாகையாயிருக்கிற திருவாய்மொழியை, (௪) "அறியக்கற்றுவல்லார் வைட்டணவர்" என்கிறபடியே, "𑌅𑌧𑍍𑌯𑍇𑌤𑌵𑍍𑌯𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑍈𑌰𑍍𑌵𑍇𑌦𑌰𑍂𑌪𑌮𑌿𑌦𑌂 𑌕𑍃𑌤𑌮𑍍" "அத்யேதவ்யம்த்ரவிஜஸ்ரேஷ்டைர் வேதரூபமிதம்க்ருதம்" என்கிற ப்ரகாரத்தோடே, ஆசார்யோச்சாரணாநுச்சாரணமுகேந அப்யஸிக்கையாகிற வத்யயநத்தைப்பண்ணி, உபதேஸமுகத்தாலே, தத்ர்த்தஜ்ஞாநம்பிறந்து தததுரூபமாக வநுஷ்டிக்கவும் வல்லராஞலாயித்து, வைஷ்ணவத்வஸித்திப்பதென்கை. ✳

(க) பராங்குசாஷ்டகம்-௪. (உ) ஆரணம்-உ. ௧௫. (௩) தி-வா-௧௦. ௧. ௧௧. (௪) ஷை - ௫. ௫. ௧௧.

மூ—(௩௮) இந்தஉட்பொருள் கற்றுணர்ந்த மேலைத்தலைமறையோராகாதாரை அயர்ச்சதுப்பேதிமாரென்று உத்பத்தி நிரூபிக்கும்.

(அ) வேததாத்பர்யமான த்ராவிடவேதார்த்தத்தை ஆசார்யமுகேநவப்யஸித்து ஸம்ப்ரதாயார்த்தங்களையறிந்து உத்க்ருஷ்டரானவேதாந்திகளாகாதாரை அந்தவேதங்களுக்கசலானவர்களென்று அவர்களுடைய்ஜந்மம் ஆராயப்படும்.

வ்யா. (௩௮) அந்த, வேதாத்யயநாதிகளுடையவர்களுக்கு, இந்த வேதாத்யயநாதிகளில்லாதவளவில், வைஷ்ணவத்வாஸித்தியொழிய, ப்ராம்ஹண்யஹாநியில்லையேயென்னச்சொல்லுகிறது. (இந்த இத்யாதி) அதாவது:— (௧) "மிக்கவேதியர்வேதத்தினுட்பொருள்" என்று, உபநிஷத்குஹ்யமான விந்தத்ராவிடவேதார்த்தத்தை, (௨) "கற்றுணர்ந்த மேலைத்தலைமறையோர்" என்கிறபடியே, ஆசார்யோபதேஶமுகேந கற்றறிந்து உத்க்ருஷ்டரானவேதாந்திகளாகாதாரை, (௩) "அயல்சதுப்பேதிமார்" என்று, வேதாத்யயந ப்ரயோஜநம், ஈஶ்வரனையுள்ளபடியறிந்து ஸ்வரூபாநுரூப புருஷார்த்தம் கைங்கர்யமென்றிருக்கையாயிருக்க, இந்த ஜ்ஞாநாபாவத்தாலே, நாலுவேதங்களையு மதிகரித்திருக்கச்செய்தே, அந்தவேதத்தோடு தங்களுக்கொட்டின்றி அதுக்கசலானவர்களென்றறுதியிட்டு, (௪) "విష్ణుభక్తివిహీనాయ సర్వశాస్త్రార్థవేద్యపి । బ్రాహ్మణ్యం తస్యనష్టం వై తస్యోత్పత్తిర్నిరూప్యతాం" "விஷ்ணுபக்திவிஹீநாயஸ்ஸர்வஶாஸ்த்ரார்த்தவேத்யபி । ப்ராம்ஹண்யம்தஸ்யநபவேத்தஸ்யோத்பத்திர்நிரூப்யதாம்" ॥ என்கிறபடியே, இவர்கள், ப்ராம்ஹணரல்லரென்று, உத்பத்தியாராயப்படுமென்கை. (௫) "యః పుత్రః పితరం ద్వేష్టి తం విద్యాదన్యరేతసమ్ । యో విష్ణుం సతతం ద్వేష్టి తం విద్యాదన్యరేతసమ్॥" ॥ யஃபுத்ர꞉ பிதரம் த்வேஷ்டி தம் வித்யாதந்ய ரேதஸம் । யோ விஷ்ணும் ஸததம் த்வேஷ்டி தம் வித்யாதந்ய ரேதஸம்" ॥ என்னக்கடவதிறே. ஆக, கர்மகைங்கர்யங்களென்றுதுடங்கி, இவ்வளவாக, இரண்டுமின்னதுக் கநுகுணமென்றும், இவற்றுக்கு ப்ரேரகாப்ராய விஷயபேதமும், இவற்றின்ஸாதாரணாஸாதாரணத்வமும், அஸாதாரணாந்வயத்தில் ஸாதாரண நிவ்ருத்தியும், கைங்கர்யநிஷ்டர்க்கு கர்மநிஷ்டரோடு பொருந்தாமையும், அதுக்கடியான விருவருடையவும் ஜந்மநிரூபக கூடஸ்த்தபேதங்களும், இருவர்க்கும் ப்ராம்ஹண்யவைஷ்ணவத்வஸித்தி ஹேதுக்களும், த்ராவிடவேதார்த்த ஜ்ஞாநாபாவத்தில் ஸ்வாதீதவேதாநந்வயராய் நிஹீநத்வபுத்யர்ஹராம்படியும் சொல்லிற்று. *

* (௧) கண்ணிநுண் - ௫ - ௯. (௨) தி - அ - ௧. ௬௬. (௩) திருமாலை - ௩௬.
(௪) (௫)

மூ—(௩௯) எவ்வுலகத்தெவ்வவையு மென்கையாலே வேதம் பஹுவிதம்.

மூ—(௪௦) இதில் ஸம்ஸ்க்ருதம் த்ராவிட மென்கிறபிறிவு ருகாதி பேதம்போலே.

மூ—(௪௧) செந்திறத்ததமிழென்கையாலே ஆகஸ்த்யமு மநாதி.

(அ) வேதமானது அத்யேதாக்கள் பேதத்தாலும் உலகபேதத்தாலும் பலவகைப்பட்டிருக்கும் (என்று) சொல்லுகையாலே வேதமானது பலவாறுயிருக்கும்.

(அ) இப்படிபஹுவிதமானவேதத்தில் ஸம்ஸ்க்ருதவேதம் த்ராவிடவேதம் என்னும்படியானபேதம் ருக்யஜுஸ்ஸாமாதர்வணங்களென்னும் பேதத்தோபாதி.

(அ) அநாதித்வப்ரயுக்தவைலக்ஷண்யப்ரகாரமுடையத்ராவிடவேதமென்றுசொல்லுகையாலே ஆகஸ்த்யப்ரகாசிதமானவிந்தபாஷையும் பூர்விகமாயுள்ளது.

வ்யா. (௩௯) இனிமேல், "சந்தங்களாயிரம்" என்றுதிருவாய்மொழிக்கிச்சொன்ன வேதத்வத்தைஸாதிக்கக்கோலி ப்ரதமம், ஏவம்விதமாயிருப்பதொரு வேதமுண்டோ வென்கிறசங்கைக்கு பரிஹாரம்பண்ணுகிறார். (எவ்வுலகத்தித்யாதியால்) அதாவது:— (க) "ஓதுவாரோத்தெல்லாமெவ்வுலகத்தெவ்வவையும்" என்கையால், வேதமானது, அத்யேதாக்களுடைய பேதத்தாலும், லோகபேதத்தாலும், பஹுவிதமாயிருக்குமென்கை. ஆகையாலதிலேயிதுவுமொருவிதமென்று கருத்து. *

வ்யா. (௪௦) ஆனல்? ஏகபாஷையாயிருக்கவேண்டாவோ? ஸம்ஸ்க்ருதமும் த்ராவிடமுமாய் அந்யோந்யம்பேதித்திராநின்றதென்னென்னச்சொல்லுகிறது. (இதிலித்யாதி) அதாவது:—இப்படி, பஹுவிதமான வேதத்தில், ஸம்ஸ்க்ருதவேதம் த்ராவிடவேதம், என்கிறபிறிவு ஸம்ஸ்க்ருதாம்சம்தன்னில் ருக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், அதர்வணவேதம், என்கிறபிறிவுபோலேயென்கை. இத்தால், வேதராசியொன்றாயிருக்கச்செய்தே, ஸம்ஸ்க்ருதபாஷாரூபமானவது தன்னிலே, ருகாதிரூபேண பலபடியாகப்பிறிந்தாப்போலே, பாஷாபேதேநவுமிப்படி பிறிந்திருக்குமென்றபடி. *

வ்யா. (௪௧) அப்படிசொல்லலாமோ? ஸம்ஸ்க்ருதபாஷைபோலே, த்ராவிடபாஷையநாதியன்றே; ஆகஸ்த்யமன்றோவிதுவென்னச்சொல்லுகிறது. (செந்திறத்ததமிழித்யாதி) அதாவது:— (உ) "செந்திறத்ததமிழோசைவடசொல்லாகி" என்று, ஸம்ஸ்க்ருதத்தோடே ஸஹபடிதமும், ப்ரதமோக்தமுமாகையாலே, அகஸ்த்யப்ரகாசிதமானமாத்ரம்கொண்டு, ஆகஸ்த்யமென்று சொல்லப்படுகிற த்ராவிடமு

(க) தி-வா-௩.௧.௬. (உ) திருநெடு-௪.

மூ—(௪௨) வடமொழி மறையென்றது தென்மொழிமறையை நினைத்திறே.

மூ—(௪௩) வேதசதுஷ்ட யாங்கோபாங்கங்கள் பதினாலும்போலே இன்னாலுக்கு மிருந்தமிழ்நூல்புலவர் பனுவலாறும் மற்றையெண்பர் நன்மாலைகளும்.

(அ) ஸம்ஸ்க்ருதவேதமென்றுசொன்னது த்ரவிடவேதத்தை ஆலோசித்திறே.

(அ) நாலுவேதங்களுக்கு அங்கங்களாறும் உபாங்கங்களெட்டுமாக பதினாலானவோபாதி நம்மாழ்வாரருளிச்செய்த நாலு ப்ரபந்தமாகிறவேதசதுஷ்டயத்துக்கும் அதிவிஸ்தாரமான த்ரவிட ஶாஸ்த்ரமறிந்தஜ்ஞாநாதிகரான திருமங்கையாழ்வாருடைய ஶாஸ்த்ரரூபப்ரபந்தங்களாறும் எண்பரான மற்றையாழ்வார்களுடைய விலக்ஷணமானப்ரபந்தங்களும் (அங்கோபாங்கங்களென்னபடி)

மநாதியாயுள்ளதென்கை. இத்தாலநாதித்வம் ஸம்ஸ்க்ருத த்ராவிட ஸாதாரணமென்றதாய்த்து. ❋

வ்யா. (௪௨) ஆனலந்தபாஷையநாதியாகிறது, திருவாய்மொழிக்கு வேதத்வப்ரகாஶகமான வசநமுண்டோவென்னச்சொல்லுகிறது. (வடமொழீத்யாதி) அதாவது:— மறையென்று, கேவலவேதவாசிஶப்தத்தாலே சொல்லவமைந்திருக்க, வடமொழிமறை, என்று, ஸம்ஸ்க்ருதவேதமென்றது, த்ராவிடவேதமுமுண்டென்று நினைத்திறேயென்கை. ப்ரதிகோடியில்லாதபோது, இப்படி விஶேஷிக்கவேண்டுவதில்லையிறேயென்றுகருத்து. ❋

வ்யா. (௪௩) ஆநாலந்தவேதத்திற்கங்கோபாங்கங்களுண்டானவோபாதி, இதற்குமவையுண்டோவென்னச்சொல்லுகிறது. (வேதசதுஷ்டயேத்யாதி) அதாவது:—ருகாதிவேதசதுஷ்டயத்துக்கும், ஶிக்ஷா, வ்யாகரண, நிருக்த, சந்தஸ், கல்ப, ஜ்யோதிஷங்களாகிறவாறங்கங்களும், மீமாம்ஸா, ந்யாய, புராண, தர்மஶாஸ்த்ராத்யுபாங்கங்களெட்டுமாயிருந்துள்ள பதினாலும்போலே இந்தத்ராவிடவேதசதுஷ்டயத்திற்கும், (௧) "இருந்தமிழ்நூற்புலவன்மங்கையாளன்" என்றொருவரால் கரைகாணவொண்ணாதபடி யிருக்கிறத்ராவிடவேதஶாஸ்த்ரத்தை க்கரைகண்டஜ்ஞாநாதிக்யத்தையுடையரான திருமங்கையாழ்வாருடைய (௨) "கலியன்வாயொலிசெய்தபனுவல்" என்று, ஶாஸ்த்ரரூபமானப்ரபந்தங்களாறும், மற்றையாழ்வார்களெண்பருடையவும் விலக்ஷணமானப்ரபந்தங்களுமென்கை. (நன்மாலைகளென்றது) (௩) "நயநின்றநன்மாலை" என்று, முதலாழ்வார்ப்ரபந்தத்திலருளிச்செய்தது; எல்லாப்ரபந்தத்திற்குமொக்குமென்று நினைத்து. (௪) "பொய்நின்றஞானமும்" இத்யாதி

---

(௧) பெ-மொ-௧. ௭. ௧௦. (௨) பெ-மொ-௧. ௪. ௧௦. (௩) தி-அ. ௧. ௫௭. (௪) திவி-ம்-௧.

மூ—(சச) ஸகலவித்யாதிகவேதம்போலே இதுவும் திவ்யப்ரபந்த்ப்ரதாநம்.

(அ) ஸகலவித்யைகளிலும்வேதமதிகமானவோபாதி இப்ரபந்தசதுஷ்டயமும் ஸகலதிவ்யப்ரபந்தங்களிலும் ப்ரதாநமாயிருக்கும்.

யாலே, ஸ்வரூபவிரோதியாய்வந்தேறியானதோஷங்களை முதலடியிலே பேசினுப்போலே, ப்ரதமத்திலே (க) "வாடினேன்." இத்யாதியாலே, ஸ்வரூபத்திற்கு வந்தேறியான தோஷங்களைக்கண்டுபேசுகையும், பகவத்ப்ராவண்யப்ராசுர்யமும், அதிலர்சாவதாரத்திலூற்றமும், கலவியும் பிறிவும் மாறிமாறிவருகையும் அந்யாபதேசப்பேச்சும் அதுதன்னில் ராத்ரிவ்யஸநம் தூதப்ரேஷணம் அநுகாரம் மடலெடுக்கை தோழி தாய் மகளென்றுமவஸ்தாத்ரயாபத்திகளும், இந்திரியபயாக்ரோசம் ஈச்வரஸ்வாதந்த்ர்யபயம் அஸக்ருத்ப்ரபத்திகரணம் ஆர்த்தியினுடைய கரைபுரளுதல்களும் பரதுக்காஸஹிஷ்ணுதையாலேபலகாலம்ஹிதம்சொல்லுகையும் தொடக்கமான கட்டளையாலே, மற்றையாழ்வார்ப்ரபந்தங்களிலும்காட்டில், இப்ரபந்தசதுஷ்டயார்த்தஜ்ஞாபகமாயிருக்கையாலே, திருமங்கையாழ்வார் ப்ரபந்தங்களையிதற்கங்கங்களென்கிறது. மற்றையாழ்வார்ப்ரபந்தங்களும், ஏததர்த்தாநுஸாரிகளாய், இதிலர்த்தநிர்ணயத்திற்குறுப்பாயிருக்கையாலே, இதற்குபாங்கங்களென்கிறது. ஆக; (உ) "శిక్షాయాం వర్ణశిక్షా పదసమధిగమో వ్యాక్రియానిర్వచోభ్యాం ఛందశ్ఛందశ్చితౌ స్యాత్కమయతి సమయం జ్యోతిషం రంగధామ । కల్పేనుష్ఠానముక్తం మహ్యుచితగమితయోర్న్యాయ మీమాంసయోస్స్యాదర్థవ్యక్తిః పురాణస్మృతిషు తదనుగాస్త్వాం విదన్తి వేదాః" "சிக்ஷாயாம்வர்ணசிக்ஷாபதஸமதிகமோவ்யாக்ரியாநிர்வசோப்யாம் சந்தச்சந்தச்சிதௌஸ்யாத்கமயதிஸமயம் ஜ்யோதிஷமரங்கதாம। கல்பேநுஷ்டானமுக்தம் ஹ்யுசித கமிதயோர்ந்யாய மீமாம்ஸயோஸ்யாதர்த்தவ்யக்திஃ புராணஸ்ம்ருதிஷு தததுகா ஸ்த்வாம் விதந்தி வேதாஃ" என்கிறபடியே, அவை யந்தவேதசதுஷ்டயத்திற்கு முபகாரகங்களாயிருக்குமாப்போலே, இவையும்கீழ்ச்சொன்னபடியே, இந்தவேதசதுஷ்டயத்திற்க்கு முபகாரகங்களாயிருக்குமென்றதாயிற்று. ❋

வ்யா. (சச) வித்யாந்தரங்களில் வேதத்திற்குண்டான வாதிக்யமிதற்குமுண்டோவென்னச்சொல்லுகிறது. (ஸகலேத்யாதி) அதாவது:— (ங) "అంగాని వేదాశ్చత్వారో మీమాంసా న్యాయవిస్తరః । పురాణం ధర్మశాస్త్రం చ విద్యా హ్యేతాశ్చతుర్దశ" "அங்காநி வேதாச்சத்வாரோ மீமாம்ஸா ந்யாய விஸ்தரஃ, புராணம் தர்மசாஸ்த்ரம்ச வித்யாஹ்யேதாச்சதுர்தச" என்று, ஸஹபடிதமாயிருக்கச்செய்தே, ஸ்வாங்கோபாங்கங்களான ஸகலவித்யைகளிலும், ஸ்வவைபவத்தாலே மேலாயிருக்கும் வேதம்போலே, திவ்யப்ரபந்தகணையில் ஸஹபடிதமாயிருக்கச்செய்தே, ஸ்வாங்கோபாங்கங்களான ஸகலதிவ்யப்ரபந்தங்களிலும் ஸ்வவைபவத்தாலே, இதுவும், மேலாயிருக்குமென்கை. ❋

(க) பெ - மொ - க. க. க. (உ) ஸ்ரீரங் - ம. உ. சஅ. (ங) ஸ்ம்ருதி.

மூ—(சரு) வேதநூ லிருந்தமிழ் நூலாஜ்ஞை யாணை வசையி லேத மில் ஶ்ருதி செவிக்கினிய ஓதுகின்றதுண்மை பொய்யில் பாடல் பண்டை நிற்கும் முந்தை யழிவில்லா வென்னும் லக்ஷணங்க ளொக்கும்.

(அ) வேதஶாஸ்த்ரமென்னுமாப்போலே பெரியத்ராவிடஶாஸ்த்ரமென்றும் பகவதாஜ்ஞாரூபமென்னுமாப்போலே ஈஶ்வராஜ்ஞாரூபமென்றும் தோஷரஹிதமென்னுமாப்போலே நிர்தோஷமென்றும் ஶ்ரவணேந்த்ரியக்ராஹ்யமென்னுமாப்போலே ஶ்ரவணங்களுக்குஶ்ராவ்யமென்றும் சொல்லுகின்றவர்த்தங்கள்ஸத்யமென்னுமாப்போலே அஸத்யகந்தரஹிதமென்றும் அநாதியென்னுமாப்போலவும் அழிவில்லாததென்னுமாப்போலவும் அநாதியென்றும் அழிவற்றிருக்குமென்றும் இப்படிப்பட்ட லக்ஷணங்களெல்லாம் (ஸம்ஸ்க்ருதத்ராவிட வேதங்களிரண்டிற்கும்) ஸமாநம்.

வ்யா. (சரு) ஆநாலந்தவேதவைபவத்திற்குடலான ஶாஸ்த்ரத்வ பகவதாஜ்ஞாரூபத்வ நிர்தோஷத்வ ஶ்ருதித்வ ஸத்யத்வாநாதிநிதநத்வங்களிதற்குமுண்டோவென்னச் சொல்லுகிறது. (வேதநூலித்யாதி) அதாவது:— (க) "வேதநூலென்று" அத்தைவேதஶாஸ்த்ரமென்னுப்போலே, இத்தையும், (உ) "இருந்தமிழ்நூல்" என்று, பெரியத்ராவிடஶாஸ்த்ரமென்கையாலும், அத்தை, (ங) "𑌶𑍍𑌰𑍁𑌤𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿 𑌰𑍍𑌮𑌮𑍈𑌵𑌾𑌜𑍍𑌞𑌾" "ஶ்ருதி ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா" என்று, பகவதாஜ்ஞாரூபமாகச்சொன்னுப்போலே, (ச) "ஆணையாயிரம்" என்று, ததாஜ்ஞாரூபமாகச்சொல்லுகையாலும், அத்தை, (ரு) "வசையில்நான்மறை" என்று, விப்ரலம்பாதிதோஷரஹிதமென்னுப்போலே, இத்தையும் (சு) "ஏதமிலாயிரம்" என்று, நிர்தோஷமாகச்சொல்லுகையாலும், அத்தை, (எ) "சுடர்மிகுசுருதி" என்று, "𑌶𑍍𑌰𑍂𑌯𑌤 𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌃" "ஶ்ரூயத இதிஶ்ருதி:" என்கிறபடியே, பூர்வபூர்வோச்சாரணக்ரமத்திலே, ஶ்ரவணேந்த்ரியத்தாலே, க்ரஹிக்கப்படுமதாகச்சொன்னுப்போலே இத்தையும், (அ) "செவிக்கினியசெஞ்சொல்லே" என்று, ஶ்ராவ்யமாகச்சொல்லுகையாலும், அத்தை, (கூ) "வேதநூலோதுகின்றதுண்மை" என்று, சொல்லுமதிலொருபொய்யில்லையென்னுப்போலே, இத்தையும், (கo) "பொய்யில்பாடல்" என்று, அஸத்யகந்தரஹிதமென்கையாலும் அத்தை, (கக) "பண்டைநான்மறை" (கஉ) "நிற்கும்நான்மறை" என்று, அநாதியாகவும், மேலழிவில்லாத

(க) திருமாலை - ங. (உ) பெ - மொ - க. எ. ௪0. (ங) ஸ்ரீபாஞ்சராத்ரம். (ச) தி - வா - கூ. ங. கக. (ரு) பெ - மொ. ரு. ங. உ. (சு) தி - வா - க. சு. ௪௪. (எ) தி - வா - க. க. எ. (அ) தி - வா - கo. சு. கக. (கூ) திருச்சந்த - ம். எஉ. (கo) தி - வா - ச. ங. கக. (கக) பெ - மொ - ரு. எ. க. (கஉ) தி. வா - சு. ரு. ௪.

மூ—(சசு) சொல்லப்பட்டவென்னவிதில் கர்த்ருத்வம் ஸ்ம்ருதி யத்தை ஸ்வயம்பூ படைத்தா னென்னது போலே.

மூ—(சஎ) நால்வேதம்கண்ட புராணருஷி மந்த்ரதர்சிகளைப்போலே

(அ) (ஆழ்வாராலே) சொல்லப்பட்டதென்னுமித்திருவாய்மொழியில் (ஆழ்வார்க்குச்சொன்ன) கர்த்ருதவம் ஸ்ம்ருதியானது அந்தஸம்ஸ்க்ருதவேதத்தை ப்ரம்ஹாவானவன் உண்டாக்கினன் என்றுசொன்னப்போலே.

(அ) நாலுவேதங்களையும் ஸாக்ஷாத்கரித்துபுராணகர்தாவானவ்யாஸபகவானையும் மந்த்ரதர்சிகளானருஷிகளையும்போலே

தாகவும், சொன்னப்போலே, இத்தையும், (க) "முந்தையாயிரம்" (உ) "அழிவில்லாவாயிரம்" என்று, அநாதியாயழிவற்றிருக்குமதாகச் சொல்லுகையாலும், இந்தலக்ஷணங்களெல்லாமிரண்டுக்கு மொக்குமென்கை. *

வ்யா. (சசு) ஆநாலந்தவேதம்போலே, இதுவுமஸ்ம்ருதகர்த்ருகமாயிருக்கவேண்டாவோ? ஆழ்வாரிதற்கு கர்தாவென்கையால், நித்யத்வாபௌருஷேயத்வங்கள்கூடாதேயென்னச்சொல்லுகிறது. (சொல்லப்பட்ட இத்யாதி) அதாவது:—(ங) "சடகோபன்சொல்லப்பட்ட வாயிரம்" என்று, இதிலாழ்வார்க்குச்சொன்னகர்த்ருத்வம், (ச) "[Telugu script] [illegible]" "அநாதிநிதநாஹ்யேஷா வாகுத்ஸ்ருஷ்டா ஸ்வயம்புவா" என்றுஸ்ம்ருதி, அந்தவேதத்தை, ப்ரும்ஹாஸ்ருஷ்டித்தானென்றுசொன்னவோபாதியென்கை. ஸ்வயம்பூஸ்ருஷ்டித்தானென்னுதே படைத்தானென்றது, (ரு) "முன்னம்திசைமுகனைத்தான்படைக்க,மற்றவனும்முன்னம்படைத்தனன் நான்மறைகள்" என்று,ஆழ்வார் ஸூக்தியையும் தர்சிப்பிக்கைக்காக. அநாதிநிதநமானஸந்தர்ப்பம், ப்ரம்ஹாவின்வாக்கினின்று மாவிர்ப்பவித்தமாத்ரங்கொண்டு, ப்ரம்ஹாவுக்கதில்சொன்ன கர்த்ருத்வத்தோபாதி, இதிலுமாழ்வார்க்குச்சொன்னகர்த்ருத்வமாகையாலே, இத்தாலிந்நித்யத்வாபௌருஷேயத்வஹாநிவாராதென்றுகருத்து. *

வ்யா. (சஎ) பூர்வஸந்தர்ப ப்ரக்ரியையை, இவர்தர்சித்துப்பேசினதேயுள்ளதென்னுமிடத்தையறிவிக்கிறார். (நால்வேதமித்யாதியால்) அதாவது:— (நால்வேதங்கண்ட புராணர்ஷியென்று) (சு) "நால்வேதங்கண்டானே" என்னும்படி, ஈச்வரன் தானடியிற்செய்தாப்போலே,நாலுவேதங்களையும் ஸாக்ஷாத்கரித்து "[Telugu script] [illegible]" "அஷ்டாதசபுராணாநாம் கர்தாஸத்யவதீஸுத:" என்கிறபடியே, அஷ்டாத

(க) தி - வா - [illegible]. ரு. கக. (உ) ஷை - க. எ. கக. (ங) ஷை - அ - க0. கக. (ச) ஸ்மிருதி. (ரு) பெரியதிருமடல் - க0.

௯. இவரையும் ருஷி முனி கவி யென்னும்.

இவ்வாழ்வாரையும் ருஷியென்றும் முனியென்றும் கவி யென்றும் சொல்லும்.

ஸபுராணங்களினுடைய ஆநுபூர்வியையும் தர்சித்துச்சொன்ன வேதவ்யாஸபகவானைச்சொல்லுகிறது: நால்வேதங்கண்டானென்கிற விடத்தில், ஸ்வேநரூபேணநின்று தர்சித்தமையன்றிக்கே, வ்யாஸரூபேணநின்று தர்சித்தமைதன்னைச் சொல்லுகிறதென்று, இவர்க்குக்கருத்தாகவுமாம். (௧) "సంకీర్ణబుద్ధయో దేవా బ్రహ్మరుద్రపురస్సరాః। శరణ్యం శరణంజగ్ము ర్నారాయణ మనామయమ్। తైర్విజ్ఞాపిత కార్యస్తు భగవాన్పురుషోత్తమః। అవతీర్ణో మహాయోగీ సత్యవత్యాం పరాశరాత్" "ஸங்கீர்ணபுத்தயோ தேவா ப்ருஹ்ம ருத்ர புரஸ்ஸரா:। ஶரண்யம் ஶரணம் ஜக்முர்நாராயண மநாமயம்॥ தைர்விஜ்ஞாபிதகார்யஸ்து பகவாந் புருஷோத்தம:। அவதீர்ணோமஹா யோகீஸத்யவத்யாம் பராஶராத்" என்றும், (௨) "కృష్ణద్వైపాయనంవ్యాసం విద్ధినారాయణంప్రభుమ్" "க்ருஷ்ணத்வைபாயநம்வ்யாஸம் வித்திநாராயணம்ப்ரபும்।" என்று பகவதாவேசாவதாரதயா பகவாந்தானாகச் சொல்லக்கடவதிறே. இப்படியிருந்துள்ள ஸ்ரீவேதவ்யாஸபகவானை வேதாதிகளின் பூர்வஸித்தாநுபூர்வியைதர்சித்துச் சொன்னபடியாலே, "தர்ஶநாத்ருஷி:" "மநநசிலோமுநி:" "கவி:காந்ததர்சி" என்கிறவர்த்தங்களை நினைத்துக்கொண்டு, (௩) "శ్రూయతాంసింహనాదోయ మృషేస్తస్యమహాత్మనః। ధర్మేచార్థేచకామేచ మోక్షేచభరతర్షభ" "ஶ்ரூயதாம் ஸிம்ஹநாதோயம் ருஷேஸ்தஸ்ய மஹாத்மந:। தர்மேசார்த்தேச காமேச மோக்ஷேசபரதர்ஷப॥ என்றும், (௪) "సాక్షాల్లోకాన్పావయమానః కవిముఖ్యఃపారాశర్యః" "ஸாக்ஷால்லோகாந்பாவயமாந: கவிமுக்ய: பாராஶர்ய:" என்றும், "ఏవంవిధంభారతంతు ప్రోక్తంయేనమహాత్మనా। సోయంనారాయణస్సాక్షాద్వ్యాసరూపీమహామునిః" "ஏம்விதம் பாரதந்து ப்ரோக்தம் யேநமஹாத்மநா।ஸோயம் நாராயண ஸ்ஸாக்ஷாத் வ்யாஸரூபீமஹாமுநி:॥ என்றும், ருஷி முநி கவியென்று சொல்லிற்றிறே. மந்த்ரதர்சிகளானவர்களை பூர்வஸித்த ஸந்தர்ப்பத்தை ஸாக்ஷாத்கரித்துச் சொன்னவர்களென்று மிடந்தோற்ற, (௫) "నమఋషిభ్యో మన్త్రకృద్భ్యః" "நமருஷிப் யோ மந்த்ரக்ருத்ப்ய:" என்றும், "భగవాన్ శౌనకోమునిః" "பகவாந்ஶௌநக முநி:" என்னுமித்யாதிகளாலே, ருஷிமுநி யென்று சொல்லிற்றிறே. இவர்கள்விஷயத்திலும், கவிசப்தப்ரயோக முண்டாகில் வந்தஸ்தலங்களிலே கண்டுகொள்வது. ஆகவிப்படி இவர்களைச் சொன்னுப்போலே, த்ராவிடவேதமானவிதின் பூர்வஸித்தாநுபூர்வியை, ஸாக்ஷாத்கரித்துப் பேசின விவ்வாழ்வாரையும், (௬) "ఋషింజుషామ

---

(௧)   (௨) வி - பு. ௩. ௪. ௪.   (௩) ஸ்ரீபாரதம்-ஆ. ௬௨. ௫௩;
(௪) ஸ்ரீபாரம்.   (௫) ஆரணம். (௬) பராங்குசாஷ்டகம்-௫.

மூ— (சஅ) படைத்தான் கவியென்னபோதே இதுவும் யதாபூர்வகல்பநமாமே.

மூ—(சகூ) உறக்கம்தலைக்கொண்டபின்னை மறைநான்கு முணர்ந்த தங்களப்பனோடே ஓதின

(அ) ப்ரளயங்கொண்டஉலகத்தைமுன்புபோலஸ்ருடித்தவீச்வரனுடைய கவியென்றாழ்வாரைச்சொன்னபோதே இப்ரபந்தமும் முன்புண்டானத்தைமுன்புபோலே இப்பவுமாக்கினனென்னுமிடம் தோற்றுமிறே.

(அ) யோகநித்ரையைச்செய்தவநந்தரம் வேதங்கள்நாலையும் ஸ்மரித்ததனக்குஜநகனனவீச்வரனிடத்தினின்று அப்யஸித்த

మహే కృష్ణ తృష్ణాతత్త్వమివోదితమ్। సహస్రశాఖాం యోఽద్రాక్షీత్ ద్రావిడీం బ్రహ్మసంహితామ్" "ருஷிம் ஜுஷாமஹே க்ருஷ்ணத்ருஷ்ணா தத்வமிவோதிதம்| ஸஹஸ்ரசாகாம யோத்ராக்ஷீ த்ராவிடீம் ப்ரும்ஹஸம் ஹிதாம்"|| என்றும், (க) " శఠకోపమునిం వన్దే శఠానాం బుద్ధిదూషకమ్। అజ్ఞానాం జ్ఞానజనకం తిన్త్రిణీమూలసంశ్రయమ్" "சடகோபமுநிம் வந்தே சடாநாம் புத்திதூஷகம் அஜ்ஞாநாம் ஜ்ஞாநஜநகம் திந்த்ரிணீமூலஸம் ச்ரயம்" || என்றும், (உ) "உலகம் படைத்தான் கவியாயினேற்கு" என்றும், முன்புண்டான ஸந்தர்ப்பத்தை தர்சித்துப்பேசினவரென்று மிடந்தோற்ற ருஷியென்றும் முனியென்றும் கவியென்றும் சொல்லுமென்கை. ✳

வ்யா. (சஅ) இன்னமுமிதினுடைய வநாதித்வஸூசகமானதொன்றைதர்சிப்பிக்கிறார். (படைத்தானித்யாதி) அதாவது:—உலகம்படைத்தான்கவியென்கையாலே, (௩) "ஒன்றியொன்றியுலகம்படைத்தான்" என்கிறபடியே, ஒருப்பட்டொருப்பட்டு மென்மேலும் லோகஸ்ருஷ்டியைப்பண்ணுமிடத்தில், (ச) "సూర్యాచన్ద్రమసౌ ధాతా యథాపూర్వమకల్పయత్" "ஸூர்யாசந்த்ர மஸௌ தாதா யதாபூர்வ மகல்பயத்" என்கிறபடியே, ஸ்ருஷ்டிதோறும் சந்த்ர ஸூர்யாதி ஸகலபதார்த்தங்களும் யதாபூர்வகல்பநமாய் வருமாப்போலே, த்ராவிடவேதமானவிப்ரபந்தமும், ஸ்ருஷ்டிதோறும், யதாபூர்வகல்பநமாய் வருமென்று தோற்றுமிறேயென்கை. ✳

வ்யா. (சகூ) ஏவம்பூதமானவிது, பகவத்ப்ரஸாதத்தாலே ஆழ்வார்க்குலித்தித்து ஆழ்வார்ப்ரஸாதத்தாலே இவ்வருகுள்ளார்க்குபஜீவ்யமாய், இவரையிட்டு நிரூபிக்கும்படியானமையை ஸத்ருஷ்டாந்தமாகவருளிச்செய்கிறார். (உறக்கமித்யாதியால்) அதாவது:— (௫) "உன்னியபோகத்துறக்கம்தலைக்கொண்டபின்னை" என்கிறபடியே, ஸம்ஹ்ருதி ஸ

(க) பராங்குசாஷ்டகம்-ச. (உ) தி-வா-௩. க. க0. (௩) ஷை. (ச) உபநிஷத்ப்ர-உ. (௫) பெரிய-ஸ். அ.

௫. சந்தச்சதுமுகன் சலங்கலந்த வெண்புரிநூல் மாணுரி திரி
தந்துண்ணும் காமனுட லிருக்கிலக்கு ஜ்யேஷ்டபுத்ரா
திகளுக்கு மறைபயந்தாப்போலே ஆதமில்காலத் தெந்
தையான வாய்முதலப்பன் பிரமகுருவா யிராப்பகல் மு
ன்சொல்ல கற்றனமே யென்றவிவரும் நாவினால் நன்மை
யா லென்று ஓதவல்லபிராக்களை கன்மிங்களென்று சொற்
பயிற்ற வேதமோதுவாரோத்தாகையாலே ஆதர்வணாதி
கள்போலே இதுவும் பேர்பெற்றது.

வேதங்களை நிரூபகமாகவுடைய சதுர்முகன்கங்காஜலங்கலந்திருக்கும் (ஜடைகளையுடையனாய்) ஸ்வச்சமானயஜ்ஞோபவீதமுடையனாய் க்ருஷ்ணாஜிநம்தரித்து பிக்ஷாடநம்பண்ணி பக்ஷிக்குமவனாய் மந்மதஶரீரத்தை (தஹித்தஜிதேந்த்ரியனாய்) வேதாத்யயநத்தால்ப்ரகாசிக்கும் (ப்ரும்ஹசர்ய லக்ஷணஸம்பந்நனான ப்ரதமபுத்ரனானருத்ரன்முதலானாற்கு வேதத்தையோதிவித்தாப்போலே ப்ரபஞ்சமடங்கவழிந்தவன்று, நிருபாதிகஸ்வாமியான வாய்த்தப்ரதமோபகாரகன் பரமகுருவாய் திவாராத்ரமும் முன்னுறச்சொல்ல அநுச்சாரணம்பண்ணினேன் என்றுசொன்ன விவ்வாழ்வாரும் நாவினாலென்கிறபாட்டின்படி (ஸ்வாசார்யப்ரேமமுமுடையராய் நன்மையால் மிக்கவென்கிற பாட்டின்படி (க்ருதஜ்ஞதையுமுடையராய்)இப்படியாயிருக்கிறஶ்ரத்தையோடோதவல்ல ஸ்ரீமதுரகவிகள்போல்வாரை அப்யஸியுங்கோளென்று இச்சொல்களையப்யஸிப்பிக்க வேதமானது அத்யேதாக்களையிட்டு நிரூபிக்கப்படுமதாகையாலே ஆதர்வணம் முதலானவைபோலே இப்ரபந்தமும் (சடகோபன்சொல்லென்று) பேர்பெற்றது.

மயத்தில், நாம ரூப விபாகாநர்ஹமாய் ஸதவஸ்த்தையாய்க்கிடந்தவிற்றை, ஸ்ருஷ்டிகாலம்வந்தவாறே விபக்தமாக்கி, மஹதாதிஸகலதத்வங்களையு மண்டத்தையும் ஸ்ருஷ்டித்து, சதுர்முகஸ்ருஷ்டிக்குமுன்னாக, ஏகார்ணவத்திலே, இவைநல்வழியாய்க்கரைசேரும் விரகேதோ வென்றநுஸந்திக்கையாகிற யோகநித்ரையைச்செய்தவநந்தரம், (௧) “ உணர்ந்தாய் மறைநான்கும் ” என்கிறபடியே, * ஸுப்தப்ரபுத்தந்யாயத்தாலே, ஸம்ஸ்காரகதமாய்க்கிடந்த நாலுவேதங்களையுமாநுபூர்வி தப்பாதபடிஸ்மரித்த (௨) “ திசைமுகனார்தங்களப்பன்” என்கிறபடியே, தனக்குஜநகனானஸர்வேச்வரனேடே, (௩) “ 𑌯𑍋 𑌵𑍈 𑌵𑍇𑌦𑌾𑌂𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌹𑌿𑌣𑍋𑌤𑌿 𑌤𑌸𑍍𑌮𑍈 ”

---

(௧) தி - அ. ௨. ௪௮. (௨) பெ - மொ - ௨. ௨. ௭. (௩) ஶ்வே - த் - ௬. ௧௭.

* உணர்ந்திருக்கையி லெதைநினைத்திருக்கிறானோ, உறங்கி யுணரும்போது மதையே நினைக்கை.

"யோவை வேதாம்ஶ்ச ப்ராஹிணோதி தஸ்மை" என்னும்படியே தின, (௧) "சந்தச்சதுமுகன்" என்கிறபடியே, சந்தஸ்ஸை நிரூபகமாக வுடையசதுர்முகன், (௨) "சலங்கலந்தசெஞ்சடை" (௩) "வெண்புரிநூல்மார்பன்" (௪) "மானுரியதளுமுடையவர்" (௫) "பிறர்மனைதிரிதந்துண்ணும்" (௬) "காமனுடல்கொண்டதவத்தார்" (௭) "இருக்கிலக்குதிருமொழிவாயெண்டோசற்கு என்று" நித்யஸ்நாநோபவீத க்ருஷ்ணாஜிநதாரண பிக்ஷாந்ந போஜ நேந்த்ரியஜய ஸதாத்யயநபரத்வங்களானப்ரும்ஹசர்யலக்ஷணயுக்தனாய், "ப்ரஹ்மண꞉ புத்ராய ஜ்யேஷ்டாய" "ப்ருஹ்மண꞉புத்ராயஜ்யேஷ்டாய" என்கிறபடியே, தனக்குஜ்யேஷ்டபுத்ரனான ருத்ரன்முதலானோர்க்கு (௮) "சரணமறைபயந்த" என்கிறபடியே, புருஷார்த்த ததுபாயஜ்ஞாநஸாதநமான வேதத்தை, ஓதிவித்தாப்போலே, (௯) "ஆதுமில்காலத்தெந்தை" என்று (௧௦) "ஒன்றுந்தேவும்" இத்யாதிப்படியே, ஒன்றுமில்லாத ஸம்ஹாரகாலத்தில் நாமரூபங்களையிழந்தவோபாதி ஸத்தையுமிழந்துபோகாமே, எந்தையான முறையாலே தன்மேலேயேறிட்டுக்கொண்டுநோக்கி, மீளவும் கரணதிகளைத்தந்து, ஜ்ஞாநவிகாஸத்தைப்பண்ணின, (௧௧) "வாய்முதலப்பன்" என்கிற, வாய்த்தகாரணபூதனை வுபகாரகன், (௧௨) "பீதகவாடைப்பிரானார் பிரமகுருவாகி" என்கிறபடியே, தானேயாசார்யனாய் (௧௩) "இராப்பகலோதுவித்து" என்கிறபடியே, திவாராத்ரவிபாகமற (௧௪) "என்முன்சொல்லும்" என்கிறபடியே முன்னுருச்சொல்ல, (௧௫) "திருநாமச்சொல்கற்றனமே" என்றநுச்சாரணம்பண்ணினேனென்று, இப்படியவனோடே யோதினவிவரும், (௧௬) "நாவினால் நவிற்றின்பமெய்தினேன்" என்றுதுடங்கி, (௧௭) "குருகூர்நம்பிபாவினின்னிசைபாடித்திரிவன்" என்று, ஸ்வாசார்யப்ரேமத்தையும், (௧௮) "நன்மையால்மிக்கநான்மறையாளர்கள்புன்மையாகக்கருது"ம்படியானவென்னை, (௧௯) "அன்னையாயத்தனாயென்னையாண்டிடும் தன்மையான்சடகோபன்" என்று, க்ருதஜ்ஞதையையும் முன்னிட்டுக்கொண்டு, (௨௦) "ஓதவல்லபிராக்கள்" என்றித்தை யப்யஸிக்கவல்ல வுபகாரகரென்னும்படி, ஶ்ரத்தாபூர்வகமாக வோதும் ஸ்ரீமதுரகவிகள்போல்வாரை" (௨௧) "கன்மிங்களென்னும்மையான்" என்கிறபடியே, இத்தை யப்யஸிக்கோளென்றுசொல்லி, (௨௨) "சொல்பயிற்றிய" என்கிறபடியே, இஶ்ஶப்தத்தையப்யஸிக்க, வேதமானது, (௨௩) "ஓதுவாரோத்து" என்றத்யேதாக்களையிட்டு நிரூபிக்

(௧) பெரியா-ழி - ௨. ௫. ௮. (௨) திருச்சந்த-ம் - ௧௧௩. (௩) தி - ௮. ௧. ௪௬. (௪) பெ-ழி - ௧௦. ௯. ௪. (௫) திருக்குறு-ம் ௧௯. (௬) தி-௮. ௪. ௭௮. (௭) பெ-மொ. ௬. ௬. ௮. (௮) தி - ௮. ௧. ௬௮. (௯) தி - வா - ௩. ௪. ௪. (௧௦) தி-வா. ௪. ௧௦. ௧. (௧௧) ஷை ௭. ௯. ௩. (௧௨) பெரியா - ௫. ௨. ௮. (௧௩) ஷை ஷை-௨௩. (௧௪) தி-வா - ௭. ௯. ௨. (௧௫) திருவி-ம் - ௬௪ (௧௬) கண்ணி - பு - ௨. (௧௭) ஷை ஷை. (௧௮) ஷை. ௫. (௧௯) ஷை ஷை (௨௦) தி-வா - ௯. ௧. ௧௧. (௨௧) தி - வா-௬. ௮. ௬. (௨௨) ஷை ௯. ௫. ௮. (௨௩) தி - ஷை - ௩. ௧. ௬.

ரூ—(ரு0) இயற்பா மூன்றும் வேதத்ரயம்போலே பண்ணார்பாடல் பண்புரை யிசைகொள் வேதம்போலே.

(அ) இயற்பா ப்ரபந்தங்களான (திருவிருத்தம் திருவாசரியம் பெரியதிருவந்தாதி என்கிற) மூன்றும் (ருக் யஜுஸ்ஸாதர்வணங்களென்கிற) மூன்றுவேதங்கள்போலே பண்ணோடு சேர்ந்தவிசையை யுடையதிருவாய்மொழி பண்ணைப்புரைந்திருக்குமதாய் இசையையுமுடைத்தான ஸாமவேதம் போலே.

கப்படுமதாகையாலே, ஆதர்வணம் தைத்தரீயம் காண்வம் என்று பேர் பெற்றாப்போலே, இவரிதுக்குப்ரதமாத்யேதாவானதுகொண்டு, இதுவும் (க) "சடகோபன்சொல்" என்று பேர்பெற்றதென்கை. ஆக, அத்யயநேத் யாதிவாக்யத்தில் சந்தங்களாயிரமென்று ப்ரஸ்துதமான திருவாய்மொழியின் வேதத்வத்தை (எவ்வுலகத்தித்யாதி) வாக்யம்துடங்கி, இவ்வளவாக ஸாதித்தாராயற்று. *

வ்யா. (ரு0) திருவாய்மொழியொன்றுக்குமன்றே வேதத்வம்ஸாதித்தது, இவருடையப்ரபந்தங்கள் நாலுக்குமொக்குமிறே. ஆகவிறே (வேதசதுஷ்டயேத்யாதி) வாக்யத்தில், இவர் ப்ரபந்தங்கள்நாலையும், நாலுவேதத்தினுடைய ஸ்தாநேயாகவருளிச்செய்தது. அதிலெந்தப்ரபந்த மெந்தவேதத்தினுடையஸ்தாநத்திலே யென்னவருளிச்செய்கிறார். (இயற்பாஇத்யாதியால்) அதாவது:—இயற்பாவான திருவிருத்தம் திருவாசரியம் திருவந்தாதி என்கிற, ப்ரபந்தங்கள்மூன்றும், அடைவே, ருக்யஜுஸ்ஸாதர்வணங்களாகிற மூன்றுவேதத்தினுடையவும் ஸ்தாநத்திலே, (உ) "பண்ணார்பாடல்" என்று, பண்ணோடேசேர்ந்திருந்துள்ளவிசையையுடையதிருவாய்மொழி (ங) "பண்புரைவேதம்" என்றும், (ச) "இசைகொள்வேதம்" என்றும், பண்ணையுமிசையையு முடைத்தான ஸாமவேதம்போலென்கை. வ்யாக்யாநங்களில், பண்புடைவேதமென்றுழிய, பண்புரைவேதமென்றுபாடமும், இசைகொள்வேதத்திற்கு, ஸாமவேதபரத்வமும் கண்டதில்லையேயாகிலும், ஆப்ததமரானவிவர் இப்ரபந்தத்திலே, இப்படியருளிச்செய்கையாலே, இப்படிகொள்ளவேணும். அப்போதைக்கவ்வவஸ்தலங்களில், ஸாமவேதவைலக்ஷண்யத்தைப்பற்ற வித்தைச்சொன்னதேயுள்ளது. மற்றையவற்றுக்கு மிது, உபலக்ஷணமென்றுகொள்ளக்கடவது. (பண்புரைவேதமென்றது) பண்ணைப்புரைந்திருக்கிற வேதமென்னதாய், அப்பண்ணுக்காஶ்ரயமான வேதமென்றபடி. (இசைகொள்வேதமென்னது) இசையையுடைத்தான வேதமென்றபடி. (பண்ணார்பாடல்) என்று, திருவாய்மொழி பண்ணை

(க) தி - வா. க. உ. கக. (உ) ஷை க0. எ. ரு. (ங) ஷை ௬. ௬. ரு. (ச) பெ - மொ. ரு. ங. உ.

மூ— (ருக) ருக்கு ஸாமத்தாலே ஸரஸமாய் ஸ்தோபத்தாலே பரம்பு மாப்போலே சொல்லார்தொடைய லிசைகூட்ட வமர்சுவை யாயிரமாய்த்து.

மூ— (ருஉ) சந்தோகனென்று ஸாமாந்யமாகாமல் முதலிலே பிரித்து

(அ) (ஸாமஸங்க்ரஹமான) ருக்கானது (தனக்கு ரஸமாயிருந்துள்ளகாநரூப) ஸாமத்தாலே ரஸஸஹிதமாய்(ஹாவுஹாவு என்னுமித்யாதியாந) ஸ்தோபத்தாலே விஸ்த்ருதமாமாப்போலே சொற்களாலேதொடையபட்டதாய் ருக்வேதஸ்தாநீயமான திருவிருத்தம் நூறுபாட்டும் இசையிலேகூட்டினவாறே அமைந்திருக்கிறரஸங்களையுடைய ஆயிரம்பாட்டாக பரம்பிற்று.

(அ) சந்தோகஸாமஸ்வரூபனென்று (ஈஶ்வரந்தன்னை ஸாமவேதஸ்வரூபனாகச்சொன்னது) ஸாமாந்யஸாமஸ்வரூபனைகச்சொன்னதாகாதபடி ப்ரதமத்திலே விபஜித்து

யுமிசையையுமுடைத்தாகையாலே, ஸாமவேதத்திற்கு, பண்ணுமிசையுமுண்டென்னுமிடமறிவிக்கைக்காகவாய்த்து, ஸாமவேதபரமான சந்தைகள் வேண்டுவதுண்டாயிருக்க விவற்றையிப்போதிவரெடுத்தது. *

வ்யா. (ருக) ஆனலந்தவேதசதுஷ்டயத்தில், ருக்கு ஸாமரூபேண விஸ்த்ருதமாமாகாரம், இங்குமொக்குமோவென்னு மாகாங்கைஷயிலேயருளிச்செய்கிருர். (ருக்கித்யாதி) அதாவது:— ஸாமஸங்க்ரஹமான ருக்கானது, ஸ்வவிவரணமாய், (க) "ఋచస్సామరసః" "ருசஸ்ஸாமரஸ:" என்கிறபடியே, தனக்குரஸமாயிருந்துள்ள காநரூபஸாமத்தாலே ரஸஸஹிதமாய், "ஹாவு ஹாவுஹாவு" இத்யாதியானஸ்தோபத்தாலே விஸ்த்ருதமாமாப்போலே, ருக்வேதஸ்தாநேயாயிருகிக்ற, (உ) "சொல்லார்தொடையலான" திருவிருத்தம் நூறுபாட்டும், (ங) "இசைகூட்டி" என்கிறபடியே, இசையிலே கூட்டினவாறே" ஸாமவேதஸ்தாநேயாய் (ச) "அமர்சுவையாயிரம்" என்கிறபடியே ஸரஸமாயிருந்துள்ள வாயிரம்பாட்டாக பரம்பிற்றென்கை. *

வ்பா. (ருஉ) இனியிந்தஸாமந்தானனேகவிதமாகையாலே, இதெந்தஸாமத்தோடொக்குமென்ன வருளிச்செய்கிருர். (சந்தோகனென்று ஸாமான்ய மாகாமல் முதலிலேபிறித்து) அதாவது:— (ரு) "சாமவேதகீதனுயசாமியப்பன்" (சு) "సామవేదోఽస్మి" "ஸாமவேதோஸ்மி" என்ற பியுக்தருமவன்தானும் சொன்னஸாமம் ஸாமாந்யமாகாமல்

(க) சா-த்-க. க. (உ) தி-வி. க00. (ங) வா-உ. ச. கக. (ச) தி-வா. க. ங. கக. (ரு) திருச்சந்த-ம். கச. (சு) கீதை-க0. உஉ.

மூ. யாழ்பயில்காநஸ்வரூபியை பாலையாகியென்று விசேஷிக்கையாலே வேதகீதச்சாமி நானென்ன ஸாமம் தோற்ற உத்கீதப்ரணவத்தை ப்ரதமத்திலே மாறாடி சரமகதி முடிவாக தொண்டர்க்கமுதென்ன தேவாங்கமாக்கி மஹாகோஷ நல்வேதவொலிபோலே மஹாத்யயனமென்ன ப்பாடுகையாலே இத்தைச் சாந்தோக்ய ஸமமென்பர்கள்.

வீணையிலேயநுபவிக்கப்படுகிறகாநம்போலே இனியனானவனை (காநஸாமாந்யமாகாமல் சந்தோகஸாமத்தின்கிறமான) பாலையாகிறகாநஸ்வரூபனென்று விஶேஷோபாதாநம் பண்ணிச்சொல்லுகையாலே சந்தோகஸாமஸ்வரூபனும் தத்கீதமானபாலையாகிறகாநஸ்வரூபனுமான வீஶ்வரன் மிகவுமாதரித்துதன்னோடுஸமாநாதிகரித்துச்சொன்ன சந்தோகஸாமம் (ஸமமென்னுமிடம்) தோற்றும்படி (ஸாமத்திற்குரஸமாயிருந்துள்ள) உத்கீதாவயவப்ரணவத்தை ப்ரதமபாசுரத்திலே (அகார உகார மகாரங்களை க்ரமமாகவன்றிக்கே) வ்யுத்க்ரமமாக உபாதாநம்பண்ணி (சூழ்விசும்பிலே அர்ச்சிராதிகதியாகிற) சரமகதியை ப்ரபந்தாந்தமாகக்கொண்டு (சேஷிகுணாநுபவ) சபலர்க்கு (போக்யமான) வம்ருதமென்னும்படி) ஸாமகாநம்நித்யமுக்தரான தேவர்களுக்குபோக்யமான வம்ருதமானப்போலே பண்ணி மஹாத்வநியையுடைத்தான தென்றீடுபடும்படியான ஸாமவேத கோஷம்போலே பெரியதிருவத்யயநமென்றீடுபடும்படி அத்யயநம்பண்ணுகையாலே இத்திருவாய்மொழியை சாந்தோக்யோபநிஷத்துக்கு ஸமமென்றருளிச்செய்வர்கள்.

---

(௧) "சந்தோகன்பௌழியன் ஐந்தழலோம்பு தைத்திரியன்சாமவேதி" என்கிறவிடத்தில், ஸாமவேதியென்றுமேற்சொல்லாநிற்க, சந்தோகனென்று முதலிலே பிறித்தென்கை. இதுநினைவன்றாகில், ஸாமவேதியென்றதிற்குள்ளே, அந்தஸாமமுமந்தர்பவிக்குமாயிருக்க, இங்ஙன்பிறித்துச்சொல்ல வேண்டாவிறேயென்றுகருத்து. (யாழ்பயில்காநஸ்வரூபியை பாலையாகியென்று, விசேஷிக்கையாலே) அதாவது:—(௨) "யாழ்பயில்நூல்நரம்பின்முதிர்சுவை" என்று, யாழ்விஷயமாகவப்யஸிக்கப்படுவதான ஶாஸ்த்ரத்திற்சொன்ன லக்ஷணத்தையுடையநரம்பிலே பிறந்தபண்பட்டரஸமென்னும்படி, காநஸ்வரூபம்போலே இனியனானவனை காநஸாமாந்யமாகாமல், (௩) "யாழ்நரம்பில் பெற்றபாலையாகி" என்று, அந்தசந்தோகஸாமத்தின்கிறமான பாலையாகிற பண்ணையிட்டு விசேஷிக்கையாலேயென்கை. இப்போதிதுசொல்லிற்று, ஸாமவேதகீத

---

(௧) பெ-மொ. ௫. ௫. ௯, (௨) தி-வா-௨. ௩. ௭. (௩) பெ-மொ. ௭. ௩. ௭.

னென்கிறவிடத்திலே, வேதத்தோடன்றிக்கே, இதின்கீதத்தோடே ஸமா நாதிகரிக்கையாலே, அந்தகீதமும் சந்தோகஸாமகீதமென்றறிவிக்கைக்காக (வேதகீதச்சாமி நானென்றஸாமம்தோன்ற) அதாவது:— இப்படி விசேஷிக்கையாலே, * பஸ்வதிகரணந்யாயத்தாலே, ஸாமவேதகீதன், ஸாமி, ஸாமவேதோஸ்மி, என்று சொன்ன ஸாமாந்யமான விஸ்ஸாமஸப்தமும் கீதஸப்தமும், கீழ்ச்சொன்ன சந்தோகதத்கீதங்களாகிற விசேஷத்திலே பர்யவஸிக்குமிறே. ஆகபின்பு, சந்தோகஸாமமே இத்தால்சொல்லப்பட்டதாகையாலே இப்படியபியுக்தரும் தானும் தன்னோடேஸமாநாதிகரிக்கும்படி யத்க்ருஷ்டமா யவனுக்காதரணீயமான சந்தோகஸாம ஸமீபெதன்னுமிடம் தோற்றும்படியாகவென்கை. (உத்கீதப்ரணவத்தைப்ராதமத்திலே மாறுடி) அதாவது:— ஒருஸாமந்தனக்கே, ப்ரஸ்தாவம் உத்கீதம் ப்ரதிஹாரம் உபத்ரவம் நிதநம் என்று, ஐந்துபாகங்களுண்டாகையாலே, அவற்றுக்குள்ளே பொன்றுயிருக்கச்செய்தே, (க) "సామ్న ఉద్గీథోరసః" "ஸாம்நவுத்கீதோரஸ:" என்று, ஸாமத்திற்கு, ரஸமாகச்சொல்லப்படுமதாய், ப்ரணவபூர்வகமாககாநம் பண்ணப்படுமதாயிருப்பதொன்றிறே உத்கீதம். ஆகையாலந்த உத்கீதாவயவமானப்ரணவத்தை, (உ) "ఓమిత్యేతదక్షరముద్గీథముపాసీత" "ஓமித்யேததக்ஷரமுத்கீதமுபாஸீத" என்று, சாந்தோக்யந்தன்னில், ப்ரதமத்திலே யெடுத்தாப்போலே, இங்கும்ப்ரதமத்திலே யெடுக்கிறவளவிலே, "ஓம்" என்றுஸம்ஹிதாகாரேண வெடுத்தால், அதிக்ருதாதிகாரமாமென்று, அஸம்ஹிதாகாரேண அக்ஷரத்ரயத்தையும் ப்ரதம த்விதீய த்ருதீயபாதங்களில், எடாதிக்கச்செய்தே, ப்ரதமாக்ஷரமானஅகாரம் முதலாகவெடாதே, உகாரம்முதலாகவெடுக்கையாலே, அக்ஷரக்ரமத்தைமாறுடியென்கை. இப்படி, உகாரம்முதலாகவெடுத்ததற்குப்ரயோஜநம், அந்தசாந்தோக்யரஸமான, உத்கீதத்திற்குநேரான "உத்" என்கிறதிருநாமமிதுக்குள்ளுறையாகமைதோற்ற உகாராதியாகவெடுத்து "உயர்ந்தே" என்று, தகாராந்தமாகமுடிக்கை ; இதுதான்மேலில் சூர்ணையிலேவ்யக்தம். ஆகவிப்படி, அக்ஷரத்ரயரூபேண ப்ரணவத்தைப்ரதமத்திலே கீர்த்தியாநிற்கச்செய்தே, எததபிப்ராயேணக்ஷராக்ரமத்தை மாறுடி, (சரமகதிமுடிவாக) அதாவது:— சாந்தோக்யமத்யே சொன்ன வர்சிராதியான சரமகதியை, (௩) "சூழ்விசும்பணிமுகிலிலே" பேசுகையாலே! சரமகதியைமுடிவாகக்கொண்டென்கை. இத்தை, சரமகதியென்கிறது, கர்பயாம்யதூமாதிகதிகள்போலன்றிக்கே, எல்லைநிலமானமுக்திமார்கமாகையாலே; (தொண்டற்க

(க) சாந்தோ - க. உ. (உ) ஷி - க. க. (௩) தி-வா. ௧0. ௯.௧.

* பஸ்வதிகரணந்யாயமாவது:—யாகம்செய்யுமவன், பசுவைக்கொண்டு செய்யக்கடவனென்று ஸாமாந்யமாக, நாலுகால்ஜீவன்களைச்சொல்லி பிறகு ஆட்டைக் கொண்டு செய்யக்கடவனென்று விசேஷிக்கை.

மூ— (ருங) புரவியே ழொருகா லுடையதேரிலே திருச்சக்கரமொற்று காலசக்கர ச்செங்கோல் நடாவி ஜ்யோதிஸ்சக்ர வொளி சுருக்கி அக்நீஷோமீய தேஜோம்ருதத்துக்கூற்றும் மங்தேகர்க்கு ச்செந்தியும் முத்திமார்க்க த்தலைவாசலும் கண்ணுவான் கண்ணிற் பிறந்த கண்மணியும் த்ரயீமயமுமான

(அ). ஏழுகுதிரைகளும் ஒருசக்ரமும் உடைத்தானதேரிலே (தேஜோவிசேஷத்தாலே) திருவாழியோடொற்று காலசக்ர (விஷயமான) ஆஜ்ஞையை நடத்தி நக்ஷத்ரதாராக்ரஹங்களினுடைய தேஜஸ்ஸை ஸங்கோசிப்பித்து அக்நியினுடையவும், ஸோமனுடையவும் ஸம்பந்தியான (க்ரமமாக) தேஜஸ்ஸுக்கும் அம்ருதத்திற்கும் உற்பத்திஸ்தாநமாயும் (ஸூர்யவிரோதிகளான) மந்தேஹரென்கிற ராக்ஷஸர்க்கு ஜ்வலிக்கிறவக்நியாயும் (அர்சிராதியாகிற) மோக்ஷமார்க்கத்துக்கு முதல்வாசலாயும் ஸர்வர்க்கும் த்ருஷ்டிபூதனான ஸர்வேச்வரனுடைய கண்ணிலே ஜநித்தவனாய் ஸகலலோகசக்ஷுஸ்ஸாயும் வேதமயமுமான

முமென்னதேவாங்கமாக்கி) அதாவது:— அந்தஸாமம், (க) "ఏతత్సామ గాయన్నాస్తే" ஏதத்ஸாமகாயந்நாஸ்தே" என்கிறபடியே, பகவதநுபவஜநித ஹர்ஷத்திற்குப்போக்குவீடாக, "ஹாவுஹாவு" இத்யாதிப்படியே, ஸாமகாநம்பண்ணி "அஹமந்நாதஃ" என்று, களிக்கும் நித்யமுக்தரானதேவர்களுக்கு போக்யமாமாப்போலே, (உ) "தொண்டர்க்கமுதுண்ண" என்கிறபடியே, இதுவும், பகவதநுபவசபலர்க்கு போக்யமாம்படியாக்கியென்கை. (மஹாகோஷநல்வேதவொலிபோலே மஹாத்யயநமென்னப்பாடுகையாலே) அதாவது:— (ங) "సర్వేభ్యో ఏ[illegible] వేదేభ్య స్సామఘోషో మహాన్ భూత్ । అన్యఘోషయదత్యర్థం తేన బ్రహ్మాణ్డకర్ణకః" "ஸர்வேப்யோபிஹிவேதப்யஸ்ஸாமகோஷோமஹாநபூத் । அநவகோஷயதத்யர்த்தம் தேநப்ரம்ஹாண்டமண்டபஃ" என்றும், (ச) "பாடுநல்வேதவொலி" என்றும் சொல்லுகிறபடியே, பெரியகோஷத்தையுடைத்தான ஸாமவேதம்போலே, பெரிய திருவத்யயநமென்ன ப்பாடுகையாலே யென்கை. இத்தைச்சாந்தோக்யஸமமென்பர்கள். ஆக, இப்படிகீழ்ச்சொன்ன வாகாரங்களைக்கொண்டு, இத்தைசந்தோகஸாமத்திலுபநிஷத்பாகமானசாந்தோக்யத்துக்கு ஸமமென்று, அபியுக்தர்சொல்லுவரென்கை. *

• வ்யா. (ருங) உத்கீதப்ரணவத்தை ப்ரதமத்திலேமாருடி என்று, கீழ்ச்சொன்னதின்கருத்தை, ஆப்தோபதேசமுகேந வறிவிக்கிருர். (புரவியேழித்யாதிசூர்ணையாலே புரவியேழொருகாலுடையதேரிலே) அதா

(க) தை-ப்ரு. ௧௦. ரு. (உ) தி-வா. ௯. ச. ௯. (ங) (ச) தி-வா. ரு. ௯. ங.

மூ. மண்டலத்திலே தண்டா மரைசுமக்க தோள்வளையுங் குழை யும் திருச்செய்யமுடியு மாரமும் படையும் திகழும்பொன் மேனியும் செஞ்ஜடர்த்தாமரைக் கண்ணுமாய் அணிநிற மும் மூர்திபீதென்னும்படி இரண்டையும் தன்னிறமாக்குகி றசெய்யாளானவித்யையோடே அருக்கன்மேவின

(ஸூர்ய) மண்டலத்திலே (ப்ரமஹரமான தாமரையா னது ஆஸநமாய்வஹிக்க) கேயூரங்களும் மகரகுண்டலங் களும் (நிரவதிகதேஜஸ்ஸையுடைய) திருவபிஷேகமும் (முக்த்தா) ஹாரமும் திவ்யாயுதங்களும் (ப்ரகாசிப்ப தாய்ஹிரண்மயமான) திவ்யதிருமேனியும் சிவந்தவொ ளியையுடைய தாமரைபோன்ற திருக்கண்களு முடைய னாய் ஆபரணம்போலேஶோபாவஹமானதேஜஸ் ஸென் னும்படியும் (ஶ்ரீதானுடைய) திவ்யமங்களவிக்ரஹமீதெ ன்று சொல்லும்படியாயும் (பகவத்விக்ரஹமும் ஸூர்ய மண்டலமுமாகிற) இரண்டையும் சிவந்ததன்ஶோபையாம் படியாக்குகிற சிவப்பேநிரூபகமாய் வித்யாஶப்தவாச்யை யானபிராட்டியோடே ஸூர்யமண்டலமத்யவர்தியான

வ்யா. (கஅ) ஆனுலிவர்க்கிந்த பக்தியுண்டாகைக்கு ஹேதுவென்? என்னுமாகாங்க்ஷயிலே பலபோக்தாவான விஶ்வரன் க்ருஷிபலமென்னுமத்தை க்ஷேத்ரமும் கர்ஷகனும் க்ருஷியும் தத்பலமுமாக ரூபித்துக்கொண்டருளிச்செய்கிருர். (பெரும்பாழிலித்யாதிசூர்ணையாலே) (பெரும்பாழில் க்ஷேத்ரஜ்ஞன் பெரும்செய்) (க) "முடிவில் பெரும் பாழ்" என்று, நித்யமாய் அபரிச்சேத்யமாய் சேதநர்க்கு போகமோக்ஷங்களைவிளைத்துக்கொள்ளலாம் நிலமான ப்ரக்ருதிதத்வத்தில் க்ஷேத்ரஜ்ஞனுகிறபத்தசேதனனுடைய(உ)"நெஞ்சப்பெரும்செய்" என்று பக்திக்கு விளைநிலமான மநஸ்ஸானது பாழ்த்தவிதியானவாறே யென்கிறத்

(க) தி-வா. கO. கO. க. (உ) ஷெ-ரு. ௩. ௪.

மூ. கலியாரேவ ஆளும்வன்குறும்பர்குடியேறி பெருங்குடியுந்
தங்கள் கருத்துள்ளேயாக்கி ப்படிந்துண்ணும் போகத்தே
தூராதே பொருக்கொணுப் போகத்துக்குக் காவல்செய்து

கலியார் - கலியுகமாகிறவன்னியன், ஏவ - (இச்சேதனனை நலியுங் கோளென்று) ஆஜ்ஞாபிக்க, ஆளும்-மநஸ்ஸைதங்களுக்குஶேஷமாக) ஆளுகிற, வன்குறும்பர் - மிடுக்கரான (இந்த்ரியங்களாகிற) குறும்பர், குடியேறி - (இச்சேதனன் தேஹத்திலே) குடிபுகுந்து, பெருங்குடியும் - தங்களுக்குப்ரதாநமான மனஸ்ஸையும், தங்கள் கருத்துள்ளேயாக்கி - தாங்கள்நினைத்தவழியே வரும்படியாகப்பண்ணி, படிந்து - (விஷயங்களிலே) அவகாஹித்து, உண்ணும்போகத்தே - புஜிக்கிறபோகத்திலே, தூராதே - (ஒருக்காலமும்) பூர்ணமாகாதே, பொறுக்கொணு - ஆற்றக்கூடாதபடி, போகத்துக்கு - விஷயபோகாநுபவத்துக்காக, காவல்செய்து - சிறைசெய்து,

---

தோடே இதுக்குஸம்பந்தம். பாழ்படுகைக்கடிசொல்லுகிறது நடுவுள்ளதடங்கலும். (கலியாரேவ ஆளும் வன்குறும்பர் குடியேறி) (க) "ஏவினர்கலியார் நலிகவென்றென்மேல்" என்கிறபடியே, கலியுகமாகிற வன்னியனிவனை நலியுங்கோளென்றேவ, (உ) "மனமாளுமோரைவர் வன்குறும்பர்" என்கிறபடியே, சேதந ஶேஷமான மநஸ்ஸை தங்களுக்கு ஶேஷமாக்கிக்கொண்டு நடத்துமவர்களாய் முன்கை மிடுக்கராய் அத்விதியராயிருந்துள்ள இந்த்ரியங்களாகிற குறும்பர் (ங) "கோவாயைவரென்மெய்குடியேறி" என்கிறபடியே, இச்சேதனனுக்கு நியாமகராய்க்கொண்டு தேஹத்திலே குடிபுகுந்து; "கலியாரேவ" என்றது,இந்த்ரியங்களினுடையநலிவுக்குகலிகாலம் ப்ரவ்ருத்தகமாகையாலே கலியாரென்றும் ஐவரென்றும் சேதநஸமாதியாலே சொல்லுகிறது. தனக்கென்றுக்ரஹமுடையாரைப்போலே நலிகிறகொடுமையைப்பற்ற கலியாரென்று ரேபாந்தமாக வாழ்வாரருளிச்செய்தது. கலிகாலத்துக்கஞ்சினபடியாலேயிறே. (பெருங்குடியும் தங்கள் கருத்துள்ளேயாக்கி) முன்னின்று முறைபோக்கும் பெருங்குடிபோலே தங்களுக்குப்ரதானமானமநஸ்ஸையும் (ச) "ஐம்புலன்கறுதும் கறுத்துளேதிருத்தினேனென் மனத்தை" என்கிறபடியே, தாங்கள் நினைத்தவழியேயொழுகும்படியாகப்பண்ணி (படிந்துண்ணும்போகத்தே தூராதே பொறுக்கொணு போகத்துக்குக் காவல்செய்து) (ரு) "புலன்படிந்துண்ணும்போகம்" என்று, விஷயங்களிலே யவகாஹித்து புஜிக்கிறபோகத்திலே (சு) "தூராக்குழி" என்கிறபடியே, ஒருக்காலும் பூர்ணமாகாதே பொறுத்துக்கொண்டிருந்தால் (எ) "பொறுக்கொணுபோகமே நுகர்வான்" என்கிறபடியே, இவற்ருல்வந்தநலிவையாற்றியிருப்போமென்ருலாற்ற வொண்

(க) பெ-மொ. க. கு. அ. (உ) பெ. அ. ருக. (ங) (ச) பெ-மொ. க. க. அ. (ரு) ஷெ ஷெ கு. உ. (சு) தி-வா. ரு. அ. சு. (எ) பெ-மொ. எ. எ. எ.

மூ. குமைத்துத் திரித்து வீழ்த்தி வலித்தெற்றியருவியறுத்து க்கடனாயின விறுப்பிக்கப் பாழ்த்த விதியானவாறே

குமைத்து - துகைத்து, திரித்து - செக்கிலிட்டுச்சுழற்றி, வீழ்த்து - (விஷயங்களாகிற படுகுழியிலே) தள்ளி, வலித்து - பாதித்து, எற்றி - நலிந்து, அருவி - காதித்து பக்ஷிக்குமாப்போலவும், அறுத்து - சேதித்து பக்ஷிக்குமாப்போலவும், கடனாயின - (அர்த்தகாமங்களிரண்டையும்) கடமையிறுப்பாரைப்போலே, இறுப்பிக்க - இறுப்பிற்றுக்கொள்ள, பாழ்த்தவிதியானவாறே - (மநஸ்ஸு ஸுக்ருத கந்தமற்று) பாழ்பட்டவாறே,

ணுதபடியான விஷயபோகங்களை புஜிக்கவேணுமென்று (க) "கடியார் காளையரைவர் புகுந்துகாவல்செய்த" என்கிறபடியே, க்ரூரராய் நலியநலிய விளகிப்பதியாநின்ற பர்வதத்தையுடையராய்க்கொண்டு அவனைச்சிறைசெய்து (குமைத்துத் திருத்துவீழ்த்து வலித்தெற்றியருவியறுத்துக்கடனாயினவிறுப்பிக்க) (உ) "கூறை சோறிவைதாவென்று குமைத்துப்போகார் (ங) "செக்கிலிட்டுத்திரிக்குமைவர்" (ச) "கொடுவன்குழியினில்வீழ்க்குமைவர்" (ரு) "ஐவர்திசைதிசைவலித்தெற்றுகின்றனர்" (சு) "ஐவரருவித்தின்றிட" (எ) "ஐவரறுத்துத்தின்றிட" என்கிறபடியே, தனக்கபீஷ்டமானவற்றைத்தாவென்று துகைத்திழுத்து ஶரீரமாகிற செக்கிலேயிட்டுச்சுழற்றி க்ரூரமாய்க்கரையேறவொண்ணுதபடியாயிருக்கும்விஷயங்களாகிறபடுகுழியிலேதள்ளி அவைதாமநேகங்களாகையாலே ஸ்வஸ்வவிஷயங்களிலே கொண்டுபோகைக்காக நாலுதிக்கிலுமிழுத்து நலிந்தருவித்தின்றுமாப்போலவும், அறுத்துத்தின்றுமாப்போலவும், என்விஷயத்தைக்காட்டென் விஷயத்தைக் காட்டென்று நெரிக்கி இப்படிபஹுவிதமாகதண்டித்து, (அ) "பொருளின்பமெனவிரண்டுமிறுத்தேன்" "ஐம்புலன்கட்கடனாயின" என்று, ஶ்ரோத்ராதிகளுக்கு ப்ராப்தமாயிருக்கிற அர்த்தகாமங்களென்று சொல்லபபடுகிற விரண்டையும் கடமையிறுப்பாரைப்போலே அவற்றுலே பரிபூதனாய் கொடுத்துப்போந்தே னென்னும்படி, தங்களுக்கு ப்ராப்தபலங்களை யிறுப்பித்துக்கொள்ள (பாழ்த்த விதியானவாறே) இப்படியாகையாலே (கூ) "வாழ்த்தியவனடியைப்பூப்புனைந்துநின்தலையைத் தாழ்த்திருகைகூப்பென்றுல் கூப்பாதபாழ்த்தவிதி" என்கிறபடியே, வகுத்தஶேஷியானவவனை வாழ்த்தி ஆராதித்து வணங்கிகும்பிடுகைகளாகிறவிவற்றிலொன்றிலு மங்வயியாமையாலே ததங்கீகாரப்பற்றுஶானஸுக்ருதகந்தமற்று, மநஸ்ஸுப் பாழ்பட்டவாறே

(க) பெ-மொ-எ. எ. அ. (உ) ஷெ ஷெ ஷெ கூ. (ங) தி-வா. எ. க. ரு. (ச) ஷெ கூ. (ரு) ஷெ கம. (சு) பெ-மொ. எ. எ. க. (எ) ஷெ எ. (அ) ஷெ சு. உ. க. (கூ) பெ. அ. அச.

சூ. தன்பால்மனம் வைப்பிப்பதாகத்தேய்ந்தறமன்னி யொள் வாளுருவி வினைத்தூற்றைவேரறுவித்து

தன்பால் - தன்விஷயத்தில், மநம் - (பாழ்பட்ட) மநம், வைப்பிப்ப தாக - (பயிர்படும்படி) வைக்கப்பண்ணுகைக்காக, தேய்ந்தற - (இந்த்ரியங்களாகிறவைவர்) க்ஷயித்து முடிந்துபோம்படி, மன்னி - (ஸ்தாவர ப்ரதிஷ்டையாக) இருந்து, ஒள்வாள் - (ஸர்வபாவங்களையும் சேதிக்கத் தக்க) ஒண்மையையுடைய (க்ருபையாகிற) வாளை, உருவி - (அப்ரதி ஹதமாக) உருவி, வினைத்தூற்றை - (அடிகாணவு மறுக்கவுமொண்ணு ததான) பாபமாகிறதூற்றை, வேரறுவித்து - ஊசிவேரோடு பக்கவே ரோடுமறுப்பிற்று,

(தன்பால் மநம் வைப்பிப்பதாகத் தேய்ந்தறமன்னி) (க) "தன்பால் மன ம்வைக்கத்திருத்தி" என்கிறபடியே, இந்த்ரியவஶ்யதையாலே இப்படி பாழ்பட்டமநஸ்ஸை பயிர்படும்படி தன்பக்கலில் வைக்கப்பண்ணுகைக் காக (உ) "எனதேழைநெஞ்சாளும் திருந்தாத வோரைவரைத்தேய்ந் தற மன்னியிருந்தான்" என்கிறபடியே, கண்டதெல்லாத்திலும் சபலமா யிருக்கிறமனஸ்ஸை அதுவேபற்றுசாகபொதியெடுத்தி யாளாநிற்பராய், எத்தனையேனும் பலவான்கள் திருத்தப்புக்காலும் திருந்தாதே இனி யிப்படியோரைவரில்லையென்னும்படியிருக்கிற விந்த்ரியங்களாகிறவை வர்க்ஷயித்து முடிந்துபோம்படி ஆஸநபலத்தாலே குறும்பழிக்கும் ராஜாக்களைப்போலே ஸ்தாவரப்ரதிஷ்டையாக விருந்து (ஒள்வாளுருவி வினைத்தூற்றைவேரறுவித்து) (ங) "நீபணித்தவருளென்று மொள்வா ளுருவி" என்கிறபடியே, "𑌮𑌾𑌮𑍇𑌕𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌵𑍍𑌰𑌜" "மாமேகம் ஶரணம் வ்ரஜ" என்னுடைய ப்ரஸாதத்தையே உனக்குஜ்ஜீவந ஹேதுவாக அத்யவஸியென்ன? (ச) "𑌸𑍍𑌥𑌿𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌗𑌤𑌸𑌨𑍍𑌦𑍇𑌹𑌃" "ஸ்திதோஸ்மிகதஸந்தேஹ:" என்னும்படி, ஸகலஸந்தேஹங்களையும் துணிந்துப்புகடவற்றாய், (ரு) "𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑍇𑌭𑍍𑌯𑍋 𑌮𑍋𑌕𑍍𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿" "ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி" என்றருளிச்செய்தபடியே, ஸர்வபாபங்களையும் சேதிக்கைக்கு ஸமர்த்த முமான ஒண்மையையுடைய க்ருபையாகிறவாளை அப்ரதிஹதமாக்கி பக்தியாகிற பயிருக்கு விளைநிலமாகக் கல்பிதமாயிருந்துள்ள மநஸ்ஸு பாழே கிடந்துபோம்படி, (சு) "கொடுவினைதூர்" என்கிறபடியே, இவனாலடிகாணவு மறுக்கவுமொண்ணாதபடி, மூடினபாபமாகிற தூற் றை (எ) "வினைகளைவேரற" என்றும், (அ) "வல்வினைத்தொடர்களை முதலரிந்து" என்றும், சொல்லுகிறபடியே, மறுகிளையுண்டாகாத படி, வாஸநாருசிகளாகிற ஊசி வேரோடும் பக்கவேரோடு மறுப்பிற்று

(க) தி-வா. க. ரு. கo. (உ) ஷை - அ. எ. உ. (ங) பெ-மொ. சு. உ. ச. (ச) ஸ்ரீ - கீ. கஅ. எங. (ரு) ஷை ,கஅ, சு. சு. (சு) தி-வா, ங. உ. க. (எ) ஷை ங. உ. க. (அ) ஷை - உ.

மூ. த்தீக்கொளீஇகவ்வையெருவிட்டு அமுதவாறுதலைப்பற்றி ஈரியாய்க்கசிந்ததிலேயீரநெல் வித்தியெழுநாற்றுக்களையும் வேர்முதல் மாய்த்து

தீக்கொளி - (க்ருபாப்ரயுக்தஸங்கல்பத்தாலுருமாய்ந்து போம்படி) தக்தமாக்கி, கவ்வையெருவிட்டு - (ஊராருடைய பழிமொழியை பக்தியாகிறபயிருக்கு வர்த்தகமான) எருவாகவிட்டு, அமுதவாறு-(ஜ்ஞாநமாகிற) அம்ருதநதியை, தலைப்பற்றி - (வாயளவாய்) தலைக்குமேலேபோம்படி பெருகப்பண்ணி, ஈரியாய் - (மநம்) ஆர்த்ரமாய், கசிந்ததிலே - பதம்செய்து வாய்த்தவாறே, ஈரநெல்வித்தி - ஸங்கமாகிற நெல்லைவிதைத்து, எழுநாற்றுக்களையும் - (கர்த்ருத்வ போக்ருத்வ புத்திரூபமாய்) யெழுந்துகிற களையையும், வேர்முதல்மாய்த்து - ஊசிவேரோடே பறித்துப்புகட்டு,

---

'வினைதுற்றை வேரறுத்து, என்னுதே, வேரறுவித்தென்கையாலே ணிஜர்த்தமும் தோற்றுகிறது. வினையறுக்கையில் ப்ரயோஜககர்த்ருத்வம் ஈப்ஶ்வரனுக்கும், ஸாக்ஷாத்கர்த்ருத்வம் க்ருபைக்குமாகலாமிறே. (தீக்கொளி) வெட்டினகாட்டைச் சுட்டுப்பொகடுமாப்போலே, "மோக்ஷயிஷ்யாமி" என்கிறக்ருபாப்ரயுக்த ஸங்கல்பத்தாலே முந்தரவடியறுத்தவற்றை, (க) "இறவுசெய்யும் பாவக்காடுதீக்கொளீஇ வேகின்றதால்" என்றிவ்வாத்மாவைமுடிக்கிறகர்மஸந்தாநம்நெருப்புக்கொளுந்தி வேகாநின்றதென்னும்படி, (உ) "యథేషీకాతూల మగ్నౌ ప్రోతం ప్రదూయేత । ఏవం హాస్య సర్వే పాప్మానః ప్రదూయన్తే" "யதேஷிகாதூல மக்நௌப்ரோதம்ப்ரதூயேத யேவம்ஹாஸ்யஸர்வே பாப்மாநஃப்ரதூயந்தே" என்கிறபடியே உரு மாய்ந்துபோம்படி தக்தமாக்கி, (கவ்வையெருவிட்டு) (ங) "ஊரவர்கவ்வையெருவிட்டு" என்கிறபடியே, பகவதாபிமுக்யம் பிறந்தவளவிலே இவன்பாகவதனானென்று ஸம்ஸாரிகள் சொல்லும்படிபழிமொழியை பக்தியாகிறபயிருக்கு வர்த்தகமானயெருவாகவிட்டு, அமுதவாறுதலைப்பற்றி (ச) "அறிவையென்னுமமுதவாறுதலைப்பற்றி வாய்க்கொண்டதே" என்கிறபடியே, ஜ்ஞாநமாகிற அம்ருதநதியை வாயளவாய் தலைக்குமேலே போம்படிபெருகப்பண்ணி (ஈரியாய்க்கசிந்ததிலே) (ரு) "கண்ணனுக்கென்றீரியாயிருப்பாள்" என்றும், (சு) "கசிந்தநெஞ்சினளாய்" என்றும், சொல்லுகிறபடியே, அந்தஜ்ஞானவாரியாலேநல்லதுகண்டாலவனுக்கென்றுமநுஸந்தாநத்தாலே ஆர்த்ரதைவிளையும்படி நெஞ்சுபதம்செய்து செவ்விவாய்த்தவாறே, (ஈரநெல்வித்தி) அந்நெஞ்சிலே ஸங்கமாகிற நெல்லைவிரைத்து (எழுநாற்றுக்களையும் வேர்முதல்மாய்த்து) (எ) "செய்த்தலையெழுநாற்று" என்கிறபடியே, தத்ப்ரத்யாஸந்நமாய் ததேகபரதந்த்ரமாய் ததேகபோக்யமாய்

(க) பெரியா-தி-ரு. ச. உ. (உ) சா-உ. ரு. உச. ங. (ங) தி-வா. ரு. ங. ச. (ச) பெரியா-தி-ரு. ச. உ. (ரு) தி-வா. சு. எ. க. (சு) ஷெ-அ. (எ) பெரியா-தி-ங. எ. சு.

மூ. ப்பட்டிச்சேவதக்கி மீதுகொள்ளாமல் குறிக்கொள்வித்து கடல்புரையவிளைந்து தலைவணக்கினவாறே

பட்டிச் சேவதக்கி - இந்த்ரியங்களாகிற) செக்களினுடைய ஸ்வைரஸஞ்சாரஹேதுவானகர்வத்தைப்போக்கி, மீதுகொள்ளாமல் - அநங்யார்ஹமாம்படி, குறிக்கொள்வித்து - காவலடைத்து, கடல்புரைய - கடல்போலேயபரிச்சேத்யமாம்படி, விளைந்து-பலித்து, தலைவணக்கினவாறே-பயிர்பலித்தவாறே தலைவணக்குமாப்போலே, (பக்திபரிபாக நிபந்தநமானவார்த்தியால்வரும் பாரவஶ்யம் பிறந்தவாறே)

வளருகிற இப்பயிரிலே கர்த்ருத்வ போக்த்ருத்வபுத்தியைவிளைக்குமஹங்கார மமகாரங்களாகிறகளையையும், (க) "நீர்நுமதென்னிவை வேர்முதல்மாய்த்து" என்கிறபடியே, ஊசிவேரோடே பறித்துப்புகட்டு, (பட்டிச்சேவதக்கி) களையறுத்தாலும்போராதேபட்டிபுகாமல்நோக்கினுலிறே பயிர் தலைப்பெற்றுச்செல்லுவது. ஆகையாலே, (உ) ஐம்புலச் சேவை யதக்கி" என்கிறபடியே, விஷயாந்தரங்களிலே ப்ரவணமாய் பகவத் பக்தியைத் தலையழிக்கையாலேபக்தியாகிற விப்பயிருக்கு பட்டியான இந்த்ரியங்களாகிற சேக்களினுடைய ஸ்வைரஸஞ்சாரஹேதுவான கர்வத்தைப்போக்கி (மீதுகொள்ளாமல் குறிக்கொள்வித்து) பயிர் பலபர்யந்தமானுலும் பலிதாம்சத்தை ராக்ஷஸரபஹரிக்க யோக்யதையுண்டாகையாலே ரக்ஷைபண்ணிவைக்க வேண்டுமோய்த்து. அப்படியே (ஈ) 'விளைந்த தானியமுமிராக்கதிர்மீதுகொள்ளுகிறுர்கள், என்கிறபடியே, அநங்யார்ஹமாம்படி (ச) "அரக்கரசுரர் பிறந்திருள்ளீரேல்" என்று ராக்ஷஸப்ரக்ருதிகளும் ஆஸுரப்ரக்ருதிகளுமாகச்சொல்லலாம்படியான பாகவதஜநங்கள் எங்களுக்கு மிவன் ஸ்நேஹியென்றிருக்குமவ் வழியாலே இத்தை யபஹரிக்கைக்கவகாசமற பக்தியாகிற பயிர்விளைந்து கிடக்கிறநெஞ்சுக்கு (ரு) "பள்ளியறை குறிக்கொண்மின்" என்கிறபடியே, காவலடைத்து (கடல்புரைய விளைந்து தலைவணக்கினவாறே) (சு) "காதல் கடல்புரையவிளைவித்தகாரமர்மேனி" என்கிறபடியே, எருவும் நீருமுண்டானுலும் மேல்வர்ஷ மில்லாதபோது பயிர்த்தலை குளிர்ந்து வளராதென்று காளமேக நிபஶ்யாம மானவடிவழகைவர்ஷித்து வளர்க்கையாலே அந்த பக்தி யாகிறபயிர் கடல்போலே அபரிச்சேத்யமாம்படி பலித்து (ரு) "வரம்புற்ற கதிர்ச்செந்நெல்தாள் சாய்த்துத் தலைவணக்கும்" என்கிறபடியே, பலித்த பயிரானது பரிபக்வமாய்த்தலைவணக்குமாப்போலே பலிதமானவதினுடைய பரிபாக நிபந்தநமான வார்த்தி

(க) தி-வா. தி-வா. க. உ. ஈ. (உ) பெரியா-தி. (ஈ) ஷி-ச. ச. அ. (ச) தி-வா.ரு. உ. ரு. (ரு) பெரியா-தி-ரு. ச. க. (சு) தி-வா. ரு. ஈ. ச. (எ) பெரியா-தி-ச. க. அ.

மூ. நாளுநாள்கோட்குறையாக நின்றாரறியாமல் குந்தங்கொண்டாராமையுண்டு காலக்கழிவாலே நிலத்துகாமல் பற்றறுத்துத்தண்டாலடித்துப்பதராறுத்துப்

நாளுநாள் - நாள்தோறும் புஜியாநிற்கச்செய்தேயுமத்ருப்தனாய், கோட்குறையாக - இத்தலையிற்சிறிது தொங்கிற்றுண்டென்று நிறாபித்தறியவேண்டும்படியாக, நின்றார் - அருகேயிருந்தபிராட்டிமார் முதலானாரும், அறியாமல் - அறியமாட்டாதபடி, குந்தங்கொண்டு - முக்தனானவாறே பின்னைச்சேர புஜிக்கப்பற்றாத தன்னபினிவேஶத்தாலே, ஆறாமையுண்டு - மநஸ்ஸுக்குத்ருப்தி பிறவாமையால்மேன்மேலும் விரும்பிபுஜித்து, காலக்கழிவாலே - பரிபக்வமானவிவ்வஸ்துகாலவிளம்பத்தாலே, நிலத்துகாமல் - தறைப்பட்டு மங்கிப்போகாமல், பற்றறுத்து - ப்ராப்திவிரோதிகர்மங்களை நசிப்பிற்று, தண்டாலடித்து, (தன்னுடைய க்ருபையாகிற) தண்டாலடித்து, பதராறுத்து - பதர்போலே அஸாரமான வாத்மாநுபவத்தில் ருசியைநிவர்த்திப்பித்து,

---

யால் வரும் பாரவஶ்யம்பிறந்தவாறே (நாளுநாள் கோட்குறையாக நின்றாரறியாமல் குந்தங்கொண்டாராமையுண்டு) பக்திபரிணமம் சொன்னவித்தால் பலித்தது ததாஶ்ரயமான ஆத்மவஸ்து பகவத்போக்யமாம்படி திருந்தினமையிறே. ஆகையால் (௧) "நாளுநாள் வந்தென்னை முற்றவும் தானுண்டான்" (௨) "கோட்குறைபட்டதென்னாருயிர்" (௩) "நின்றாரறியாரறியாவண்ணமென்னெஞ்ஜூமுயிருமவையுண்டு" என்கிறபடியே, ஒருநாள் புஜித்துவிடுகையன்றிக்கே, நாள்தோறும் வந்து புஜியாநிற்கச்செய்தே பின்னையும் பர்யாப்தனன்றிக்கே படுகிற வலமாப்புக்கண்டு இத்தலையிற்சிறிது தொங்கித்துண்டென்று நிறாபித்தறியவேண்டும்படியாக இப்பரிமாற்றத்தில் தலைநின்ற பிராட்டி திருவடி திருவனந்தாழ்வான் முதலானாருமறியமாட்டாதபடி பெரும்பசியரானவர்கள் விளைந்தநெல்லைச்சேரவறுத்துக்கொண்டுபோய் புஜிக்கப்பற்றாமே முத்தினவளவுகளை குந்தங்கொண்டு புஜிக்குமாப்போலேமுக்தனானவாறே பின்னைச்சேர புஜிக்கப்பற்றாத தன்னபினி வேஶத்தாலே இஶ்ஶரீரத்தோடே இருக்கச்செய்தே விளைந்தபரிபாகாநுகுணமாக, (௪) "மனக்காராமைமன்னியுண்டிட்டாய்" என்கிறபடியே, மநஸ்ஸுக்கொருக்காலும் திருப்தி பிறவாதே மேன்மேலும் விரும்பி புஜித்து காலக்கழிவாலே நிலத்துகாமல் பற்றறுத்து, (௫) "காலக்கழிவுசெய்யேலே" என்றும், (௬) "மன்னும்வறுநிலத்துவாளாங்குகுத்ததுபோல்" என்றும் சொல்லுகிறபடியே, பரிபக்வமான விவ்வஸ்து காலக்ஷேபத்தாலே தறைப்பட்டு மங்கிப்போகாமல் (௭) "வினைபற்றறுக்கும்" என்கிறபடியே, ப்ராப்தி விரோதியான கர்மங்களையறுத்து, (தண்டாலடித்துப் பதராறுத்து) அறுத்த நெற்கதிரை தடியாலேயடித்து பதரும் மணியும் பிறிக்கு

---

(௧) தி-வா. ௯. ௬. ௮. (௨) ஷை. (௩) ஷை. ௧௦. ௭. ௧. (௪) ஷை ௧௦. ௧௦. ௬. (௫) ஷை. ௨. ௯. ௨. (௬) பெ-ஸ். ௮௯. (௭) பெ-மொ. ௧௧. ௪. ௯.

மூ. போர்த்ததோல்விடுத்து ஸூக்ஷ்மவொட்டும் நீரிலேகழுவி வேறோர் கலத்திட்டு

போர்த்த-ஆத்மாவைப்பதிந்துகிடக்கிற ஆதிவ்யாதிஷட்பாவ விகாரங்களுக்கு, தோல் - காரணமானஸ்தூலதேஹத்தை, விடுத்து - (உமியைப் போலே) விடுவித்து, ஸூக்ஷ்மவொட்டும் - ஸம்ஸரணஹேது வாய்ப் போந்தஸூக்ஷ்மஶரீரத்தை, நீரிலேகழுவி - தண்டுலத்தைத்தவுடரக் கழுவுமாப்போலே விரஜாஜலஸ்பர்ஶத்தாலேவாஸநாரேணுக்களோடே போக்கி, வேறோர்கலத்திட்டு - அமாநவகரஸ்பர்ஶத்தாலே அப்ராக்ருததேஹத்திலே ப்ரவேசிப்பிற்று,

---

மாப்போலே (க) "அருளென்னும் தண்டாலடித்து" என்கிறபடியே, தன்னுடைய க்ருபையாகிற த்ருடதரஸாதநத்தாலே நெல்லோடொக்க விளைந்திருப்பதாய் அஸாரமானபதர்போலே யிருக்கிற ஆத்மாநுபவத்தில் ருசியையறுத்து (போர்த்ததோல்விடுத்து) அந்நெல்லினுமியை விடுவிக்குமாப்போலே, (உ) "போர்த்தபிறப்பொடு நோயொடு மூப்பொடிறப்பவை பேர்த்து" என்கிறபடியே, ஆத்மாவைப் பொதிந்திக்கொண்டு கிடப்பதாய், ஆதிவ்யாதிகளுக்கும் ஷட்பாவவிகாரங்களுக்குமடியானஸ்தூலதேஹத்தினுடையவிமோசநத்தைப்பண்ணி, (ஸூக்ஷ்மவொட்டும் நீரிலேகழுவி) அநந்தரம்தண்டுலத்தை தவுடறக்கழுவுமாப்போலே ஸ்தூலதேஹம்போனாலும் தான்போகக்கடவதன்றிக்கே ஸம்ஸரண ஹேதுவாய்க்கொண்டு போந்ததாய் பகவதநுபவவிரோதியுமாயிருக்கச்செய்தே விரஜாபர்யந்த மிவனுக்குகமநஸாதநமாய்க்கிடந்த ஸூக்ஷ்மஶரீரத்தையும் (ந) "𑌤𑌤𑍍𑌤𑍋𑌯𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌮𑌾𑌤𑍍𑌰𑍇𑌣" "தத்தோயஸ்பர்ஶமாத்ரேண" என்கிறபடியே, விரஜாஜலஸ்பர்ஶத்தாலே வாஸநாரேணுக்களோடேபோக்கி, கர்மஸம்பந்தமறுகையாலே ஸூக்ஷ்மஶரீரமிருக்கைக்குஹேது வில்லாமையால் இங்கேகழித்து விடலாயிருக்கச்செய்தே விரஜாபர்யந்தமிவனுக்கு கமநஸாதநமாக ஈஶ்வரன் தன்னிச்சையாலேவைத்து விரஜையிலேயுள்புக்கவாறே கழித்துவிடுமென்றிறே நம்மாசார்யர்களருளிச்செய்வது. ஸூக்ஷ்மப்ரக்ருதிஸம்பந்தங்கிடக்குமளவும் வாஸநாரேணுவும் கிடக்கையாலே அதுவுமப்போதாயிற்று நிவ்ருத்தமாவது. "விரஜையைச்சென்றுகிட்டி வன்சேற்றள்ளலையும் வாஸநாரேணுவையும் கழுவியென்றுறிறே" (வேறோர்கலத்திட்டு,) (ச) "சீரார் தயிர்கடைந்து வெண்ணெய்திரண்டதனை வேரார்நுதல்மடவாள் வேறோர் கலத்திட்டு" என்கிறபடியே, ஸ்தூலஸூக்ஷ்மரூபையான ப்ரக்ருதியிதநின்றும் விவேகித்துவாங்கின இவ்வாத்மவஸ்துவை அமாநவகர

(க) பெ-அ உசு. (உ) (ந) (ச) சி-ல். ந.

மூ. பைந்தொடிமடந்தயரைக்கொண்டு ஷட்குணரஸாங்நமாக்கி வானோர்க்காராவமுதானவாறே முற்றுமுண்ண முன்னம் பாரித்து

பைந்தொடி மடந்தையரைக்கொண்டு - (ஸத்காரஸாமக்ரீயோடெ திரே வருகிற அப்ஸரஸ்ஸுக்களைக்கொண்டு, ஷட்குண ரஸாங்நமாக்கி - (ஜ்ஞாநாதிஷட்குணங்களாகிற ஷட்ரஸங்களோடஹமந்ந மென்கிறவந்நமாம்படி பக்வமாக்கி, வானோர்க்கு - நித்யமுக்தர்க்கு, ஆராவமுதானவாறே - பரமபோக்யமாம்படியானவாறே, முற்றுமுண்ண - (இவ்வாத்மவஸ்துவை) முழுக்கபுஜிப்பதாக, முன்னம் - இவ்வாத்மாவுக்குருசிபிறப்பதற்கு முன்னம்தானே, பாரித்து - அபேக்ஷித்து,

ஸ்பர்ஶத்தாலே அப்ராக்ருததேஹத்திலே ப்ரவேசிப்பிற்று (பைந்தொடிமடந்தையரைக்கொண்டு ஷட்குணரஸாங்நமாக்கி) (க) "அணைவர்போயமருலகில்பைந்தொடிமடந்தையர்தம் வேய்மருதோளிணையே" என்டிகிறபடியே, (உ) "పఞ్చశతాన్యప్సరసాం ప్రతిధావన్తి" "பஞ்சஶதாந்யஸரஸாம்ப்ரதிதாவந்தி" (ங) "శతమ్మాలాహస్తాః" "ஶதம்மாலாஹஸ்தா:" இத்யாதிப்ரகாரேண வந்தெதிர்கொண்டு(ச)"తం బ్రహ్మాలంకారేణాలంకుర్వన్తి" "தம்ப்ருஹ்மாலங்கா ரேணாலங்குர்வந்தி" என்று, தங்கள்கையாலே இவ்வாத்மவஸ்துவுக்கு ப்ருஹ்மாலங்காரத்தைப்பண்ணி ஸத்கரிக்கும் திவ்யாப்ஸரஸ்ஸுக்களைக் கொண்டு தன்னுடைய போகத்துக்கர்ஹமாம்படி, அலங்கரிப்பியா நின்றுகொண்டு (ரு) "స్వేన రూపేణాభినిష్పద్యతే" "ஸ்வேநரூபெணாபி நிஷ்பத்யதே" என்கிறபடியே, ஸ்வரூபாவிர்ப்பாவம்பிறந்து முன்புதிரோஹிதமாய்க்கிடந்தவாத்மகுணங்களெல்லாம் ப்ரகாசிக்கப்பெற்றிருக்கிற இவ்வாத்மவஸ்துவை ஜ்ஞாநாதிஷட்குணங்களாகிற ஷட்ரஸஸம்யுக்தமாய் (சா) "అహమన్నమ్" "அஹமந்நம்" என்கிற அன்னமாம்படி, அவர்கள் கரஸ்பர்ஶத்தாலேபக்வமாக்கி ஶேஷவஸ்துகதமான ஜ்ஞாநஶக்த்யாதி ஷட்குணங்களும் ஶேஷிவிநியோகத்துக்குறுப்பாகையாலே, இக்குணங்களேடேகூடி 'அஹமந்நமென்றிருக்குமிவ்வஸ்து அவனுக்கறுசுவையடிசலாயிறே யிருப்பது. (வானோர்க்காராவமுதானவாறே) (எ) "வானோர்க்காராவமுதே" என்கிறபடியே,(அ) "வைகுந்தன்தமரெமரெமதிடம் புகுது" என்பது, (கூ) "விதிவகைபுகுந்தனர்" என்பதாய்,(கO) "பதியினில்பாங்கினில் பாதங்கள்கழுவினர்" இத்யாதிப்படியே ஆதரிக்கும் நித்யஸூரிகளுக்கு பரமபோக்ய மாம்படியானவாறே (முற்றுமுண்ண முன்னம்பாரித்து (கக) "என்னை முற்றுமுயிருண்டு" என்கிறபடியே, இவ்வாத்மவஸ்துவை முழுக்க புஜிப்பதாக (கஉ) என்னில் முன்னம்பாரித்து" என்கிறபடியே, இவ்வாத்மாவுக்கு ருசிபிறப்பதற்குமுன்னே பிடித்துப் பாரித்தும்,

(க) தி-வா. கO. உ. கக. (உ) (ங) (ச) (ரு) சா உ. அ. கஉ. உ. (சா) தை. உ. ப்ரு. கO. ரு. (எ) தி-வா. ௫. எ. கக. (அ) ஷெ. கO. கூ. க. (கூ) ஷெ. கO. கூ. கO. (கO) ஷெ (கக) ஷெ கO. எ. ங. (கஉ) ஷெ. எ. சா. கO.

மூ. உழுவதோர்நாஞ்சில் கொண்டு பெருகமுயலும் பத்தியுழவன் க்ருஷிபலமிறே.

மூ—(கக) கோஸல கோகுல சராசரம்

உழுவதோர் நாஞ்சில்கொண்டு, க்ருஷ்யர்த்தமாக பூமியையுழுவதற்கு ஸாதநமானதொரு ஹலத்தையாயுதமாகக்கொண்டு, பெருகமுயலும் - இவ்வாத்மோஜ்ஜிவநத்துக்கு மிகவும்யத்நியாநிற்கும் ஸ்வபாவனாய், பத்தியுழவன் - ஸ்வவிஷயபக்தியை விளைக்கைக்குக்ருஷிபண்ணித்திரியும் ஸர்வேஶ்வரனுடைய, க்ருஷிபலமிறே - வ்யவஸாயபலமிறே.

(அ) கோஸல - அயோத்யையிலும், கோகுல - ப்ருந்தாவனத்திலுமுள்ள, சராசரம் - சேதநாசேதநங்கள்,

(உழுவதோர்நாஞ்சில்கொண்டு பெருகமுயலும் பத்தியுழவன் க்ருஷிபலமிறே) (க) "உழுவதோர்படையும்" (உ) "ஒற்றைக்குழையும் நாஞ்சிலும்" என்கிறபடியே, இவன்கர்ஷகனென்று தோற்றும்படிக்ருஷிஸாதநத்தைக்கையிலேகொண்டு (ங) "அரியதெளிதாகும் ஆற்றலால் மாற்றிப்பெருக முயல்வாரைப்பெற்றால்" என்கிறபடியே, அரியதான தன் திருவடிகளில் ப்ராப்தியுமெளிதாம்படி இவ்வாத்மோஜ்ஜீவநத்துக்கு மிகவும் யத்நியாநிற்கும் ஸ்வபாவனாய் (ச) "பத்தியுழவன்" என்கிறபடியே, இவ்வாத்மாவுக்கு ஸ்வவிஷயபக்தியை விளைக்கைக்கு க்ருஷிபண்ணித்திரியும் ஸர்வேஶ்வரனுடைய க்ருஷிபலமிறே இவ்வாழ்வார்க்குண்டான விந்தபக்தியென்றபடி. இத்தாலிவருடைய பத்த்யுத்பத்திகாரணம் பகவத்க்ருஷியென்றதாயிற்று. *

வ்யா. (கக) இப்படியித்தலையிலொரு நன்மையற்றிருக்கச்செய்தே ஈஶ்வரக்ருஷி பலிக்கக்கண்ட விடமுண்டோ வென்ன? அருளிச்செய்கிறார் (கோஸலேத்யாதி) அதாவது:— (ரு) "త్వామానన్దకరం కృపామృతాబ్ధే జ్ఞానక్రియాభజనలభ్యమలభ్యమన్యైః। ఏతేషు కేనవరద త్తరకోసలస్థాః పూర్వం సదూర్వమభజన్హిజన్తవస్త్వామ్" "த்வாமாமநந்திகவய ஃகருணாம்ருதாப்தே ஜ்ஞாநக்ரியாபஜநலப்ய மலப்யமந்யைஃ। யேதேஷு கேந வரதோத்தர கோஸலஸ்தாஃ பூர்வம் ஸதூர்வ மபஜந்தி ஹி ஜந்தவஸ்த்வாம்" என்கிறபடியே, (சு) "அயோத்தியில்வாழும் சராசரம் முற்றவும்" (எ) "ஒன்றின்றி நல்பாலுக்குற்றனன்" என்று, திருவயோத்யாதி கோஸலதேஶவர்த்திகளான சராசரங்களெல்லாம் நிர்ஹேதுகமாக (அ) "రామోరామో రామ ఇతి ప్రజానామభవన్కథాః। రామభూతం జగదభూద్రామే రాజ్యం ప్రశాసతి" "ராமோராமோ ராமயிதி ப்ரஜாநாம பவந்கதாஃ। ராமபூதம் ஜகதபூத்ராமேராஜ்யம் ப்ரஶாஸதி" (கூ) "అపివృక్షాః పరిమ్లానాః సపుష్పాంకుర

(க) பெரியா-தி. ௬. எ. ச. (உ) பெ-மொ. அ. அ. அ. (ங) அ. உ. உஉ. (ச) நா-தி. உங. (ரு) வரத-ஸ்த-கூக. (சு) தி-வா. எ. ரு. க. (எ) ஷி. (அ) ஸ்ரீ-ரா-யு நக. கசு. (கூ) ஷி. அ. ருக. ச.

மூ. செய்யும் குணமொன்றின்றியே அற்புத மென்னக் கண்டோம்.

செய்யும்குணம் - (பகவத்விஷயீகாரத்துக் குறுப்பாக) அநுஷ்டித்தது, ஒன்றின்றியே - ஒன்று மின்றிக்கேயிருக்க, அற்புதமென்னக்கண்டோம் - விசேஷஜ்ஞர்வித்தராய்ச் சொல்லும்படியாகக் கண்டோம்.

కోరకాః । విషయే తే మహారాజ రామ వ్యసన కర్శితాః । ఉపతప్తోదకానద్యః పల్వలాని సరాంసిచ । పరిశుష్కపలాశాని వనాన్యుపవనానిచ" (க) "అకాలఫలినో వృక్షా స్సర్వేచాపి మధుస్రవాః" "அபிவ்ருக்ஷாஃ பரிம்லாநாஸ்ஸ புஷ்பாங்குரகோரகாஃ விஷயேதே மஹாராஜராமவ்யஸநகர்சிதாஃ। உபதப்தோதகாநத்யஃ பல்வலாநிஸராம்ஸிச । பரிஶுஷ்கபலாஶாநிவநாந்யுபவநாநிச । அகாலபலிநோவ்ருக்ஷா ஸ்ஸர்வேசாபி மதுஸ்ரவாஃ" இத்யாதிப்படியே, ஸ்வஸம்ஶ்லேஷ விஶ்லேஷைகஸுகதுக்கங்களாகையாகிற நல்ல ஸ்வபாவத்தை யுடைத்தாம்படி நடத்தினுனென்றும், கோகுலத்திலுண்டான சராசரங்களெல்லாம் அவனொருவன் குழலூதினபோது (உ) "மரங்கள்நின்று மதுதாரைகள்பாயும் மலர்கள் வீழும் வளர் கொம்புகள் தாழுமிரங்கும் கூம்பும் திருமால் நின்ற நின்றபக்கம்நோக்கியவைசெய்யும்குணமே" (ங) "மருண்டு மான்கணங்கள்மேய்கைமறந்து மேய்ந்த புல்லும் கடைவாய்வழிசோர இரண்டுபாடும் துலங்காப்புடை பெயரா எழுது சித்திரங்கள்போல நின்றனவே" (ச) "பறவையின் கணங்கள்கூடுதுறந்துவந்துசூழ்ந்துபடுகாடுகிடப்ப கறவையின்கணங்கள்கால் பரப்பிட்டுக் கவிழ்த்திறங்கிச்செவியாட்டகில்லாவே" (ரு) "கோவலர்சிறுமியரிளங்கொங்கை குதுகலிப்ப உடலுளவிழ்ந்து எங்கும் காவலுங் கடந்து கயிறுமாலையாகி வந்து கவிழ்ந்துநின்றனரே" என்கிறபடியே, சைதந்யப்ரஸரணமில்லாத வ்ருக்ஷங்களோடு சைதந்யலேசமுள்ள திர்யக்குகளோடு சைதந்ய விஶேஷார்ஹமநுஷ்யஜாதியரான சிறுபெண்களோடுவாசியற நிர்ஹேதுகமாக பகவத்ப்ராவண்யபரவஶங்களானமைகண்டு (சு) "நங்கைமீர்களிதோரற்புதங்கேளீர்" என்று, விஶேஷஜ்ஞர்வித்தராய்ச்சொல்லும்படியாகக் கண்டோமென்கை. இத்தால் பகவந்நிர்ஹேதுக விஷயீகார மிப்படி பலிக்கக்காண்கையாலே ஆழ்வாருடைய பக்தியுமவந்நிர்ஹேதுக க்ருஷிபலமென்னத்தட்டில்லையென்றதாயிற்று. *

(க) ஸ்ரீ-ரா-யு. சஉஎ. கசு. (உ) பெரியா - தி. ங. சு. கO. (ங) ஷை - க. (ச) ஷை - அ. (ரு) ஷை-க. (சு) ஷை.

மூ—(உ0) பட்டத்துக்குரிய யானையுமரசும் செய்யுமவையாராயாது.
மூ—(உக) முந்நீர்

(அ) பட்டத்துக்குரியயானையும் - ராஜவாஹ்யமான யானையும், அரசும் - ராஜாவும், செய்யுமவை - செய்யுங்கார்யங்கள்; ஆராயாது - ஆராயப்படாது.

(அ) முந்நீர்-சேதநோஜ்ஜீவநார்த்தமாக ஜகத்ஸ்ருஷ்டி கரணகளேபர ஶாஸ்த்ரப்ரதாநாதிகளைப்பண்ண நாநந்தஶரீரத்தைக்கொண்டு ஸம்ஸரித்தே போந்தேனென்கையாலும்,

வ்யா. (உ0) ஆனலிப்படி நிர்ஹேதுகமாகவிஷயீகரிக்குமளவில் எல்லாரையும் விஷயீகரிக்கலாயிருக்க இங்ஙனேயிவரொருவரைவிஷயீகரிக்கைக்கடியென்னென்னு மபேக்ஷையிலே நிரங்குஶஸ்வதந்த்ரனானவன் ஈஶ்வரத்வச்செறுக்காலே செய்யுமவற்றுக்கடியாராயப்படாதென்னுமத்தைலெளகிகத்ருஷ்டாந்தத்தாலே தர்சிப்பிக்கிறார். (பட்டத்துக்குரியயானையுமரசும்செய்யுமவையாராயாதென்று) அதாவது:—அராஜகமானதேஶத்திலே பட்டத்துக்குரியயானையைக் கண்ணைக்கட்டிவிட்டால் அவ்வானையெடுத்தவனொருவன் ராஜாவாமளவில் அல்லாதாரெல்லாம் கிடக்க இவனையிப்படியெடுக்கைக் கடியென்னென்றும், ராஜாவானவன் தன்செருக்காலே ஒருத்தியைத் தனக்கு மஹிஷியாக பரிக்ரஹிக்குமளவில்இங்ஙனெற்ற ஸ்த்ரீகள் பலருமுண்டாயிருக்க இவளை யிப்படியிவன் பரிக்ரஹிக்கைக்கடியென்னென்றுமாராய் வாரில்லையென்றபடி. இத்தால் சொல்லிற்றாயிற்று (க) "𑌸𑍍𑌵𑌾𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌮𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌮𑌪𑌰𑍍𑌯𑌨𑍁𑌯𑍋𑌜𑍍𑌯𑌮𑌾𑌹𑍁𑌃" "ஸ்வாதந்த்ர்யமைஶ்வரமபர்யநுயோஜ்யமாஹு:" என்கிறபடியே, பர்யநுயோஜ்யமல்லாதவைஶ்வரஸ்வாதந்த்ர்யயுக்தனாய் (உ) "𑌭𑌵𑌮𑍋𑌕𑍍𑌷𑌣𑌯𑍋𑌸𑍍𑌤𑍍𑌵𑌯𑍈𑌵 𑌜𑌨𑍍𑌤𑍁𑌃 𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇" "பவமோக்ஷண யோஸ்த்வயைவஜந்து:க்ரியதே" என்கிறபடியே, ஸ்வாதீநபந்தமோக்ஷனாய் வேண்டினபோது வேண்டின வஸ்துவை வேண்டினபடியாக்கவல்ல ஸர்வேஶ்வரன், அஹேதுகமாகயிருக்கவாதர விஷயமாம்படி பட்டத்துக்குரிய யானையுமரசும் செய்யுமவைபோலே ஸ்வாதீநமுமாய் ஸ்வார்த்தமுமான வாத்மவஸ்துக்களிலே ஒரொன்றை ஈஶ்வரத்வச்செருக்கடியான ஸ்வேச்சையாலே, ஸ்வவிநியோகார்ஹமாம்படி விஷயீகரித்தால் அல்லாதவாத்ம வஸ்துக்களெல்லாங்கிடக்க இவ்வஸ்துவை இவனிப்படி விஷயீகரிப்பானென்னென்று இதுக்கடியாராயப்படாதென்கை. *

வ்யா. (உக) இங்ஙன் சொல்லுவானென்? இவர் தமக்கஜ்ஞாதஸுக்ருதங்களன்றோ வில்லையென்னது, யாத்ருச்சிகாத்யஜ்ஞாத ஸுக்ருதங்களைடியாக அங்கீகரித்தானனலோவென்ன? அருளிச்செய்கிறார். (முந்நீரென்று தடங்கி) அதாவது :— (ங) "முந்நீர் ஞாலம்படைத்த வெம்முகில்

(க) (உ) ஸ்ரீரங்கா-ஸ்த-உ. அஅ. (ங) தி-வா. ங. உ. க.
முந்நீராவது, ஆற்றுநீர் ஊற்றுநீர் வர்ஷஜலமென்றபடி.

மூ. வாழ்ந்தார் சூட்டுங்கோவை யாழியென்கிற

வாழ்ந்தார் - முன்புஜீவித்தவர்கள் வர்ஷஜலபுத்புதம்போலே பூர்வோத்தரக்ஷணங்களிலுத்பத்திவிநாஶங்களையுடையராய் அத:பதித்தொழிய ஸ்ருஷ்டிமுதலின்றளவு மொருபடிப்பட ஜீவித்தாரென்பதில்லை யென்கையாலும், சூட்டும் - பரமபதவாஸிகள் ஸமாராதநோபகரணங்களை தரித்துக்கொண்டு பரிசரியாநிர்ப்பரென்கையாலும், கோவை - தேஶகால விப்ரக்ருஷ்டராமக்ருஷ்ணாத்யவதார விரோதி நிரஸநாபதாநங்களை யதாவத்தாகப்பேசுகையாலும், ஆழி - த்ரைவிக்ரமணாதி கோவர்த்தநோத்தரணாந்தமான வபதாநங்களைப்பத்தும் பத்தாகப் பேசுகையாலும், என்கிற - இப்படியாக,

வண்ணனே!" என்று துடங்கி ஸர்வேஶ்வரன் (க) "[illegible]" "விசித்ராதேஹஸம்பத்தி:" இத்யாதிப்படியே, ஸ்வசரணகமலஸமாஶ்ரயணோபகரணமான கரணகளேபரங்களை இவ்வாத்மாவுக்குண்டாக்கி உஜ்ஜீவிப்பிக்கையே ப்ரயோஜநமாக ஜகத் ஸ்ருஷ்டியைப்பண்ணினன். நான் அவன்தந்த கரணாதிகளைக்கொண்டு அவனையாஶ்ரயிக்கையன்றிக்கே அதின்வழியே யொழுகி ஸம்ஸரித்துப் போந்தேனென்று ஸ்வவ்ருத்தாந்தத்தையும், (உ) "வாழ்ந்தார்கள்" என்று துடங்கி முன்பு ஜீவித்தவர்கள் ஜீவித்த ப்ரகாரம் மஹாவர்ஷ ஜலபுத்புதம்போலே நசித்து நசித்து அத: பதித்தார்களென்னுமதொழிய ஸ்ருஷ்டிகாலம் துடங்கி இன்றளவும் வர ஜீவித்தவர்களொருபடிப்பட ஜீவித்தே போந்தார்களென்னு மிவ்வர்த்தம்தானில்லையென்று ஐஶ்வர்யவான்களாய் முன்பு ஜீவித்துப்போந்தவர்கள் வ்ருத்தாந்தத்தையும், (ங) "சூட்டு நன்மாலைகள்" என்று துடங்கி, பரமபதவாஸிகளாய் ஸமாராதநோபகரணங்களையும் தரித்துக்கொண்டு ஸமாராதநம் பண்ணநிற்கச்செய்தே அத்தையுபேக்ஷித்து திருவாய்ப்பாடியில் வெண்ணையை விரும்பிவந்தவதரித்தமைசொல்லுகையாலேபரமபதத்திலுள்ளார் வ்ருத்தாந்தத்தையும், (ச) "கோவைவாயாள்பொருட்டு" என்று துடங்கி, தேஶகாலவிப்ர க்ருஷ்டங்களான ராம க்ருஷ்ணாத்யவதாரங்களில் விரோதி நிரஸநாபதாநங்களை தத்தத்தேஶகாலங்களில்போல் தர்சித்து நீ இப்படி விரோதி நிரஸநம்பண்ணுகிற தசைகளிலே உதவி சிசிரோபசாரம் பண்ணப்பெற்றிலேனாகிலும், என்னுடைய ஹ்ருதயாதிகளே உனக்கு போகோபகரணமாம்படி என்பக்கலிலே வ்யாமுக்தனாவதேயென்கையாலும் (ரு) "ஆழியெழ" என்று துடங்கி த்ரைவிக்ரமணம் ஸமுத்ரமதநம் பூம்யுத்தரணம் ஜகந்நிகரணம் பாரதஸமரநிர்வஹணம் ஹிரண்யநிரஸநம் ராவணவதம் பாணகரச்சேதநம் ஜகத்ஸ்ருஷ்டி கோவர்த்தநோத்தரணமாகிற பூர்வ சரிதங்களைப் பத்தும் பத்தாகப்பேசு

(க) விஷ்ணுதத்வே. (உ) தி-வா. ச. க. சு. (ங) தி - வி. உக. (ச) தி-வா. ஏ. ங. க. (ரு) ஷெ எ. ச. க.

மூ. ஸாக்ஷாத்க்ருத ஸ்வபரவ்ருத்தாந்தர்க்கு யாத்ருச்சிகாதிக ளுண்டாகிற்றோன்றும்.

மூ—(உஉ) செய்தநன்றி தேடிக்காணுதே கெடுத்தாய் தந்தாயென்ற அத்வேஷாபி முக்யங்களும் ஸத்கர்மத்தாலல்ல.

ஸாக்ஷாத்க்ருத-ஸாக்ஷாத்கரிக்கப்பட்ட, ஸ்வபர வ்ருத்தாந்தர்க்கு-ஸ்வ கீயபரகீயோதந்தங்களையுடையவிவ்வாழ்வார்க்கு, யாத்ருச்சிகாதிகள் - யாத்ருச்சிகாநுஷங்கிகாதி ஸுக்ருதங்கள், உண்டாகில்-இருந்ததாகில், தோன்றும் - ப்ரகாசிக்கும்.

(அ.) செய்தநன்றி - (பகவத்விஷயீகாரத்துக்குடலாக) செய்யப் பட்ட நன்மை (உண்டோவென்று) தேடி - அந்வேஷித்து, காணுதே - அகப்படாதே, கெடுத்தாய் - த்வேஷபுத்தியைப் போக்கினுய், தந்தாய் - ஆபி முக்யமருளினுய், என்ற-இப்படி தாமே நிஷ்கர்ஷித்தருளிச்செய்த, அத்வேஷாபி முக்யங்களும் அத்வேஷமும், ஆபிமுக்யமும், ஸத்கர்மத் தாலல்ல - ஸுக்ருதமடியாக வந்ததல்ல.

கையாலும், ஈஶ்வரவ்ருத்தாந்தங்களையுமோருபாதியற வொருபோகி யாக ஸாக்ஷாத்கரித்தருளிச்செய்கிற விவர்க்கு அஜ்ஞாதமான தொன் றில்லாமையாலே தம்மை யீஶ்வரனங்கீகரிக்கைக்கடியான யாத்ருச்சி காதிஸுக்ருதங்களுண்டாகில் அல்லாதவற்றோபாதி ப்ரகாசிக்குமிறே யென்றபடி இத்தால் ப்ரகாசித்ததாகி லருளிச்செய்வர். அப்படி யரு ளிச்செய்யக் காணுமையாலும் கேவல நிர்ஹேதுக ப்ரகாஶக வசநங் கள் பலவு மருளிச்செய்தமைகாண்கையாலும் அவையுமிவர்க்கில்லையெ ன்றதாயிற்று. *

வ்யா. (உஉ) இப்படி யங்கீகாரஹேதுவாயிருப்பதொரு ஸுக்ருத மில்லையேயாகிலும் அத்வேஷாபி முக்யங்கள் ஸுக்ருதமடியாகவானு லோ வென்னவருளிச்செய்கிருர்மேல். (செய்த நன்றி தேடிக்காணுதே) என்று துடங்கி, அதாவது:— (க) "வாட்டாற்றுற்கெந்நன்றி செய் தேனு வென்னெஞ்சில் திகழ்வதுவே" என்று, ஸர்வேஶ்வரன் தம்மை விஷயீகரிக்கைக்கடியாக தாம் செய்த ஸுக்ருதமேதேனுமுண்டோவெ ன்று தேடிக்காணுதே (உ) "என்னைத்தீமனம்கெடுத்தாய்" (ங) "மரு வித்தொழும் மனமே தந்தாய்" என்று, தீமனம் போகையாகிற அத் வேஷமும் மருவித் தொழும் மனமுண்டாகையாகிற ஆபீ முக்யமும் இரண்டுமவனுலே யுண்டாயிற்றென்று தாமே நிஷ்கர்ஷிக்கையாலே அத் வேஷாபிமுக்யங்களும் ஸத்கர்மமடியாக வந்ததன்றென்கை. *

(க) தி-வா. ௧0. சு. அ. (உ) ஷெ-உ. எ. அ. (ங) ஷெ-எ.

சூ—(உ௩) எண்ணிலும் வருங்கணனேக்கெண்டானுமில்லே.

சூ—(உச) மதியாலிசைந்தோமென்னுமனுமதீச்சைக ளிருத்துவமென்னுத வென்னே

(அ.) எண்ணிலும் வரும் - கணனேயிலும்வரும், கணனேக்கு-அந்த பரிகணனேக்கு, எண்டானும் - ஒரெண்டானு மின்றியிருக்க பலிக்கிறபடி கண்டாயே யென்று தம் திருவுள்ளத்துக்கு மூதலிக்கையாலே, இல்லே- அந்தபரிகணனேயுமில்லே.

(அ.) மதியால் - அனுமதி மாத்ரத்தால் (அவனே யென்னுள்வைத்தேன்) இசைந்தோம் - (விரோதியைப்போக்கும்படியாக நானுமென்னுஞ்சும்) இசைந்தோம், என்னுமனுமதீச்சைகள் - என்று தமக்குண்டானதாகச் சொன்னவனுமதியுமிசையும், இருத்துவம் - (ஹ்ருதயத்திலே) இருத்துவோம், என்னுத வென்னே - என்றிசையாத வென்னே,

வ்யா. (உ௩) ஆனல் பரமபக்திக்கு முகம் காட்டுமோபாதி பரிகணனேக்கும் முகங்காட்டுமென்றுரிறே இவர்தாமே. அந்தபரிகணனே தானிவர்க்குண்டாய்த்ததானலோ வென்னவருளிச்செய்கிருர். (எண்ணிலும்வரும் கணனேக்கெண்டானுமில்லேயென்று) அதாவது :—(க) "எண்ணிலும் வருமென்னினி வேண்டுவம்" என்றது, ஈஶ்வர குணுதிக்யம்சொன்னவித்தனேபோக்கி அந்தபரிகணனேக்கும் தம்மோடன்வயமில்லாமைகண்டு (உ) "நெஞ்சே கருமங்கள் வாய்க்கின்றேரெண்டானுமின்றியே வந்தியலுமாறுகண்டாயே" என்று, கார்யங்கள் பலிக்குமிடத்திலெண்ணிலும் வருமென்றது தான் மிகையாம்படியோரெண்டானுமின்றி யிருக்கச்செய்தே பலித்துக்கொண்டு நிற்கிறபடி கண்டாயேயென்று தம் திருவுள்ளத்துக்கு மூதலிக்கையாலே அதுவு மிவர்க்கில்லேயென்கை.

வ்யா. (உச) அதுதான் வேணுமோ, தமக்கநுமதிச்சைகளுண்டாகவருளிச்செய்தாரே ; அவைதான் ஹேதுவானலோவென்ன ? அவையு மவனலே உண்டானதென்கிருர். (மதியாலிசைந்தோம்) என்று துடங்கி, அதாவது:—(௩) "வைத்தேன் மதியாலெனதுள்ளத்தகத்தே" என்றநுமதி மாத்ரத்தாலே யவனே யெந்நெஞ்சுக்குள்ளே வைத்தேனென்றும், (ச) "யானுமென்னெஞ்சு மிசைந்தொழிந்தோம்" என்றும், விரோதியைப் போக்கும்படியாக, நானுமெந்நெஞ்சு மிசைந்தொழிந்தோ மென்றும், தமக்குண்டாகச்சொன்னவநுமதியு மிசையும் (ரு) "யானெட்டியென்னு ளிருத்துவமென்றிலன்" என்று, அவன் தம்முள்ளே புகுந்திருப்பதாகக் கேட்டவளவில் நானிசைந்தென்னுடைய ஹ்ருதயத்திலே இருத்துவோ மென்றிலேன்; என்றபடியே அவனேயு

(க) தி-வா-க. ௪0. உ. (உ) ஷை ரு. (௩) ஷை-அ. எ. ௪0. (ச) பெ. அ. உசு. (ரு) தி-வா. ௬. எ. எ.

மூ. இசைவித்த வென்னிசைவினது.

மூ—(உ௫) மாதவன்மலை நீர் நிழலென்றேறிடுமது

இசைவித்த - வருந்திசையப்பண்ணின, என்னிசைவினது - நானல்லே னென்றகலாதபடி யென்னிசைவுதானய்ப்புகுந்த வீஶ்வரனுடைய க்ருஷிபலம்.

(அ) மாதவன் - நானுகந்த திருநாமமநுஸந்தித்தாய், மலை - நானுகந்து வர்த்திக்கு மூரைச்சொன்னய், நீர் - என்னடியார் விடாயைத்தீர்த்தாய், நிழல் - அவர்களொதுங்கநிழல் கொடுத்தாய், என்று - இப்படியாக, ஏறிடுகிறது - சிலவற்றையாரோபிக்கிறது,

---

ள்ளேயிருத்துவோ மென்றிசையாததம்மை (௧) "இசைவித்தென்னை" என்கிறபடியே, வருந்தி இசையப்பண்ணி, (௨) "என்னிசைவினை" என்று நானல்லேனென்றகலாதபடி யென்னிசைவுதானய் புகுந்தவனை யென்னும்படி இசைவித்த ஈஶ்வரனுடைய க்ருஷிபலமென்கை. அது மதீச்சைகள் தமக்குமுன்னே யுண்டாயிருந்ததாகில் இருத்துவமென்றிலன் என்றும், இசைவித்தென்னை, என்று மருளிச்செய்யக்கூடாதிறே.

வ்வா. (உ௫) இவை யொன்றுமில்லையாகிலும் (௩) "மாதவன்" என்றும், (௪) "திருமாலிருஞ்சோலைமலை" என்றும், சொன்ன உக்திமாத்ரங்களைப்பற்றாசாகக்கொண்டு விஷயீகரித்தானாக வருளிச்செய்கையால் அவைதானுண்டேயென்ன ? அவைபேற்றுக்கடியாகச் சொல்லத்தக்கவை யன்னென்றுமிடத்தை மற்றுமிவற்றோடு ஸஹபடி தங்களாகத்தக்கவற்றையும் கூட்டிக்கொண்டருளிச்செய்கிறார். (மாதவன்மலைநீர் நிழலென்றே றிடுமதென்றுதுடங்கி,) அதாவது:— (௫) "மாதவனென்றதே கொண்டென்னை யினியிப்பால்பட்டது யாதவங்களும்சேர்கொடேனென்றென்னுள்புகுந்திருந்து" என்று, அந்தःபுரவாஸிகள்சொல்லும்மாதவனென்கிற திருநாமத்தை யஹ்ருதயமாகச்சொன்னவளவிலே அத்தையேகுவாலாகக்கொண்டு அல்லாததிருநாமங்களுக்கு மிதுக்கும் வாசியறியாதவென்னை விஷயீகரித்தென்னுள்ளே புகுந்திருந்து ஸகலகர்மங்களையும்போக்கினனென்றும், (௬) "திருமாலிருஞ்சோலைமலையென்றேனென்ன திருமால்வந்தென் னெஞ்சுநிறையப்புகுந்தான்" என்றோறோரு தேஶங்களில் மலைகளைச்சொல்லாநின்றால் ஓரோருவிஷயங்களையிட்டுச்சொல்லுமோபாதி யாத்ருச்சிகமாக, திருமாலிருஞ் சோலைமலையென்றேன், என்னுங்காட்டில் தானுகந்தருளின திருமலையின்பேரை விரும்பிச்சொன்னேனாகக்கொண்டு நிரபேக்ஷனானதான் பிராட்டியோடு கூடவந்தென்னுள்ளே பரிபூர்ணமாகப் புகுந்தானென்றும் சொல்லும்படி, மாதவனென்று நம்பேரைச்சொன்னன் திருமாலிருஞ்சொலைமலையென்று நம்

---

(௧) தி-வா. ௫. அ. ௧. (௨) ஷை-௧. ௭. ௯. (௩) ஷை - ௨. ௭. ௩. (௪) ஷை - ௧0. அ. ௧. (௫) ஷை ௨. ௭. ௩. (௬) ஷை - ௧0. அ. ௧.

மூ. வ்யாவ்ருத்யுக்தியங்யார்த்தம் அபுத்திபூர்வகம் அவிஹிதம் பலவிஸத்ருஶம்பலாந்தரஹேது.

வ்யாவ்ருத்யுக்தி - பேருக்கும் மலைக்கும் விஶேஷவாசகங்களையிட்டு வ்யாவ்ருத்தி சொன்னமாத்ரம், அங்யார்த்தம் - பாகவதர் விஷயமாகச் செய்த தல்லாமையாலே யங்யார்த்தம். அபுத்திபூர்வகம் - செய்தவனுக் கின்னினைவில்லாமையாலே புத்திபூர்வகமல்ல, அவிஹிதம் - இவை தான் பலஹேதுத்வேநஶாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டதுமல்ல, பலவிஸத்ருஶம் - பகவத்விஷயீகாரமாகிற மஹா பலத்துக்கு ஸத்ருஶமல்ல பலாந்தரஹேது - சிலவல்பபலங்களுக்கு காரணமாமித்தனை.

ஊரைச்சொன்னான் என்றேறிடுகிறவை ஈஶ்வரனுகந்த திருநாமமென்று ம், அவனுகந்தவர்த்திக்கிறதிருமலையென்றும் சொன்னவையல்லாப்பேரு க்கும் மலைக்கும் வ்யாவ்ருத்தி சொன்னமாத்ரம். மற்றுமிவற்றோடு ஸஹ படிதமாய்ப்போருமவையான என்னடியார் விடாயைத்தீர்த்தாய் அவர் களுக்கொதுங்க நிழலைக்கொடுத்தாய் யென்றேறிடுகிறவை, தன் பயிர் தியாமைக்காக நீருள்ளவிடத்தேநின்றும் நெடுந்துலையிட்டிறைக்கிறதும் தனக்குச்சூதும் சதுரங்கம்போருகைக்கும் காற்றுவரவுக்கிருக்கைக்கு மாக விரிவுண்டாகப்புறம் திண்ணைக்கட்டிவைக்கிறதுமொழிய பாகவ தர்கள்விடாய் தீர்க்கைக்கும் அவர்களுக்கொதுங்க நிழலாகைக்கும் செ ய்கிறதல்லாமையாலே அங்யார்த்தம், இவைதானித்தனையுமித்தலையில் நினைவின்றியிருக்க அவனடித்தேறிடுகிறவையாகையாலே புத்திபூர்வகமு மல்ல. இவைதான்பலஹேதுதயா ஶாஸ்த்ர விஹிதங்களுமன்று. பகவத்விஷயீகாரமாகிறமஹாபலத்துக்கிவைஸத்ருஶமுமல்ல. இவையு ண்டாயிற்றதாகிலிவ்வருகேசிலஅல்ப ப்ரயோஜநங்களுக்கு ஹேதுவா மித்தனையென்கை. ஆகையாலிவை பகவதங்கீகாரத்துக்கு ஹேதுவாக மாட்டாதென்றுகருத்து. கீழேயாத்ருச்சிகாதிகளுண்டாகில் தோன்று மென்றதுவும், இங்கேமாதவனித்யாதியாலே அவனேறிடத்தக்கவை சிலவுண்டாக விவர்தம்முடைய வுக்தியாலே கண்டெடுத்துக்கழிக்கிற விதுவும், தன்னிற்சேரும்படி யெங்ஙனே யென்னில்? யாத்ருச்சிகாதிகள் தான் பலவுண்டாகையாலே அத்யுத்கடங்களாய் மஹாபலத்துக் குறுப் பாய்வந்து விழுமவையும் ஆபாஸங்களாயிருக்குமவையுமுண்டாகை யாலே அத்யுத்கடங்களாய் அவனுக்கு ஹேதுவாகக்கொள்ளலாம்படி யிருக்குமவற்றைக்கீழ்ச்சொல்லிற்றுக்கி ஆபாஸங்களாய் அவனுரோ பித்துக்கொள்ளத்தக்க வற்றையிங்கே சொல்லிற்றென்று விபஜித்துக் கொள்ளுமளவில் விரோதமில்லை. *

மூ—(உசு) இவன்நடுவே யடியானென்றோலைப்படா ப்ரமாணம் பக்ஷ பாதிஸாக்ஷி வன்களவிலனுபவமாகிற

(அ) இவன் - ஒன்றையாரோபித்தாகிலும் விஷயீகரிக்குமீஶ்வரன், நடுவே - ஆகஸ்மிகமாக, அடியானென்று - நீயெனக்கு தாஸபூதனென்று (ஶ்ருதியை ப்ரமாணமாகக்காட்ட) ஓலைப்படாப்ரமாணம் - எழுதாமறை யென்றத்தை (அங்யதாகரித்தும்) பக்ஷபாதி - தர்சிகளாகிலுமுனக்கு பக்ஷபாதிகளென்றும், ஸாக்ஷி - ஸாக்ஷியாரென்றும், வன்களவில் - அநாதிகாலமாத்மாபஹாரகனுகிறவலியகள்ளனுயிருந்து விட்டேனென்று பின்பிவரநுதபிக்கும்படி, அநுபவமாகிற - விபரீதஜ்ஞாநத்தாலே தமக்குத்தோன்றிருந்தவநாதிவஸித்தாநுபவத்தைக் காட்டினவிவ்வாழ்வாருக்கு,

வ்யா. (உசு) ஆனுலிப்படி யிவரை நிர்ஹேதுகமாக விஷயீகரிக்கை வேண்டுவானென்னென்னு மபேக்ஷையிலே யருளிச்செய்கிறார் மேல், (இவன்நடுவேயென்றுதுடங்கி) அதாவது:—இப்படி யொன்றை யாரோபித்தாகிலும் விஷயீகரிக்குமிவன் (க) "நடுவேவந்துய்யக்கொள்கின்றநாதன்" என்கிறபடியே, நாதனுகையாலே நிர்ஹேதுகமாகவந்து அடியானிவனென் றெனக்கா ருள்செய்யும்" (உ) என்றும் "𑌤𑍍𑌵𑌂 𑌮𑍇" "த்வம்மே" என்கிறபடியே, இவனென்னடியானென்று பிடிக்க "𑌅𑌹𑌂 𑌮𑍇" "அஹம் மே" என்கிறபடியே, அதுக்கிவரிசையாமல் என்னை நீ உன்னடியானென்றதெத்தாலே யென்ன? "𑌇𑌦𑌂 𑌵𑍇𑌦𑌮𑍂𑌲𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌤𑍍" "இதம் வேதமூலப்ரமாணத்" என்கிறபடியே, இவரையிசைவிக்கைக்காக (ங) "𑌪𑌤𑌿𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯" பதிம்விஶ்வஸ்ய" (ச) "𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌪𑌤𑌿𑌃" "ப்ரதாந க்ஷேத்ரஜ்ஞபதிஃ" (ரு) "𑌕𑍍𑌷𑌰𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌾𑌵𑍀𑌶𑌤𑍇 𑌦𑍇𑌵 𑌏𑌕𑌃" "க்ஷராத்மாநாவீஶதேதேவ ஏகஃ" இத்யாதிகளாலே சேதனுசேதனங்களடைய தனக்குஶேஷமென்னுமிடத்தை ப்ரதிபாதிக்கிற வேதத்தை ப்ரமாணமாகக்காட்ட, அதெழுதாமறையாகையாலே அதோலைப்படாப்ரமாணமென்றிவரத்தையங்யதாகரித்து தம்முடைய அநாத்யநுபவத்தை ப்ரபலமாகக்கொண்டு நிற்கையாலே, ஆக்ஷியிலும் ப்ரபலமான துடர்ச்சியை முன்னிட்டவளவிலதுக்கு ஸாக்ஷியாரென்று கேட்டவாறே "𑌸𑌾𑌕𑍍𑌷𑍀 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍" "ஸாக்ஷீஸ்யாத்" என்கிறபடியே, தத்வதர்சிகளான ஜ்ஞானிகளை ஸாக்ஷியாகக்காட்ட "𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑌕𑍍𑌷𑌪𑌾𑌤𑌿𑌨𑌃" "த்வத்பக்ஷபாதீஸ:" என்கிறபடியே, அவர்களுனக்கு பக்ஷபாதிகளென்றதுக்கு மிவர் கண்ணழிவுசொல்லுகையாலே (சு) "வன்கள்வன்" என்று, விஷயீகாராநந்தரம், அநாதிகாலம் அஹம்மம என்றிருந்துபோந்த வநுபவம் ஆத்மா பஹாரமாகிறவலிய களவால்வந்ததென்று

(க) தி-வா. க. எ. ரு. (உ) பட்டர் ஸ்ரீஸூக்தி. (ங) பு - ஸூ. (ச)
(ரு) ஶ்வே - உ. க. கo. (சு) தி-வா. ரு. க. ச.

மூ. இந்திரஞாலங்கள் காட்டிக்கொள்ளக்காப்பாரற்று விதிசூழ்ந்தது.

மூ—(௨எ) வரவாறில்லை

இந்திரஞாலங்கள்காட்டி - இந்திரஜாலம்போலே த்ருஷ்டிசித்தாபஹாரகமானஸௌந்தர்யாதிகளைக்காட்டி, கொள்ள - இவர் தம்முதாக நினைத்திருந்த ஆத்மாத்மீயங்களை தன்னுதாக்கிக்கொள்ளும்படியாக, காப்பாரற்று - நிவாரகரொருவருமற்று, விதி - க்ருபை, சூழ்ந்தது - ஸர்வஸ்வாமியாய் (சீலவானான த்ருவிக்ரமனை) சூழ்ந்தது.

(அ) வரவாறு - வந்தவழியானது, இல்லை - இன்னதென்று சொல்லலாவதில்லை,

இவரநுதபிக்கும்படி, (க) "இந்திரஞாலங்கள்காட்டி யிவ்வேழுலகங்கொண்ட" என்று, இந்திரஜாலங்கள்போலே, த்ருஷ்டிசித்தாபஹாரிகளானவடிவழகையும் சீலத்தையும் சேஷ்டிதத்தையும் காட்டி வாய் மாளப்பண்ணி ஆஸுரப்ரக்ருதியான மஹாபலி என்னிதென்றிருந்த லோகத்தை தன்னுதாக்கிக்கொண்டாப்போலே இவரையும் வடிவழகையும் சீலாதிகளையும் காட்டி வாய்மாளப்பண்ணி இவரென்னிதென்றிருந்த ஆத்மாவை தன்னுதாக்கிக்கொள்ளும்படியாக (௨) "விதிவாய்க்கின்று காப்பாரார்" என்று, க்ருபாஜநகையான வவள் காக்கவோ? க்ருபா பரதந்த்ரனான நீகாக்கவோ? க்ருபாபாத்ரமான நான்காக்கவோ? என்னும்படி, ஒருவரால் நிவாரிக்கவொண்ணாதபடி பெருகுவதாய் ஸ்வதந்த்ரனான தன்னாலும் தப்பவொண்ணாதபடியிருக்கையாலே விதிசப்தவாச்யையாயிருந்துள்ளக்ருபை, (ங) "எனைத்தோர் பிறப்பும் "எதிர் சூழல் புக்கெனக்கேயருள்கள் செய்ய, அம்மான்திருவிக்கிரமன்விதி சூழ்ந்தது" என்று அநேக ஜன்மங்கள், நான் பிறந்த பிறவிக்கெதிராகப்பிறந்துகொண்டுவந்து எனக்கொருவனுக்கு மேதன் ப்ரஸாதங்களைப்பண்ணும்படியாகஸர்வேச்வரனுவைத்து த்ரிவிக்ரமாபதாநமுகத்தாலே எல்லார் தலையிலும் திருவடிகளைவைத்த ஸுசீலனை க்ருபை சூழ்ந்ததென்னும்படி யிவரை அங்கீகரித்தல்லது நிற்கவொண்ணாதபடி விளைந்துகொண்டதென்கை. காட்டிக்கொள்ளவென்றவிடத்தில் காட்டியென்கிறவிது, ப்ரமாணங்காட்டி ஸாக்ஷிகாட்டி இந்திரஞாலங்கள்காட்டி என்று ஸர்வத்ராங்விதமாய்க்கிடக்கிறது.

வ்யா. (௨எ) எல்லாம் செய்தாலும், ஏவம்பூதக்ருபைதான் அநாதிகாலமிவ்வாத்மவிஷயமாகப்பெருகாமல் இன்றுபெருகுமளவில் இதுக்கோர்டிவேண்டுகையாலே இதுக்குடலாக கற்பிக்கலாவதொரு ஸுக்ருதமில்லையோவென்னவருளிச்செய்கிறார். (வரவாறென்றுதுடங்கி) அதாவது :— (ச) "வரவாறொன்றில்லையால்வாழ்வினிதால்"

(க) தி-வா. கூ. ரு. ௫. (௨) ஷெ-ரு. க. க. (ங) ஷெ ௨. எ. கூ. (ச) பெ-அ. ருகூ. ௨௨.

மூ. வெறிதேயென்றறுதி யிட்டபின்

என்றறுதியிட்டபின் - என்று நிச்சயித்தபின்பு,

என்றிதுவந்தவழியின்னதென்று யிதுக்குச்சொல்லலாவதொரு ஹேது வில்லை. பேறு மிகவுமினிதாக யிராநிற்குமென்றும் (க) "வெறுதேயருள் செய்வர் செய்வார்கட்கு" என்று, தான்செய்யநினைந்தவர்களுக்கு நிர்ஹேதுகமாக க்ருபைபண்ணுவரென்றும், இப்படி விஷயீகாரம் நிர்ஹேதுகமென்று தாமேயறுதியிட்ட பின்பு (உ) "தனியேன்வாழ்முதலே" என்று, ஸம்ஸாரத்திலொருதுணை யன்றிக்கேயிருக்கிற வென்னுடைய வநுபவத்துக்கு ப்ரதமஸுக்ருதமானவனே ! என்று தம்முடைய பேற்றுக்கு மூலஸுக்ருதமாக விவாருளிச்செய்தவவன் தன்னையொழிய வேறுகற்பிக்கலாவதொரு ஸுக்ருதமில்லையென்கை. 'அன்றிக்கே' யாத்ருச்சிகாதிகளுண்டாகில் தோன்றும், என்றஜ்ஞாதஸுக்ருதமு மிவர்க்கில்லை யென்னவாறேயிப்படி நோகக்கழிக்கவேணுமோ, அநாதிகாலமங்கீகரியாதவனின்றுசெய்கையாலும் அல்லாதவாத்மாக்களெல்லாம் கிடக்க இவரையிப்படி விஷயீகரிக்கையாலும் இதுக்குடலானதே தேனுமொருஸுக்ருதமிவர்க்குண்டாகக்கூடுமென்று கார்யத்தையிட்டநுமித்தாகிலும் கற்பிக்கலாவ தொன்றில்லையோவென்ன ? அப்படி கற்பிக்கலாவதில்லையென்னுமிடத்தை விஸ்தரேண ப்ரதிபாதிக்கிறரென்று ஸங்கதியாக்கி செய்தநன்றிதேடிக்காணுதே, என்றுதுடங்கி, வெறிதேயென்றறுதிட்டபின் என்றுமளவுமேகவாக்யமாகக்கொண்டு இவ்வாழ்வார் கருத்தைச் சொல்லிக்கொண்டு செல்லுகிறதாய் (ந) "எந்நன்றி செய்தேனு" என்று பகவதங்கீகாரத்துக்குடலாக தாம்செய்த ஸுக்ருதமுண்டோவென்று தேடிக்காணுதே அங்கீகாரத்துக்குடலானதில்லையாகில் அத்வேஷாபிமுக்யங்களுக்குத்தக்கது தானுண்டோ வென்னில்? அவையுமவனாலே வந்தது ஸத்கர்மத்தால்வந்ததல்ல (ச) "எண்ணிலும்வரும்"என்றபரிகணனைதானுண்டோவென்னில் ? அதுக்கெண்டானுமில்லை (ரு) "வைத்தேன்மதியால்" (சு) "யானுமென்னெஞ்சுமிசைந்தொழிந்தோம்" என்கிறவநுமதீச்சைகள்தானுண்டோவென்னில்? அவையுமவனுண்டாக்கினது. (எ) "மாதவனென்றதேகொண்டு" (அ) "திருமாலிருஞ்சோலை மலையென்றேனென்ன" இத்யாதிகளாலீஶ்வரன்வலியவேறிடுகிறவை வ்யாவ்ருத்யுக்த்யாதிகள். இவன் நடுவேவந்தடியானென்றுபிடித்து ப்ரமாணஸாக்ஷிகள்காட்டி அவைகார்யகாமாகாதவளவில் வடிவழகைக்காட்டி இப்படி இவ்வஸ்துவை ஸ்வாதீநமாக்கிக்கொள்ளும்படி யிவனை நிவாரகரற்றக்ருபைசூழ்ந்தது. இவ்விஷயீகாரத்துக்கு (கூ) "வீரவாறொன்றில்லை" (க0) "வெறிதேயருள் செய்த" இத்தனையென்றிவர்தாமே

(க) தி-வா. அ. எ. அ. (உ) ஷெ உ. ந. ரு. (ந) ஷெ க0. கூ. அ. (ச) ஷெ. க. க0. உ. (ரு) ஷெ அ. எ. க0. (சு) பெ - அ. உசு. (எ) தி - வா. உ. எ. ந. (அ) ஷெ. க0. அ. க. (கூ) பெ. அ. ருசு. (க0) தி-வா. அ. எ. அ.

மூ. வாழ்முதலென்கிற ஸுக்ருதமொழியக்கற்பிக்கலாவதில்லை.
மூ—(உ அ) நலமருளினனென்கொலென்றுமூலசூடம் அருளால் மன்னுமவர்க்கன்புக்கடியானதுவேயடிசேருகைக்குஸாதநம்.

வாழ்முதலென்கிற - தம்முடைய பேற்றுக்கு மூலஸுக்ருதமாக தம்மாலேசொல்லப்பட்ட, ஸுக்ருதமொழிய-ஸாக்ஷாத்தர்மமான வீச்வரனொழிய, கற்பிக்கலாவதில்லை-வேறுகற்பிக்கலாவதொரு ஸுக்ருதமுமில்லை.

(அ) நலம் - பக்தியை, அருளினன் - க்ருபைசெய்தானென்று பக்ரமித்து, என்கொலென்று - என்கொலெம்மானென்றுமளவாக ஆமூலசூடம் - உபக்ரமமேபிடித்துபஸம்ஹாரத்தளவும், அருளால் - (நிர்ஹேதுக) க்ருபையாலே, மன்னுமவர்க்கு - தரிக்கவேண்டும் ஸ்வபாவரானவிவ்வாழ்வார்க்கு, அன்புக்கு - விளைந்தபக்திக்கு, அடியானதுவே-மூலமானதுவே, அடிசேருகைக்கு - திருவடிசேருகையாகிற ப்ராப்திக்கும், ஸாதநம் - உபாயம்.

யறுதியிட்டபின்பு (க) "தனியேன் வாழ்முதலே" என்று, தம் பேற்றுக்கு மூலஸுக்ருதமாக விவரருளிச்செய்த வீச்வரன் தன்னையொழிய இவர்க்கு வேறுகற்பிக்கலாவதொரு ஸுக்ருதமொன்றில்லையென்று இங்ஙனேயோஜிக்கவுமாம். இந்த யோஜனை யிதின்பட்டோலையான க்ரந்தத்திலிவரருளிச்செய்த மர்யாதைக்குச்சேரும். ஆகவிதுக்குக்கீழ்வர் ப்ரபாவத்தையும் அதுக்கடிபகவந்நிர்ஹேதுக கடாக்ஷமென்னுமத்தையும் அத்தாலிவர்க்குண்டான பக்தியின் வ்யாவ்ருத்தியையும் அதுதான் கர்மஜ்ஞானஸாத்யை யல்லாமையும் இவரையீச்வரன் அங்கீகரித்ததுக்கு கேவல க்ருபையொழிய ஹேத்வந்தரமில்லாமையையும் சொல்லித்தாயிற்று. *

வ்யா. (உ அ) இப்படி நிர்ஹேதுகவிஷயீகாரபாத்ர பூதரான விவருடையபக்தி பகவத்க்ருபைகலப்தையாயிருந்ததாகிலும் உபாஸகனுக்கு கர்மஜ்ஞாநஜநிதையான பக்தி யோபாதி இவர்க்கு ப்ராப்திஸாதநமிதுவோவென்னவருளிச்செய்கிறார்மேல் (நலமருளினன்) என்று துடங்கி, அதாவது:—(உ) "மயர்வறமதிநலமருளினன்" என்று, தம்முடைய பக்த்யுத்பத்திகாரணம் கேவலபகவத்க்ருபையென்றுபக்ரமித்து (ங) "என்கொலெம்மான் திருவருள்" என்னுமளவாக ஜ்ஞாநதசையோடு வரணதசையோடு ப்ராப்திதசையோடு வாசியற (ஆமூலசூடம்) (ச) "மாலருளால்மன்னுகுருகூர்ச்சடகோபன்" என்று, பிடிதோறும் நெய்யொழியச்செல்லாத ஸுகுமாரரைப்போலே நின்றநிலைதோறுமவனருள் கொண்டேதரிக்கவேண்டும் ஸ்வபாவரான விவர்க்கு (ரு) "ஆராவன்பிலடியேனுன்னடிசேர்வண்ணமருளாய்" என்கையாலே, (சு) "நலமருளினன்" என்று, பக்திகாரணமாகச்சொன்ன க்ருபையே அடி சேருகையாகிற ப்ராப்திக்கும் ஸாதநமென்றபடி. *

(க) தி-வா. உ. ங. ரு. (உ) தி-வா. க. க. க. (ங) ஷை. கஂ. எ. ங. (ச) ஷை. க. ரு. கக. (ரு) (சு) தி-வா. க. க. க.

மூ—(௨௯) புணர்தொறுமென்னக்கலந்து பிரிந்து ஜ்ஞாநபக்திகளை வளர்த்தது கனங்குழையிடக்காது பெருக்குதலும் மாஸோபவாஸி போஜநப் புறப்பூச்சும்போலே ஆற்ற நல்ல

(அ) புணர்தொறுமென்ன - தடமுலை புணர்தோறு மித்யாதியில் ப்ரகாரமாக அபிநிவேஶம் பெருகி வாராநின்றதென்று சொல்லும்படியாக, கலந்து - ஸம்ஶ்லேஷித்து, பிரிந்து - விஶ்லேஷித்து, ஜ்ஞாநபக்திகளை (க்ரமமாக) ஜ்ஞாநத்தையும் பக்தியையும், வளர்த்தது - அபிவ்ருத்தி பண்ணிவித்தது, கனங்குழையிட - அநர்க்யாபரண மிடுகைக்கிடமாம்படி, காதுபெருக்குதலும் - காதுபெருக்குமாப்போலவும், மாஸோபவாஸி - மாஸமுபவஸித்தவனுக்கு, போஜநப்புறப்பூச்சும்போலே - சோற்றையரைத்துடம்பிலே பூசுமாப்போலவும், ஆற்றநல்ல- ஸாத்மிக்க ஸாத்மிக்க தன்குண சேஷ்டி தங்களைக்காட்டி யடிமை கொண்டவனென்னும்படி,

---

வ்யா. (௨௯) இப்படி ப்ராப்தி ஸாதநம் க்ருபையேயாகில் (க) "இன்னின்ற நீர்மை யினியாமுறாமை" என்றபோதே இவரபேக்ஷிதம் செய்து விடலாயிருக்க இவரைவைத்து ஸ்வஸம்ஶ்லேஷ விஶ்லேஷங்களாலே ஜ்ஞாநபக்திகளை வளர்த்ததேதுக்காகவென்னு மாகாங்க்ஷையிலேயருளிச்செய்கிறார்.(புணர்தொறுமென்றுதுடங்கி) அதாவது:— (௨) "புணர்தொறும் புணர்ச்சிக்காரா" இத்யாதியாலே ஸம்ஶ்லேஷிக்கும் தோறும் ஸம்ஶ்லேஷத்துக்குத்தக்கவளவல்லாதஸுகஸாகரமானது அபரிச்சேத்யமான வாகாசத்தையுங்கடந்தவ்வருகுபட்டு விபூதித்வயத்தையும் விளாக்கொலை கொள்ளவல்லவரவையும் முழுத்தும்படிபெருகி இப்படிபெருகின விது விஶ்லேஷப்ரஸங்கத்திலே பெருக்காறுவற்றியடிச்சுடுமாப்போலே ஸ்வப்நகல்பமென்னலாம்படி வற்றிப்போய் அத்தசையிலே ப்ராணஸ்தாநமான ஹ்ருதயத்திலே பூர்வஸம்ஶ்லேஷத்தாலுண்டான புடைதோறுமுள்ளே புகுந்து ஆஶ்ரயமான வாத்மாவுக்குப்பொறுக்க வொண்ணாதபடி அபிநிவேஶம் பெருகிவாராநின்றதென்று சொல்லும்படியாக கலப்பது பிரிவதாய், கலவியாலேஜ்ஞாநத்தையும் பிறிவாலேபக்தியையும் வளர்த்தது, கனத்தபணியிடுகைக்கிடமாம்படி நூலிட்டுத்திரியிட்டு * குசும்பையிட்டு கொப்பிட்டு காதுபெறுக்குமாப்போலவும், மாஸோபவாஸிக்கு ப்ரதமத்திலே போஜநத்தையிடில் பொறாதென்று சோற்றையரைத்துடம்பிலேபூசி பொரிக்கஞ்சிகொடுத்து பொரிக்கூழ்கொடுத்து ஒழுக்கத்திலே போஜநம்பொறுப்பிக்கு மாப்போலவும் (௩) "ஆற்றநல்லவகைகாட்டு மெம்மான்" என்றெனக்குப் பொறுக்கப்பொறுக்க தன்குணசேஷ்டி தாதிகளைக்காட்டி அவ்வழியாலே யென்னை யடிமை கொண்டவனென்னும்படி பகவதநுபவம் கனுக்கண்

---

* குசும்பை - ஓர்பூ. * கொப்பு - மரக்கொம்பு.

(க) தி-வி. க. (௨) தி-வா. ௧0. ௩. ௨. (௩) ஷ சு. ௫. ௫.

மூ. மாபோகச்சிரமமாக.

மூ—(௩௦) இவற்றுல்வரும் ஸம்ஶ்லேஷவிஶ்லேஷங்களாகிறன எளிய னுய்நிற்குமரியனுய் எய்தானென்கிற தர்ஶனஸமான மாந ஸாநுஸந்தாநமும்

மாபோக - எவ்வகையாலும் விலக்ஷணமாய் நித்யஸூரிகளனுபவிக்கிற போகத்தை, சிரமமாக - பொறுக்கைக்காக ஶ்ரமம் செய்வித்தபடி.

(அ) இவற்றுல்வரும் - இக்காரியங்களடியாகவரும், ஸம்ஶ்லேஷ விஶ்லேஷங்களாகிறன-ஸம்யோக வியோகங்களாகிறன, எளியனுய்-நெஞ்சுக்குமிகவும் விஶததமாநுபவ விஷயமாய்க்கொண்டு, நிற்கும்-முன்னேவந்து நிற்கும், அரியனுய்-என் கண்ணுக்கவிஷயமாய்க்கொண்டு, எய்தான் - கையாலணைக்கைக்கெட்டுகிறிலன், என்கிற - என்றுசொல்லுகிற, தர்ஶநஸமமான - ப்ரத்யக்ஷஸமமான, மாநஸாநு ஸந்தாநமும் - மாந ஸிகாநுபவமும்,

டறியாதவிவர்க்கு (க) "எம்மாவீட்டு" என்றும், (உ) "கட்டெழில் வானவர்போகம்" என்றுஞ்சொல்லுகிறபடியே, எவ்வகையாலும் விலக்ஷணமாய்க்கொண்டு கட்டடங்க நன்றுயிருப்பதாய் அபரிச்சின்ன ஜ்ஞாநபக்திகரான நித்யஸூரிகளநுபவிக்கிறபோகத்தை முதலிலே கொடுக்கில் ஸாத்மியாதென்று கறுதி அது ஸாத்மிக்கைக்காகச்சிரமம் செய்வித்தபடி யென்கை. ஆனபின்பு ஜ்ஞாநபக்திகளை வளர்த்தது ப்ராப்திஸாதநதயாவன்றென்றுகருத்து.மாஸோபவாஸிக்குப்புறப்பூச்சு மாத்ரத்தால் போஜநம் பொறுமையாலே புறப்பூச்சுச்சொன்னவிது மற்றையவற்றுக்குமுபலக்ஷணம். மாபோகம் என்றது, (௩) "மாவீடு" (ச) "வானவர்போகம்" என்கிற சந்தைகளிலாத்யந்தங்களைச்சேர்த்துச்சொன்னபடி. ❋

வ்யா. (௩௦) ஆனல் ஜ்ஞாநபக்திகளை வளர்த்ததிதுக்காகிறது. முனியேநான் முகனளவும் மாநஸாநுபவமொழிய ப்ரத்யக்ஷாநுபவ மில்லாதவிவர்க்கு இவற்றைவளர்க்கைக் குறுப்பாகவரும் ஸம்ஶ்லேஷ விஶ்லேஷங்களாகிறவையெவையென்னவருளிச்செய்கிறார்மேல். (இவற்றுலென்றுதுடங்கி) அதாவது :— கீழ்ச்சொன்னவக்காரியங்களடியாக வரும்ஸம்ஶ்லேஷமும் விஶ்லேஷமுமாகிறன. (ரு) "கருத்துக்கு நன்று மெளியனுய்" (சு) "நிற்கும்முன்னேவந்து" என்றுநெஞ்சுக்குமிகவும் விஶததமாநுபவ விஷயமாய்க்கொண்டென் முன்னேவந்து நிற்குமென்றும் (எ) "கண்கள் காண்டற்கரியனுய்" (அ) "கைக்குமெய்தான்" என்று, கண்ணுக்கவிஷயமாய்க்கொண்டு கையாலணைக்கைக்குக் கெட்டுகிறிலனென்றும் சொல்லுகிற ப்ரத்யக்ஷதுல்யமான மாநஸாநுஸந்தாந

(க) தி-வா. உ. க. க. (உ) ஷை. சு. சு. கக. (௩) ஷை. உ. க. க. (ச) ஷை. சு. சு. கக. (ரு) ஷை. ௩. சு. கக. (சு) ஷை-எ. ௩. சு. (எ) ஷை. ௩. சு. கக. (அ) ஷை.

சூ. திண்கொள்ளப்பெருத மநச்சைதில்யமும்.

சூ—(௯௧) புண்ணியம்பாவம் புணர்ச்சிபிரிவை அவைசரித்தவர்க்கு ப்ரியஹிதபரன்தான் துளக்கற

திண்கொள்ளப்பெருத - பாஹ்யகரணாநுபவம் பண்ணப்பெருமையா லுண்டான, மநஶ்ஶைதில்யமும் - ஆந்தராநுபவமும் கலங்கும்படி பிறந்தவந்தஃகரண சைதில்யமும்.

(அ) புண்ணியம்பாவம் - நாட்டார்க்குபுண்ணியபாவங்களால்வருகிற, புணர்ச்சிபிரிவை - ஸம்ஶ்லேஷ விஶ்லேஷங்களை, அவை - அப்புண்ணியபாபரூபமான ப்ரபலகர்மங்களை, சரித்தவர்க்கு - தான்போக்குகையாலே நிவர்த்தித்தவிவ்வாழ்வாருக்கு, ப்ரியஹிதபரன் - ப்ரியபரனும் ஹிதபரனுமான, தாந் - தானனவீஶ்வரன், துளக்கற - அநந்யபரனுயென்னுள்ளேபுகுந்து நிரதிஶயாநந்தயுக்தனுய்க் கலந்தானென்றிவரதிப்ரீதராம்படியாகவும்,

மும், (க) "கண்கள்க்குத்திண் கொள்ளவொரு நாளருளாயுன்திருவுருவு" என்றபேக்ஷிதமான பாஹ்யாநுபவம் பெருமையாலே ஆந்தராநுபவமுமடிமண்டிபோடே கலங்கும்படி பிறந்தவந்தஃகரணஶைதில்யமுமென்கை. ❋

வ்யா. (௯௧) ஆனுலபிமதவிஷயஸம்ஶ்லேஷ விஶ்லேஷங்கள் புண்யபாபநிபந்தனமாக்வன்ரே லோகத்தார்க்குவருவது, லோகவ்யாவ்ருத்தரான விவர்க்கு இவை வருகைக்கு நிதானமேதென்னுமபேக்ஷையிலே யருளிச்செய்கிருர். (புண்யமென்றுதுடங்கி) அதாவது:—(உ) "புண்ணியம் பாவம் புணர்ச்சி பிரிவென்றிவையாய்" என்கிறபடியே, நாட்டார்க்கு புண்யபாப பலமாய்க்கொண்டு வருகிற ஸம்ஶ்லேஷவிஶ்லேஷங்களை (௩) "சார்ந்தவிருவல்வினைகளுஞ் சரித்து" என்று, 'திலதைலவத் தாருவஹ்நிவத்,என்கிறபடியே, ஆத்மாவோடு பிரிக்கவொண்ணுதபடி பொருந்திக்கிடக்கிற புண்யபாபரூபமான ப்ரபல கர்மங்களை விரகர் நெடுஞ்சுவர்தள்ளுமாப்போலே தான் போக்குகையாலே அவையிரண்டுமற்றிருக்கிற விவர்க்கு ப்ரியபரனும்ஹிதபரனுமான வீஶ்வரன் தான் அந்த ஜ்ஞாநபக்திகளை வளர்க்கையில் நினைவாலே (ச) "துளக்கத்தமுதமாயெங்கும்பக்கம்நோக்கறியா னென்பைந்தாமரைக்கண்ணன்" என்று விபூதி ரக்ஷணத்தைப்பற்ற வருமந்யபரதை கலசாதபடி அத்தையொருங்கவிட்டுக்கொண்டுவந்து இனிப்பேருதபடி என்னுள்ளேபுகுந்து அத்தாலே விகஸிதஸஹஜ ஸார்வைஜ்ஞுதுமாய்,

(க) தி - வா. ൯. ௪௦. எ. (உ) ஷெ ௬. ௩. ௪. (௩) ஷெ. ௧. ൯. ௪௦. (௪) ஷெ ௨. ௬. ௨.

மூ. வெங்குர்தழைக்க நடத்தும்.

மூ—(௩௨) ஜ்ஞாநத்தில் தம்பேச்சுப்ரேமத்தில் பெண்பேச்சு.

எங்கும் தழைக்க -, விஶ்லேஷவ்யஸநத்தாலே நான்முடியாநிற்கையாலே என்துக்க தர்ஶநாபாவத்தால் லோகமானது ஸுகத்தைப்பெற்று ஸம்ருத்தமாகக்கடவதென்னும்படி அதிமாத்ரதுக்க நிமக்நாம்படியாகவும், நடத்தும் - நடத்திக்கொண்டுபோரும்.

(அ) ஜ்ஞாநத்தில் - ஜ்ஞாநதசையில், தம்பேச்சு - தாமானதன்மையிலேபேச்சு, ப்ரேமத்தில் - ப்ரேமதசையில், பெண்பேச்சு - நாயகிப்பேச்சு.

(க) "ஜ்வர:" "விஜ்வர:" என்கிறபடியே, * உள்நடுக்கமும் தீர்ந்து எனக்கு நிரதிஶயபோக்யனுமாய் நாச்சிமாரையும் புரிந்து பாராமல் என்னையேபுரிந்து பார்த்துக்கொண்டு இதனாலே திருக்கண்களும் செவ்விபெற்று இப்படி யென்னோடே கலந்திருந்தானென்றிவரதிப்ரீதராம்படியாகவும் (உ) "தழைநல்லவின்பம் தலைப்பெய்தெங்கும் தழைக்க" என்று, விஶ்லேஷவ்யஸநத்தாலே நான் முடியாநின்றேன், இனி யென் துக்கங் காணுமையாலே லோகமெல்லாம் விஸ்தீர்ணமாய் நன்றாக ஸுகத்தைப்பெற்று ஸம்ருத்தமாகக்கடவதென்னும்படி அதிமாத்ரதுக்கநிமக்நாம்படியாகவும் நடத்திக்கொண்டு போருமென்றபடி. *

வ்யா. (௩௨) இப்படி யீஶ்வரன் வளர்த்துக்கொண்டுபோருகிற, ஜ்ஞாநப்ரேமைகளையுடையரான இவருடைய ஜ்ஞாநதசையிலும் ப்ரேமதசையிலுமுண்டான பேச்சுகளிருக்கும்படி யெங்ஙனே யென்னவருளிச்செய்கிறார். (ஜ்ஞாநத்திலித்யாதி) அதாவது:— ஜ்ஞாநதசையில் தாமான தன்மையிலே நின்றுபேசுவர். ப்ரேமதசையிலும் அவஸ்தாந்தராபன்னராய்பெண்பேச்சாகப்பேசுவரென்கை. *

"விஜ்வர:" என்கிற இந்தவிடத்தில் * உள்நடுக்கமாவது? கடற்கரையில் பெருமாள் ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கு இலங்கைமாநகரை முடிசூட்டி பின்பிதென்னாமோவென்றேங்கியும், ஸ்ரீபரதாழ்வான்போலிவனும் நேராக இராஜ்யத்தை யங்கீகரியானாகில் செய்த ப்ரதிஜ்ஞை வீணேயொழியுமேயென்று கலங்கியுமிருக்க இராவணவதாநந்தரம் இராஜ்யத்தை ஸ்ரீவிபீஷணாழ்வானங்கீகரித்தமையால் தீர்ந்தகவலையென்றபடி. அல்லது :—வி, என்று பக்ஷியாய் அது பெரிய உடையாராய் அவர் விஷயமான க்லேசமாகவுமாம். அதாவது:—உலகத்தில், தம் தம் மக்களுக்கௌருகாலவிசேஷத்திலல்லாதபெரும்சீர்மையுண்டாகுகையில் தந்தையாவான் காலம் சென்றவனை நினைந்து துக்கிப்பதுபோல் மேலாத்தாய்தந்தையான பெருமாள் ஸ்ரீவிபீஷணாழ்வானுடைய மஹோத்ஸவத்தைப் பார்த்து அவனுமில்லாமற் போனானேயென்கிற மநத்துடிப்பு.

(க) ஸ்ரீ-ரா-யா. க. அச. (உ) தி-வா. க. ௫. ௪0. (௩)

மூ—(௩௩) தேறுங்கலங்கியென்றுந் தேறியுந்தேருதும் ஸ்வரூபங் குலையாது.

மூ—(௩௪) அடியோந்துடர்ந்து குற்றே வலடிச்சியோ மடிக்கீழ்க்குற்றேவலாகை யவஸ்தாந்தரம்.

(அ) தேறுங்கலங்கியென்றும் - தெளிந்ததசையிலும் கலங்கினதசையிலும் அஞ்ஜலிமாருளென்கையாலும், தேறியும்தேருதும்-உபயாவஸ்தையிலுமவன் திறத்தினளாயிருக்கிருளென்கையாலும், ஸ்வரூபம் - (சேஷத்வரூப) ஸ்வரூபம், குலையாது - நிலைகுலையாது.

(அ) அடியோம் - தாஸபூதர், துடர்ந்துகுற்றேவல் - ஸந்நிதியை யிடைவிடாமல் ஸகலவிததாஸ்யங்களும் (செய்யவேண்டுமென்று தம் பேச்சாலே சொல்லுகிறவிது,) அடிச்சியோம் - தாஸிகள், அடிக்கீழ் குற்றேவல் - திருவடிகளிலந்தரங்க தாஸ்யங்களைப்பண்ணவேண்டுமென்று, ஆகை - (பெண்பேச்சு) ஆகை, அவஸ்தாந்தரம் - அவஸ்தாந்தராபத்தி.

வ்யா. (௩௩) இப்படி தெளிவுங்கலக்கமுமான வித்தசைகளில் பேச்சில் பேதமொழிய ஸ்வரூபத்திலும் பேதமுண்டோவென்னவருளிச்செய்கிருர். (தேறுங்கலங்கியென்று துடங்கி) அதாவது:— (க) "தேறுங்கைகூப்பும்" (உ) "கலங்கிக்கைதொழும்" என்று தெளிந்தசையிலும் கலங்கின தசையிலும் சேஷத்வப்ரகாசகமான அஞ்சலிமாருமையாலே பிண்டத்வ கடத்வ கபாலத்வ சூர்ணத்வங்களாகிற அவஸ்தாந்தரங்களை பஜித்தாலும் ம்ருத்தானவாகாரத்துக்கழிவில்லாதாப்போலே" (௩) "தேறியுந்தேருதமாயோன் திறத்தினளேயித்திருவே" என்கிறபடியே தெளிந்தசையோடு கலங்கினதசையோடு வாசியற உபயாவஸ்தையிலும் சேஷத்வரூபமான ஸ்வரூபம் நிலைகுலையாதென்றபடி. ✻

வ்யா. (௩௪) ஆனலிவர்க்கவஸ்தாந்தரமாவதேதென்னுமாகாண்கைஷயிலே அருளிச்செய்கிருர். (அடியோமித்யாதி) அதாவது:— (௪) "அடியோம் போற்றியோவாதே" (ரு)"தொடர்ந்து குற்றேவல்செய்து" என்று, தாமானதன்மையிற் சொல்லுமோபாதி (சு) "அடிச்சியோந் தலைமிசைநீயணியாய்" (எ) "திருவடிக்கீழ்குற்றேவல்முன்செய்ய" என்று சொல்லுகையாலே, ஸ்வரூபத்திலும் ஸ்வரூபாநுரூபவ்ருத்தி ப்ரார்த்தனையிலும் பேதமில்லை. பிராட்டியான பாவனையாலே தம்பேச்சானவிது போய் பெண்பேச்சாகை யிவர்க்கவஸ்தாந்தரமாவதென்றபடி. (அ) "அடியோம்" (கூ) "தொடர்ந்துகுற்றேவல்" என்று, தம்பேச்சாலே சொல்லுகிறவிது, "அடிச்சியோம், அடிக்கீழ்குற்றேவல்" என்று பெண்பேச்சாகையிவர்க்கவஸ்தாந்தரமாவதென்று வாக்யத்துக்குச்சொற்படுத்தும் க்ரமம். ✻

(க) தி-வா. எ. உ. ரு. (உ) ஷை. உ. ச. ச. (௩) ஷை ச. ச. எ. (௪) ஷை. கூ.உ. க. (ரு) ஷை ௩. (சு) ஷை க௦. ௩. க. (எ) ஷை க. ச. உ. (அ) ஷை-கூ-உ-க. (கூ) ஷை.௩.

மூ—(௩௫) வித்யை தாயாகப்பெற்றுபாலுமமுதுமான திருநாமத் தாலே திருமகள்போல வளர்த்தத்தஞ்சமாகிய தந்தைமற் றொருவர்க்குப் பேச்சுப்படாமல்

"மைந்தனைமலராள் மணவாளனை" என்றும், "ஸ்ரிய꞉பதித்வம் ப்ரதிபாதிதமாயிற்று. இரண்டாம்பத்தால் "எம்பெருமான் நாரணர்க்கு" என்றும், "எம்பிரானெம்மான் நாராயணனாலே" என்றும், "நாரணன்முழுவேழுலகுக்கும்நாதன்" என்றும் "நாராயணத்வம் ப்ரதிபாதிதமாயிற்று. மூன்றாம்பத்தால் "நாண்மலராமடித்தாமரை" என்றும், "அங்கதிரடியன்" என்றும், "அவன்பாதபங்கயம்" என்றும் "அன்றுதேர்கடவியபெருமான்கனைகழல்" என்றும், "மூவுலகம்தொழுதேற்றும் சீரடியான்" என்றும், நாராயணனுடைய ஸர்வலோக ஶரண்யமான சரணாரவிந்தயுகளம் ப்ரதிபாதிதமாயிற்று. நாலாம்பத்தால்: — "இலங்கைநகரம்பெரியுய்த்தவர்" என்றும், "வல்வினைதீர்க்கும்கண்ணனை" என்றும், "தொல்வினைதீர" என்றும், "வெய்யநோய்கள்முழுதும் வியன்ஞாலத்துவீயவே" என்றும், "மேவிநின்று தொழுவார்வினைபோக" என்றும், "பிறந்தும்செத்தும் நின்றிடரும்பேதமை தீர்ந்தொழிந்தேன்" என்றும், "நோயேமூப்பிறப்புப் பிணியேயென்றிவையொழிய" என்றும், "வேட்கையெல்லாம்விடுத்து உன்கூட்டரிய திருவடிக்கள்கூட்டினை" என்றும், "அஃதேயுய்யப்புகுமாறு" என்றும், "உய்வுபாயம்மற்றின்மை தேறி" என்றும், அநிஷ்ட நிவ்ருத்தீஷ்டப்ராப்திகரத்வ லக்ஷணமான ப்ராபகத்வம்ப்ரதிபாதிதமாயிற்று. ஐந்தாம்பத்தால்:—"தமியேனுக்கருளாய்" என்றும், "ஆறெனக்குநின்பாதமேசரணாக" என்றும், "உன்னாலல்லால்" என்றும், "கழல்களவையே" ஶரணாகக்கொண்ட" என்றும், "நம்பெருமானடிமேல்சேமங்கொள் தென்குருகூர்ச்சடகோபன்" என்றும், நாகணைமிசைநம்பிரான்ஶரணே ஶரண்நமக்கு" என்றும், "நாடொறுமேகசிந்தயனாய்" என்றும் ப்ரார்த்தனாகர்ப்பவிஸ்ரம்பம் ப்ரதிபாதிதமாயிற்று. ஆறாம்பத்தால்: —"திருமாமகளிருந்தாம்மலிந்திருந்து" என்றும், "அடிமைசெய்வார் திருமாலுக்கே" என்றும், "ஓசிந்தவொண்மலராள் கொழுநன்" என்றும், "என்திருமார்வர்க்கு" என்றும், "கோலத்திருமாமகளோடுன்னை" என்றும், கைங்கர்யப்ரதாநார்த்தமான நித்யஸம்பந்தம் ப்ரதிபாதிதமாயிற்று. ஏழாம்பத்தால்:— "கன்னலேயமுதே" என்றும், "கொடியேன்பருகு இன்னமுதே" என்றும், "அலைகடல்கடைந்தவாரமுதே" "திருமாலின்சீரிறப்பெதிர்காலம் பருகிலுமார்வனோ" என்றும், "இவ்வேழுலகையின்பம்பயக்க" என்றும், கைங்கர்யப்ரதிஸம்பந்தியான ஈஶ்வரனுடைய நிரதிஶயபோக்யதை ப்ரதிபாதிதமாயிற்று. எட்டாம்பத்தால்:— "அடியனேன் பெரியவம்மானே" என்றும் "விண்ணவர் கோன்நங்கள்கோனை" என்றும், "அமர்ந்தநாதனை" என்றும், "மூவுலகாளி" என்றும், "நேர்பட்டநிறைமூவுலகுக்கும்நாயகன்" என்றும், ஸர்வஸ்வாமித்வம் ப்ரதிபாதிதமாயிற்று. ஒன்பதாம்பத்தால்:— "பண்டைநாளாலே நின்திருவருளும் பங்கயத்தாள் திருவருளும்கொண்டு நின்கோயில்சீய்த்து" என்றும், "நின்தீர்த்தவடிமைக்குற்றேவல்" என்றும், "துடர்ந்துகுற்றேவல் செய்து" என்றும், "கொடுவினை

மூ—(௬௨) மூன்றில் சுருக்கியவைந்தையும் உயர்

(அ) மூன்றில் சுருக்கிய-மூன்றக்ஷரத்தில் சுருக்கின, ஐந்தையும் - ஐந்தர்த்தத்தையும், உயர் - உயர்வற,

யேனும்பிடிக்க" என்றும், "உறுவதிதுவென்றுனக்காட்பட்டு "என்றும், "ஆட்கொள்வானொத்து" என்றும், நானும் மீளாவடிமைப் பணிசெய்யப் புகுந்தேன்" என்றும், நித்யகைங்கர்யம் ப்ரதிபாதிதமாயிற்று. பத்தாம்பத்தால்:—"துயர்கெடுங்கடிது" என்றும், "கெடுமிடராய" என்றும், "எழுமையுமேதஞ்சாரா" என்றும், "தீரும் நோய் வினைகளெல்லாம்" என்றும், "இப்பிறப்பறுக்கும்" என்றும், "உன்தன்திருவுள்ளமிடர் கெடுந்தோறும்' "நாங்கள் வியக்கவின்புறுதுமெம்பெண்மையாற்றோம்" என்றும், பிணியொன்றும், சாராப்பிறவிகெடுத்தாளும்" என்றும், "பிறவித்துயர் கடிந்தோம்" என்றும், "விண்டேயொழிந்த வினையாயினவெல்லாம்" என்றும், "அமராவினைகளே" என்றும், "கடுநரகம்புகலொழித்த" என்றும், "பிறவிகெடுத்தேன்" என்றும், "தடுமாற்றவினைகள் தவிர்த்தான்" என்றும், "அந்திதொழும்சொல்லு" என்றும், "அவாவற்றுவீடுபெற்ற" என்றும், கைங்கர்ய ப்ரதிபந்தக நிஶ்ஶேஷ நிபர்ஹணம் ப்ரதிபாதிதமாயிற்று. இப்படி, ஶ்ரிய꞉பதித்வப்ரமுகங்களாய் கைங்கர்யப்ரதிபந்தக நிஶ்ஶேஷநிபர்ஹணபர்யந்தங்களாயிருந்துள்ள, உபாதேயார்த்தங்களை ப்ரதிபாதிக்கக்கடவதாயிருந்துள்ளவாக்யத்வயமும், திருவாய்மொழியும், பகவச்சரணார்த்திகளாய் அநந்யோபாயராயிருக்கு மதிகாரிகளுக்கு காலக்ஷேபஹேதுவாகவும், போகஹேதுவாகவும், ஈஶ்வரப்ரீதிஹேதுவாகவும், யாவச்சரீரபாதமநுஸந்தேயமென்றருளிச்செய்ததிப்ரபந்தம். இப்படி திருவாய்மொழியினுடைய த்வயார்த்தப்ரதிபாதகத்வத்தை விஶதமாக வாசார்யர்களருளிச்செய்து வைக்கையாலே ஸ்வப்ரபந்தத்தில் வக்தவ்யாம்ஶத்தை தத்ப்ரபந்தத்திலே தர்சிப்பித்தாராயிற்று. *

வ்யா. (௬௨) ஆக, இப்படித்வயார்த்த ப்ரதிபாதகதயா தீர்க்கஶரணாகதியாயிருக்கிற திருவாய்மொழிக்கு மற்றுமாசார்யர்களருளிச்செய்யுமர்த்த யோஜனைகளை அருளிச்செய்கிறார். (மூன்றில்சுருக்கிய) என்று துடங்கி, அதாவது:— மந்த்ர ஶ்லோகங்களில் ஸங்க்ரஹோக்தங்களான வர்தவிஶேஷங்களை த்வயத்திலேவிவரிக்குமாப்போலே, பூர்வப்ரபந்தத்ரயத்திலும் ஸங்ரஹேணசொல்லப்பட்ட அர்த்தபஞ்சகத்தையும், ஶ்ருதிச்சாயையாலே அந்வயரூபேணஸ்வாநுபவ முகத்தாலே பரத்வத்திலே பரத்வத்தை ப்ரதிபாதித்த (க) "உயர்வரஉயர்நலமும்" இதிஹாஸபுராணப்ரக்ரியையாலே, அந்வயவ்யதிரேகங்களிரண்டாலும், பரோபதேஶமுகத்தாலே அவதாரத்திலே பரத்வத்தைப்ரதிபாதித்த

(க) திவா. க. க. க.

மூ. திண் அணை யொன்று பயிலேறு கண் கருவீடு சொன்னலொருக்கொண்டநோற்ற நாலும் எம்மாவொழி நெடுவேயென்கிற விருபதிலே

திண் - திண்ணன்வீடு, அணை - அணைவதரவணை, ஒன்று - ஒன்றும்தேவு, பயில் - பயிலுஞ்சுடரொளி, ஏறு - ஏறாளுமிறையோனும், கண் - கண்கள்சிவந்து, கரு - கருமாணிக்கமலை, வீடு - வீடுமின்முற்றவும், சொன்னல் - சொன்னல்விரோதம், ஒரு - ஒருநாயகம், கொண்ட - கொண்ட பெண்டிர், நோற்றநாலும் - நோற்றநோன்பு, ஆராவமுது, மானேய்நோக்கி, பிறந்தவாறு, இவைநாலும், எம்மா - எம்மாவீடு, ஒழி-ஒழிவில்காலம், நெடு - நெடுமாற்கடிமை, வேய் - வேய்மருதோளிணை, என்கிறவிருபதிலே - இவையாகிறதிருவாய்மொழிகளிருபதுகளிலும்,

(க) "திண்ணன்வீடும்" மோக்ஷப்ரதத்வகதநத்தாலே பரத்வத்தைப்ரதிபாதித்த (உ) "அணைவதரவணையும்" அர்ச்சாவதாரத்திலே பரத்வத்தை ப்ரதிபாதித்த (௩) "ஒன்றும்தேவும்" ஆகிற, நாலுதிருவாய்மொழியாலும், பரஸ்வரூபமும், பகவச்சேஷத்வத்திலும் தத்காஷ்டையான பாகவத ஶேஷத்வமே ஆத்மாவுக்குத்தேஶ்யமென்று ப்ரதிபாதித்த (ச) "பயிலும் சுடரொளியும்" சேஷத்வபஹிர்ப் பூதங்களான ஆத்மாத்மீயங்கள் த்யாஜ்யமென்கிற வ்யதிரேகத்தாலே ஶேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபமென்று ப்ரதிபாதித்த (ரு) "ஏறாளுமிறையோனும்" பகவானுக்கிவ் வாத்மவஸ்து ப்ரகாரதயாஶேஷமாய் ப்ரக்ருதேஃபரமாய் ஜ்ஞாநாநந்த லக்ஷணமாயிருக்குமென்னுமத்தைப்ரதிபாதித்த (சா) "கண்கள்சிவந்தும்" அந்யஶேஷத்வ ப்ரஸங்கமு மஸஹ்யமாம்படியான அதின் அநந்யார்ஹத்வத்தைப்ரதிபாதித்த (எ) "கருமாணிக்கமலையும்" ஆகிற நாலுதிருவாய்மொழியாலும் ஸ்வஸ்வரூபமும், பகவத்வ்யதிரிக்த விஷயங்களைப்பற்றுகைக்குடலான அஹங்காரமமகாரங்கள் த்யாஜ்யமென்ற (அ) "வீடுமின்முற்றவும்" அஸேவஸேவைத் த்யாஜ்யமென்ற (கூ) "சொன்னல்விரோதமும்" ஐஶ்வர்யகைவல்யங்கள் த்யாஜமென்ற(க0)ஒருநாயகமும்" ஶரீரஸம்பந்த நிபந்தனமாகவரும் பரிக்ரஹங்கள் த்யாஜ்யமென்ற (கக) "கொண்டபெண்டிரும்" ஆகிற நாலு திருவாய்மொழியாலும் விரோதிஸ்வரூபமும், "நோற்றநோன்பிலேன்" என்று, ஆகிஞ்சின்யபூர்வகமாக "ஆறெனக்கு நின்பாதமே ஶரணாகத் தந்தொழிந்தாய்" என்ற, (கஉ) 'நோற்றநோன்பும்' "களைவாய்துன்பம் களையாதொழிவாய் களைகண்மற்றிலேன்" என்று, அநந்யகதித்வபூர்வகமாக "கழல்களவையேசரணாகக்கொண்ட" என்ற(க௩)"ஆராவமுதும்"

(க) ஷை உ. உ. க. (உ) ஷை அ. க. (௩) ஷை ச. க0. க. (ச) ஷை ௩. எ. க. (ரு) ஷை ச. அ. க. (சா) ஷை அ. அ. க. (எ) ஷை கூ. க. (அ) ஷை க. உ. க. (கூ) ஷை ௩. கூ. க. (க0) ஷை ச. க. க. (கக) ஷை கூ. கூ. க. (கஉ) ஷை ரு. எ. க. (க௩) ஷை ரு. அ. க.

மூ. விஶதமாக்கி என்பதிலே பரப்புகையாலே ஐந்தையுமரு ளினன் விடுபெற்றவென்கையாலே ஐந்திலு மிரண்டையும் தொழுது களித்தேன்சொல்லுப்பெற்றேன் பணிசெயென் கிற.

விஶதமாக்கி - பரக்கச்சொல்லி, என்பதிலே - என்பது திருவாய்மொழிகளிலே, பரப்புகையாலே - விஸ்தரிப்பிக்கையாலே, ஐந்தையும் - அர்த்தபஞ்சகத்தையும், அருளினன் - க்ருபைபண்ணினன், விடுபெற்ற - மோக்ஷத்தையடைந்த, என்கையாலே - என்றுசொல்லுகையாலே, ஐந்திலும் - அர்த்தபஞ்சகத்திலும், இரண்டையும் - உபாயோபேயங்களிரண்டையும், தொழுது - களித்தேன், சொல்லுப்பெற்றேன், பணிசெயென்கிற - இவைகளாலே சொல்லப்பட்ட,

---

"வைகலும்வினையேன்மெலிய" என்று, பக்திபாரவஶ்யம் முன்னாக "நம்பெருமானடிமேல் சேமங்கொள் தென்குருகூர்ச்சடகோபன்" என்ற (௧) "மானேய் நோக்கும்" "எனதாவியை நின்று நின்றுருக்கியுண்கின்ற" என்று, தரித்துநின்றவன் குணங்களை யநுஸந்திக்கமாட்டாதசைதில்யம் செல்லாநிற்கிற "நாகணைமிசைநம்பிரான் சரணேசரண்நமக்கென்று நாடோறுமேகசிந்தயனாய்" என்ற, (௨) "பிறந்தவாறும்" ஆகிற நாலு திருவாய்மொழியாலும் உபாய ஸ்வரூபமும், "தன்க்கேயாக" என்று, கைங்கர்யத்தில் ஸ்வார்த்ததா நிவ்ருத்தியையபேக்ஷித்த" (௩) "எம்மாவீடும்" ஸர்வகாலாதி விசிஷ்டமான ஸகலஶேஷவ்ருத்திகளையும் பண்ணவேணுமென்று ப்ரார்த்தித்த (௪) "ஒழிவில்காலமும்" அதுதான் பாகவதகைங்கர்யபர்யந்தமாகவேணுமென்று மநோரதித்த" (௫) "நெடுமால்கடிமையும்" அது தன்னில், பரஸம்ருத்யேக ப்ரயோஜனத்வத்தைச் சொன்ன(௬) "வேய்மருதோளிணையும்" ஆகிற, நாலு திருவாய்மொழியாலும் பலஸ்வரூபமாகக்கொண்டு இருபது திருவாய்மொழியிலே விஶதமாகப்ரதிபாதித்து, மற்றை யென்பது திருவாய்மொழியாலும் அது தன்னையே விஸ்தரிக்கையாலே அர்த்தபஞ்சகத்தையும், இப்ரபந்தத்துக்கு ப்ரமேயமென்னும், "மயர்வறமதிநலமருளினன்" என்றுதுடங்கி (௭) "அவாவற்றுவீடுபெற்ற" என்று, தலைக்கட்டுகையாலே அவ்வைந்திலும் வைத்துக்கொண்டு ப்ரதானமான உபாயோபேயங்களிரண்டையும், இதுக்கு ப்ரமேயமென்றும், தொழுதெழென்மனனே" (௮) "விருப்பேபெற்றமுதமுண்டுகளித்தேன்" (௯) "மேலைத்தொண்டுகளித்தந்தி தொழுஞ் சொல்லுப்பெற்றேன்" என்று,சொல்லப்படுகிற, பத்தாஞ்ஜலிபுடத்வ ஹ்ருஷ்டத்வ நமயித்யேவவாதித்வங்களாகிற முக்தலக்ஷணத்தா

---

(௧) ஷை ரு. ௬. ௧. (௨) ஷை ரு. ௧௦. ௧. (௩) ஷை ௨. ௯. ௧. (௪) ஷை ௩. ௩. ௧. (௫) ஷை அ. ௧௦. ௧. (௬) ஷை ௧௦. ௩. ௧. (௭) தி-வா. ௧௦. ௧௦. ௧௧. (௮) ஷை. ௧௦. ௬. (௯) ஷை ௭.

மூ. முக்தலக்ஷணவ்ருத்தியாலே இரண்டிலொன்றையுமிதுக்கு ப்ரமேயமென்னும்.

மூ—(௬௩) ரஹஸ்யத்துக்கோரெழுத்துமதுக்கோருருவும் போலேயானவற்றிலே

முக்த - முக்தர்களுடைய, லக்ஷண - அடையாளமாயிருக்கிற, வ்ருத்தியாலே - வ்யாபாரத்தாலே, இரண்டில் - உபாயோபேயங்களிரண்டிலும், ஒன்றையும் - உபேயமொன்றையுமே, இதுக்கு - இப்ரபந்தத்துக்கு, ப்ரமேயமென்னும் - ப்ரமேயமென்றுசொல்லும்,

(அ) ரஹஸ்யத்துக்கு - (திருமந்த்ரமாகிற) ரஹஸ்யத்துக்கு, ஓரெழுத்தும் - ஓ ரக்ஷரமும், அதுக்கு - அவ்வக்ஷரத்துக்கு, ஓருருவம்போலே - ப்ரக்ருதியான வகாரம்போலே, ஆனவற்றிலே - ஸங்க்ரஹமான முதற்பாட்டுக்களிலே,

லும், விபங்யவ: ? என்கிற, அவர்களைப்போலே (௧) "சொற்பணிசெயாயிரம்" என்று சொல்லப்படுகிற, வாசிகவ்ருத்தியாலும், அவ்விரண்டிலும் வைத்துக்கொண்டு உபேயமொன்றையுமே இதுக்கு ப்ரமேயமென்று சொல்லுமென்கை. (இருபதிலேவிபூதமாக்கி எண்பதிலேபரப்புகையாலே ஐந்தையுமிதுக்கு ப்ரமேயமென்னும்.) என்றவிது, இப்ரபந்தங்களில் ஸூக்திகள் ப்ராப்யனை வெம்பெருமானுடைய ஸ்வரூப ப்ரதிபாதநபரமாயிருக்கும் சில, ப்ராப்தாவான ப்ரத்யகாத்ம ஸ்வரூப விஷயமாயிருக்கும்சில, ப்ராப்த்யுபாயத்தைச்சொல்லும்சில, பலத்தைச்சொல்லும் சில, ப்ராப்திவிரோதியைச்சொல்லும்சில, அவசிஷ்டமானவை இவற்றுக்குபபாதகங்களாயிருக்குமென்று யீட்டில்யோஜித்தக்ரமம். உபாயோபேயங்களிரண்டையுமிதுக்கு ப்ரமேயமென்னுமென்றவிது இவையிரண்டுமே ப்ரதாநப்ரமேயம். இவ்வுபாயோபேயங்களுக்கதிகாரியின்னுனென்கைக்காக ப்ரத்யகாத்ம ஸ்வரூபமும், உபாயபூதனும் உபேயவிஷயமும் இன்னுரென்கைக்காக பரஸ்வரூபமும், உபேயப்ரதிபந்தகமாய் உபாயநிவர்த்யமாயிருக்குமதின்னதென்கைக்காக விரோதி ஸ்வரூபமும்சொல்லுகிற வித்தனையென்று நினைத்து உபேயமொன்றுமிதுக்குப்ரமேயமென்னுமென்றவிது இவற்றிலுத்தேச்யம் பலம். ததர்த்தமாகமற்றுள்ளநாலர்த்தமுஞ் சொல்லுகிறது என்று ஈட்டில் சொன்னபடியேகைங்கர்யமே ப்ரதாநம் மற்றைநாலும் சொன்னது கைங்கர்ய ப்ரதி ஸம்பந்தியையும் ததாச்ரயத்தையும், தத்விரோதியையும், அவ்விரோதிநிவர்த்தகத்தையும் அறிவிக்கைக்காக வாகையாலே தச்சேஷமாகச்சொன்னவித்தனை யென்றுநினைத்து. *

வ்யா. (௬௩) இனிப்ரதமசரம ப்ரபந்தங்களினுடைய ஸங்க்ரஹங்களான முதற்பாட்டுக்களில் ப்ரதிபாத்யார்த்தங்களை ஸ்பஷ்டமாகவருளிச்செய்கிருர். (ரஹஸ்யத்துக்கு) என்றுதொடங்கி, அதாவது:— ஓரெழுத்து ஓருருவென்னும்படி திருமந்த்ரமாகிற ரஹஸ்யத்துக்கு

(௧) ஷி ௧. ௧0. ௧௧.

மூ. இமையோரதிபதி அடியேன்மனனேபொய் மயர்வு பிறந்த ருளினன் விண்ணப்பம் தொழு தெழன்ற பஞ்சகத்தோ டே அவித்யாதிஸ்வரூப

இமையோர் - இமையோர்தலைவா, அதிபதி - அயர்வறுமமரர்களதி பதி, அடியேன்-அடியேன், மனனே - தொழுதெழன்மனனே, பொய் - பொய்நின்றஞானம், மயர்வு - மயர்வற, பிறந்து - எங்கின்ற யோனியு மாய்ப்பிறந்தாய், அருளினன் - மதினலமருளினன், விண்ணப்பம் - அடி யேன் செய்யும் விண்ணப்பம், தொழுதெழு - தொழுதெழு, என்ற- இவைகளாலே சொல்லப்பட்ட, பஞ்சகத்தோடே - அர்த்தபஞ்சகத் தோடே, அவித்யாதி - அவித்யை முதலானவைகளுடைய, ஸ்வரூப - ஸ்வரூபம்,

ஸங்க்ரஹமாய் "ஓமித்யேகாக்ஷரம், என்றேகாக்ஷரமாயிருக்கிறப்ரண வமும், (க) "తస్యప్రకృతిలీనస్య" "தஸ்யப்ரக்ருதிலீநஸ்ய" என்கிறப டியே, அந்தப்ரணவந்தனக்கு ஸங்க்ரஹமாயிருக்கிற அகாரமும்போ லே, திருவிருத்தம் திருவாய்மொழியாகிற ப்ரபந்தங்களுக்கு ஸங்க்ரஹ ங்களான முதற்பாட்டுக்களிலே "இமையோர்தலைவா" என்றும், "அயர் வறுமமரர்களதிபதி" என்றும், ஸூரிஸேவ்யமாய் ஸர்வாதிகமாயிருக் கும் பரஸ்வரூபத்தையும், "அடியேன்" என்றும், "என்மனனே" என் றும், ஶேஷபூதமாய் பரிஶுத்தாந்தஃகரணமாயிருக்கும் ஸ்வஸ்வரூபத் தையும், "பொய்நின்ற ஞானமும்பொல்லாவொழுக்கு மழுக்குடம்பும்" என்றும், "மயர்வு" என்றும், அவித்யாதிகளான விரோதிஸ்வரூபத்தை யும், "உயிரளிப்பானென்னின்ற யோனியுமாய்ப்பிறந்தாய்" என்றும் "மதிநலமருளினன்" என்றும், லோகரக்ஷணார்த்தமாக அநேகாவதாரங்க ளைப்பண்ணின ஸர்வேஶ்வரனுடைய க்ருபையே உபாயமென்று உபாய ஸ்வரூபத்தையும் "செய்யும்விண்ணப்பம்" என்றும், "தொழுதெழு" என்றும், ஶேஷிவிஷயத்தில்கரணத்ரயத்தாலும், பண்ணும்கைங்கர்யமே பரமபுருஷார்த்தமென்று பலஸ்வரூபத்தையுமாகக்கொண்டு ஸங்க்ரஹி த்துச்சொன்ன அர்த்தபஞ்சகத்தோடே "பொய்நின்றஞானம்" இத்யாதி யாலே, அவித்யாதிகளைச்சொல்லுகிற வளவில் உத்பத்திவிநாஶாதியோ கத்தாலே அஸத்யஶப்தவாச்யமான அசேதநவிஷயத்திலாத்மஜ்ஞாந மும், அந்ததேஹாத்மாபிமானமடியான ஸாம்ஸாரிகதுஷ்கர்மப்ரவ்ருத்தி யும், அக்கர்மமடியாகவரக்கடவதானமாம்ஸாஸ்ருகாதிமலரூபதேஹஸம் பந்தமுமென்றவற்றினுடையஸ்வரூபங்களும், விப்ரதிபத்திஹேதுத்வம், ஸம்ஸாரஹேதுத்வம் ஸ்வரூபதிரோதாயகத்வம் உத்தரோத்தரங்களில் பூர்வபூர்வகாரணத்வம் "இனியாமுறுமை" என்கையாலே, அவற்றினநா தித்வம், ஸோபாதிகத்வம் "மயர்வறமதிநலமருளினன்" என்கையாலே,

(க) தைத்தரீயகே - நாராயணே இப்பக்கத்திலும் ௩௦௬ - ம் பக்கத்திலுமிருக் கிற பாசுரங்கள், தி - வா. க, க, க -ம். தி - வி. க - மே.

மூ. ஸ்வபாவாத்மேஶ்வரபந்தரக்ஷண க்ரமகுணவிக்ரஹவி பூதியோக ததீயாபிமாநோபதேஶ விஷயாந்யாபதேஶ ஹேத்வாதிகளும் ஸங்க்ரஹீதம்.

மூ—(௬௪) அடிதொழுதெழென்றவிதிலே வஸ்துநிர்த்தேஶ

ஸ்வபாவ - ஸ்வபாவம் - ஆத்மேஶ்வர - ஜீவாத்மா யீஶ்வரன் இவர்களுடைய, பந்த - ஸம்பந்தம், ரக்ஷணக்ரம - ரக்ஷணத்தின்க்ரமம், குண- குணங்கள், விக்ரஹ - விக்ரஹங்கள், விபூதி - விபூதிகள், யோக - ஸம்பந்தம், ததீய - பாகவதருடைய, அபிமான - அபிமானம், (இவைகளுடைய) உபதேஶ - உபதேஶத்தை, விஷய - விஷயமாக உடைய, அந்யாபதேஶ - அந்யாபதேஶத்துக்கு, ஹேத்வாதிகளும் - ஹேது முதலானவைகளும், ஸங்க்ரஹீதம் - ஸங்க்ரஹிக்கப்பட்டவைகள்.

(அ) அடி - திருவடிகளை, தொழுது - ஸேவித்து, எழு - உஜ்ஜீவிக்கக்கடவை, என்றவிதிலே - என்கிறவிடத்திலே, வஸ்துநிர்த்தேஶ- வஸ்துநிர்த்தேஶம்,

அவற்றின் அஜ்ஞாநநிவர்த்யத்வம் முதலான ஸ்வபாவங்களும் 'இமையோர்தலைவா' அடியேன், அதிபதி அடிதொழுது" என்கையாலே ஆத்மாவுக்கு மீஶ்வரனுக்குமுண்டான ஶேஷஶேஷிபாவஸம்பந்தமும், "உயிரளிப்பானென்னின்ற யோனியுமாய்ப்பிறந்தாய்" என்றும், "மயர்வற மதிநலமருளினன்" என்றும், அநேகாவதாரங்களைப்பண்ணி ரக்ஷிக்கும்படியையும்,ஸம்ஸாரஹேதுவான அஜ்ஞாநத்தைப்போக்கிஉஜ்ஜீவநஹேதுவான ஜ்ஞாநபக்திகளைத் தன்க்ருபையாலே தந்தபடியையும்சொல்லுகையாலே ஈஶ்வரனுடைய ரக்ஷணக்ரமமும், "உயர்வறஉயர்நலம், துயரறுசுடரடி,இமையோர், அயர்வருமமரர்கள்" என்று, குணவிக்ரஹ விபூதிகளும், அந்தஸூரிகளை முன்னிடுகையாலே, ததீயாபிமாநமும், 'நின்றுகேட்டருளாய்' "தொழுதெழென்மனனே" என்று, நெஞ்சுபோலேபவ்யனை ஈஶ்வரனும் அப்படிபவ்யரானுரும் உபதேஶவிஷயமென்றும், "நலமருளினன்" என்று, பக்தியைத்தந்தானென்கையாலே அந்யாபதேஶத்துக்குஹேதுவான பக்தியும் முதலானவர்த்தங்களும், ஸங்க்ரஹேண சொல்லப்பட்டனவென்கை. (அந்யாபதேஶஹேத்வாதிகளும்) என்றவிடத்தில், ஆதிஶப்தத்தாலே, மற்றும்வேதாந்ததாத்பர்யங்களான அர்த்தங்கள் பலவுமிவற்றில் ஸங்க்ரஹீதங்களென்னுமிடமும் காட்டப்பட்டது. *

வ்யா. (௬௪) அவிக்நபரிஸமாப்தி ப்ரசயகமநார்த்தமாக ப்ரபந்தாரம்பத்திலே ஆசரிக்கப்படும் ஆசீர்நமஸ்க்ரியா வஸ்துநிர்த்தேஶங்களாகிறமங்களாசாரங்களிதிலுமுண்டோ ? என்னுமாகாங்க்ஷயிலே அருளிச்செய்கிறார். (அடிதொழுது) இத்யாதி, அதாவது:— 'துயரறுசுடரடி' என்கையாலே வஸ்துநிர்த்தேஶமும், 'தொழுது' என்கையாலே

சூ. நமஸ்காராசீஸ்ஸுக்களும் முண்டு.

மூ—(௬௫) ஸாதுஸநம் நண்ணுமயர்வறமாஸறுக்கும் தெருள்கொள்
ளப் பத்தராவரடிமையற

நமஸ்கார - நமஸ்காரம், ஆசீஸ்ஸுக்களும்-ஆசீரூபமங்களமும், உண்டு-இருக்கின்றன.

(அ) ஸாதுசநம் - ஸாதுஸநத்தைநலியுங் கஞ்சனைச்சாதிக்கைக்குப்போல, நண்ணு - நண்ணுவசுரர் நலிவெய்தும்படி (யவதரிக்கையாலும்), மயர்வற - அஜ்ஞாநமறும்படியும் மதிநலமுண்டாம்படியும் அவனவதரிக்குமாப்போலே, மாசறுக்கும் - உள்ளத்துமாசறுக்கு மதாகையாலும், தெருள்கொள்ள - ஜ்ஞாநோத்பாதகமாகச் சொன்னதாகையாலும், பத்தராவர் - பத்தராவர் துவளின்றியே யென்று பக்திவர்த்தகமாகையாலும், அடிமையற-உனக்கடிமையறக்கொண்டாயென்று அறவடிமைகொண்டாப்போலே,

நமஸ்காரமும், 'எழு' என்கையாலே ஆசீஸ்ஸுமுண்டென்றபடி. இப்படிநாமொரு ப்ரபந்தம் பண்ணவேணுமென்று கருதியிருந்து இவர் செய்ததன்றிக்கே, நிரம்பினவேரி நெளிக்குமாப்போலே நிமிகிற வாய்க்கரையை மிடைந்துபுறப்பட்ட சொற்கள் இவர்பாசுரத்தாலே லோகத்தைத் திருத்தக்கோலுகிற ஸர்வேஸ்வரன் நினைவாலே ஸர்வலக்ஷணோபேதமாய்த்தலைக்கட்டின ப்ரபந்தமாகையாலே, இம்மங்களாசாரங்களும் கோல்விழுக்காட்டாலே பலித்தனவித்தனையாகையாலேயாயிற்று 'அடிதொழுதெழு' என்றதிலே இவையும்பண்ணப்பட்டன வென்னுதே உண்டென்றுவிட்டது. *

வ்யா. (௬௫) இனிமேலிப்பிரபந்தம் பத்துப் பத்தாகவவதரித்ததின் ப்ரயோஜநத்தை ஸத்ருஷ்டாந்தமாக அருளிச்செய்கிறார். (சாதுசனம்) என்றுதுடங்கி அதாவது :— (௧) "சாதுசனத்தை நலியும் கஞ்சனைச்சாதிப்பதற்கு" "பரித்ராணாய" இத்யாதிப்படியே, ஸாதுபரித்ராண துஷ்க்ருத்விநாஸார்த்தமாகவவனவதரித்தாப்போலே இதுவும், (௨)"நண்ணுவசுரர்நலிவெய்த நல்லவமரர் பொலிவெய்த" என்றுபகவத்ப்ரதிபக்ஷபூதரான வாஸுரப்ரக்ருதிகள் மண்ணுண்ணவும் பகவத்பக்திபரரான தேவப்ரக்ருதிகள்வாழவுமவதரித்ததென்றும் "மயர்வறமதிநலமருளிநன்" என்று, அவநஜ்ஞாநத்தைப்போக்கி,ஜ்ஞாநபக்திகளைக் கொடுக்குமாப்போலே, இதுவும் (௩) "ஒலிபுகழாயிரத்திப்பத்துள்ளத்துமாசறுக்கும்" என்று, மனதுக்கு மாசான அஜ்ஞாநத்தைப்போக்கி, (௪) "தெருள்தொள்ளச் சொன்ன ஓராயிரம்" என்றும், (௫) "தூயவாயிரத்திப்பத்தால் பத்தராவர்" என்றும், சொல்லுகிறபடியே,ஜ்ஞானபக்திகளைக் கொடுக்குமென்றும்,(௬)"அடிமையறக்கொண்டாய்" என்று

(௧) தி-வா. ௩. ௫. ௫. (௨) ௧0. ௭. ௫.(௩) ௫. ௨. ௧௧. (௪) ௨. ௧0. ௧௧. (௫) ௫. ௪. ௧௧. (௬) ௪. ௬. ௬.

மூ. உரியநோய்க ளறுக்குமுடைந்தேற்றரும் வானின்தாளின்கீழ் அடிக்கீழின்பக்கதிபயக்கு மூடுபுக்கு மூவுலகுமுருகாநிற்பரென்னும் ஸாம்யத்தாலேவாச்யன்

உரிய - உரியதொண்டராக்குமதாகையாலும், நோய்களறுக்கும் - நோய்களறுக்கும் மருந்தாமாப்போலே, உடைந்து - உடைந்து நோய்களையோடுவிக்கையாலும், ஏற்றரும் - ஏற்றரும்வைகுந்தத்தை யருளுமாப்போலே, வானின் - வானின்மீதேற்றியருளுகையாலும், தாளின்கீழ்-தன்தாளின்கீழ் சேர்த்துசேமம் செய்யுமாப்போலே, அடிக்கீழ் - அருளியடிக்கீழிருத்துகையாலும், இன்பக்கதி - அவனாஶ்ரிதர்க்கு இன்பகதிசெய்யுமாப்போலே, இன்பம்பயக்கும் - எங்ஙனேசொல்லிலுமின்பம் பயக்குமதாகையாலும், ஊடுபுக்கு - ஊடுபுக்கெனதாவியை உருக்குமாப்போலே, மூவுலகும் - மூவுலகுமுருகும்படியானதாகையாலும், உருகாநிற்பர்-ஊற்றின்கண் நுண்மலற்போலுருகாநிற்பராகையாலும், என்னும் ஸாம்யத்தாலே - ஏவம்விதத்தாலே, வாச்யன் - வாச்யனனெம்பெருமானுடைய,

தனக்கநந்யார்ஹ ஶேஷமாகவவனங்கீகரிக்குமாப்போலே இதுவும், (க) "உரியதொண்டராக்குமுலக முண்டார்க்கே" என்று, ததநந்யார்ஹஶேஷமாக்கு மென்றும், (உ) "நோய்களறுக்கும்மருந்தே" என்கிறபடியே, அவன்ஸம்ஸார வ்யாதிபேஷஜமாமாப்போலே இதுவும், (௩) "உடைந்துநோய்களை ஓடுவிக்கும்" என்று, ஸாம்ஸாரிகஸகலதுரிதங்களையும் உருமாய்ந்துபோம்படி பண்ணுமென்றும் (ச) "ஏற்றரும்வைகுந்தத்தையருளும் நமக்கு" என்று, ஸ்வயத்நத்தால், ப்ராபிக்க வரிதான பரமபதத்தை அவன் கொடுக்குமாப்போலே இதுவும் (ரு) "வானின்மீதேற்றியருள்செய்து" என்று, பரமபதப்ராப்தியைப்பண்ணுவிக்குமென்றும், (சூ) "தன்தாளின்கீழ்சேர்த்து" என்கிறபடியே, அவன்பாதோபதாநம்போலத் திருவடிகளின்கீழ்சேர்த்துக்கொள்ளுமாப்போலே இதுவும், (எ) "அருளியடிக்கீழிருத்தும்" என்று, அவன்திருவடிகளின்கீழே சேர்த்துவைக்குமென்றும், (அ) "இன்பக்கதிசெய்யும்", என்கிறபடியே, அவன்தன்னோடங்வயித்தார்க்குத் தன்னுடைய அநுபவமாகிற நிரதிஶயாநந்தயுக்தமானப்ராப்யத்தைக் கொடுக்குமாப்போலே' இதுவும், (கூ) "எங்ஙனே சொல்லிலு மின்பம்பயக்கும்" என்று, ஸ்வாங்கிதசேதநர்க்குபகவதநுபவாநந்தத்தையுண்டாக்குமென்றும், (க0) "ஊடுபுக்கெனதாவியையுருக்கியுண்டிடுகின்ற நின்தன்னை" என்கிறபடியே அவன்தன்னை யநுபவிக்கவிழிந்தாரைத்ரவத்ரவ்யமாம்படியுருக்குமாப்போலே இதுவும், (கக) "ஒன்பதோடொன்றுக்கு மூவுலகுமுருகும்

(க) தி-வா. சூ. கூ. கக. (உ) கூ. ௩. ௩. (௩) க. எ. கக. (ச) ஷ. எ. சூ. க0. (ரு) அ. ச. கக. (சூ) எ. ரு. க0. (எ) அ. அ. கக. (அ) எ. ரு. கக. (கூ) எ. கூ. கக. (க0) ரு. க0. க0. (கக) கூ. ரு. கக.

மூ. பத்தினுயதோற்றம்போலே தோற்றங்களாயிரத்தின்பத்து
ப்பத்தான விதினுவிர்ப்பாவம்.

மூ—(௬௬). ஐந்தினுடொன்பதோ டொருபத்தென்னுமவைபோலே
நூறேசொன்ன பத்துநூறு

பத்தினுய - பத்துவிதமான, தோற்றம்போலே - அவதாரங்கள்போலே, தோற்றங்களாயிரத்தின் - அவதாரவிசேஷங்களையுடைய வாயிரமென்கிற, பத்துப்பத்தான - அநேகவிதமான, இதின் - இந்தப்ரபந்தத்தினுடைய, ஆவிர்ப்பாவம் - அவதாரம்.

(அ) ஐந்தினுடு - ஐந்தினுடைந்தும்வல்லாரென்கிறது, ஒன்பதோடு - இவையொன்பதோடொன்றுக்குமென்கிறது, ஒருபத்து - இவையுமொருபத்தும்வல்லார், என்னுமவைபோலே - என்கிறவைபோலே, நூறேசொன்ன - நூறேசொன்னவென்ன, பத்து - பத்தென்ன, நூறு - நூறென்ன,

என்றும், (க) "ஊற்றின்கண் நுண்மணற்போலுருகாநிற்பர்நீராய்" என்றுஞ் சொல்லுகிறபடியே, தன்னையநுபவிக்கவிழிந்தாரைத்ரவத்ரவ்யமாக்குமென்றுமிப்படியவனுடு ஸாம்யத்தை யுடைத்தாகையாலே வாச்யனுன ஸர்வேச்வரனுடைய (உ) "பத்தினுயதோற்றம்" என்கிற, பத்தவதாரம்போலே, (௩) "தோற்றங்களாயிரம்" என்கிற இதினுடைய பத்துப்பத்தான ஆவிர்ப்பாவமென்கை. இத்தால், வாச்யனுன வீச்வரனுடு பலபடியாலும் ஸாம்யத்தையுடைத்தாகையாலே, அவன்தான் லோகரக்ஷணர்த்தமாக பத்தவதாரமாயவதரித்தாப்போலே, இதுவும், லோகரக்ஷணர்த்தமாக பத்துப்பத்தாக வவதரித்ததென்றதாயிற்று. *

வ்யா. (௬௬) இனியிப்பத்துக்களையும் இவற்றின் ஸமுதாயமான ப்ரபந்தத்தையும், ஆழ்வார்ச்லாகித்துப் பேசினபாசுரங்களில் ஸாபிப்ராயதையை ஸத்ருஷ்டாந்தமாக வருளிச்செய்கிருர் (ஐந்தினுடு) என்று தொடங்கி அதாவது:— முன்னிலைந்து பாட்டுக்கொருகருத்தும், பின்னிலைந்துபாட்டுக்கொருகருத்துமாகையிலே, (௪) "ஐந்துனுடைந்தும்வல்லார்" என்றும், ஒன்பது பாட்டுக்கொருகருத்தும், ஒருபாட்டுக்கொருகருத்துமாகையாலே (௫) "ஒன்பதோடொன்றுக்கும்" என்றும், பத்துப்பாட்டுக்கும் சேரஒருகருத்தாகையாலே (௬) "பாடலோராயிரத்துளிவையுமொருபத்து" என்றும், சொன்னவைபோலே, (எ) "நூறேசொன்னவோராயிரம்" என்று, கிழி கிழியாகக்கொடுப்பாரைப்போலே நூறுநூருகச்சொன்னவாயிரமென்றும், (அ) "பத்துநாற்றுளிப்பத்து" என்றும், (௯) "பத்துநூறு" என்றும், இப்படி,

(க) தி - வா. ௬. அ. ௧௧. (உ) திருச்சந்த - வி. எக. (௩) தி-வா. ௬. அ. ௧௧. (௪) ௧௦. உ. ௧௧. (௫) ௯. ௧௧. (௬) ௩. ௪. ௧௧. (எ) ௯. ௪. ௧௧. (அ) ௬. எ. ௧௧. (௯)

மூ. ஓராயிரமென்றதும் ஸாபிப்ராயம்.

மூ—(௬எ) பாட்டுக்குக்ரியையும் பத்துக்குக்கருத்தும்போலே நூற்று க்குபதேஶப்பத்து.

மூ—(௬அ) பகவத் பக்தபரங்கள்

ஓராயிரம் - ஓராயிரமென்ன, என்றதும் - என்கிற விவைகளும், ஸாபிப் ராயம் - அபிப்ராயவிஶேஷத்தோடு கூடினது.

(அ) பாட்டுக்கு - பாட்டுக்களுக்கு, க்ரியையும் - க்ரியைகளும், பத்துக்கு - தஶகத்துக்கு, கருத்தும்போலே - தாத்பர்யமும்போலே, நூற்றுக்கு - நூறுபாட்டுக்களுக்கும், உபதேஶப்பத்து - பரோபதேஶ பரமான திருவாய்மொழி ப்ரதாநம்.

(அ) பகவத்பக்தபரங்கள் - பகவான்பாகவதர் இவர்கள்விஷயங் களான திருவாய்மொழிகள்,

பத்துக்களைப்பிரித்துச்சொன்னதும், (க) "தெரியச்சொன்னவோராயி ரம்" "மிக்கவோராயிரம்" (உ) "அவாவிலந்தாதிகளாலிவை யாயிர மும்" என்று, ஆயிரத்தையுஞ் சேரச்சொன்னதும் பத்துக்கள்தோறும் வெவ்வேறேகருத்தாயும், ஆயிரத்துக்கும் சேர ஒருகருத்தாயுமிருக்கும் படியை நினைத்தாகையாலே ஸாபிப்ராயமென்கை. *

வ்யா. (௬எ) இனிபத்துக்கள்தோறும் உபதேஶபரமான ஒரொரு திருவாய்மொழி ப்ரதாநமாய், அவ்வோபத்துகளுக்கவ்வோ திருவாய் மொழியிலே நோக்காயிருக்கும்படியை ஸத்ருஷ்டாந்தமாக வருளிச்செ ய்கிறார். (பாட்டுக்குக்ரியையும்) இத்யாதி, அதாவது:— பாட்டானல் க்ரியையோடே தலைக்கட்டவேண்டுகையாலே, பாட்டுக்கள்தோறும் க்ரி யாபதம் ப்ரதாநமாயிருக்குமாப்போலவும், ஒரொருதிருவாய்மொழிக்கு பரத்வம், பஜநீயதை, ஸௌலப்யம், அபராதஸஹத்வம் என்றுப்போ லே, தனித்தனியே கருத்துக்களாகையாலே பத்துப்பாட்டுக்குக்கருத் தான நிதாநம்சொல்லும்பாட்டு ப்ரதாநமாயிருக்குமாப்போலவும், நூறு பாட்டுக்குபரோபதேஶபரமான பத்துப்பாட்டு ப்ரதாநமாயிருக்குமெ ன்கை. இத்தால், பாட்டுக்குக்ரியையிலும், பத்துப்பாட்டுக்கு நிதாநம் சொல்லும்பாட்டிலும் தாத்பர்யமாயிருக்குமோ பாதி நூறுபாட்டுக்கும் பரோபதேஶபரமான பத்துப்பாட்டிலே தாத்பர்யமாயிருக்கு மென்ற தாயிற்று.

வ்யா. (௬அ) (பிணங்கியமரர்பிதற்றும்) என்கிறபடியே, பேரள வுடையரான நித்யஸூரிகள், ஸ்வஸ்வாநுபூதகுணதாரதம்யங்களைச்சொ ல்லி ஸரஸவிவாத கோலாஹலம்பண்ணும்படியிருக்கிறவவனுடையபர த்வ ஸௌலப்யப்ரயுக்தமான குணவிஶேஷங்களைத்தனித்துத்தம்மால்

(க) தி-வா. ௬. ௯. ௧௧. (உ) ௧0. ௧0. ௧௧.

௫. ஆஶ்ரயணவிதிஶேஷங்கள்.

௫—(௬௯) பரத்வ காரணத்வ வ்யாபகத்வ நியந்த்ருத்வ காருணிகத்வ
ஶரண்யத்வ ஶக்தத்வ ஸத்யகாமத்வ ஆபத்ஸகத்வ

ஆஶ்ரயணவிதிஶேஷங்கள் - ஆஶ்ரயணவிதிக்குஶேஷங்களாயிருக்கும்.

(அ) பரத்வ - ஸர்வஸ்மாத்பரத்வம், காரணத்வ - அகிலஜெகத்காரணத்வம், வ்யாபகத்வ-நிகிலஜெகத் வ்யாபகனாயிருக்கை, நியந்த்ருத்வ - ஸர்வநியந்த்ருத்வம், காருணிகத்வ-தயாவத்வம், ஶரண்யத்வ-ஶரணவரணார்ஹனாயிருக்கை. ஶக்தத்வ - ஸர்வஶக்தித்வம், ஸத்யகாமத்வ - நித்யமாகக்கல்பித்தபத்நீபரிஜநாதிகளையுடையனாகை, ஆபத்ஸகத்வ - ப்ரளயாத்யா பத்துக்களிலே யுதவுகை,

---

புஜித்துத்தலைக்கட்ட வொண்ணுமையாலே, "அடியார்கள்குழாங்களையுடன்கூடுவதென்றுகொலோ" என்று, கூட்டரானரஸஜ்ஞரைத்தேடினவளவில் கிடையாதபடி தூரஸ்தராக ஸந்நிஹிதரான ஸம்ஸாரிகளுடைய அநாத்மகுணம்பாராதே, பகவத்குணங்களிலே மூட்டித்திருத்திக்கூட்டிக்கொள்ளுகை தேட்டமாய் உபதேஶத்திலே ஒருப்படுகையாலே அதிலே நோக்காகவேணுமிறே. இவற்றில் பகவத்பக்தபரங்களாய் வருமவற்றுக்கு தாத்பர்யமேதென்னுமாகாங்க்ஷையிலே யருளிச்செய்கிறார். (பகவத்பக்தபரங்களித்யாதி) அதாவது:— 'பயிலும் சுடரொளி முதலான பாகவதபரங்களான திருவாய்மொழிகள் "జ్యోతిష్టోమేన స్వర్గకామో యజేత" "ஜ்யோதிஷ்டோமேநஸ்வர்க்ககாமோயஜேத" என்றவிதிக்கு, ப்ரயாஜாதிவிதிகள் ஶேஷமாய், அவற்றினுடைய அநுஷ்டாநத்தோடே அதுபலபர்யந்தமாய்த் தலைக்கட்டுமாப்போலே "திருநாரணன்தாள்காலம்பெறச்சிந்தித்துய்மினோ" 'நலமந்தமில்லதோர்நாடுபுகுவீர்' 'பலமுந்து சீரில்பணிமினோவாதே' என்றுவிதிக்கிற பகவதாஶ்ரயணம் பாகவதாஶ்ரயணத்தோடொழியத் தலைக்கட்டாமையாலே, பகவதாஶ்ரயணவிதிக்குஶேஷங்களென்கை. அதவா,பரோபதேஶபரமானவிதில், பகவத்குணங்களையும், ஜீவகுணங்களையும் ப்ரதிபாதிக்கிறவற்றுக்கு விநியோகமேதென்னவருளிச் செய்கிறார். (பகவத்பக்தபரங்களித்யாதி) அதாவது:— பகவத் பரங்களாயும் தத்பக்தரான ஜீவபரங்களாயும், அவ்வவகுணங்களை ப்ரதிபாதிக்கிறவை ஆஶ்ரயணவிஷயத்தையும், ஆஶ்ரயணகர்த்தாவையுஞ்சொல்லுகிறதாகையாலே ஆஶ்ரயணவிதிக்குஶேஷங்களித்தனையென்கை. *

வ்யா. (௬௯) இப்படிப்பத்துத்தோறுமுள்ள வர்த்தங்களை பரோபதேஶத்துக்குருப்பாக ஒருங்கவிட்டு விஸ்தரேணமேல்யோஜிப்பதாகத் திருவுள்ளம்பற்றி, பரத்வாதிகுணவிஶிஷ்டனானஸர்வேஶ்வரன் தமக்குப்பிறப்பித்த தஶாவிஶேஷங்களைப் பத்துத்தோறும் வெளியிடுகிறாரென்றுஸங்க்ரஹேணவாக்யார்த்தமருளிச்செய்கிறார். (பரத்வேத்யாதிசூர்ணையாலே) அதாவது :— ஸர்வஸ்மாத்பரனாய் அந்த பரத்வம்

மூ. ஆர்த்தி ஹரத்வவிசிஷ்டன் மயர்வையறுக்க தத்வவேதந மறப்பற்றும் ஜ்ஞப்திபலமுக்தி தலேசேரநிஷ்கர்ஷித்துமோக்ஷபலவ்த்தி செய்யவர்த்தித்து புருஷார்த்தபலாந்யருசி யொழிந்து விரக்திபலராகம்

ஆர்த்திஹரத்வ - ஆஶ்ரிதர்க்கு ஸம்ஸாரதாபார்த்தியை. ஹரிக்கை, (இவைகளோடே) விசிஷ்டன் - கூடினவனான வீஶ்வரன், மயர்வையறுக்க - அஜ்ஞானத்தைப்போக்க, தத்வ - பரதத்வத்தினுடைய, வேதந - அறிவுக்கு, மறப்பற்று - மறப்புநிவ்ருத்தமாய், ஜ்ஞப்திபல - ஜ்ஞாநபலமான, முக்தி - மோக்ஷம், தலேசேர - கைபுகுர, நிஷ்கர்ஷித்து - நிஷ்கர்ஷம்பண்ணி, மோக்ஷபல - மோக்ஷத்துக்குப்பலமான, வ்ருத்தி - கைங்கர்யத்தை, செய்யவர்த்தித்து - பண்ணவேணுமென்று யாசித்து, புருஷார்த்தபலாந்ய - வேறுபுருஷார்த்தம், வேறுபலம் (இவைகளில்) ருசியொழிந்து - ருசியெல்லாம்நிவ்ருத்தமாய், விரக்தி - வைராக்யத்துக்கு, பல - பலமான, ராகம் - ப்ரேமம்,

ப்ரகாஶமாம்படி ஸர்வகாரணபூதனாய், லோகத்தில்கார்யகாரணங்கள் போலன்றிக்கே உபாதாநகாரணமும் தானேயாகையாலே (கார்யபூத ஸமஸ்தவஸ்த்துக்களுக்கும் வ்யாபகனாய், அந்த வ்யாப்திதான் ஆகாஶ வ்யாப்திபோலன்றிக்கே அந்தராத்மதயாவாகையாலே ஸர்வ நியந்தாவாய், அந்த பரத்வாதிகளைக்கண்டு வெருவவேண்டாதபடி பரமகாருணிகனாய், இப்படிக்ருபாவானாகையாலே ஸர்வஶரண்யனாய்,ஶரண்யக்ருத்யமான அநிஷ்டநிவ்ருத்தீஷ்டப்ராப்திகரணத்துக்கீடாம்படி ஸர்வஶக்தியுக்தனாய், அந்த ஶக்தியாலே நித்யமாகக்கல்பித்த பத்நீபரிஜநாதிகளையுடையனாகையாலேஸத்யகாமனாய், அந்தபோகபரனாயிருந்துவிடாதே பரளயாத்யாபத்துக்களிலேயுதவி லீலாவிபூதியை ரக்ஷிக்கையாலே ஆபத்ஸகனாய், இப்படி ஆபத்ஸகனாகையாலே ஸம்ஸாரதாபார்த்தரான ஆஶ்ரிதர்க்கார்த்திஹரனாய், இப்படி பத்துப்பத்தாலும் ப்ரதிபாதிதமான பத்துகுணத்தோடும் கூடியிருக்கிறஸர்வேஶ்வரன் “மயர்வறமதிநலமருளினன்” என்கிறபடியே, பக்திரூபாபந்நஜ்ஞாந ப்ரதாநமுகேந அஜ்ஞாநத்தை ஸவாஸநமாகப்போக்க, அத்தாலே, தத்விஷயஜ்ஞாநமாகிற தத்வவேதநத்தில் (க)“மறப்பனோவினியானென்மணியை” என்கிறபடியே விஸ்ம்ருதியற்று அந்த ஜ்ஞாநபலமான மோக்ஷத்தை “நின்செம்மாபாதபற்புத்தலேசேர்த்து” வன்று, ஸ்வரூபாநுரூபமாக நிஷ்கர்ஷித்து அந்தமோக்ஷத்துக்குபலமான கைங்கர்யரூப வ்ருத்யை (உ) “வழுவிலாவடிமைசெய்யவேண்டுநாம்” என்றர்த்தித்து, அந்தபுருஷார்த்தத்துக்குபலம் அந்யருசிநிவ்ருத்தியாகையாலேதத்பலமாக “ஐங்கருவிகண்டவின்பம்சித்தின்பமொழிந்தேன்” என்று அந்யபுருஷார்த்தங்களில் ருசியைத்தவிர்ந்து அந்தஇதரவிஷயவிரக்திக்கு பலமானபகவத்விஷயராகம்

(க) தி-வா. க. க௦. க. (உ) ந. ந. க.

கழியமிக்கு ப்ரேமபலோபாயத்தேபுகுந்து ஸாதநபலோப
காரக்கைம்மாறின்றி க்ருதஜ்ஞதாபலப்ரதிக்ருதமானத்தை
யுணர்ந்து ஆத்மதர்ஶநபலப்ராப்தி.

கழிய - மிகவும், மிக்கு - மிகுந்து, ப்ரேமபல-ப்ரேமபலமாயிருந்துள்ள, உபாயத்தே - உபாயத்திலே, புகுந்து - கைவைத்து, ஸாதந - ஸாதநத்துக்கு, பல - பலமாயிருக்கிற, உபகார-உபகாரத்துக்கு, கைம்மாறின்றி- ப்ரத்யுபகாரமில்லாமை, க்ருதஜ்ஞதா-செய்தஉபகாரத்தையறிந்ததுக்கு, பல - பலமான, ப்ரதிக்ருதமானத்தை - ப்ரத்யுபகாரமாம்படியானத்தை, உணர்ந்து - அறிந்து, ஆத்ம-ஆத்மாவினுடைய, தர்ஶந - ஸாக்ஷாத்காரத்தை, பல - பலமாகவுடைய, ப்ராப்தி - பகவத்ப்ராப்தியை,

(க) "கழியமிக்கதோர்காதல்" என்னும்படி, அதிஶயித்து அந்தநிரதிஶயப்ரேமபலமான விளம்பாக்ஷமத்வத்தால் வந்தத்வரையாலே (உ) "அலர்மேல்மங்கையுறைமார்பா உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேன்" என்று, உபாயவரணம்பண்ணி அந்தஸாதநபலமான வுபகாரத்துக்கு ப்ரத்யுபகாரமாக (௩) "உதவிக்கைம்மாறென்னுயிர்" என்று, ஆத்மஸமர்ப்பணம் பண்ணத்தேடி அவ்வாத்மவஸ்து ததீயமென்றறிகையாலே (௪) "அதுவுமற்றங்கவன்றன்னது எதுவுமொன்று மில்லைசெய்வதிங்குமங்கே" என்று, ப்ரத்யுபகாரம் காணமல் தடுமாறி அந்தக்ருஜ்ஞதைக்கு பலமான ப்ரத்யுபகாரமாக (௫) "தோள்களையாரத்தழுவி "என்னுயிரையறவிலைசெய்தனன்" என்று, ப்ரீதியாலேகலங்கி ஸமர்ப்பித்தவாத்ம வஸ்துவை(௬)"நின்ற வொன்றையுணர்ந்தேன்" என்று, தேஹாதிகளில் விலக்ஷணமாயவனுக்கு ப்ரகாரதயாஶேஷமாய்க்கொண்டு அநந்யார்ஹமாயிருக்கு மென்றறிந்து அந்தவாத்மதர்ஶநபலமான பகவத்ப்ராப்தியை (௭) "மரணமானல் வைகுந்தம்கொடுக்கும்" என்கிறபடியே, ஶரீராவஸாநத்திலே பண்ணித்தருகிறேமென்றவன்நாளிட்டுக்கொடுக்கப்பெற்று இப்படி ப்ராப்திகாலமணித்தானதுக்குபலம் அர்ச்சிராதி மார்க்கத்தாலே தேஶவிஶேஷத் தேறப்போவதாகையாலே அவ்வர்ச்சிராதிகதிக்கு (௮) "காளமேகத்தையன்றி மற்றொன்றிலம்கதி" என்றும், (௯) "ஆத்தன் தாமரையடியன்றிமற்றிலமரணே" என்றும், பரமாப்தனானவன் தன்னையே துணையாகக்கூட்டின தம்முடைய பேற்றைப்பிறரறிந்து வாழும்படி முதற்பத்தே துடங்கி பத்துப்பத்தாலும் ப்ரகாசிப்பித்தருளுகிறாரென்றபடி. இத்தால் பரத்வாதிகுணவிசிஷ்டனான வீஶ்வரன், தமக்குப் பண்ணிக்கொடுத்தபேறுகளைப் பலருமறிந்து வாழவேணுமென்று பத்துப்பத்தாலும் ப்ரகாசிப்பிக்கிறாரென்று பத்துநிகமநத்துக்கு வாக்யார்த்தம் சொல்லப்பட்டதாயிற்று. இதில் முதல்பத்தாலே, ஸர்வஸ்மாத்பரனான ஸர்வேஶ்வரன் தன்னுடைய நிர்ஹேதுகக்ருபையாலே அஜ்ஞாநத்

(க) தி - வா. ௫. ௫. ௰. (உ) ஷை ௬. ௰. ௰. (௩) ஷை. ௭. ௯. ௰. (௪) ஷை. (௫) (௬) தி - வா. ௮. ௮. ௪. (௭) ஷை. ௯. ௰. ௫. (௮) ஷை. ௰. ௰. ௧. (௯) ஷை. ௬.

ரூ. மரணுவதியாகப்பெற்று காலாஸக்தி பலகதிக்குத் துணை கூட்டினதம்பேற்றைப்பிறரறியப் பத்துதோறும் வெளியிடுகிறுர்:—

இத்யாசார்யஹ்ருதயே த்ருதிய ப்ரகரணம் ஸமாப்தம்.

அழகிய மணவாளப்பெருமாள் நாயனுர் திருவடிகளேசரணம்.

மரணுவதியாகப்பெற்று - மரணுந்தரபாவியாகப்பெற்று, காலாஸக்தி - பகவத்ப்ராப்திகாலமணித்தானதுக்கு, பல - பலமாயிருக்கிற, கதிக்கு- அர்ச்சிராதிகதிக்கு, துணைகூட்டின - எம்பெருமானைத் துணையாகக் கூட்டிக்கொண்ட, தம்பேற்றை - தம்முடையபலத்தை, பிறறறிய - அயலாருமறியும்படி, பத்துத்தோறும் - எல்லாப்பத்திலும், வெளியிடுகிறுர் - ப்ரகாசிப்பிக்கிறுர்:—

தைப்போக்கி பக்திரூபாபந்நஜ்ஞாநத்தைக்கொடுத்து, இன்னுமிவர்நம்மை விஸ்மரிக்கக்கூடுமென்று தம்பக்கல் அவனுக்குண்டான ஸ்நேஹத்தாலேவிடாதே தம்முடைய ஹ்ருதயத்திலே நிரந்தரவாஸம்பண்ண, அத்தாலே ஸம்ஶய விபர்யய விஸ்ம்ருதிரஹிதமான தத்வஜ்ஞாநத்தையுடையரான ஆழ்வார், அவனுடைய குணங்களை தம்முடைய திருவுள்ளத்தோடே யநுபவித்து அவ்விஷயம் தனியநுபவிக்க வொண்ணுமையாலே ஸம்ஸாரிகளையும்பார்த்து, த்யாஜ்யமானஸம்ஸாரத்தின் தோஷத்தையும், தத்யாகப்ரகாரத்தையும், உபாதேயமான பகவத்விஷயத்தின் குணத்தையும், தத்பஜநப்ரகாரத்தையும், பஜநாலம்பநமந்த்ரத்தையுமுபதேசித்து, பஜநீயனுனவவனுடைய, ஸௌலப்யம், அபராதஸஹத்வம், ஶீலவத்தை, ஸ்வாராததை, ஆஶ்ரயணரஸ்யதை, ஆர்ஜவம், ஸாத்ம்யபோக ப்ரதத்வம், பரபக்திபாகணைகளுக் கொக்கமுகங்காட்டும் ஸாம்யமாகிறகுணங்களை தர்சிப்பியாநின்றுகொண்டு அவ்வழியாலே பஜநத்தினுடைய ஸுகரத்வ ரஸ்யதைகளையும் பஜிக்கவே ஸர்வபலங்களும் ஸித்திக்குமென்னுமத்தையும், பஜநோபக்ரமத்திலே பஜந விரோதிகளடைய நசிக்குமென்னுமத்தையுமறிவித்து, ஆனபின்பு ஸ்ரீகீதையிலவனருளிச்செய்த பக்திமார்க்கத்திலேநின்று தேவதாந்தரங்கள்பக்கல் பரத்வஶங்காநிவ்ருத்தி பூர்வகமாக, அவன்விஷயமானஜ்ஞாநத்தைக்கொண்டு அவன்பக்கலிலே அநந்யப்ரயோஜநபக்தியைப் பண்ணுங்கோளென்று தமக்கவன் மயர்வறமதிநல மருளினுப்போலே தாமுமிவர்களுக்கு அஜ்ஞாநநிவ்ருத்திபூர்வகமாகஜ்ஞாநபக்திகளை யுபதேஶத்தாலே யுண்டாக்கிபஜநத்திலே மூட்டுகிறுரென்கிறுர்.

இத்யாசார்யஹ்ருதயவ்யாக்யாநே

த்ருதியப்ரகரணம் ஸமாப்தம்.

பெரியஜீய்யர் திருவடிகளேசரணம்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஆசார்யஹ்ருதயவ்யாக்யாநம்.

சதுர்த்தப்ரகரணம்.

மூ—(க) பரபரனாய் நின்றவளவேழ்வைப்பாமவனையுளனும்பர்வானவ ரதிபதிமயர்வறமன்னி மனம்வைக்கத்திருத்தி

(அ) பரபரனாய் - முழுதுண்டபரபரனென்றும், நின்ற - ஆய்நின்ற பரனென்றும், வளவேழ் - வளவேழுலகின்முதலாய வானோரிறையென்றும், வைப்பாம் - வைப்பாம்மருந்தாமென்றும், அவன் - உயர்ந்துயர்ந்தப்பாலவனென்றும், அவையுள் - அவையுட்டனிமுதலென்றும், உம்பர்வானவவர் - உம்பர்வானவராதியென்றும் சொல்லப்பட்ட, அதிபதி - அயர்வறுமென்று ஸூரிநிர்வாஹகன், மயர்வற - அஜ்ஞாநமெல்லாம்வாஸனையோடே போம்படி, மன்னி - இவர் திருவுள்ளத்திலே வந்துபுகுந்து, மனம்வைக்க - தன்விஷயத்திலே ஹ்ருதயத்தைவைக்கும்படி, திருத்தி - பரிஷ்கரித்து,

வ்யா. (க) (பரபரனாய் நின்ற வளவேழ்வைப்பாமவையுளனும்பர்வானவ ரதிபதி) (க) "வரன்முதலாயவைமுழுதுண்டபரபரன், ஆய்நின்ற பரன் "வளவேழுலகின் முதலாயவானோரிறை" வைப்பாம் மருந்தாம் "நலத்தாலுயர்ந்துயர்ந்தப்பாலவன், அவையுள் தனிமுதல் "உம்பர்வானவராதியஞ்சோதி" "அயர்வறுமமரர்களதிபதி" (அ) என்று, ஸகல ஜகத்ஸர்க்காதி கர்த்ருத்வத்தாலும், உபயவிபூதியோகத்தாலும், உபயவிபூதிநாதத்வத்தாலும் ப்ராப்ய ப்ராபகத்வத்தாலும், அபரிச்சேத்யாநந்தயுக்ததையாலும், ஸர்வஶரீரதயா ஸர்வஶப்தவாச்யத்வத்தாலும், நித்யஸூரிநிர்வாஹகத்வத்தாலும், நித்யாஸங்குசித ஜ்ஞாநரானவர்கள் நித்யாநுபவம் பண்ணாநின்றாலும் பரிச்சேதிக்கவொண்ணாத பெருமையையுடையனாகையாலும் ஸர்வஸ்மாத்பரனானவன் (மயர்வறமன்னி மனம்வைக்கத்திருத்தி) "மயர்வறமதிநலமருளினன்" (கூ) "மயர்வறவென்மனத்தே மன்னினான்" என்று ஸ்வகேவல க்ருபையாலே, * ஜ்ஞாநாநுதய அந்யதாஜ்ஞாந விபரீதஜ்ஞாநரூபமான அஜ்ஞாநத்தை

(க-மு-ல்-அ-ல்) தி - வா. க - ல் - ச-அ + ச-கக + ரு - க + எ - உ + ஷ + கூ-க + க0-கூ + க-க + ஷ + (கூ) எ-சு.

* ஜ்ஞாநாநுதயமாவது - தேஹமே ஆத்மாவென்றிருக்கை. அந்யதாஜ்ஞாநமாவது - தேவதாந்தர ஶேஷமென்றிருக்கை. விபரீத ஜ்ஞாநமாவது, ஸ்வதந்த்ரமாகவும் போக்யமாகவும் நினைத்திருக்கும் கேவலனுடைய நினைவு. கேவலனாவான்:— ஸம்ஸார தாபத்ரயாதிகளால் மிகநலிவுபட்டு, ஶாஸ்த்ரஜந்யஜ்ஞாநவிஶேஷத்தால், தேஹாத்ம விவேகம்பண்ணி, யோகமஹிமையாலே தேஹத்தைவிட்டு பகவச்சேஷபூதனான ஆத்மாவை ஸ்வதந்த்ரனாக நினைத்து "அமுதவெள்ளத்தானாம் சிறப்புவிட்டு" என்கிறபடியே, நிரதிஶயாநந்த யுக்தனான ஸர்வேஶ்வர பர்யந்தம் போகமாட்டாதே அத்யல்பமான ஆத்மாநுபவம் பண்ணிக்கொண்டிருக்குமவன்.

மூ. மறக்குமென்று நல்கிவிடாதேமன்ன அயர்ப்பிலனறுத்தே னென்சொல்லி மறப்பனோவென்னும்படி தத்வஜ்ஞானவர்

மறக்குமென்று - மறக்கப்போகிறாரோவென்று, நல்கி - இவர்பக்கலதிஸ்நேஹத்தைப்பண்ண, விடாதே - ஒருக்காலும்விடாதே, மன்ன-ஸ்தாவர ப்ரதிஷ்டையாயிருக்க, அயர்ப்பிலன் - அஜ்ஞாநத்தையெல்லாம் ஸவாஸநமாகப்போக்கினேன், அறுத்தேன் - மாயப்பிறவியாலுண்டான மயர்வையறுத்தேன், என்சொல்லி - எத்தைச்சொல்லி, மறப்பனோ - மறக்கக்கடவேன், என்னும்படி - என்றிவர்தாமேயருளிச்செய்யும்படி, தத்வஜ்ஞானவர் - தத்வயாதாத்ம்யஜ்ஞானவாழ்வார்,

இவர்க்குவாஸனையோடேபோக்கி, பக்திரூபா பந்நஜ்ஞாநத்தைக் கொடுத்து. இவர் திருவுள்ளத்திலே புகுந்து(க)"சார்ந்தவிருவல்வினைகளும் சரித்து மாயப்பற்றறுத்து தீர்ந்து தன்பால் மனம்வைக்கத் திருத்தி" என்கிறபடியே, பிரிக்கவொண்ணாதபடி இவரோடு பொருந்திக் கிடக்கிற ப்ரபலமான புண்யபாப ரூபகர்மங்களையும், பாஹ்யவிஷய * ருசிவாஸனைகளையும்போக்கி, அயோக்யதாநுஸந்தாநத்தாலே யகன்றவளவிலும், தன்சீலத்தைக்காட்டி இவரைமீட்டு அல்லேனென்றகலாதே தனக்கேதீர்ந்து தன்பக்கலிலே நெஞ்சுவைக்கும்படி தரிசுகிடந்தநிலத்தைச்சைகாலாகத் திருத்துவாரைப்போலே திருத்தி, (மறக்குமென்று நல்கிவிடாதே மன்ன) (உ) "மறக்குமென்று செந்தாமரைக்கண்ணொடு (௩) "நல்கியென்னைவிடான்" (ச) "மறப்பறவென்னுள்ளே மன்னினான்" என்கிறபடியே, இவரின்னமும் நம்மைவிஸ்மரிக்கக்கூடுமென்று நிரதிஶயஸ்நேகத்தைப்பண்ணி, இவரைவிடாதே அழகியதிருக்கண்களாலே குளிரநோக்கிக்கொண்டு ஒருநாளும் மறக்கவொண்ணாதபடி இவர் திருவுள்ளத்திலே ஸ்தாவர ப்ரதிஷ்டையாயிருக்க (அயற்பிலனறுத்தே னென்சொல்லிமறப்பனோவென்னும்படி தத்வஜ்ஞானவர்) (ரு) "பெருநிலங்கிடந்த நல்லடிப்போதயர்ப்பிலன்" தூயவமுதைப்பருகிப்பருகி யென்மாயப்பிறவி மயர்வறுத்தேன்" (சு) "எம்பிரானையென்சொல்லிமறப்பனோ" என்று குணகுணநிரூபணம்பண்ணாதே பூமிப்பரப்பையளந்தபரமபோக்யமான திருவடிகளை யொருக்காலும் விஸ்மரியேன். நிரதிஶயபோக்யனானவனை நிரந்தரமநுபவித்தாச்சர்யமானஜந்மமடியாகவருமஜ்ஞாநத்தைப்போக்க

(க) தி - வா. க-ல் + ரு - கO. (உ) கO. கO. (௩) ஷை. க. (ச) ஷை. கO. (ரு) ௩. கO. (சு) கO. க.

* ருசியாவது:— மற்றொன்றாலும் மீட்கவொண்ணாதபடி ஒன்றிலே செல்லுகிற விருப்பு. + வாஸனையாவது:— முன்புசெய்துபோந்தவற்றிலே மீளவும் மீளுகைக் குறுப்பான ஸம்ஸ்காரம்:—

மூ. சூடரடி எம்பிரானைவிடாது கண்டாய் நீயும்நானும் என்கிற ஸஹ்ருதயாநுபவம் ஸம்ஸாரிகளுக்குமாம்படி வீடுமினென்று த்யாஜ்யோபாதேய

சூடரடி - சூடரடிதொழுதெழு என்றும், எம்பிரானை - எம்பிரானைத்தொழாய் என்றும், விடாது - விடாது துடர் என்றும், கண்டாய் - கண்டாயே நெஞ்சே என்றும், நீயும்நானும் - நீயும்நானுமின்னேர் நிற்கில் மேல்மற்றோர் நோயும்சார்கொடான் என்றும், என்கிற - இப்படி பண்ணப்பட்ட, ஸஹ்ருதயாநுபவம் - மநஸ்ஸோடேகூடின வநுபவம், ஸம்ஸாரிகளுக்குமாம்படி - விஷயாந்தரப்ரவணரான ஸம்ஸாரிகளுக்குமுண்டாம்படி, வீடுமினென்று-வீடுமினென்கிற திருவாய்மொழியாலே, த்யாஜ்ய - விடத்தக்கதாயிருக்கிற, உபாதேய - பரிக்ரஹிக்கத்தக்கதாயிருக்கிற,

ப்பெற்றேன். எனக்குபகாரகனானவனை யெத்தைச்சொல்லி விஸ்மரிப்பதென்னும்படி ஸம்சய விபர்யயவிஸ்ம்ருதிகலசாத தத்வஜ்ஞாநத்தையுடையரானவர் (சுடரடியெம்பிரானைவிடாதுகண்டாய்நீயும் நானுமென்கிறஸஹ்ருதயாநுபவம் ஸம்ஸாரிகளுக்குமாம்படி) (க) "சுடரடி தொழுதெழன்மனனே" "எம்பிரானைத்தொழாய் மடநெஞ்சமே" "நெஞ்சமே நல்லநல்லை" "மலராள்மணவாளனைத் துஞ்சும்போதும்விடாது துடர்கண்டாய்" "கண்டாயே நெஞ்சே கருமங்கள்வாய்க்கின்று" "நீயும் நானு மின்னேர் நிற்கில்மேல் மற்றோர்நோயும்சார்கொடான்நெஞ்சமே சொன்னேன்" (சு) என்று நிரவதிக தேஜோரூபமானவவன்திருவடிகளிலே நித்யகைங்கர்யத்தைப்பண்ணி உஜ்ஜீவிக்கப்பாராய்யென்நெஞ்சே! எனக்கு பவ்யமானநெஞ்சே! நமக்குபகாரகனானவனை தொழப்பாராய் நெஞ்சே! நீசெய்தபடி மிகவும்நன்று. நான் அயோக்யதாநுஸந்தாநத்தாலேயகலும்போதும், ஸ்ரீயஃபதியானவனை விடாதேகிடாய் நெஞ்சே! அவனுடைய நிர்ஹேதுகவிஷயீகாரமிருந்தபடிகண்டாயே, தொழச்சொல்லலாம்படியிருக்கிற நீயும், தொழச்சொல்லுகிறநானும், அயோக்யதாநு ஸந்தானத்தாலே அகலாமலிப்படியே நிற்கப்பெறில் அநாதிகாலார்ஜித கர்மம்விஷய ப்ராவண்யம்,ப்ரயோஜநாந்தரஸ்பர்சத்தை, ஸாதநாந்தரஸங்கம், முதலான துரிதங்களொன்றையும் சேரவிட்டுக்கொடான். நெஞ்சே! உனக்கிப்பரமார்த்தத்தைச் சொன்னேனென்றிப்படி திருவுள்ளத்தைக் குறித்துபதேசித்து, திருஉள்ளமும் தாமும் கூடியநுபவித்தபகவதநுபவம்,தனியேயநுபவிக்கவொண்ணாமையாலும்,(எ) "ఏకస్స్వాదు నభుంజీత" "ஏகஸ்வாதுநபுஞ்ஜீத" என்கிறபடியே, தனியநுபவிக்கவல்லவரல்லாமையாலும், அவனோடுள்ளஸம்பந்தம் ஸர்வஸாதாரணமாகையாலும், பராநர்த்தம்பொறுத பரமக்ருபையாலும், இவ்வநுபவம் ஸம்ஸாரிகளுக்கு மாகவேணுமென்று, ஸம்ஸாரிகளைப்பார்த்து (வீடுமினென்று த்யாஜ்யோபாதேய தோஷகுணபரித்யாக ஸமர்ப்பணக்ரமத்தை ஸாலம்பநமந்த்ரமாக உபதேசித்து) வீடுமின் முற்றத்திலே "வீடு

(௧-மு-சூ-ல்) ௧-ப-ல்+௧-௧+௧௦-௩+௯-௪+௯.+௯-௫+௯-௬ + (௭)

தோஷகுணபரித்யாக ஸமர்ப்பணக்ரமத்தை ஸாலம்பநம
ந்த்ரமாக உபதேசித்து எளிதாகவவதரித்துப்பிழைகளை
ஸஹித்துப்புரையறக்கலந்து அல்பஸந்துஷ்டனாய்

தோஷ - தோஷத்தினுடையவும், குண - பகவத்குணங்களினுடையவும், பரித்யாக - விடுகிறத்தினுடையவும், ஸமர்ப்பண - ஆத்மஸமர்ப்பணத்தினுடையவும், க்ரமத்தை - ரீதிகளை, ஸாலம்பநமந்த்ரமாக - ஆலம்பநமந்த்ரமான திருமந்த்ரத்தோடுகூட, உபதேசித்து - உபதேசம்பண்ணி, எளிதாக - ஸுலபமாம்படி, அவதரித்து - அவதாரம் பண்ணி, பிழைகளை - அபராதங்களை, ஸஹித்து - பொறுத்து, புரையற - ஒட்டையில்லாதபடி, கலந்து - ஸம்ச்லேஷித்து, அல்ப - இவனிட்ட அல்பபதார்த்தங்களாலே, ஸந்துஷ்டனாய் - ஸந்தோஷவிசேஷயுக்தனாய்,

மின் முற்றவும்) என்று த்யாஜ்யஸ்வரூபத்தையும் (௧)"மின்னின்நிலையில மன்னுயிராக்கைகள்" என்று அதினுடைய அல்பாஸ்திரத்வாதிதோஷத்தையும் "நீர்நுமதென்றிவைவேர்முதல்மாய்த்து" என்று, அதினுடைய பரித்யாகக்ரமத்தையும் "வீடுடையான்" என்று உபாதேயமான பகவத்ஸ்வரூபத்தையும், "எல்லையிலந்நலம்" என்று, அவ்வஸ்துவினுடைய குணத்தையும்,"வீடுசெய்மினே""இறைசேர்மின்""இறைபற்று""திண்கழல்சேர்" (௮)என்று, அவ்விஷயத்திலாத்மாவைஸமர்ப்பிக்கும் க்ரமத்தையும், "வண்புகழ்நாரணன்" என்று,அந்தஸமர்ப்பணரூபபஜநத்துக்கு ஆலம்பனமான திருமந்த்ரத்தோடே உபதேசித்து, (எளிதாகவவதரித்து)ஆச்ரயிப்பார் அதீந்த்ரியனென்றறியாதபடி (௯)"பலபிறப்பாயொளிவருமியல்வினன்" என்று, ராமக்ருஷ்ணாத்யவதார முகத்தாலே, அவர்களுக்கு ஸுலபனாய் பிழைகளைஸஹித்து, ஆச்ரயணதசையில் ஸுலபனாய், அபராதங்கண்டவாறே கைவிடாதே (௧௦) "என்பிழைத்தாள் திருவடியின்தகவினுக்கு" என்னும்படி,அபராதஸஹனாய் (புரையறக்கலந்து,) அபராதங்கண்டு, தானிகழாதவளவன்றிக்கே அயோக்யதாநுஸந்தாநத்தாலேதாங்களேயகல்வாரையும், (௧௧) "திசைகளெல்லாம் திருவடியால் தாயோன்தானேரொருவனே"என்று, தன்குணத்தைக்காட்டி யுணுகப்பண்ணி அவர்களோடேபுரையறக்கலக்கும்சீலவானாய் (அல்பஸந்துஷ்டனாய்) ஆச்ரிதரோடொருநீராகக் கலக்குமேயாகிலுமவனுக்கும்படிபச்சையிடப்போகாமையாலே, ஆச்ரயணமறிதென்னாதபடி இவனிட்டது கொண்டுத்ருப்தனாகவேண்டாதபடி பரிபூர்ணனாகையாலே "புரிவதுவும்புகைபூவே" என்று,இவன்பக்கல்பெற்றதுகொண்டு ஸந்தோஷிக்கும்

(௧-மு-அ-ல்) தி-வா. ௧-ல் + ௨-௨ + ௨-௩ + ௯-௧ + ௨-௪ + ௨-௧+௨-௩+ ௨-௫ + ௨-௧௦ + (௯) ௩. ௨. (௧௦) ௪. எ. (௧௧) ௫. ௩.

சூ. அம்ருதமேயௌஷதமாக்கி நீர்ப்புரையத்தன்னை நியமித்து போகத்தை ஸாத்மிப்பித்து பக்திகணனைகளுக்கு ஒக்க வருமவனுடைய ஸேவைக்கு எளிமையு மினிமையுமுண்டு

அம்ருதமே - தூய்வமுதான பகவத்விஷயத்தையே, ஔஷதமாக்கி - மாயப்பிறவிமயர்வறுக்கைக்கு ஔஷதமாம்படிபண்ணி, நீர்புரைய - நீரைவிரஹாலேமேட்டிலே யேற்றுமாப்போலே, தன்னை - அதிஸ்வதந்த்ரனைதன்னை, நியமித்து - இவர்கள் செவ்வைக்கேடும் செவ்வையாம்படியடக்கி, போகத்தை - தன்னோடுண்டான ஆழ்வாருடைய அநுபவத்தை, ஸாத்மிப்பித்து - ஸாத்மிக்க ஸாத்மிக்க உண்டாக்கி, பக்தி - பரமபக்தி, கணனைகளுக்கு - எண்ணுகை (இவைகளுக்கு) ஒக்க - ஸமமாக, வருமவனுடைய - வந்து முகங்காட்டுமவனுடைய, ஸேவைக்கு - பஜனத்துக்கு, எளிமையும் - ஸுலபத்வமும், இனிமையும் - ரஸமாயிருக்குகையும், உண்டு - உள்ளது,

---

ஸ்வாராதனுய் (அம்ருதமே ஔஷதமாக்கி) நேரில்லையாகிலும், உள்ளது தேவையாயிருக்குமோ வென்னுதபடி, அம்ருதத்தையே ஔஷதமாக்குமாப்போலே, "தூயவமுதைப்பருகிப்பருகியென் மாயப்பிறவிமயர்வறுத்தேன்" என்று, நிரதிஶயபோக்யனை தன்னுடைய ஆஶ்ரயணமாகையாலே மிகவுமினிதாயிருக்கிறவற்றையே ஸம்ஸாரவ்யாதிபேஷஜமாக்கி (நீர்புரையத்தன்னை நியமித்து) இனிதாயிருக்குமாகிலுமவன்நினைவறிந்து பரிமாறுகையறிதென்னுதபடி இவர்களைத் தன்நினைவிலே பரிமாறுவித்துக்கொள்ளப்பாராதே (௧) "நீர்புரைவண்ணன்" என்று மேட்டிலே, நீரைவிரஹாலே யேற்றுமாப்போலே இவர்கள் செவ்வைக்கேடும் செவ்வையாம்படி, தன்னைச்செவ்வியனாகநியமித்து (போகத்தை ஸாத்மிப்பிற்று) இப்படியானாலும் குளப்படியிலே கடலைமடித்தாப்போலே அஸாத்யமாகப்பரிமாறுமோ வென்னுதபடி, (௨) "என்னுடைச் சூழலுளான்" என்றுதுடங்கி "உச்சியுளானே" என்னும்படிஸாத்மிக்கத் தன்னையநுப்விப்பித்து, (பக்திகணனைகளுக் கொக்கவருமவனுடைய ஸேவைக்கு) இப்படியநுபவிக்கைக் கீடாக முகங்காட்டு மளவிலிவன் பக்கல் ப்ரேமாநுகுணமாகவோ செய்வதென்னுதபடி (௩) "கண்ணுள்ளே நிற்கும்கர் தன்மையால்தொழில் எண்ணிலும்வரும்" என்று, பரபக்திக்கும்பரிகணனைக்கு மொக்கவந்துமுகங்காட்டும் ஸ்வபாவனானவனுடையபஜநத்துக்கு, (எளிமையுமினிமையுமுண்டு) எளிதாயினிமையற்றிருத்தல், இனிதாயருமையாயிருத்த லன்றிக்கே கீழ்ச்சொன்ன குணவிஶேஷங்களையுடையவனுடையவாஶ்ரயணமாகையாலே எளிதுமாயினிதுமாயிருக்கும். (௪) "பத்துடையடியவர்க்கெளியவன்" (௫) "அமுதிலுமாற்றவினியன்" என்கிற வவன்தன்னைப்போலேயாயிற்று ததாஶ்ரயணமும்,

---

(தி-வா-க-ல்) (௧) அ - ௪௦. (௨) ௯ - ௧. (௩) ௪௦ - ௨. (௪) ௩ - ௧. (௫) ௬ - ௬.

மூ. தொழுதாலரும்பயனாய தருமுத்யோகத்தே வினைகளும் மாளும் அவனுரைத்த மார்க்கத்தேநின்று இருபசைமல மறவுணர்வுகொண்டு நலம்செய்வதென்று

தொழுதால் - அவனைத்தொழுதால், அரும்பயனாய - பெறுதற்கரிய ப்ரயோஜநங்களையும், தரும் - கொடுக்கும், உத்யோகத்தே - பஜிக்கயத்நம்பண்ணும்போதே, வினைகளும் - பகவத்ப்ராப்தி ப்ரதிபந்தக பாப விசேஷங்களும், மாளும்-ஸவாஸநமாகப்போம், அவனுரைத்த - (பிணக்கற வறுவகையென்றுதொடங்கி அவனாலே) அருளிச்செய்யப்பட்ட, மார்க்கத்தேநின்று - பக்திமார்க்கத்திலே நிஷ்டையுடையராய், இருபசை - (தேவதாந்தரங்கள்பக்கலுண்டான) ஸங்கமும், மலம் - (இவனோ அவரோ ஆஶ்ரயணீயரென்கிற)ஸம்ஶயமும், அற-ஸவாஸநமாகப் போக்கி, உணர்வுகொண்டு - அவனுடைய உணர்வுகொண்டு, நலம்செய்வதென்று - நன்றென நலம்செய்வதென்றுதொடங்கி அநந்யப்ரயோஜநமான பக்தியைப்பண்ணுங்களென்று,

---

ஏவம்பூதபஜநத்தால் பலஸித்தியிருக்கும்படி யென்னென்னில்? (தொழுதாலரும்பயனாயதரும்) (க) "அவனைத்தொழுதால் வழிநின்ற வல்வினைமாள்வித்தழிவின்றி யாக்கம்தரும்" (உ) "தருமவரும்பயனாய" என்று, அவனைபஜித்தால் ப்ராப்திப்ரதிபந்தகங்களையும் நிஶ்ஶேஷமாகப்போக்கி அழிவில்லாத பெருதற்கரிய ப்ரயோஜநங்களையுந்தரும். பஜித்தாலன்றோ தருவது, பஜநவிரோதிகளும் குவாலுண்டேயென்னில்? (உத்யோகத்தே வினைகளும்மாளும்) (ங) "நாளுநின்றடுநமபழமையங்கொடுவினை யுடனேமாளும்" என்று, நாள்தோறும் நின்றிவ்வாத்மாவை முடிக்கிற அநாதியாயதிக்ரூரமானகர்மங்கள் பஜநோபக்ரமத்திலே நசிக்கும். ஆனால், பஜநோபாயமேதென்னில்? (அவனுரைத்த மார்க்கத்தே நின்றிருபசைமலமற உணர்வுகொண்டு நலஞ்செய்வதென்று) (ச) "பிணக்கற" என்றுதுடங்கி, (ரு) "அம்பகவன்வணக்குடைத்தவநெறிவழிநின்று" என்று, வைதிகஸமயத்துக்கும், பாஹ்யஷட்ஸமயத்துக்கும்தன்னில் தானுண்டான பிணக்கறும்படி, வேதமார்க்கத்தை யதாநிரூபணம்பண்ணி யருளிச்செய்த நிரவதிக வாத்ஸல்யயுக்தனாய் ஜ்ஞாநாதிகுணபரிபூர்ணனான க்ருஷ்ணன் திருத்தேர்த்தட்டிலே அர்ஜுநவ்யாஜேந ஸ்ரீகீதாமுகத்தாலே (சு) "భక్త్యాత్వనన్యయాశక్యః" "பக்த்யாத்வநந்யயாஶக்ய:" என்று, (எ) "మన్మనా భవమద్భక్తో మద్యాజీ మాం నమస్కురు। మామేవైష్యసి యుక్త్వైవ మాత్మానం మత్పరాయణః" "மந்மநாபவ மத்பக்தோ மத்யாஜீமாம்நமஸ்குரு । மாமேவைஷ்யஸியுக்த்வைவமாத்மாநம் மத்பராயண:" என்றுமருளிச்செய்த பக்திமார்க்கத்திலே நின்று, (அ) "நம்மிருபசையறுத்து" என்றும், (கூ) "மனனகமலமறக்கழுவி"

(க-ப-ல்) (க) கு - அ. (உ) ஷை - க. (ங) ங - அ. (ச) ங - ரு. (ரு) ஷை. (சு) ஸ்ரீ - கீ - கக. ருச. (எ) கூ - ஙச. (அ) தி-வா. க. ங. எ. (கூ) ஷை. - அ.

மூ. தாம்மயர்வறமதிநலமருளி பஜநத்திலே சேர்க்கிறார் முதற் பத்தில்.

மூ—(௨) சோராதமூவாவேர்முதலா

தாம் மயர்வறமதிநலமருளி - ஸர்வேஶ்வரன் தமக்கு மயர்வறமதிநலமருளினாப்போலே ஸம்ஸாரிகளுக் கஜ்ஞாநத்தைப்போக்கி ஜ்ஞாநபக்திகளையுபதேசித்து, பஜநத்திலே பகவத் பக்தியிலே, சேர்க்கிறார்-மூட்டுகிறார், முதற்பத்தில் - ப்ரதமதஶகத்தில்.

(அ) சோராத - சோராதவெப்பொருட்கு மாதிஎன்று சொல்லப்பட்ட, மூவா - மூவாத்தனிமுதலாய் என்றுசொல்லப்பட்ட, வேர்முதலாய் - வேர்முதலாய் வித்தாய்என்று சொல்லப்பட்ட வைகளாகக் கொண்டு,

---

என்றும், தேவதாந்தரங்கள் பக்கல் உங்களுக்குண்டான ஸம்ஶயத்தையறுத்து இவனோ அவர்களோ ஆஶ்ரயணீயரென்கிறஸம்ஶயத்தையும் மநஸ்வியின்றும், ஸவாஸநமாகப்போக்கி (௧) "அவனுடையுணர்வுகொண்டு" என்று, தத்விஷயஜ்ஞாநத்தைக்கொண்டு (௨) "நன்றெனநலம் செய்வது" என்று, அநந்யப்ரயோஜந பக்தியைப் பண்ணுங்கோளென்று (தாம்மயர்வறமதிநலமருளிபஜநத்திலே சேர்க்கிறார்முதற்பத்தில்) அதாவது:— ஸர்வேஶ்வரன் தமக்கு மயர்வறமதிநல மருளினாப்போலே, ஸம்ஸாரிகளுக்குத் தம்முடைய க்ருபையாலே தத்வ ஹிதபுருஷார்த்தவிஷயமான வஜ்ஞாநத்தைப்போக்கி, ஜ்ஞாநபக்திகளை யுபதேசித்து பகவத் பஜநத்திலே மூட்டுகிறாரென்கை. *

வ்யா. (௨) இரண்டாம்பத்தால் ஸர்வகாரணபூதனான ஸர்வேஶ்வரன் கீழில்பத்திலே தமக்கு அஜ்ஞாதஜ்ஞாபநம்பண்ண, அவனாலே தத்தஜ்ஞாநரானவிவர் அந்தஜ்ஞாநத்துக்கு பலமான மோக்ஷத்தை யப்போதேபெறவேணுமென்றாசைப்பட்டுப்பெருமையாலே அவஸந்நராக, இவருடைய அவஸாதமெல்லாம் தீரும்படி அவன்வந்து ஸம்ஶ்லேஷித்து அந்தஸம்ஶ்லேஷத்தால்வந்த ப்ரீதியையுடையனாய், அந்தப்ரீதி இவரொருவரளவில்பர்யவஸியாதே இவரோடு பரம்பரையா ஸம்பந்தமுடையாரளவும் வெள்ளமிட்டு அந்தப்ரீதியாலே பரமபுருஷார்த்த லக்ஷணமோக்ஷத்தை யிவர்க்கவன்கொடுக்கத்தேட, அந்தமோக்ஷத்தை யவனுடைய ஶேஷித்வத்துக்கும் தம்முடைய ஶேஷத்வத்துக்கும் அநுகுணமாம்படி நிஷ்கர்ஷித்தவர் ஆஶ்ரயணீயனானவவனுக்கு கீழுக்தமான பரத்வத்தைநிலைபெறுத்துவனவான லக்ஷணங்களை வெளியிட்டு தததநுகுணமான்வசந ப்ரத்யக்ஷங்களையும்தர்சிப்பித்து, ஆஶ்ரயிப்பார்க்கு ருசிபிறக்கைக்காக த்யாஜ்யமான ஸம்ஸாரத்தினுடைய துக்கமும் ப்ராப்யமான மோக்ஷத்தினுடைய வாநந்தமும் ஸம்ஸார நிவ்ருத்தி பூர்வக

௧-ப. (௧) ௧-௩-௫. (௨) ஷை. ௭.

மூ. யுலகம்படைத்தவனென்கிற சிதசித்ரயத்ரிவிதகாரணமானவன் அறியாதனவறிவிக்கவுள்ளந்தேறி தூமனம்மருளிலென்னும். ஜ்ஞாநபலமான வொளிக்கொண்ட. மோக்ஷந்தேடிவாட

உலகம்படைத்தவன் - பொருளென்றிவ்வுலகம்படைத்தவனென்று ஜகத்ஸ்ருஷ்டிபண்ணினவன், என்கிற - என்றுசொல்லப்பட்ட, சிதசித்ரய - மூன்றுவகைப்பட்ட சிதசித்துக்களுக்கும், த்ரிவித - மூன்றுவகைப்பட்ட, காரணமானவன் - நிமித்தோபாதாநஸஹகாரிகாரணங்களானவன், அறியாதன - அறியவரியவர்த்தங்களையெல்லாம், அறிவிக்க - அறியும்படிபண்ண, உள்ளம் - திருவுள்ளம், தேறி - அத்யவஸாயத்தோடேகூடி, தூமநம் - பரிசுத்தமான வந்தஃகரணத்தையுடையராய், மருளில் - அவன்குணவிஷயகமான வஜ்ஞாநகந்தமில்லாத, என்னும்- என்றுசொல்லப்பட்ட, ஜ்ஞாநபலமான - ஜ்ஞாநத்துக்குப்பலமான, ஒளிக்கொண்ட - நிரவதிகதேஜோரூபமான, மோக்ஷம்-மோக்ஷத்தை, தேடி- எப்போதோவென்றுதேடி, வாட - (வாடிவாடும்என்று) வாடிப்போக,

---

மோக்ஷப்ராப்திக்குறுப்பான ஸாதநத்தினுடைய ரஸமும் முன்னுகவிதிக்கிற ஸகுணப்ரும்ஹோபாஸநத்தை நிஷித்தாநுஷ்டாநங்களினுடைய த்யாகபூர்வகமாக சேஷத்ரவாஸாத்யங்கங்களோடே கூட்டுகிருறென்கிருர். (சோராதமூவாவேர்முதலாயுலகம்படைத்தவனென்கிற சிதசித்ரயத்ருவித காரணமானவன்) (க) "சோராத வெப்பொருட்கு மாதியாஞ்சோதி" (உ) "மூவாத்தனிமுதலாய்" (௩) "எப்பொருட்கும் வேர் முதலாய்வித்தாய்" (ச) "பொருளென்றிவ் வுலகம்படைத்தவன்" என்று லீலாவிபூதியில் ஸங்கல்பவிசிஷ்ட வேஷத்தாலே நிமித்தமாயும், ஸூக்ஷ்மசிதசித்விசிஷ்ட வேஷத்தாலே உபாதாநமாயும், ஜ்ஞாநஶக்த்யாதிகுண விசிஷ்டவேஷத்தாலே ஸஹகாரியாயும், நித்யவிபூதியில்இச்சாவிசிஷ்ட வேஷத்தாலே நிமித்தமாயும், அப்ராக்ருதாசிஜ்ஜீவவிசிஷ்டவேஷத்தாலே உபாதாநமாயும், விநியோகோபயோகிஜ்ஞாநாதிவிசிஷ்ட வேஷத்தாலே ஸஹகாரியாயும், இப்படி பத்த முக்த நித்யரூபமான சித்ரயத்துக்கும், ப்ராக்ருதாப்ராக்ருதகாலரூபமான வசித்ரயத்துக்கும் த்ருவிதகாரணமும்தானேயானஸர்வேஶ்வரன். (அறியாதனவறிவிக்க வுள்ளம்தேறி) (ரு) "அறியாதனவறிவித்த" என்று, இவர்க்கஜ்ஞாதமான தத்வஹித புருஷார்த்தங்களை விஶததமமாகவறிவிக்க, (சு) "அடிபையடைந்துள்ளந்தேறி" என்று,அத்தாலே இவருமவனைக்கிட்டிநெஞ்சில்தெளிவையுடையராய் (தூமனம்மருளிலென்னும்ஜ்ஞாநபலமான ஒளிக்கொண்டமோக்ஷம்தேடிவாட) (எ) "தூமனத்தனனாய்" "மருளில் வண்குருகூர்வண்சடகோபன்" என்று, மோக்ஷைகஹேதுதயா

உ-ப. (க) க-கக. (உ) அ-ரு. (௩) ஷெ கo. (ச) ஷெ-கo-கக. (ரு) ௩-உ. (சு) சு-அ. (எ) எ-அ.

மூ. உலராமலாவிசேர்ந்து சிக்கெனப்புகுந்து ஸம்பந்திகளும் சேர்தல்மாறினரென்னவாழ்வித்து

உலராமல் - (உலர்ந்துலர்ந்துஎன்று) உலராமல், ஆவிசேர்ந்து - (அந்தாமத்தன்புசெய்து ஆழ்வாருடைய) ஆத்மாவோடேகலந்து, சிக்கென - த்ருடமாக, புகுந்து - ஆழ்வார்திருவுள்ளத்திலேப்ரவேசித்து, ஸம்பந்திகளும் - இவரோடு ஸம்பந்தமுடையாரும், சேர்தல் - நரகஸமீபகாமித்வத்தையும், மாறினரென்ன - தவிர்ந்தார்களென்னும்படி, வாழ்வித்து - எல்லாரும்வாழும்படிபண்ணி,

பரிசுத்தமானவந்தஃகரணத்தையுடையராய், அவனுடையகல்யாணகுணவிஷயமான அஜ்ஞாநகந்தமில்லாதபடி, கீழ்ப்பத்தில்பிறந்த தம்முடைய ஜ்ஞாநத்துக்கு பலம் மோக்ஷமாகையாலே (க) "களிப்புங்கவர்வுமற்றுப் பிறப்புப்பிணி மூப்பிறப்பற்று ஒளிக்கொண்ட சோதியுமாய்" (உ) "அடியார்கள் குழாங்களையுடன் கூடுவதென்றுகொலோ" என்று, ப்ராக்ருதவிஷயலாபாலாபங்களால்வரும் கர்வக்லேசங்களும், ஷட்பாவவிகாரங்களும் போய் ஶுத்தஸத்வமாகையாலே நிரவதிகதேஜோரூபமான விக்ரஹத்தையுடையோமாய், நித்யஸூரிகள் திரளிலே கூடப்பெறுவதெப்போதோவென்று அந்தமோக்ஷத்தைப்பெறுகையிலாசையாலே தேடி அப்போதே கிடையாமையாலே (௩) "வாடிவாடும்" என்று, ஆஶ்ரயத்தை யிழந்த தளிர்போலேவாட, (உலராமலாவிசேர்ந்து) (௪) "உள்ளுளாவியுலர்ந்துலர்ந்து" என்கிற, தாபமாறும்படி (௫) "அந்தாமத்தன்புசெய்தென்னுவிசேரம்மானுக்கு" என்கிறபடியே, பரமபதத்தில் பண்ணும் வ்யாமோஹத்தை யிவர்பக்கலிலேசெய்து, கமர்பிளந்த தரையிலே நீர்பாச்சுவாரைப்போலே இவரோடே நிரவதிகஸம்ஶ்லேஷத்தைப்பண்ணி (சிக்கெனப்புகுந்து) (௬) "சிறிதோரிடமும் புறப்படாத் தன்னுள்ளே யுலகுகளொக்கவேவிழுங்கி சிக்கெனப் புகுந்தான்" என்று, அத்யல்பமாயிருப்பதொருபதார்த்தமும் தன்பக்கல் நின்றும் பிறிகதிர்ப்பட்டு நோவுபடாதபடி தன்ஸங்கல்பஸஹஸ்ரைகதேஶத்திலே ஸர்வலோகங்களையுமொருக்காலேவைத்து இனிப்போகாதபடிபுகுந்து (ஸம்பந்திகளும் சேர்தல் மாறின ரென்னவாழ்வித்து) (௭) "எமர்கீழ் மேலெழுபிறப்பும் விடியாவெந்நரகத்தென்றும்சேர்தல்மாறினர்" என்று, இவருடைய ஸம்பந்த ஸம்பந்திகளும் ஸம்ஸாரான்முக்தராம்படி பண்ணி அத்தாலே (௮) "எமர்கீழ்மேலெமரேழெழுபிறப்பும்கேஶவன் தமரானார்கள் மாசதிரிதுபெற்று நம்முடையவாழ்வு வாய்க்கின்றவா" என்று, என்னோடு பரம்பரையா ஸம்பந்தமுடையாரும் என்னோட்டை ஸம்பந்தமே ஹேதுவாக பகவதீயரானார்கள். நிர்ஹேதுகபகவத்க்ருபையாகிற பெருஞ்சதிரைப்பெற்று ஸ்ரீவைஷ்ணவஸந்தாநம் ஊற்றுமாறாமல் பெருகுகிறபடியே என்றிவர்தாமே ஆஶ்சர்யப்படும்படி

உ-ப. (க) ௩-௧0. (உ) ஷ‍ை (௩) ௪-௧. (௪) ௪-௭. (௫) ௫-௧. (௬) ௯-௨. (௭)ஷ‍ை ௭. (௮) ௭-௧.

மூ. உபகரிக்கிற நீந்துங்கடலிலெம்மாவீட்டையுபயாநுகுண மாக்கினவர் ஆஶ்ரயணீயனுக்கு பூர்வோக்த பரத்வத்தை ஸ்தாபிக்கிறஸகலபலப்ரதத்வ காரணத்வ ஶேஷஶாயித்வ ஶ்ரிய: பதித்வஸௌலப்யாதிகளை திண்ணனவதென்று வெளியிட்டு

உபகரிக்கிற - உபகாரம்பண்ணுகிற, நீந்தும் - நீஞ்சும்படியான துக்கமில்லாததாய், கெடலில் - அநர்த்தகந்தமில்லாத, எம்மாவீட்டை - எவ்வகையாலும் விலக்ஷணமான பரமபதத்தை, உபயாநுகுணமாக்கினவ-பரதந்த்ரமான வாத்மஸ்வரூபத்துக்கு மீஶ்வரஸ்ரூபத்துக்குமநுகுணமாம்படி, நிஷ்கர்ஷித்தவர், ஆஶ்ரயணீயனுக்கு-ஆஶ்ரயணயோக்யனை வீஶ்வரனுக்கு, பூர்வோக்த - முன்னேசொல்லபட்ட, பரத்வத்தை-பரனைபடியை, ஸ்தாபிக்கிற - நிலைநிறுத்துகிற, ஸகலபல-எல்லாபலங்களேயும், ப்ரதத்வ-தருகை, காரணத்வ-ஸகலஜகத்காரணனுயிருக்கை, சேஷ - திருவநந்தாழ்வான்மேலே, ஶாயித்வ - திருக்கண்வளர்ந்தருளுகை, ஶ்ரிய:பதித்வ-பெரியபிராட்டியாருக்கு வல்லபனுயிருக்கை, ஸௌலப்ய - ஆஶ்ரிதஸுலபனுயிருக்கை, (இவைகளை) ஆதிகளை - முதலாகவுடையவைகளை, திண்ணனவதென்று - திண்ணன்வீடு அணைவதரவணைமேல் என்கிற, திருவாய்மொழிகளாலே, வெளியிட்டு - ப்ரகாசிப்பித்து,

நடமின் புகுதுமென்று கர்த்தவ்யம் ஸ்மர்த் தவ்யம் வக்தவ்யம் ஶ்ரோதவ்யம் த்ருஷ்டவ்யம் கந்தவ்யம் வஸ்தவ்யமெல்லாம் வெளியிட்டு) (௧) "கொண்டகோயிலை வலஞ்செய்திங்காடுதூஉத்தே" என்று, அவனெழுந்தருளி நிற்கிற தேஶத்தைக்குறித்து அநுகூலவ்ருத்தியைப் பண்ணிஹ்ருஷ்டராவோம் வாருங்கோளென்கையாலே கர்த்தவ்யமும், (௨) "எண்ணுமினெந்தை நாமம்" என்று, ஸ்வாமியினுடைய திருநாமத்தை யநுஸந்தியுங்கோளென்கையாலே ஸ்மர்த்தவ்யமும், (௩) "பேசுமின்கூசமின்றி" என்று, உங்களயோக்யதை பார்த்துக்கூசாதே திருவநந்தபுரத்திலே ஸ்நேஹத்தைபண்ணி வர்த்திக்கிறவனைப் பேசுங்கோளென்கையாலே வக்தவ்யமும், (௪) "நமர்களோசொல்லக் கேண்மின்" என்று, நம்மோடுஸம்பந்தமுடையார் நாம்சொல்லுகிறத்தைக் கேளுங்கோளென்கையாலே ஶ்ரோதவ்யமும், (௫) "படமுடையரவில்பள்ளிபயின்றவன் பாதம்காணநடமினோ" என்று, திருவநந்தபுரத்திலே கண்வளர்ந்தருளுகிற ஸர்வேஶ்வரனுடைய திருவடிகளை காணப்போருங்கோ ளென்கையாலே த்ரஷ்டவ்ய கந்தவ்யங்களும் (௬) "அனந்தபுரநகர் புகுதுமின்றே" என்று இச்சைபிறந்தவின்றே திருவநந்தபுரத்திலேபோய் புகவாருங்கோ ளென்கையாலே வஸ்தவ்யமுமாகிறவை யெல்லாமவர்களுக்கு வெளியிட்டு (பிணக்கறவைச்சார்வாக நிகமித்து) உபக்ரமித்த வர்த்தத்தை உபஸம்ஹக்கை ஶாஸ்த்ரக்ரம மாகையாலே (௭) "பிணக்கற" என்கிறபாட்டிலே, (௮) "வணக்குடைத் தவநெறி" என்று, உபக்ரமித்த பக்தியோகத்தை

---

(௧) தி - வா. ௧௦. ௧. ௫. (௨) ஷி - ௨. ௫. (௩) ஷி - ௪. (௪) ஷி - ௨-௬. (௫) ஷி - ௮. (௬) ஷி - ௧. (௭) ஷி - ௧. ௩. ௫. (௮) ஷி.

மூ. எண்பெருக்கிலெண்ணும்

எண்பெருக்கி லெண்ணும் - எண்பெருக்கன்னலத்தென்றுபஜநதசையி லெண்ணப்படும்,

(க) "சார்வேதவநெறிக்குத்தாமோதரன் தாள்கள்" என்று, ஸ்வஸாத்யத்தோடே பொருந்தினபடியைச்சொல்லி நிகமித்து இதின்பட்டோலையானக்ரந்தத்திலே (உ) "வீடுமின்முத்தவும்" (ங) "பத்துடையடியவரிலே" உபதேசிக்கத்துடங்கின ஸாத்யஸித்த ரூபமானஸாதநத்வயத்தையும் "தவனெறிக்கு" "பரமன்பணித்த" என்று, நிகமித்தென்றவரிதிலே யிப்படியருளிச் செய்வானென்னென்னில்? அதில் "வீடுமின்முற்றம்" ப்ரபத்திபரமாகவும், "பத்துடையடியவர்" பக்திபரமாகவும், பூர்வர்கள் நிர்வஹித்தகட்டளையைப் பிடித்தருளிச் செய்தார். இது "வீடுமின்முற்றத்தையும்" பக்திபரமாக்கி யோஜித்தருளினவெம்பெருமானார் நிர்வாகக் கட்டளையைப் பிடித்தருளிச்செய்தார். இதிலே ஸகல வ்யாக்யாநஸித்தமுமாய் ஈட்டிலும் ப்ரதாநயோஜனையுமாயிருக்குமது இந்த க்ரமத்திலேயிறே. இவர்தாம் முதற்பத்தில் பக்தியை உபதேசிக்கிறாரென்றருளிச்செய்ததும். ஆகையாலிதுமுன்புள்ளாரருளிச்செய்தபடியைப் பற்றவருளிச்செய்தார். இதுயெம்பெருமானார் யோஜனையாய் பின்புள்ளாரெல்லாரு மருளிச்செய்துகொண்டுபோந்தமர்யாதையைப்பற்ற வருளிச்செய்தாரென்று கொள்ளுமித்தனை. (ச) "வணக்குடைத்தவனெறி" என்கிறவிது, ப்ரபத்திபரமாகவும் ஒருயோஜனையிட்டிலே தோன்றியிருக்கையாலே "பிணகறவை" என்கிறவிதிலே பக்திப்ரபத்திகளிரண்டையும்கூட்டிக்கொண்டு (ரு) "சார்வேதவநெறியிலே" சார்வேதவனெறிக்குத்தாமோதரன் தாள்கள், என்றும், (சூ) "பண்டேபரமன் பணித்தபணிவகையே" "கண்டேன்கமலமலர்ப்பாதம்" என்றும், என்றிரண்டையும் நிகமிக்கிறாரென்றாலோ வென்னில்? அதுக்குமநுபபத்தியுண்டு, "பிணக்கற" என்கிறபாட்டில், ப்ரபத்திபரமான யோஜனையுண்டானாலும் விகல்பமொழிய ஸமுச்சயங் கூடாமையாலே. ஆகையாலே ஸகலவ்யாக்யாநங்களுக்கும்சேர "பிணக்கறவில்" உபக்ரமித்த பக்தியை நிகமிக்கிறாரென்ன வமையும். ஆனால், பக்த்யுபதேசோபக்ரமமும் "வீடுமின் முற்றத்திலே" ஆயிருக்க "பிணக்கறவை" என்பானென்னென்னில்? "வீடுமின்" என்று, த்யாஜ்யோபாதேய தோஷகுண பரித்யாகஸமர்ப் பணக்ரமத்தை ஸாலம்பநமந்த்ரமாக உபதேசித்தென்று அத்தையு மிதுக்கு சேஷமாக ஒருங்கவிட்டுக்கொண்டு வந்து அவனுரைத்த மார்க்கத்தேநின்றிருபசைமலமற வுணர்வுகொண்டு நலஞ்செய்வதென்றுதாம் யோஜித்தக்ரமத்தைப்பிடித்து முதல்பத்தில் துடங்கின பக்தியோகத்தையென்றபடி, "பிணக்கறத்துடங்கி" வேதப்புனிதவிருதி சொன்னவென்றிறேகீழு மருளிச்செய்தது. ஆக விப்படி முதற்பத்திலுபக்ரமித்தபக்தியை நிகமித்துக்கொண்டு (எண்பெருக்கி லெண்ணும்

(க) தி - வா. க0. ச. க. (உ) ஷை - க. உ. க. (ங) ஷை - ங. க. (ச) ஷை - ரு. (ரு) ஷை - க0. ச. க. (சூ) ஷை - க.

மூ. திருநாமத்தின் ஶப்தார்த்தங்களைச்சுருக்கி மாதவனென்று
த்வயமாக்கி கரணத்ரயப்ரயோக வ்ருத்தி ஸம்ஸாரிகளுக்
குக் கையோலைசெய்து கொடுத்து செஞ் சொற்கவிகளுக்
குக் கள்ளவழிகாவலிட்டு

திருநாமத்தின் - திருநாமமான திருமந்த்ரத்தினுடைய, ஶப்தார்த்தங்களை - ஶப்தம் அர்த்தமிவைகளை, சுருக்கி - ஸங்க்ரஹித் தருளிச்செய்து, மாதவனென்று - ஶ்ரீமானென்னுமதையிரண்டுபர்யாயம் சேர்க்கையாலே, த்வயமாக்கி - திருமந்த்ரவிவரணமானத்வயமாக்கி, கரணத்ரயப்ரயோகவ்ருத்தி - காயிக வாசிக மாநஸிகமான கரணத்ரயத்தாலும் ப்ரயோகிக்கப்பட்ட வ்யாபாரத்தை, ஸம்ஸாரிகளுக்கு - பத்தசேதநர்க்கு, கையோலை செய்துகொடுத்து - இதுவிதென்று யேற்பாடு செய்துகொடுத்து, செஞ்சொற்கவிகளுக்கு - அநந்யப்ரயோஜநகவிகளான முதலாழ்வார்களுக்கு, கள்ளவழி - திருட்டுவழியான அவனுடைய சீலகுணத்தில், காவலிட்டு - அதில்புகாதபடி தகைந்து,

---

திருநாமத்தின் ஶப்தார்த்தங்களைச்சுருக்கி) (க) "எண்பெருக்கன்னலத் தொண்பொருளீறி லவண்புகழ்நாரணன்" என்று, முதல்பத்திலே, பஜநாலம்பநமாகச் சொல்லப்பட்டதாய், (உ) "எண்ணுந்திருநாமம்" என்று, பஜநதசையிலநு ஸந்திக்கப்படும் திருநாமமானதிருமந்த்ரத்தினுடைய" சப்தத்தையும் அர்த்தத்தையும் "நாரணம்" என்றும், (ங) "நாரணனெம்மான்" இத்யாதியாலும், ஸங்க்ரஹமாம்படி சுருங்க உபதேசித்தும், (மாதவனென்று த்வயமாக்கி) பூர்வோத்தர வாக்கியங்களில் ஶ்ரீமத் பதார்தங்களை திருவுள்ளம் பற்றிக்கொண்டு (ச) "மாதவனென்றென்றோதவல்லீரேல்" என்று, கீழ்ச்சொன்ன நாராயண ஶப்தத்தோடே மாதவனென்கிறவித்தை இரண்டுபர்யாயம் சேர்த்துச்சொல்ல வல்லிகோளாகில் என்கையாலே அந்த திருமந்த்ரத்தை அதினுடைய விஶதாநுஸந்தாநமான த்வயரூபேணவெளியிட்டு (கரணத்ரயப்ரயோக வ்ருத்தி ஸம்ஸாரிகளுக்கு கையோலை செய்துகொடுத்து) ஈஶ்வரன்தம்மைக் கொடுபோகையிலே த்வரிக்கிறபடியாலும் கேட்கிறவர்களுக்கு பிரதிபத்திவிஷயமாம்படியாகவும் சுரங்கக்கொண்டு (ரு) "தாள்வாய்மலரிட்டு நாள்வாய்நாடீர்" (சா) "நாடீர்நாடோறும் வாடாமலர்கொண்டு பாடீரரன்நாமம்" "சுனைநன்மலரிட்டு நினைமின் நெடியானே" என்றிப்படி, கரணத்ரயத்தாலும் ப்ரயோகிக்கப்படும் பகவதாஶ்ரயணீயப்ரவ்ருத்தியை பரந்தஶடங்குகளை சுருங்க வநுஷ்டேயார்த்த ப்ரகாஶகமான ப்ரயோகவ்ருத்தியாக்கிக்கையோலை செய்து கொடுக்குமாப்போலே ஸம்ஸாரிகளுக்கு தர்சிப்பித்து (செஞ்சொற் கவிகளுக்குக் கள்ளவழிகாவலிட்டு) (எ) "செஞ்சொற்கவிகா

(க) தி - வா க. உ. க0. (உ) ஷை - க0. ஓ. க. (ங) ஷை - உ. (ச) ஷை - எ. (ரு) ஷை - ச. (சா) ஷை - ஓ. (எ) ஷை - எ. க.

மூ. மனந்திருத்தி வீடுதிருத்தப்போய் நாடுதிருந்தினவாறே வந்து விண்ணுலகந்தர விரைந்து அத்தைமறந்து குடிகொண்டு தாம்புறப்பட்ட வாக்கையிலேபுக்குத் தானகர்களைய திலேவகுத்து குரவைதுவரைகளில் வடிவுகொண்ட சபலனுக்கு தேஹதோஷமறிவித்து

மனம்திருத்தி - அயோக்யதாநுஸந்தாநத்தாலேயகன்ற விவரைத்தன் சீலத்தைக்காட்டிச் சேர்த்துக்கொண்டு, வீடுதிருத்தப்போய் - இவரகலாமைக்காக பரமபதத்தேற கொடுபோகவத்தை யலங்கரிக்கப்போய், (மீளுவதற்குமுன்னே) நாடுதிருந்தினவாறே - தம்முபதேஶத்தாலே நாடுதிருந்தினவளவிலே, வந்து - மீளவந்து, விண்ணுலகம் - பரமபதத்தை, தர - கொடுக்கையிலே, விரைந்து - த்வரித்து, அத்தைமறந்து - தானுபக்ரமித்த கார்யத்தையும்மறந்து, குடிகொண்டு - இவர் திருமேனியிலே அத்யாதரத்தாலே ஸபரிகரனுய்வர்த்தித்து, தாம்புறப்பட்ட - இத்தைத்யாஜ்யமாக நினைத்துத்தாம் ஶரக்குக்கட்டிப்புறப்பட்டுநின்ற, ஆக்கையிலே - ஹேயமானஶரீரத்திலே, புக்கு - ப்ரவேசித்து, தாநநகர்களை - தனக்கு வாஸஸ்தாநமான நகரங்களில் பண்ணும் விருப்பத்தை, அதிலே - இவ்வாழ்வாருடைய ஓரோரவயவங்களிலே, வகுத்து - பிரித்தனுபவித்து, குரவைதுவரைகளில் - திருக்குரவையிலே யநேகவிக்ரஹ பரிக்ரஹம்பண்ணினுப்போலவும் த்வாரகையில் பதினாறுயிரம் ஸ்த்ரீகளுடனே அநேக ஶரீரபரிக்ரஹம் பண்ணியநுபவித்தாப்போலவும், வடிவுகொண்ட - ஆழ்வாரையநுபவிக்கைக்காக அநேக ஶரீரபரிக்ரஹம்பண்ணின, சபலனுக்கு - ஆஶ்ரிதஸம்ஶ்லேஷ சபலனுக்கு, தேஹதோஷ மறிவித்து - தேஹத்தின்ஹேயத்தை யறிவித்து,

ளுயிர்காத்தாட்செய்மின்” என்று, அவனுக்கடிமை செய்வார் அவனுடைய சீலாதிகளிலே யகப்பட்டழுந்திப்போகாம லுங்களுயிர்களை நோக்கிக்கொண்டு அடிமை செய்யப்பாருங்கோ ளென்று உபதேசிக்கையாலே அநுபவகைங்கர்யங்களோடே நடக்கிற ஸகோத்ரிகளுக்கு அரணழியாமல் கள்ளவழிகாவலிடுவாரைப்போலே சீலகுணமாகிற ஆழங்காலிலிழியாதே கொள்ளுங்கோளென்று வஞ்சக்கள்வனுள் கலந் தழிக்கும்வழிக்குக்காவலிட்டு (மனம்திருத்தி வீடுதிருத்தப்போய் நாடுதிருந்தினவாறே வந்து விண்ணுலகம்தரவிரைந்து அத்தைமறந்து குடிகொண்டு தாம்புறப்பட் டவாக்கையிலே புக்குத்தானநகர்களை அதிலே வகுத்து குறவைதுவறைகளில் வடிவுகொண்டசபலனுக்கு தேஹதோஷ மறிவித்து) (க) “தன்பால் மனம்வைக்கத்திருத்தி” என்று, ‘வளவேழுலகிலே” அயோக்யரென்றகன்ற தம்மை தம்சீலதையைக்காட்டி மநஸ்ஸைத்திருத்திச் சேர்த்துக்கொண்டு இன்னமுமிவரிங்கே யிருக்கில் அயோக்யரென்றகலுவர், அகலவொண்ணுத தேஶத்தேறக்கொடு போகவேணு

(க) தி - வா. க. கு. க௦.

ரூ. மாயையைமடிவித்து

மாயையை - ஸம்ஸாரத்தில் நிற்கைக்கடியான வசித்ஸம்பந்தத்தை, மடிவித்து - திரியவிடுவித்து,

மென்று (க) "வீடுதிருத்துவான்" என்கிறபடியே பரமபதத்தைக் கோடிப்பதாகப்போய், அதுசெய்து மீளுவதற்கு முன்னே (உ) "ஊரும் நாடுமுலகமும் தன்னைப்போல்" என்கிறபடியே தம்முபதேசத்தாலே நாடெல்லாந்திருந்தி தானிங்கே தம்மைவைத்துக் கொள்ள நினைத்தகாரியமும் தலைக்கட்டினவாறே வந்துநின்று (௩) "விண்ணுலகந்தருவானாய் விரைகின்றான்" என்று, மீளவந்து பரமபதத்தேறக்கொண்டு போகையிலேத்வரித்து சரமசரீரமாகையாலே தம்முடைய திருமேனியிலே தமக்குண்டான வ்யாமோஹத்தாலே கொடுபோகவிரைந்து அதையும் கூடமறந்து (ச) "கோவிந்தன் குடிகொண்டான்" என்கிறபடியே, ஸபரிகரனாய்க்கொண்டு (ரு) என்மாயவாக்கை யதனுள்புக்கு" என்று, த்யாஜ்யமென்று குந்தியடியிட்டுத் தான்சரக்குக்கட்டி புறபட்டு நிற்கிற தேஹத்தினுள்ளே தான்புகுந்து (சு) "திருமாலிருஞ்சோலை மலையே" என்கிற பாட்டின்படியே (எ) "தானநகர்கள்" என்று, தனக்குவாஸஸ்தானமான திவ்யநகரங்களில் பண்ணும் விருப்பத்தை யெல்லாம் ஒரோரவயவயங்களிலே பண்ணி எல்லாமிதுக்குள்ளேயாக வகுத்து (அ) "అంగనామంగనామన్తరే మాధవో మాధవం మాధవంచాన్తరేణాంగనా" "அங்கநாமங்கநாமந்தரேமாதவோமாதவம்மாதவம் சாந்தரேணங்கநா" என்கிறபடியே, திருக்குறவையில் பெண்களோடே அநேகவிக்ரஹ பரிக்ரஹம்பண்ணி அநுபவித்தாப்போலவும், (கூ) "ఏకస్మిన్నేవ గోవిన్దః కాలే తాసాం మహామునే । జగ్రాహ విధివత్పాణీన్ పృథగ్గేహేషు ధర్మతః ఉవాస విప్ర సర్వేషాం విశ్వరూపధరో హరిః" "ஏகஸ்மிந்நேவ கோவிந்த3꞉காலேதாஸாம்மஹாமுநே। ஜக்ராஹ விதிவத்பாணீந்ப்ரதக் கேஹேஷு-தர்மத꞉॥ உவாஸவிப்ர ஸர் வேஷாம்விஶ்வரூபத ரோஹரி꞉" என்கிறபடியே, ஸ்ரீமத்வாரகையில் தேவிமாருடனே பதினாறாயிரம் விக்ரஹம்கொண்டநுபவித்தாப் போலவும், அநேகவிக்ரஹம்கொண்டு தம்முடைய அவயவங்கள்தோறும் அநுப விக்கும்படி தம்திருமேனியிலே அதிசபலனானவனுக்கு (க௦) "பொங்கைம்புலனும் பொறியைந்தும் கருமேந்த்ரியமைம் பூதம் இங்கிவ்வுயிரேய் பிரகிருதிமானாங்கார மநங்களே" (கக) "உன்மா மாயையை" "மங்கவொட்டு" என்று, ஸ்வதேஹ தோஷத்தை யறிவித்து இத்தை விடுவிக்கவேணுமென்றுகால்கட்டி (மாயையைமடிவித்து) அவனுமித்தை விடுவிப்பதாக அநுமதிபண்ணி ப்ரீதராய் (கஉ) "மடித்தேன் மனவாழ்க்கையுள்நிற்ப தோர்மாயையை" என்று, ஸம்ஸாரத்திலே நிற்கைக்கடியான

(க) தி - வா. க. ரு. க௦. (உ) ஷை - சு. எ. உ. (௩) ஷை - க௦. சு. ௩. (ச) ஷை - எ. (ரு) ஷை - எ. ௩. (சு) ஷை - அ. (எ) ஷை - அ. சு. அ. (அ) ஸ்ரீ - பா. (கூ) (க௦) தி - வா க௦. எ. க௦. (கக) ஷை - (கஉ) ஷை - அ. ௩.

மூ. வானேதரக்கருதி கருத்தின்கண்பெரியனனவனை யின்ற ஹேதுகமாக வாதரித்த நீ அநாத்யநாதர ஹேதுசொல் லென்று மடியைப்பிடிக்க இந்த்ரியகிங்கரராய்க் குழிதூர்த் துச் சுவைத்தஹன்றீர்

வானேதரக்கருதி - பரமபதத்தைத்தருவானாக வுத்யோகித்து, கருத்தி ன்கண்பெரியனனவனை - மிக்கபாரிப்பை யுடையவனை, இன்று - இப் போது, அஹேதுகமாக - நிர்ஹேதுகமாக, ஆதரித்தநீ - விஷயீகரித்தநீ, அநாத்யநாதரஹேது - அநாதிகாலமுபேக்ஷித்திருந்ததுக்கு ஹேதுவை, சொல்லென்று-அருளிச்செய்யவேணுமென்று, மடியைப்பிடிக்க-மடியை ப்பிடித்துக்கேட்க, இந்த்ரியகிங்கரராய்-அநாதிகாலமிந்த்ரியவஶ்யராய், குழிதூர்த்து - அபர்யாப்தங்களான இந்த்ரியங்களைத்ருப்தியடைவித்து, ஸுவைத்தஹன்றீர் - நிரஸமானபதார்த்தங்களாலே ரஸமுடையராயெ ன்னைக்கைகழியவிட்டுப் பிரிந்துபோந்தீரோ,

---

மாயையுண்டு மூலப்ரக்ருதி அத்தைத்திரியவிடுத்தேனென்று செருக்கி (வானேதரக்கருதி கருத்தின்கட் பெரியனனவனை) (௧) "வானேதரு வானெனக்காய்" என்று, தமக்கு பரமபதத்தைத் தருவானாகவொருப் பட்டு (௨) "கருத்தின்கண்பெரியன்" என்றுபயவிபூதி யோகத்தாலே வரும் அந்யபரதையடையத் தீர்ந்து தம்மை அவ்வருகே கொடுபோகை யிலும் ஆதிவாஹிகரை நியமிக்கையாலும் தான் முற்பாடனாய்க் கொ ண்டுபோகையிலும் பெருக்கப்பாறியா நிற்கிறவனை. அன்றிக்கே மாயை யை மடிவித்து என்கிறத்தை மேலோடேசேர்த்து மனைவாழ்க்கையுள் நிற்பதோர் மாயையை மடித்தேன் என்று, தாம்பேசும்படி யசித்ஸம் பந்தத்தை யறுத்து "வானே தருவான்" என்று, தமக்குப் பரமபதத் தைத் தருவனாக உத்யோகித்த "கருத்திங்கட்பெரியன்" என்று, தம்மா லெண்ணி முடிக்கவொண்ணாதபடி தங்கார்யத்தில் த்வரிக்கிறவனை என் னுமாம். ஆகவிப்படி, தாம்சொன்னபடி செய்யக்கடவனாய் தம்மைக் கொண்டுபோகையிலே மிகவும்பாரிக்கிறவனை (இன்று அஹேதுகமாக வாதரித்தநீ அநாத்யநாதர ஹேதுசொல்லென்று மடியைப்பிடிக்க) ( ) "இன்றென்னைப் பொருளாக்கி" என்றுதுடங்கி இன்றிப்படி நிர்ஹே துகமாக விஷயீகரித்த நீ அநாதிகால மென்னையுபேக்ஷித் திருந்ததுக்கு ஹேதுவையருளிச் செய்யவேணுமென்று மடியைப் பிடித்துக்கேட்க. இதுக்குச் சொல்லலாமுத்தரமென்னென்று தன்னிலேநிரூபித்து, இவை யொன்று மிவர்க்குச் சொல்லத்தகாதன வென்று அவன்நிருத்தரனாய் நின்றமையைநெடுக உபபாதிக்குறார் மேல். ஈஶ்வரன் நிரூபித்த க்ரமந் தானிருக்கும்படி(இந்த்ரியகிங்கரராய்க் குழிதூர்த்துச் சுவைத்தஹன்றீர்

---

(௧) தி - வா. ௧0. அ. ௫. (௨) ஷை - அ.

௬. என்னில் அவையாவரையு மகற்றநீ வைத்தவை யென்பர்,
அதுதேஹயோகத்தாலே யென்னில் அந்நாள்நீதந்த சும
டென்பர், முன்செய்த முழுவினையாலே யென்னில் அது
துயரமே யுற்றவிருவினையுன் கோபமுமருளுமென்பர்,

என்னில் - என்றுசொன்னால், அவை - அந்தபஞ்சேந்த்ரியங்கள், யாவரையும் - ஸமஸ்தங்களையும், அகற்ற - உன்னைவிட்டுப்பிரிகைக்கு, நீவைத்தவை - உன்னாலே வைக்கப்பட்டவை யன்றோ, என்பர் - என்றுத்தரமருளிச் செய்வர், அது - அந்தபஞ்சேந்த்ரியவஶ்யதை, தேஹயோகத்தாலே - உம்முடைய கர்மார்ஜிதமான தேஹஸம்பந்தாயத்தமன்றோ, என்னில் - என்றீஶ்வரனருளிச்செய்தால், அந்நாள் - அந்தஸ்ருஷ்டிகாலத்திலே, நீதந்த - உன்னாலே தரப்பட்ட, சுமடு - சும்மாடுபோலே ஸகலபாப பாரங்களையும் சுமைக்குக்கு ஸாதநமான தேஹம், என்பர் - என்றருளிச்செய்வர், முன் - முற்காலத்தில், செய்த - உன்னால் செய்யப்பட்ட, முழுவினையாலே யென்னில் - நீர் செய்த பரிபூர்ணபுண்யபாபங்களாலே யென்னில், அது - அப்புண்யபாபங்களும், துயரமேயுற்ற - துக்கமாத்ரத்தையேயுற்றதாய், இருவினை - இரண்டுவித புண்யபாபரூபகர்மங்களும், உன்கோபமுமருளுமென்பர் - உன் நிக்ரஹாநுக்ரஹரூபங்களென் றருளிச்செய்வர்,

என்னில் ? அவையாவரையு மகற்ற நீ வைத்தவை என்பர்) (௧) "[Grantha text]" "யூயமிந்த்ரியகிங்கராஃ" என்கிறபடியே அநாதிகாலமிந்த்ரிய வஶ்யராய், (௨) "தூராக்குழிதூர்த் தெனை நாளகன்றிருப்பன்" (௩) "அற்பசாரங்க ளவைசுவைத்தகன் றொழிந்தேன்" என்று, துஷ்பாரங்களான இந்த்ரியங்களுக் கிரையிட்டு எத்தனைகாலமுன்னை யகன்றிருக்கக் கடவேன், அல்பரஸங்களா யநேகவிதங்களா யிருக்கிற ஶப்தாதி விஷயங்களைப்பசையுண்டாக ப்ரமித்து எதிர்பசை கொடுத்து புஜித்து ஸர்வஶக்தியான உனக்குமெட்டாதபடி ஸம்ஸாரத்திலே கைகழியப்போனேனென்று நீர்தாமே பேசும்படியான ஶப்தாதிவிஷயப்ராவண்யமன்றோ நீரநாதிகாலம் ஸம்ஸரிக்கைக்கு ஹேது வென்னில்; (௪) "ஓரைவர்யாவரையும் மயக்க நீவைத்த" என்றும் (௫) "அகற்ற நீவைத்த மாயவல்லைம்புலன்கள்" என்றும், விஷயங்களும் அவற்றில் ப்ராவண்ய ஹேதுவான விந்த்ரியங்களும், எத்தனையேனுமளவுடையாரேயாகிலும் கலங்கப்பண்ணி, நீவேண்டாதாரை யகற்றுகைக்கு வைத்தவையன்றோவென்பர். (அது தேஹ யோகத்தாலே யென்னில்; அந்நாள் நீதந்தசுமடென்பர்) அந்த இந்த்ரிய வஶ்யதைக்கடி குணத்ரயாத்மகமான ஶரீர ஸம்பந்தமன்றோ வென்னில்; (௬) "அந்நாள் நீதந்தவாக்கை" (௭) "அது நிற்கச் சுமடுதந்தாய்" என்று அதுவும் தந்தாய் நீயன்றோ வென்பர். (முன்செய்த முழுவினையாலே யென்னில்? அது துயரமேயுற்ற விருவினையுன்கோபமு மருளுமென்பர்)

(௧) வில்லிபுத்தூர் பகவர்வார்த்தை. (௨) தி - வா. ௫. அ. ௬. (௩) ஷை ௩. ௨. ௬. (௪) ஷை-௭. ௧. அ. (௫) ஷை-௫. ௭. அ. (௬) ஷை-௩. ௨. ௧. (௭) ஷை-௭. ௧. ௰.

மூ. ஈவிலாதமதியிலேனென்றும் உம்மதன்றே கர்த்ருத்வபோக்த்ருத்வங்களென்னில் ஆங்காரமாய்ப்புக்குச் செய்கைப் பயனுண்பேனும் கருமமுங்கருமபலனுமாகிய நீ கர்த்தா போக்தாவென்பர்,

ஈவிலாத - முடிவில்லாத பாபத்தைப்பண்ணினேனென்றும், மதியிலேனென்றும் - புத்தியில்லாதவனென்றும், கர்த்ருத்வபோக்த்ருத்வங்கள் - கர்த்ருத்வபோக்த்ருத்வங்களானவை, உம்மதன்றே - உம்முடையதன்றே, என்னில் - என்றுசொன்னல், ஆங்காரமாய்ப்புக்கு - தானேயபிமானியாயிவர்சரீரத்திலே ப்ரவேசித்து, செய்கைப்பயனுண்பேனும் - எல்லாகர்மங்களின் பல போக்தாவும் தானே யென்றும், கருமமும் கருமபலனுமாகிய - புண்ய பாபரூப கர்மங்களும் கர்மபலங்களுமாகிய, நீ- நீயே, கர்த்தா - அநுஷ்டாதாவும், போக்தா - கர்மபலத்தையநுபவிப்பானும், என்பர் - என்றுசொல்லுவர்,

அந்த தேஹஸம்பந்தத்துக்கடி, (௧) "முன்செய்த முழுவினை" என்று நீர்சொன்ன அநாதிகாலார்ஜித புண்யபாபரூபகர்மமன்றோ, வென்று சொல்லுவோமாகில்; (௨) துயரமேதருதுன்பவின்ப வினைகளாய்" (௩) "உற்ற விருவினையாய்" என்று அசேதனமுமாய் அஸக்தமுமாய் நச்வரமுமா யிருந்துள்ள புண்யபாபரூபகர்மங்கள் உன்னுடைய நிக்ரஹாநுக்ரஹ ரூபேண பலிக்குமவையாகையாலே, கர்மமும் நீயிட்ட வழக்கென்பர். (ஈவிலாத மதியிலேனென்று மும்மதன்றே கர்த்ருத்வ போக்த்ருத்வங்களென்னில்? ஆங்காரமாய்ப் புக்குச்செய்கைப்பயனுண்பேனும் கருமமும் கருமபலனுமாகிய நீ கர்தாபோக்தாவென்பர்) (௪) "ஈவிலாத தீவினைகளெத்தனைசெய்த னன்கொல்" என்று முடிவின்றிக்கே யிருக்கிறகொடிய பாபங்களிலே எத்தனை பண்ணினேனென்றும், (௫) "மதியிலேன் வல்வினையே மாளாதோ" என்று, நான் பண்ணின பாபமேயோ அநுபவித்தாலும் மாளாததென்றும் நீரே சொல்லுகையாலே, கர்த்ருத்வமும் போக்த்ருத்வ மும்மதன்றேவென்று சொல்லுவோமாகில்? (௬) "தானுங்காரமாய்ப் புக்குத்தானேதானேயானன்" என்று, தானபிமானியாய்ப்புக்கு ஆத்மாத்மீயங்களிலெனக்குண்டான வபிமாநத்தைத் தவிர்த்துத்தானே யபிமாநியானனென்றும், (௭) செய்கைப்பயனுண்பேனும்யானே" என்று, நம்முடையபடியை யநுகரித்துச் சொல்லுகிறவிடத்திலே ஸகல கர்மங்களினுடைய பலபோக்தாவும் நானே என்றும், (௮) "கருமமும் கருமபலனுமாகிய" என்று புண்ய பாபரூபமான கர்மங்களுக்கும் கர்ம பலங்களுக்கும் நியாமகனென்றும் சொன்னவராகையாலே, கர்ம கர்த்தாவும் தத்பலபோக்தாவும் நீயிட்ட வழக்காகையாலே, கர்தாவும் போக்தாவும் நீயே என்பர். (கரு

(௧) தி - வா. ௧. ௪. ௨. (௨) ஷை - ௩. ௬. ௮. (௩) ஷை - ௧0. ௧0. ௮. (௪) ஷை - ௪. ௭. ௩. (௫) ஷை - ௧. ௪. ௩. (௬) ஷை - ௧0. ௭. ௧௧. (௭) ஷை - ௫. ௬. ௪. (௮) ஷை - ௩. ௫. ௧0.

மூ. யானே யெஞ்ஞான்றுமென்றத்தாலே யென்னில் அயர்ப் பாய்ச்சமயமதிகொடுத் துள்ளம்பேதஞ்செய்கை உன்தொ ழிலென்பர், ஜீவப்ரக்ருதிசைதந்யம் நீங்கும் வ்ரதஹேது, அகமேனியிலழுக்கறுக்கை யபிமாநக்ருத்யம்,

யானே - யானே யென்றனதே என்றும், எஞ்யான்றுமென்றத்தாலே - எஞ்யரன்று மெங்குமென்றுதுடங்கி மெய்ஞானமின்றியென்று நீர் சொன்னத்தாலே, என்னில் - என்றுசொன்னுல, அயர்ப்பாய் - மறப்பாய், ஸமயமதிகொடுத்து - மாட்டாதபலஸமயவிஷயமதிகொடுத்து, உள்ளம் பேதம்செய்கை - ஆஸுரப்ரக்ருதிகளின் ஹ்ருதயத்தைபேதிக்கை, உன் தொழில் - உன்வ்யாபாரம், என்பர் - என்றுசொல்லுவர், ஜீவ - ஜீவாத்மாவினுடைய, ப்ரக்ருதிசைதந்யம் - ப்ரக்ருதி ஸம்பந்தாயத்தஜ்ஞாநம், நீங்கும் வ்ரதஹேது - அவனைவிட்டுப் பிரிகைக்குக் காரணமாயிருந்துள்ளது, அகமேனியிலழுக்கறுக்கை - அந்தரங்க ஶரீரத்தைப்பற்றிக்கிடக்கிற ஜீவனுடைய வஜ்ஞாநமாகிற வழுக்கைப்போக்கடிக்கை, அபிமானிக்ருத்யம் - அபிமானியான உன்கர்த்தவ்யம்,

மமும் கருமபலநுமாகிய) என்கிற வித்தால் கர்மகர்த்ருதத்பலபோக்த்ருதாததீந்யம் விவக்ஷிதமாகையாலேயாய்த்திவ்விடத்தி லிவரிச்சங்தை யெடுத்தது. (யானே எஞ்ஞான்று மென்றத்தாலே யென்னில்? அயர்ப்பாய்ச் சமயமதிகொடுத்து உள்ளம்பேதஞ்செய்கையுன்தொழிலென்பர்) (க) "யானே யென்னை யறியகிலாதேயானே யென்றனதே யென்றிருந்தேன்" என்றும், (உ) "எஞ்ஞான்றும்" என்று துடங்கி (ங) "மெய்ஞ்ஞானமின்றி வினையியல் பிறப்பழுந்தி" என்றும், நீர் சொன்ன அஜ்ஞாநாந்யதாஜ்ஞாநாதிகளாலேகாணுமுமக்கந்த காமகர்த்ருத்வபலபோக்ருத்வங்களுண்டாய்த்தென்று சொன்னேமாகில்; (ச) "அயர்ப்பாய்த் தேற்றமுமாய்" (ரு) "மாட்டாதபலசமயமதி கொடுத்தாய்" (சு) "உள்ளம் பேதஞ்செய்திட்டு யிருண்ட உபாயங்களும்" என்று, ஜ்ஞாநாஜ்ஞாநங்க ளிரண்டும் நீயிட்ட வழக்காகையாலே, அஜ்ஞாநாந்யதாஜ்ஞாநாதிகளை விளைக்கையு முன்க்ருத்யமென்பர். (ஜீவப்ரக்ருதி சைதன்யம் நீங்கும் வ்ரதஹேது அகமேனியி லழுக்கறுக்கை யபிமான க்ருதயம்) (எ) "யாதானுமோரக்கையில்புக்கு" இத்யாதிப்படியே ஸூக்ஷ்மப்ரக்ருதி விசிஷ்டனாய்க்கொண்டு ஸ்வகர்மாநுகுணமாக நாநவித சரீரங்களிலே ஒன்றைவிட்டொன்றைப்பற்றித்தடுமாறித்திரியும் ஜீவனுக்கு தேஹேந்ரியத்வேன போக்யத்வேநாவஸ்திதையானப்ரக்ருதியைப்பற்றிக் கிடக்கிற சைதந்யம் (அ) "யாதானும்பற்றி நீங்கும் விரதம்" என்கிறபடியே, ப்ரக்ருதி ப்ராக்ருதங்களிலே ஏதேனுமொன்றை யவலம்பித்து நம்மைவிட்டகலும் வ்ரதத்துக்கு ஹேதுவா

(க) தி - வா. உ. சு. சு. (உ) ஷி - ங. உ. எ. (ங) ஷி. (ச) ஷி - எ. அ. சு. (ரு) ஷி - ங. க. ச. (சு) ஷி - ரு. கO. ச. (எ) தி. வி. கரு. (அ) ஷி.

மூ. தான் நல்கும்ஸம்பந்தம் நிருபாதிகம், ஸௌஹார்த்தம் எஞ்ஞான்றும் நிற்கும், பிணக்கிப்பேதியாதஜ்ஞாநாதி வைகல்யமில்லை,

தான்நல்கும் - தானேஸ்நேஹித்து ரக்ஷிக்கைக்கடியான, ஸம்பந்தம் - ஸம்பந்தம், நிருபாதிகம் - நிஷ்காரணமாயுண்டானது, ஸௌஹார்த்தம்- ஶோபநஹ்ருதயவத்வம், எஞ்யான்றும் - என்றைக்கும், நிற்கும் - உள்ளது, பிணக்கி - விவதித்து, பேதியாத - வைபரீத்யமில்லாத, ஜ்ஞாநாதி- ஜ்ஞானம்முதலிய கல்யாண குணங்களுடைய, வைகல்யம் - ஶூந்யதை, இல்லை - உள்ளதல்ல,

யிருப்பதொன்று (௧) "அகமேனியொழியாமே" என்று, நமக்கந்தரங்கசரீரமான விவ்வாத்மாவைப்பற்றிக் கிடக்கிற ப்ரக்ருதிஸம்பந்தரூப மாலிந்யத்தைப் போக்குகை இவ்வாத்மாவுக்கபிமானியான நம்முடைய க்ருத்யமாயிருந்தது. அன்றிக்கே (ஜீவப்ரக்ருதி) இத்யாதிக்கு (௨) "ఇతస్త్వన్యాం ప్రకృతిం విద్ధి మే పరాం। జీవభూతాం మహాబాహో" "இதஸ்த்வந்யாம் ப்ரக்ருதிம்வித்திமேபராம் । ஜீவபூதாம்மஹாபாஹோ" என்று, சொல்லப்பட்ட ஜீவனுகிறப்ரக்ருதியில் கிடக்கிற சைதந்யம், (௩) "யாதானும்பற்றி நீங்கும்" என்கிறபடியே, ப்ராக்ருதிப்ராக்ருதங்களிலேதேனுமொன்றைப்பற்றிநம்மைவிட்டஹலும் வ்ரதஹேதுவாயிருப்பதொன்று; அசித்தும் சரீரமாயிருக்கச்செய்தே. அப்படியன்றிக்கே (௪) "அகமேனி" என்று, நமக்கந்தரங்க ஶரீரமாயிருக்கிற விவ்வாத்ம வஸ்துவில் கிடக்கிற ப்ரக்ருதி ஸம்பந்தரூபமான மாலின்யத்தைப் போக்குகை, இதுக் கபிமானியான நம்முடைய க்ருத்யமாயிருந்ததென்னவுமாம். (தான்நல்கும்ஸம்பந்தம் நிருபாதிகம்) (௫) "நல்கித்தான் காத்தளிக்கும் பொழிலேழும் வினையேற்கே நல்கத்தானுகாதோ நாரணனைக்கண்டக்கால்" என்னும்படி, நாம்ஸ்நேஹ பூர்வகமாக ரக்ஷிக்கைக்கடியான நாராயணத்வப்ரயுக்தமான ஸம்பந்தம் நிருபாதிகமாயிருந்தது. (ஸௌஹார்த்த மெஞ்ஞான்றும் நிற்கும்) (௬) "தனிமாப் புகழேயெஞ்ஞான்றும் நிற்கும்படியாத் தான்தோன்றி" என்று, நாமரூபங்களையிழந்து தமோபூதமான ஸமயத்திலே யிவற்றையுண்டாக்க நினைத்த அத்விதியமான மஹாகுணமென்கிற ஸௌஹார்தம், காலதத்வமுள்ள தனையும் ஒருவன்பண்ணு முபகாரமேயென்று அத்தையே யநுஸந்திப்பார் ஹ்ருதயத்திலே நிற்கும்படியாக வென்கையாலே, அந்த ஸம்பந்தமடியாக ஸர்வர்க்கும் நன்மையை யாஶாஸிக்கைக்கடியான ஸௌஹார்தகுணத்திலும் கண்ணழிவு சொல்லப்போகாது. (பிணக்கிப் பேதியாதஜ்ஞாநாதிவைகல்யமில்லை) (௭) "பிணக்கியாவையும் யாவரும் பிழையாமல் பேதித்தும் பேதியாததோர் கணக்கில் கீர்த்திவெள்ளக் கதிர்ஞானமூர்

(௧) தி - வா. ௬. எ. ௧0. (௨) ஸ்ரீகீ. எ. ௫. (௩) தி. வி. ௬௫. (௪) தி-வா. ௬. எ. ௧0. (௫) ஷ - ௧. ௪. ௫. (௬) ஷ - அ. ௧0. எ. (௭) ஷ - ௬. ௨. அ.

மூ. ஏகமூர்த்தியல்லல்மாய்த்தயத்னபலித்வங்கள் நம்மது நாம் தனிநின்ற ஸ்வதந்த்ரரென்றவனே யறிந்தனமே என்றும் ஸர்வஜ்ஞரிவர், நெறிகாட்டியருகுஞ்சுவடும்

ஏகமூர்த்தியில் - ஏகமூர்த்தியென்கிறபாட்டிலே, அல்லல்மாய்த்த - துக்கத்தைப்போக்கின, யத்ந - யத்நம், பலித்வங்கள் - பலபாக்த்வம், இவைகள், நம்மது - நம்முடையது, நாம் - நாமானவர், தனி நின்ற - அத்விதீயமாகநின்ற, ஸ்வதந்த்ரர் - பராதீனரன்றிக்கே யிருக்குமவர், என்று - என்று, அவனேயறிந்தனமே யென்னும் - அவனையே யறிந்தோமென்று சொல்லும்படியான, ஸர்வஜ்ஞரிவர் - இவர் ஸர்வஜ்ஞரா யிராநின்ருர், நெறிகாட்டி - நெறிகாட்டி என்கிறபாட்டிலும், அருகும் சுவடும் - அருகும் சுவடுமென்கிறபாட்டிலும்,

த்தியனுய்" என்னும்படி ஸம்ஹ்ருதி ஸமயத்திலே ஸகல சேதநாசேதநங்களையும் நாமரூப விபாக ரஹிதமாம்படி கலசி, ஸ்ருஷ்டிதசையிலே ஒருவர்கர்மம் ஒருவர்க்குத் தட்டாதபடி பிரித்து ஸ்ருஷ்டித்தும், தமக்கொருபேத மின்றிக்கே யிருக்கும் ஜ்ஞாநாதிகளையுடைய நமக்கு ஜ்ஞாந சக்திகளில் குறைவுசொல்ல விடமில்லை (ஏகமூர்த்தியில் அல்லல்மாய்த்தயத்னபலித்வங்கள் நம்மது) (க) "ஏகமூர்த்தி" என்கிற பாட்டிலே, காரணங்களோடு கார்யங்களோடு வாசியறஸகலத்தையும் ஸ்ருஷ்டித்து அவற்றினுடைய தாரணார்த்தமாக அந்தராத்மாவாய் ஸ்ருஷ்டமான பதார்தங்களினுடைய ரக்ஷணத்துக்காக க்ஷீரார்ணவத்திலே கண்வளர்ந்தருளி, இப்படி ஸர்வகாலமு மொருபடிப்பட்ட அநுக்ரஹ சீலநாகைக்கடியானப்ராப்தியை யுடையையான நீ உன்திருமேனிக்குவேண்டும் போகோபகரணங்களெல்லாம் "பூசும்சாந்திற்படியே" என்பக்கலிலேயுண்டாக்கி நிர்துக்க னுனையே, என்று இவர்பேசினபடியே, இவரைப் பெருகைக்குயத்னம் பண்ணுகையும்,பெற்ருலுகக்கும் பலித்வமும் நமக்கேயுள்ள தொன்ருயிருந்தது. (நான் தனிநின்ற ஸ்வதந்த்ரரென்று அவனே யறிந்தனமே என்னும் ஸர்வஜ்ஞரிவர்)(உ) "தனிநின்றசார்விலாமூர்த்தி" என்று, கார்யவர்கமழிந்தவன்று ஸச்சப்தவாச்யனுய் நின்று, (ங) "రుద్రంసమాశ్రితా దేవాః" "ருத்ரம்ஸமாஶ்ரிதாதேவாஃ" இத்யாதிப்ரக்ரியையாலே உனக்கோரபாஶ்ரய மில்லாதபடி யிருக்கிறவனென்கையாலே நாம்வேண்டிற்றைச் செய்யும்படி நிரங்குசஸ்வதந்ரனென்று அறுதியிட்டு (ச) "அவனே யகல்ஞாலம்படைத்திடந்தான்" என்றுதுடங்கி (ரு) "அவனேமற்றெல்லாமு மறிந்தனமே" என்று, ஸகலகார்யங்களிலுஞ் ஸஹகாரிநிரபேக்ஷனுய் ஸ்வாதீன ஸகலசேதனுசேதனஸ்வரூபஸ்திதிகனுயிருக்குமவனெற்றறிந்தோம் என்று சொல்லும்படியான ஸர்வஜ்ஞராயிருப்பவ ரொருவரிவர் (நெறிகாட்டி அருகுஞ் சுவடும்

(க) தி - வா. ச. ங. ங. (உ) பெரியதி - அ. எக. (ங) (ச) தி - வா. கூ. ங. உ. (ரு) ஷை.

மூ. போலேயிதுவும் நிருத்தரமென்று கவிழ்ந்துநிற்க, அமந்த்ரஜ்ஞோத்ஸவகோஷம்போலே யேறப்பெறுகிறவெழுச்சியைஸூசிப்பிக்கிற மேகஸமுத்ர பேரீ கீத காஹள ஶங்காசீஸ்துதிகோலாஹலஞ் செவிப்பட்டவாறே ஸாக்ஷாத்கரித்தபரமப்ராதிக்கு

போலே - அருளிச்செய்தாப்போலே, இதுவும் - இந்த ப்ரஶ்நமும், நிருத்தரமென்று - நிர்ஹேதுகமாகையாலே உத்தரம் சொல்லப்போகாதென்று, கவிழ்ந்து - தலையை வணக்கிக்கொண்டு, நிற்க - இருக்க, அமந்த்ரஜ்ஞோத்ஸவகோஷம்போலே - மந்த்ரம் தெரியாத வாத்யாரால் நடத்தப்பட்ட உத்ஸவத்தில் வாத்யகோஷத்தால் பூர்த்திபண்ணுமாப்போலே, ஏறப்பெறுகிற - நானேறப்பெருகின்றேனென்று தம்வாயாலே சொல்லும்படியான, எழுச்சியை-உச்ராயத்தை, ஸூசிப்பிக்கிற - காட்டிக்கொடுக்கிற, மேக - மேகங்கள், ஸமுத்ர - ஸமுத்ரங்கள், பேரி - பேரிவாத்யங்கள், கீத - காநஶப்தங்கள், காஹள - காஹளங்கள், ஶங்க-ஶங்கங்கள், ஆசீ: - ஆசீர்வாதம், ஸ்துதி - ஸ்தோத்ரம், இவைகளாலேயுண்டான, கோலாஹலம் - களகளஶப்தம், செவிப்பட்டவாறே - திருச்செவிசாத்தினவாறே, ஸாக்ஷாத்கரித்த - மநஸ்ஸாலே காணப்பட்ட, பரமப்ராப்திக்கு - மாநஸமன்றிக்கே பாஹ்யஸம்ஶ்லேஷமாகைக்காக,

போலே இதுவும் நிருத்தரமென்று கவிழ்ந்துநிற்க) (௧) "நெறிகாட்டி நீக்குதியோ" என்கிறபாட்டிலும் (௨) "அருகும்சுவடும்தெரிவுணரோம்" என்கிறபாட்டிலும் உபாயாந்தரங்களைக்காட்டி அகற்றப்பார்க்கிறுயோ, உன்னுடைய விலக்ஷணமான திருமேனியை நீயேகாட்டி யநுபவிப்பிக்கிறுயோ? பழையதாக வஜ்ஞனுய்ப் போருகிறவென்னை என்செய்வதாக நினைத்தாய், இத்தையருளிச் செய்யவேணுமென்றும், உம்முடையருகு வந்தாலும் உம்முடையசுவடறிதல்செய்யாதிருக்க உம்மளவிலே ஸ்நேஹமானதறமிக்கு வாராநின்றது. இதுக்கடியருளிச்செய்ய வேணுமென்றும், முன்பிவர்கேட்டவை நிருத்தரமானுப்போலே இப்போதுகேட்டவிதுவும், நிருத்தரமென்று நிலத்தைக் கீழுக்கவிழ்ந்து நிற்க (அமந்த்ரஜ்ஞோத்ஸவ கோழம்போலே யேறப்பெறுகிற வெழுச்சியை ஸூசிப்பிக்கிற மேகஸமுத்ர பேரீகீதாகாஶஹள ஶங்காசீஸ்துதி கோலாஹலம் செவிப்பட்டவாறே ஸாக்ஷாத்கரித்த பரமப்ராப்திக்கு) உத்ஸவங்களில் சடங்குகாட்டுகிற உபாத்யாயன் மந்த்ரம் தோற்றுவிட்டால் கொட்டச்சொல்லி வாத்யகோஷத்தாலே யத்தைமறைத்துவிடுமாப்போலே தான் நிருத்தரனுனமைதோற்றுதபடி மறைக்கைக்காக இவனுலே ப்ரவர்த்திதமாய் (௩) "நானேறப்பெறுகின்றேன்" என்று, தாம் கீழ்ச் சொன்னபடியே பரமபதத்திலே யேறப்போகிற வெழுச்சியை ஸூசி

(௧) பெரியதி. ௮. ௬. (௨) ஷை - ௮. (௩) தி - வா. ௧௦. ௬. ௫.

மூ. தலைமிசையாய்வந்த தாள்களைப் பூண்டுபோகாமல் தடுத்து திருவாணையிட்டு கூசஞ்செய்யாது சைதிப்பிழை

தலைமிசையாய்வந்த - தந்திருமுடியாலே யாம்படிவந்த, தாள்களை - திருவடிகளை, பூண்டு - கட்டிக்கொண்டு, போகாமல் - போராமலிருக்கும்படி, தடுத்து - நிரோதித்து, திருவாணையிட்டு - அவனுக்குநிரோதமாம்படி பெரியபிராட்டியார்மேலே யொட்டிட்டு, கூஸம்செய்யாது - ஸங்கோசலேசமில்லாமல் பண்ணினவுன்னாலே, செய்திப்பிழை - இவ்வபராதம் செய்யப்பட்டது,

ப்பியாநின்றுள்ள (க) "சூழ்விசும்பணிமுகில் தூரியம்முழக்கின ஆழ்கடலலைதிரைகையெடுத்தாடின" என்று, ராஜகுமாரன் போம்போது தூர்யாதிமங்களகோஷம் பண்ணுவானாப்போலே பரமபதத்துக்குப் போமவர்களைக்கண்ட ப்ரீதியாலே முழங்குவது கோஷிப்பதாகாநிற்கும். மேகஸமுத்ரகோஷங்களாகாநிற்கிற பேரிகளுடையவும் (உ) "கீதங்கள்பாடினர் கின்னரர் கெருடர்கள்" என்கிற, கீதங்களினுடையவும் (ங) "காளங்கள் வலம்புரிகலந்தெங்குமிசைத்தனர்" என்கிறகாஹள சங்கங்களினுடையவும் (ச) "வாளொண்கண் மடந்தையர் வாழ்த்தினர்" என்கிற, ஆசீஸ்ஸினுடையவும் (ரு) "துடர்ந்தெங்கும் தோத்திரம்சொல்லினர்" என்கிற ஸ்தோத்ரத்தினுடையவும், ஸம்மிஸ்ரகோஷமாகிற கோலாஹலம் செவிப்பட்டவாறே அர்சிராதி கதியையும் ஆதிவாஹிகஸத்காரத்தையும் திவ்யதேஸப்ராப்தியையும் அங்குள்ளாருடைய பஹுமானத்தையும் ஆநந்தமயமான வாசஸ்தாநத்திலிருப்பையும் ஸ்வசரண கமல ப்ராப்தியையும் பெற்றாராகப் பேசும்படி ஸாக்ஷாத்கரித்த பரமப்ராப்திக்கு (தலைமிசையாய் வந்த தாள்களைப்பூண்டு போகாமல் தடுத்துத் திருவாணையிட்டு) அப்படி ஸாக்ஷாத்கரித்த பரமப்ராபத்தி மானஸாநுபவமாத்ரமாய் பாஹ்யஸம்ஸ்லேஷ யோக்யமல்லாமையாலே அத்தைப்பெருகைக்காக (சா) "தலைமிசையாய்வந்திட்டினி நான் போகலொட்டேன்" என்று, (எ) "தலைமேல் புனைந்தென் சரணங்கள்" (அ) "தலைமேல்தாளிணைகள்" என்கிறபடியே, மானஸாநுபவவைஸத்யத்தாலே தம்தலைமேல் ஆகும்படிவந்த திருவடிகளை கட்டிக்கொண்டுபோகாமல் தடுத்து (கூ) "திருவாணை நின்னாணை கண்டாய்" என்று, அவனுக்கு மறுக்கவொண்ணாதவாணையிட்டு யிப்படி யாணையிட்டவாறே சேஷபூதரான நீர் சேஷியான நாம் செய்தபடி கண்டிருக்குமத்தனையொழிய நம்மையாணையிட்டுத் தடுக்கை யும்முடைய ஸ்வரூபத்தோடு விருத்தமாகையாலிது பெருவாணை காணுமென்ன (கூசஞ்செய்யாதுசெய்திப்பிழை) (க0) "கூசஞ்செய்யாது கண்டாய்" என்று, ஸர்வஜ்ஞனன் நீயென் பூர்வ

(க) தி-வா. க. க. க. (உ) ஷை-க0. க. ரு. (ங) ஷை-சு. (ச) ஷை. (ரு) ஷை-எ. (சா) ஷை - க0. க. க. (எ) ஷை - ச. ச. (அ) ஷை - க0. க. க. (கூ) ஷை - க0. உ. (க0) ஷை.

மூ. பற்றுக்கொம்பற்ற கதிகேடு போரவிட்டபெரும்பழி புறம்போனல் வருமிழவு உண்டிட்டமுற்றீம்பு அன்புவளர்ந்த அடியுரம் .

பற்றுக்கொம்பு - அவலம்பந ஸாதநகொள்கொம்பு, அற்ற - இல்லாத, கதிகேடு - அநந்யகதி, போரவிட்ட - ஸம்ஸாரத்தில் நான்நடையாடும்படி என்னை உபேக்ஷித்த, பெரும்பழி - பெரியகுற்றம், புறம் - பாஹ்யங்களான ஶப்தாதி விஷயங்களில், போனல் வருமிழவு - மண்டினல்வரக்கடவதான க்லேஶம், உண்டிட்ட - நிஶ்ஶேஷமாக புஜிக்கையாகிற, முற்றீம்பு - ப்ரதமாபராதம், அன்புவளர்ந்த - ஸ்நேகம் வளருகைக்கு, அடியுரம் - காரணமான பெரியபிராட்டியின் தார்ட்யம்,

வ்ருக்ஷத்தால்வந்த அயோக்யதைபார்த்துக் கூசிவாசிவையாதே யுன்னோடு ஆத்மபேதமில்லாதபடி யென்னை பரிக்ரஹித்தாய், ஆனபின்பு உன்னதன்றோ செய்திப்பிழையென்றும் (பற்றுக்கொம்பற்ற கதிகேடு) (௧) "ஆவிக்கோர்பற்றுக்கொம்பு நின்னல்லாலறிகின்றிலேன்யான்" என்று, கொடிகள் கொம்பையொழியத் தரிக்கமாட்டாதாப்போலே, என் ஆத்மாவுக்கு ஜீவனஹேதுவாயிருப்பதொன்றுன்னையொழிய வேறுகாண்கிறிலேன், ஆதலால் நான்(௨) "𑌅𑌨𑌨𑍍𑌯𑌗𑌤𑌿𑌃" "அநந்யகதி:" என்றும், (போரவிட்டபெரும்பழி) (௩) "எம்பரஞ்சோதிக்கலுற்றென்னைப் போரவிட்டிட்டாய்" என்று, என்கார்யம் நீசெய்வதாகவேறிட்டுக்கொண்டு உன்பக்கல் நின்றும் பிரித்து உன்குணங்கள் நடையாடாத ஸம்ஸாரத்திலேதள்ளியுபேக்ஷித்தாய், இதனக்குபரிஹரிக்கவொண்ணாத பெரும்பழியன்றோவென்றும், (புறம்போனல் வருமிழவு) (௪) "போரவிட்டிட்டென்னை நீ புறம்போக்கலுற்றால்" பின்னையானாக்கண்டெத்தை யங்தோவெனதென்பதன்யானென்பதென்" என்று, உன் பக்கல்நின்றும் பிரித்து அநன்யகதியானவென்னை ஸ்ருஷ்டியென்று தடங்கி, இவ்வளவும்புகுரநிறுத்தின நீ என்கார்யம் நான் செய்வேனகப்பார்த்து என்னையுபேக்ஷித்தால் ஸர்வசக்தியான நீ யனுதரித்தபின்பு அசக்தனை நான் எந்த உபாயத்தைக்கொண்டு என்ன புருஷார்த்தத்தை ஸாதிப்பது எனக்குப் பரிகரமாயிருப்பதொன்றுண்டென்பதோரர்த்தமுண்டோ, ப்ருதக்ஸ்திதி யோக்யமாயிருப்பதொரு நானுண்டோ, ஐயோ? என்னை என்கையிலே காட்டித் தந்தாலிழவே யன்றோ உள்ளதென்றும் (உண்டிட்டமுற்றீம்பு) (௫) "எனதாவியை யின்னுயிரை மனக்காராமை மன்னியுண்டிட்டாயினியுண்டொழியாய்" என்று என்னுடைய ஹேயமான சரீரத்தையுமாத்மாவையும் மனஸ்ஸுக்கு பர்யாப்தி பிறவாமல் நிரந்தரமாக புஜித்த நீ தடங்கினதைக் குறைகிடக்கவிடாதே விஷயீகரித்துவிடாய் புக்தசேஷமாக்கின உன்னதன்றோ முற்றீம்பென்றும் (அன்பு வளர்ந்தவடியுரம்) (௬) "கோலமலர்ப்பாவைக்கன்பாகிய வென்னன்பேயோ" என்று,

(௧) தி - வா. ௰. ௰. ௩. (௨) ஸ்ரீஸ்து - ஸ்தோ. ௨௧. (௩) தி - வா. ௰. ௰. ௫. (௪) ஷை-௫. (௫) ஷை - ௬. (௬) ஷை - ௭.

மூ. உயிருறவுமுதலளவுதுரக்கைகளாலேபெறுவாணை யல்லவாக்கினபேரவா குளப்படியாம்படிகடல்போன்ற வாதரத்தோடே சூழ்ந்துதாபங்களை ஹரித்தமையை வெளியிடுகிறார் பத்தாம்பத்தில்.

உயிருறவு - ஶரீர ஶரீரிபாவஸம்பந்தமும், முதலளவு - முதல் தனிவித்தேயென்கிற பாட்டளவாக, துரக்கைகளாலே - ஒட்டுகைகளாலே, பெறுவாணை யல்லவாக்கின - ஈஶ்வரனுக்குத் திருவாணையிட்டது யுக்தமென்னலாம்படியாக்கின, பேரவா-பெரியவாதரம், குளப்படியாம்படி - அத்யல்பமாம்படி, கடல்போன்ற வாதரத்தோடே - கடலோடொத்தவாதரத்தோடே, சூழ்ந்து - ஆழ்வாரைவ்யாபித்து, தாபங்களைஹரித்தமையை - தம்தாபங்களையெல்லாம் தீர்த்துக்கொண்டமையை, வெளியிடுகிறார் - இங்குள்ளாருக்குத் தெரியும்படி அருளிச்செய்கிறார், பத்தாம்பத்தில் - பத்தாவதாநுஸந்தகத்தில்.

பெரியபிராட்டியார் பக்கல் ஸ்நேஹாதிஶயத்தாலே அவள் பரிக்ரஹமானவென்பக்கலதிப்ரவணனானவனே! நான் அந்தப்புரபரிகரமன்றோ? என்பக்கலுனக்குண்டான அன்புக்கடியிவளாகையாலவள்பரிக்ரஹமென்கிறவடியுரமென்றும் உயிருறவு (௧) “பெற்றினிப்போக்குவனோ வுன்னையென் தனிப்பேருயிரை” என்று அத்யந்தவிஸஜாதியனுயிருந்துவைத்து எனக்கு தாரகனான உன்னைப்பெற்றுவைத்து இனி விடுவேனோ? உயிரைவிட்டு உடல்தரிக்கவற்றோ? என்கிறசரீர சரீரிபாவஸம்பந்தமென்றும் (முதலளவு துரக்கைகளாலே பெறுவாணை யல்லவாக்கின பேரவா குளப்படியாம்படி) இப்படி (௨) “முதல்தனிவித்து” என்கிறபாட்டளவாக உத்தரோத்தரம் புகலறதுரக்கைகளினாலே தாமிட்டவாணை பெறுவாணை யல்லாமையை ஸாதித்து (௩) “அதனில்பெரிய என்னவா” என்று, தத்வத்ரயத்தையும் விளாக்குலைகொண்டு அவை குளப்படியாம்படிபெரியதான தம்முடைய பரமபக்தி குளப்படியாம்படி (கடல்போன்ற வாதரத்தோடேசூழ்ந்து தாபங்களைஹரித்தமையை வெளியிடுகிறார்பத்தாம்பத்தில்) அதாவது:— (௪) “என்னவாவறச் சூழ்ந்தாயே” என்று, கீழ்சொன்ன அபரிச்சேத்யமான தம்முடைய வபிநிவேசத்தையும் தன்னபிநிவேஶத்தையும் பார்த்தால் இதொரு குளப்படியும் அதொரு ஸமுத்ரமுமென்னும்படியான வபிநிவேசத்தோடேவந்து ஸம்ஶ்லேஷித்து, (௫) “అంకే భరతమారోప్య ముదితః పరిషస్వజే” “அங்கேபரதமாரோப்யமுதித꞉பரிஷஸ்வஜே” என்று, மீண்டெழுந்தருளி பரதாழ்வானை மடியிலே வைத்தணைத்து, உச்சிமோந்து கெடும்படியநுபவிப்பித்து, அலாபகந்தாப்போலே, தம்முடைய விடாய் கெடும்படியநுபவிப்பித்து, அலாபநிபந்தநபரிதாபத்தால் கூப்பிட்டவாயாலே (௬) “அவாவற்றுவீடு பெற்றகுருகூர்ச்சடகோபன்” என்று, பேசும்படி, (௭) “அவாவறச்சூழரியை” என்று, ஹரிஎன்கிற திருநாமத்துக்கநுகுணமாக தம்முடைய ஸகலதாபங்களையும் ஹரித்தமையை ஸர்வருமறியும்படி ப்ரகாசிப்பிக்கிறார் பத்தாம் பத்திலென்கை. *

(௧) தி - வா. ௧0. ௧0. ௮. (௨) ஷை - ௯. (௩) ஷை - ௧0. (௪) ஷை - ௧0. (௫) ஸ்ரீ - ரா - யு - ௧௩௧. ௩௯. (௬) தி - வா. ௧0. ௧0. ௧௧. (௭) ஷை.

மூ—(கக) உருமையோடே யுற்றேனுக்கா தெழிந்தது நாடு திருந்த நச்சுப்பொய்கையாகாமைக்குப்ரபந்தம்தலைக்கட்ட வேர் சூடுவார்.

(அ) உருமையோடே - இவரார்த்தராயர்த்தித்தபோதே, உற்றேனுக்கா தொழிந்தது-பகவத்ப்ராப்தியாக்காதொழிந்தது, நாடுதிருந்த-ஜகத்தெல்லாமிவருபதேசத்தாலேபரிஷ்க்ருதமாகைக்கும், நச்சுப்பொய்கை யாகாமைக்கு - ப்ரபதநாநந்தரமே இவரைமுக்தராக்கினல் யெல்லாரும் பீதராய் விஷஹ்ரதத்தில் போலேப்ரபதநத்தி லிழியார்களென்றும், ப்ரபந்தம் தலைக்கட்ட - ஜகதுபகாரார்த்த மாகத் திருவாய்மொழி தலைக்கட்டுகைக்காகவும், வேர்சூடுவார் - குருவேரென்கிற வாஸநாவத்ரவ்யம் சிரஸ்ஸிலே தரிப்பார்,

வ்யா. (கக) இனிமேல், இவர்ப்ரதமத்திலே (க) "இந்நின்றநீர்மையினியாமுருமை" என்று ஆர்தராய்ஶரணம் புக்கபோதேவிரோதி நிவ்ருத்திபூர்வகையான ஸ்வப்ராப்தியைப் பண்ணுவியாமல் இவ்வளவாக விவரைவைக்கைக்கடியேதென்னுமாகாங்க்ஷயிலே, வைக்கைக்கிஹேதுக்கள் பலவுமுண்டென்னு மத்தையும், அவையெல்லாவற்றிலும் முக்யஹேதுவின்ன தென்னுமத்தையு மருளிச்செய்கிறார் (உருமையோடே என்று துடங்கி) அதாவது (உ) "பொய்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்குமழுக்குடம்பும் இந்நின்ற நீர்மை இநியாமுருமை" என்று-அவித்யாகர் மவாஸநாருசி ப்ரக்ருதிஸம்பந்தங்க ளாகிற ப்ராப்திப்ரதிபந்தகங்களை விடுவிக்கவேணு மென்றார்த்தராய்த்திருவடிகளிலேவிழுந்தபேக்ஷித்தபோதே அவற்றைப்போக்கி, (ங) "உற்றேனுகந்து பணிசெய்துனபாதம்பெற்றேன்" என்று, திருவடிகளைக் கிட்டிப்ரீதிபூர்வகமாகவடிமை செய்யப்பெற்றேனென்னும்படியாக்காமலிவரைவைத்தது தன்னுடைய ஸ்ருஷ்ட்யவதாராதிகளாலும் திருந்தாதஜகத்து இவருடைய உபதேஶத்தாலே (ச) "ஊரும்நாடும் உலகமும் தன்னைப்போல்" என்னும்படி, திருந்துகைக்காகவும், ஆர்தப்ரபதநாநந்தரம், முக்தராம்படி பண்ணில் ப்ரபத்தியை நச்சுப்பொய்கையோபாதியாக நினைத்து பீதராயிழிவாரில்லையென்று அதப்படியாகாமைக்காகவும்,தானும் தன்விபூதியும் வாழும்படி இவரைக்கொண்டு கவிபாடுவிக்கத் துடங்கினப்ரபந்தம் பரிஸமாப்தமாகைக் காகவும், வேர்சூடுமவர்கள் பரிமளத்தில் லோபத்தாலே மண்பற்றுக்கழற்றாதாப்போலே, ஜ்ஞாநிகளை சரம சரீரத்தோடே வைத்து அநுபவிக்குமவனாகையாலே, இவருடைய ஜ்ஞாநப்ரேமபரிமளமெல்லாம் தோற்றும்படி யிருக்கிற விக்ரஹத்தில் தனக்குண்டான விருப்பத்தாலேயுமென்று சொல்லுமவற்றிற் காட்டில் (ரு) "இனியாமுருமை" என்றுதுடங்கி (சு) "இனிவளைகாப்பவரார்" (எ) "இனி

(க) தி-வி. க. (உ) ஷை. (ங) தி - வா. சO. அ. சO. (ச) ஷை - சு. எ. உ. (ரு) தி - வி. க. (சு) ஷை - கங. (எ) ஷை - சுஉ.

மூ. மண்பற்றுப்போலே யென்னுமவற்றிலுமினியினியென்று இருபதின்கால் கூப்பிடுமார்த்தி அதிகாரிபூர்த்திக் கென்னு மது முக்யம்.

மூ—(கஉ) கமலக்கண்ண னென்று தொடங்கி கண்ணுணின்றிறுதி

மண்பற்றுப்போலே - அதிலுண்டான மண்ணைக்கழற்றா தாப்போலே, என்னுமவற்றிலும் - என்று சொல்லுமதிற்காட்டிலும், இனி இனியென்று - இனி இனியென்கிற சப்தத்தோடே இருபதின்கால் - இருபது தரம், கூப்பிடுமார்த்தி - கூப்பிடப்பண்ணும் ஆர்த்திவிசேஷம், அதிகாரிபூர்த்திக்கென்னுமது - பூர்ணாதிகாரிக்கு வேண்டுமென்று சொல்லுமதுவே, முக்யம் - ப்ரதாநம்.

(அ) கமலக்கண்ணனென்று தொடங்கி - புண்டரீகாக்ஷனென் கண்ணுக்கு விஷயமானுனென்று தொடங்கி, கண்ணுணின்றிறுதி - கண்ணுள் நின்றகலானென்று என் கண்வட்டத்தினின்றும் கால்வாங்கமாட்டுகிறிலனென்னுமளவாக,

யுன்திருவருளாலன்றிக் காப்பரிதால், (க) "இனியவர்கண் தங்காது, (உ) இனியுனதுவாயலகிலின் னடிசில்வைப்பாரை நாடாயே, (ஙு) "இனி எம்மைச்சோரேலே" (ச) "எங்நாள்யானுன்னை யினிவந்துகூடுவனே" (ரு) "எங்கினித்தலைப்பெய்வனே" (சு) "இனியென்னாரமுதேகூயருளாயே, (எ) "ஆவிகாப்பாரினியார் (அ) "நெஞ்சிடர்தீர்ப்பாரினியார், (கூ) "இனியுன்னைவிட்டொன்று மாற்றகிற்கின்றிலேன் (கo) "தரியேனினி (கக) "இனியாரைக் கொண்டென்னுசாகோ" (கஉ) "அத்தனையா மினியென்னுயிரவன்கையதே (கங) "நன்னுரைக்குழாங்கள் காள்பயின்றென்னினி (கச) "இனி யிருந்தென்னுயிர் காக்குமாறென், (கரு) "இனிநான் போகலொட்டேன், (கசு) "உண்டிட்டாயினி யுண்டொழியாய் (கஎ) "உன்னைப்பெற்றினிப்போக்குவனோ" என்றிப்படி, இருபதின்கால் கூப்பிடும்படியான ஆர்த்திபரம்பரையை விளைத்து பரமபக்தி பர்யந்தமான அதிகாரிபூர்த்தியை யுண்டாக்குகைக்காக வென்னுமதுவே ப்ரதானமென்கை, ஆர்த்தி அதிகாரிபூர்த்திக்கென்னுமது ஆர்த்தியால்வருமதிகாரிபூர்த்திக்கென்னபடி. பரமார்த்தியாலே யிறேப்ரபத்யதிகாரம் பரிபூர்ணமாவது, ஆகையாலே, ஹேத்வந்தரங்ளெல்லா மப்ரதானங்கள், இவரை வைத்ததுக்கு ப்ரதான ஹேதுவிதுவென்ற தாய்த்து.

வ்யா. (கஉ) அதிலிவ்வார்த்திக் கடியான பரபக்திபரஜ்ஞாந பரமபக்திகளின் தசைகள் எங்தெந்தத்திருவாய் மொழிகளென்னுமபேக்ஷையிலே அவற்றை யருளிச்செய்கிறார் மேல் மூன்றுவாக்யத்தாலே. அதுதன்னில் பரபக்த்யவஸ்தை யின்னதென்கிறார். (கமலக்கண்ணனெ

(க) தி - வா. க. ச. ௭. (உ) ஷை - அ. (ங) ஷை-உ. க. கo. (ச) ஷை-ங. உ. க. (ரு) ஷை - கூ. (சு) ஷை - ச. கூ. சு. (எ) ஷை - ரு. ச. உ. (அ) ஷை - ரு. ச. கூ. (கூ) ஷை - எ. க. (கo) ஷை - அ. எ. (கக) ஷை - எ. ங. ச. (கஉ) ஷை - கூ. ரு. உ. (கங) ஷை-கo. (கச) ஷை-கூ. உ. (கரு) ஷை-கo. கo. க. (கசு) ஷை-சு. (கஎ) ஷை-எ.

மூ. கண்டேனென்றபத்துமுட்கண்ணலேயாய்காண்பான வாவு தலதிலிரட்டியாகையாலே கண்டுகளிப்பவளவும்

கண்டேனென்றபத்தும் - பத்துச் சந்தையிலும்சொன்ன ஸாக்ஷாத்காரம், உட்கண்ணலேயாய் - நெஞ்சென்னுமுட்கண்ணென்கிற அவாந்தரசக்ஷுஸ்ஸாலேயாய், காண்பானவாவுதல் - காணவாசைப்பட்டது, அதில் - அந்தபத்திலும், இரட்டியாகையாலே - இருபதிடத்தில் சொல்லுகையாலே, கண்டுகளிப்பளவும் - கண்டுகளிப்புக் கண்ணுள் நின்ற கலானேயென்னுமளவும்,

ன்றுதுடங்கி) அதாவது (௧) "கமலக்கண்ணனென்கண்ணினுள்ளான்" என்று, புண்டரீகாக்ஷனவன், என்கண்ணுக்கு விஷயமானனென்று துடங்கி, (௨) "கண்ணுள்நின்றகலான்" என்று என்கண்வட்டத்தினின்று கால்வாங்குகிறல னென்னுமதளவாக, (௩) "என் கண்ணனைநான் கண்டேனே, கலைப்பல்ஞாநத்தென் கண்ணனைக் கண்டுகொண்டு, (௪) "நறுந்துழாயின்கண்ணியம்மா நானுன்னைக்கண்டு கொண்டே" (௫) "கைதொழவிருந்தாயது நானும்கண்டேனே" (௬) "ஏரார்கோலந்திகழக்கிடந்தாய் கண்டேனெம்மானே" (௭) "திருவண்ணகர்கண்டேனே" (௮) "தேவர்கட்கெல்லாம் கருவாகிய கண்ணனைக் கண்டுகொண்டேனே" (௯) "கண்டேன் கமலமலர்ப்பாதம்" என்று, இப்பத்துச்சந்தையாலுஞ் சொன்ன ஸாக்ஷாத்காரம்; நெஞ்சென்னு முட்கண்ணென்கிற ஆந்தரசக்ஷுஸ்ஸான மநஸ்ஸாலே யுண்டானதாய், (௧௦) "கையபொன்னாழிவெண்சங்கொடும் காண்பானவாவுவன் நான்" (௧௧) "அடியேன் காண்பானலற்றுவன்" (௧௨) "உம்மைக்காணுமாசையுள் நைய்கின்றுள்" (௧௩) "கூவுகின்றேன் காண்பான், மெய்கொள்ளக்காணவிரும்புமென்கண்களே" (௧௪) "கூவியுங்காணப்பெறே னுனகோலமே" (௧௫) "உன்னையென்னுள் கண்டுகொள்வனே" (௧௬) "கோலமேனிகாணவாராய்" (௧௭) "தட்வுகின்றே னெங்குக்காண்பன்" (௧௮) "பாவியேன் காண்கின்றிலேன் (௧௯) "உன்னைக்காண்பானலப்பாய்" (௨௦) "உலகம்பரவக்கிடந்தாய் காணவாராயே" (௨௧) "என்றுகொல்கண்கள்காண்பதுவே" (௨௨) "விளங்கவொருநாள் காணவாராய்" (௨௩) "உன்னைக்காண்பான் வருந்தியெனைநாளும்" (௨௪) "அலைகடல் கடைந்தவப்பனே காணுமாறருளாய்" (௨௫) "ஒருநாள் காணவாராயே" (௨௬) "தொண்டனேனுன் கழல்காண வொருநாள்வந்து தோன்றாயே"

(௧) தி - வா. ௧. ௯. ௯. (௨) ஷை - ௧௦. ௮. ௮. (௩) ஷை - ௨. ௮. ௧௦. (௪) ஷை - ௪. ௭. ௭. (௫) ஷை - ௫. ௭. ௫. (௬) ஷை - ௮. ௧. (௭) ஷை - ௬. ௩. ௧. (௮) ஷை - ௯. ௪. ௮. (௯) ஷை - ௧௦. ௪. ௯. (௧௦) தி-வி. ௮௪. (௧௧) தி-வா. ௧. ௫. ௭. (௧௨) ஷை - ௨. ௪. ௨. (௧௩) ஷை - ௩. ௨. ௮. (௧௪) ஷை - ௮. ௭. (௧௫) ஷை - ௮. (௧௬) ஷை - ௪. ௭. ௧. (௧௭) ஷை - ௯. (௧௮) ஷை - ௧௦. (௧௯) ஷை - ௫. ௮. ௪. (௨௦) ஷை - ௯. (௨௧) ஷை - ௯. ௫. (௨௨) ஷை - ௬. ௯. ௪. (௨௩) ஷை - ௬. (௨௪) ஷை - ௮. ௧. ௧. (௨௫) ஷை - ௫. ௧. (௨௬) ஷை - ௬.

மூ. பரஜ்ஞாநகர்ப்ப பரபக்தி.

மூ—(௧௩) இருந்தமையென்றது பூர்ண பரஜ்ஞாநம்.

மூ—(௧௪) முடிந்தவவாவென்றது பரமபக்தி.

மூ—(௧௫) இவைஜ்ஞாந

பரஜ்ஞாநகர்ப்ப பரபக்தி - பரஜ்ஞாநத்தை யுள்ளேயுடைய பரபக்தியாயிருக்கிறது.

(அ) இருந்தமையென்றது - அடியரோடிருந்தமையென்றது, பூர்ணபரஜ்ஞாநம் - பூர்ணமான பரஜ்ஞாநமென்றபடி.

(அ) முடிந்தவவாவென்றது - முடிந்த வவாவிலந்தாதியென்கிறது பரமபக்தி - பக்தியினுடைய சரமாவதியான பரமபக்தி.

(அ) இவை - இந்த பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகளானவை, ஜ்ஞாந - ஜ்ஞாநம்,

(௧) "உன்னையெங்கே காண்கேனே" (௨) "உன்னைக்காணக்கருது மென்கண்ணே" என்று, பாஹ்ய சக்ஷுஸ்ஸால் அவனைக்காண வாசைப்பட்டுக்கூப்பிட்டபாசுரங்கள் அதிலிரட்டியுண்டாகையாலே (௩) "கண்டுகளிப்பகண்ணுள் நின்றகலான்" என்கிற திருமாலிருஞ்சோலையளவாக ஆந்தராநுபவம் செல்லாநிற்கப் பெற்றன்றித்தரியாத பாஹ்யாநுபவாபேக்ஷை நடக்கையாலே பரஜ்ஞாநத்தை கர்ஹித்துக்கொண்டிருக்கிற பரபக்தியென்கை. *

வ்யா. (௧௩) அநந்தரம் பரஜ்ஞாநாவஸ்தையாகிறதின்னதென்கிறார். (இருந்தமையென்று துடங்கி) அதாவது, (௪) "அந்தமில் பேரின்பத்தடியரோடிருந்தமை" என்றும், (௫) "அடியார்கள் குழாங்களையுடன் கூடுவதென்றுகொலோ" என்றுமாசைப்பட்டபடியே, அர்ச்சிராதி கதியாலே தேசவிசேஷத்திலே போய் பகவத்ஸ்வரூபாதிகளை பரிபூர்ணாநுபவம் பண்ணுகிற நித்யஸூரிகள் திரளிலே கூடியிருந்தாராக தர்சித்துப் பேசின (௬) "சூழ்விசும்பணிமுகில்" பூர்ணமான பரஜ்ஞாநமென்கை.*

வ்யா.(௧௪) அநந்தரம் பரமபக்த்யவஸ்தையானது இன்னதென்கிறார், (முடிந்த வித்யாதி) அதாவது, அப்படி தரிசித்தவதுதான் மானஸாநுபவமாய் பாஹ்யாநுபவ யோக்யமல்லாமையாலே பெருவிடாய் பிறந்து கூப்பிட்டு தரிக்கமாட்டாமல் திருவாணையிட்டுத் தடுத்துப்பெறுவாணையல்லாமையை ஸாதித்து பேற்றோடே தலைக்கட்டின, (௭) "முடிந்த அவாவி லந்தாதியிப்பத்து" என்கிற (அ) "முனியே நான்முகன்" பக்தியினுடைய சரமாவதியான பரமபக்தியென்கை. *

வ்யா. (௧௫) இந்த பரமபக்த்யாதிகளின் வேஷத்தை பகவத்வசநப்ரகாரத்தாலே தர்சிப்பிக்கிறார். (இவையென்றுதுடங்கி) அதாவது:—

(௧) தி - வா. அ. ௫. ௧0. (௨) ஷை - ௯. ௪. ௧. (௩) ஷை - ௧0. ௮. ௭. (௪) ஷை - ௯. ௧௧. (௫) ஷை - ௨. ௩. ௧0. (௬) ஷை - ௧0. ௯. ௧. (௭) ஷை - ௧0. ௧௧. ௧௧. (அ) ஷை - ௧.

மூ. தர்ஶன ப்ராப்த்யவஸ்தைகள்.

மூ—(கசு) அவித்யாநிவர்த்தகஜ்ஞாநபூர்த்திப்ரதபகவத்ப்ரஸாதாந்மோக்ஷலாபமென்கை மயர்வறவீடுபெற்றவென்ற ப்ரபந்தைகார்த்யம்.

இத்யாசார்யஹ்ருதயே சதுர்த்த ப்ரகரணம் ஸமாப்தம்.

அழகிய மணவாளப்பெருமாள் நாயனூர் திருவடிகளே ஶரணம்.

தர்ஶந - ஸாக்ஷாத்காரம், ப்ராப்தி - ப்ராப்தி ஏவம்ரூபமான, அவஸ்தைகள் - தஶாவிஶேஷங்கள்.

(அ) அவித்யா - ஸம்ஸாரகாரணமான வஜ்ஞாநத்துக்கு, நிவர்த்தக - ப்ரதிபந்தகமாயிருந்துள்ள, ஜ்ஞாந - ஜ்ஞாநத்தினுடைய, பூர்த்தி - பூர்ணதையை, ப்ரத - உபகறிக்கிற, பகவத்ப்ரஸாதாத்-ஜ்ஞாநாதிகுண பரிபூர்ணனுன ஸ்ரீ மந்நாராயணனுடைய நிர்ஹேதுக க்ருபையாலே, மோக்ஷ - ஸம்ஸாரநிவ்ருத்தி பூர்வகபகவத் ப்ராப்தி ரூபமோக்ஷத்தினுடைய, லாபம் - லபிக்கையானது, என்கை - என்று ப்ரதிபாதிக்கையானது, மயர்வற - மயர்வற மதிநலமருளினனென்றுதுடங்கி, வீடுபெற்றவென்ற - அவாவற்று வீடுபெற்றவென்று தலைக்கட்டின, ப்ரபந்த - இப்ரபந்தத்தினுடையதான, ஐகார்த்யம் - நிர்ஹேதுக பகவத்ப்ரஸாதமே மோக்ஷஹேதுவென்கிறவிதுவே ப்ரதாநார்த்தம்.

இந்த பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகள், (க) "భక్త్యాత్వనన్యయాశక్య అహమేవం విధోర్జున। జ్ఞాతుం ద్రష్టుంచతత్త్వేన ప్రవేష్టుంచపరన్తప" "பக்த்யாத்வநந்யயாஶக்ய அஹமேவம் விதோர்ஜுந। ஜ்ஞாதும் த்ரஷ்டும்சதத்வேநப்ரவேஷ்டுஞ்சபரந்தப" என்று, அர்ஜுனனைக்குறித்து திருத்தேர்தட்டிலும், (உ) "పరభక్తిపరజ్ఞానపరమభక్త్యేకస్వభావంమాంకురుష్వ" "பரபக்தி பரஜ்ஞாந பரமபக்த்யைக ஸ்வபாவம் மாம்குருஷ்வ" என்று, ப்ரார்த்தித்த பாஷ்யகாரரைக்குறித்து (ங) "మజ్ఞానదర్శనప్రాప్తిషునిస్సంశయస్సుఖమాస్వ" "மத்ஜ்ஞாநதர்ஶந ப்ராப்திஷுநிஸ்ஸம் ஶயஸ்ஸுகமாஸ்வ" என்று, சேரபாண்டியனிலுமவனருளிச்செய்த ஜ்ஞாநதர்ஶனப்ராப்த்யவஸ்தைகளென்கை. இத்தால், பகவத்ஸம்ச்லேஷவிஶ்லேஷைக ஸுகதுக்கராம்படியான பரபக்தி பரஜ்ஞாநாவஸ்தையாகவும், பகவத் ஸ்வரூபரூபகுண விபூதிகளை விஶததமமாக ஸாக்ஷாத்கரிக்கிற பரஜ்ஞாநம் தர்சநாவஸ்தையாகவும், அப்படி ஸாக்ஷாத்கரித்தவஸ்துவை யப்போதேகிட்டியநுபவிக்கப் பெறுவிடில் முடியும்படியானபரமபக்தி ப்ராப்த்யவஸ்தையாகவுஞ்சொல்லப்படுமென்றபடி. *

வ்யா. (கசு) "நூறே சொன்ன பத்துநூறு ஓராயிரமென்றதும் ஸாபிப்ராயம்" என்றதில் நூறேசொன்ன பத்துநூறென்றதின் கருத்தை

(க) ஸ்ரீ - கீ. கக. ருச. (உ) க - ம். (ங) ஷெ.

ஷத்துநிகமத்திலே விஸ்தரேணப்ரதிபாதித்து ப்ராஸங்கிகமாகமேலரு
ளிச்செய்யவேண்டு மவையுமருளிச்செய்தாராய் நின்றார்கீழ், இனி ஓரா
யிரமென்றதின்கருத்தை விஶதமாக்காநின்றுகொண்டு ப்ரபந்தத்தை நிக
மித்தருளுகிறார்(அவித்யாநிவர்த்தகம்)என்றுதுடங்கி,அதாவது:— ஸம்
ஸாரகாரணமான வஜ்ஞாநத்துக்கு நிவர்த்தகராய்க்கொண்டுஜ்ஞாநபூர்த்
தியையுபகரித்த ஜ்ஞாநாதிகுண பரிபூர்ணனானபகவானுடைய நிர்ஹேது
கமானப்ரஸாதத்தாலேஸம்ஸாரநிவ்ருத்திபூர்வகபகவத்ப்ராப்திருபமோ
க்ஷத்தினுடைய லாபமென்று ப்ரதிபாதிக்கை. (க) "மயர்வற மதிநல
மருளினன்" "என்று துடங்கி, (உ) "அவாவற்று வீடுபெற்ற" என்று
தலைக்கட்டின விப்ரபந்தத்துக் கொன்றான தாத்பர்யார்த்தமென்கை. இத்
தால் ஜ்ஞாநப்ரதமான பகவத்ப்ரஸாதமே மோக்ஷப்ரதமென்னுமிது
இப்ரபந்தத்துக்காக தாத்பர்யமா யிருப்பதோரர்த்தமென்றதாய்த்து.

ஆக இப்ரபந்தத்தால், ஸர்வேஶ்வரன், தன் க்ருபையாலே, அஜ்
ஞரான சேதனர்தத்வஜ்ஞராய் ஸாராஸாரவிவேகம்பண்ணுகைக்கு ஶா
ஸ்த்ரப்ரதாநம் பண்ணினபடியையும், அந்த ஶாஸ்த்ரமுகேந தத்வ
ஜ்ஞாநம் பிறக்குமளவிலுண்டான வருமையை நினைத்து தாத்பர்யமான
திருமந்த்ரத்தைத் தன் பரமக்ருபையாலே வெளியிட்டபடியையும், அந்த
ஶாஸ்த்ர தாத்பர்யங்களின் விஷயபேதாதிகளையும், ததுபய நிஷ்டரான
வதிகாரிகளுடைய ப்ரகாரங்களையும், அந்த வ்யாஜத்தாலே ப்ரஸ்துத
மான திருவாய்மொழியினுடைய வைபவத்தையும, அதுக்கு வக்தாக்க
ளான ஆழ்வாருடைய ப்ரபாவத்தையும், அந்த ப்ரபாவத்துக்கு மூல
மான பகவந் நிர்ஹேதுக கடாக்ஷத்தையும், அதடியாக விவர்க்குண்
டான ஜ்ஞாநபக்திகளையும், அந்தஜ்ஞாநபக்தி தஶைகளி லிவர்பேசும்
பேச்சுக்களையும், அந்த பக்தி தஶையில் பகவத்ப்ரேமயுக்தரெல்லாரோடு
மிவர்க்குண்டான ஸாம்யத்தையும், அந்தபக்தி தஶையில்பேசும் அந்
யாபதேசங்களுக்கு ஸ்வாபதேசங்களையும், அந்த பக்தி விஷயமான
திவ்ய தேசங்களில் நிற்கிற வீச்வரனுடைய குணவிசேஷங்களையும்
அந்தகுண விசிஷ்ட வஸ்துவிலுண்டான வநுபவஜநித ப்ரீதிப்ரேரித
மாய்க்கொண்டு இப்ரபந்தங்க ளவதரித்தபடியையும், ப்ரதிபாத்யார்த்த
ஸாம்யத்தாலே ஸ்ரீகீதையோடு திருவாய்மொழிக்குண்டான ஸாம்யத்
தையும், தத்வ்யாவ்ருத்தியையும், இதிலிவருபதேசிக்கிற விஷயபேதத்
தையும், அவ்வோ விஷயங்கள்தோறு முபதேசிக்கிற அர்த்த விசேஷங்
களையும், அந்த வ்யாஜத்தாலே உபதேச விஷயமான சிஷ்யலக்ஷணத்
தையும், அந்த லக்ஷணமில்லாதார்க்கு மிவருபதேசிக்கைக்கு ஹேதுக்
களையும், க்யாதி லாபாதி நிரபேக்ஷராய் பகவத் கைங்கர்யபுத்யா உப
தேசிக்கையாலே உபதேஶம் ஸபலமானபடியையும், உபதேசிக்கிற விப்
ரபந்தங்கள் தான் ரஹஸ்யத்ரயார்த்த மென்னுமத்தையும், அந்த ரஹ
ஸ்யத்ரயத்திலும் ப்ரதிபாதிக்கப்படுகிற அர்த்தபஞ்சகமும்,இப்ரபந்தங்
களிலே ஸங்ரஹ விவரண ரூபேண சொல்லப்படுகிற ப்ரகாரத்தையும்,
ப்ரபந்தாரம்பங்களிலபேக்ஷிதமான மங்களா சரணங்களி ப்ரபந்தாதியி
லுண்டானபடியையும், ஸாதுபரித்ராணாதிகளாலே ஜகத்ரக்ஷணார்த்த

(க) தி - வா: க. க. க. (உ) ஷெ - க0. க0. கக.

மான ஸர்வேஶ்வராவதாரம்போலே இப்ரபந்தாவதாரமென்னுமத்தையும், இதில் பத்துப்பத்தாலும் ப்ரதிபாதிக்கப்பட்ட வீச்வரனுடைய பரத்வாதி குணங்களையும், அக்குண விசிஷ்டனானவவன் இப்பத்துப் பத்தாலு மிவ்வாழ்வார்க்கு தத்வஜ்ஞாநம் முதலாக ப்ராப்திபர்யந்தமாகப் பிறப்பித்த தஶாவிசேஷங்களையும், பத்துப்பத்தாலுமிவர்தாம் பிறர்குபதேசித்த ப்ரகாரங்களையும், இவர்க்கு ப்ரதமத்திலே ஆர்த்தி பிறந்திருக்கச்செய்தே ஈஶ்வரன் இவரைவைக்கைக்கு ப்ரதாநாம்ஶதாந ஹேதுக்களையும், இவர்க்குப் பிறப்பித்த பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகளாகிற தஶாவிசேஷ ஸ்தலங்களையும், அஜ்ஞாநநிவர்தகஜ்ஞாநபூர்த்தி ப்ரதபகவத்ப்ரஸாதமே அநிஷ்டமான ஸம்ஸாரத்தை யறுத்து, அபீஷ்டமான மோக்ஷலாபத்தையு முண்டாக்குமென்கை. இப்ரபந்தத்துக்கொன்றான தாத்பர்யமென்னுமத்தையும், ஆஸ்திகராய் ஆழ்வாரபிமானத்திலே யொதுங்கி அவருடைய திவ்ய ஸூக்திகளில் ப்ரவணராயநந்ய பரராயிருப்பாரெல்லாரும் அநுஸந்தித்து வாழும்படி அதிஸ்புடமாகவருளிச்செய்து தலைக்கட்டினார்.

இத்யாசார்யஹ்ருதய வ்யாக்யாநே சதுர்த்த ப்ரகரணம் ஸமாப்தம்.

பெரியஜீயர் திருவடிகளே ஶரணம்.

தந்தருள வேணுந் தவத்தோர் தமப்பனாய்
வந்த முடும்பை மணவாளா—சிந்தையினால்
நீயுரைத்த மாறன் நினைவின் பொருளனைத்தென்
வாயுரைத்து வாழும் வகை.

(அ) தவத்தோர் - தபஸ்விகளுடைய, தமப்பனாய் - பிதாவாய், வந்த - அவதரித்த, முடும்பைமணவாளா - முடும்பையென்கிற நகரத்திலே பிறந்த அழகிய மணவாளரே, சிந்தையினால் - ஹ்ருதயத்தோடே, நீயுரைத்த - தேவராலேயருளிச்செய்யப்பட்ட, மாறன்நினைவின் - ஆசார்ய ஹ்ருதயமென்கிற க்ரந்தத்தினுடைய, பொருளனைத்தீ - ஸகலார்தங்களையும், என்வாய் - என்னுடையவாக்கானது, உரைத்து - அநுஸந்தித்து, வாழும்வகை - வாழும்ப்ரகாரத்தை, தந்தருளவேணும் - கொடுத்தருள வேணும்.

రమ్యజామాతరం వన్దే రమణీయగుణోదయమ్।
శఠారిసూక్తిహృదయప్రకాశకమహర్నిశమ్॥
ఆచార్యహృదయస్యార్థాస్సకలా యేన దర్శితాః।
శ్రీసానుదాసమమలం దేవరాజం తమాశ్రయే॥

ரம்யஜாமாதரம்வந்தே ரமணீயகுணோதயம்।
ஶடாரிஸூக்திஹ்ருதயப்ரகாஶகமஹர்நிஶம்॥
ஆசார்யஹ்ருதயஸ்யார்த்தாஸ்ஸகலாயேநதர்ஶிதா꞉।
ஸ்ரீஸாநுதாஸமமலம்தேவராஜந்தமாஶ்ரயே॥

ஸமாப்தோயம் க்ரந்த꞉.